

பண்புயர் மனிதர்

# பாக்கிர் மாக்கார்

எதிரணியினரின் நடுநிலைப் பார்வை

கவிஞர் ஏ. இக்பால்





பண்புயர் மனிதர்

# பாக்கிர் மாக்கார்

## எதிரணியினரின் நடுநிலைப்பார்வை

அன்புள்ள [illegible]
அவர்களுக்கு -
— ஏ. இக்பால் —
2000-03-22

கவிஞர் ஏ. இக்பால்

பேசும் பேனா பேரணி

பண்புயர் மனிதர்

**பாக்கிர் மாக்கார்**

எதிரணியினரின்
நடுநிலைப் பார்வை

**(C) கவிஞர் ஏ. இக்பால்**

*1410 துல்ஹஜ் பிறை 19, 1990 ஜூலை-13*

வெளியீடு: பேசும் பேனா பேரணி
*26/6, ஷெய்க் முஸ்தபா பள்ளி வீதி, வேர்வலை.*

*அச்சு: கிரஸண்ட் பப்ளிகேஷன்(பிரைவேட்)லிமிடெட்*
*90. ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை கொழும்பு - 02.*

**விலை. ரூபா 60.00**

---

PANPUER MANITHAR

**BAKEER MARKAR**

ETHIR ANIYINARIN NADUNILAI PARVAI

**(C) Kavignar A. Iqbal**

A Gentleman to the Manner Born
A LIFE OF BAKEER MARKAK
A view from the out side
by
**(C) A. Iqbal**

Published by:
PESUM PENA PERANI
26/6, Sheik Musthafa Mosque Road,
Beruwala.

Printed by:
CRESCENT PUBLICATION (PVT) LTD.
90, Justice Akbar Mawatha,
Colombo-02.

1410, Dul-Haj 19
1990, July 13


Price Rs. 60.00

கட்டிய மாளிகை
அர்ப்பணம்.

ஆசிரியர், அதிபர், அரசியல்வாதி

## எம். ஐ. உதுமாலெவ்வை

அவர்களுக்கு



குருவின் குருவே
அரசின் அறிவே
உனதே இதுவே
உளமார்ந் தேற்பாய்!

வல்லவனாம் அல்லாஹ்வின் வான் புகழும் நாமமதைச் சொல்லி...

# திறக்குமுன் திறமை.

வரலாற்றில் நானா!
எனது வரலாறா?
வரலாறு படைக்கும்
வல்லமை யாருக்கு?

இந்த ஆச்சர்யங்கள் வினாக்களாகின. 1962 டிசெம்பர் 13 ஆந் திகதி எனது கல்யாண நாள். அதற்கு முன் இப் பிராந்தியத்தில் வாசம் செய்யும் வாய்ப்பு ஏற்படவில்லை. அந்த அனுபவமிருந்திருந்தால் எனது வாழ்க்கை வேறு திக்கைத் தேடிச் சென்றிருக்கும்.

என்னை ஆற்றுப் படுத்தி இந்த உந்நத நிலைக்காக்கிய என் மனைவி எனது வரலாற்று நாயகியே! இப்பிராந்தியத் தில் எனது கருத்தை இறுக ஆதரிக்கும் இளைஞர்கள் கூட்டம் இன்னு மின்று மிருக்கின்றார்கள். அவர்களது அன்பும் அரவ ணைப்பும் எனது வழியில் என்னை முன்னேற்றியது. அரசிய லில் நான் இடதுசாரிக் கருத்துடையவன். இங்கே, என்னைச் சூழ்ந்துள்ளோர் அநேகர் வலதுசாரிகள். நான் அரசியல் செய்த தில்லை; ஆதரித்தது மட்டுந்தான்.

''யதார்த்தம்'' எனக்குப் பிடித்தமானது. ''யதார்த்தவாதி பொதுசன விரோதி'' என்பது வழக்கு முறை. காலமாற்றம் ''யதார்த்தவாதி பொதுசன விரும்பி'' என்னும் கொள்கையை ஏற்படுத்திவிட்டது. இஸ்லாம்கூட உண்மை—யதார்த்தத்தின் பக்கந்தான். நிந்தனை செய்வோரும் மற்றவரை அவமானத் துள் கொண்டுவருவோரும் உண்மையாளராக முடியாது. இதையே நபி (ஸல்) அவர்கள்:

> ''நிந்திப்பவராகவும் அவமானம் உண்டாக்குபவராகவும் இருந்திடும் அதே வேளையில் நீங்கள் (சித்தீக்) உண்மையாளராகவும் எப்படி இருந்திட இயலும்''

எனக்கூறியிருக்கின்றார்கள். யதார்த்தம் என்பது நிந்தனையல்ல.

முனாபிக்—நயவஞ்சகத் தனத்தை மூலதனமாக வைத்துள்ளவர்கள் அநேகர் விரோதமில்லாமல் வாழ்கிறார்கள். அதற்காக முனாபிக் தனத்தை மூலதனமாக்கலாமா? ஒரு முஸ்லிம் முனாபிக்—நயவஞ்சகம் என்றால் என்னவெனத் தெரிந்துகொள்ள வேண்டும். இஸ்லாத்தின் ஏந்தலர் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளதைக் கவனிப்போம்.

''நான்கு பழக்கங்கள் உள்ளன. இவை யாரிடம் காணப்படுகின்றதோ அவர் ஒரு முழுமையான நயவஞ்சகனாவான். இவற்றில் ஏதேனும் ஒன்று ஒருவரிடம் காணப்பட்டால் அவர் அதனை விட்டுவிடும்வரை தன்னைத் தாழ்த்திக்கொள்ளும் ஒரு பழக்கத்திற்கு அடிமைப்படுகிறார் என்று பொருள். (அந்நான்கு பழக்கங்கள்) அவரிடம் ஏதாவது ஒரு பொருள் பாதுகாப்பிற்காக ஒப்படைக்கப்பட்டால் அவர் அதில் நேர்மையின்றி நடந்துகொள்கின்றார். அவர் பேசினால் பொய் பேசுகின்றார். ஒப்பந்தம் செய்துகொண்டால் ஏமாற்றுகின்றார். அவர் தர்க்கித்தால் அவதூறு பேசுகின்றார்.''

அரசாங்க உத்தியோகம் செய்ததால் அரசியல்வாதியின் பகடைக்காயாக நேர்ந்தது. இலங்கையிலுள்ள பல மாகாணங்களின் கல்விக்கூடங்கள் சிலவற்றைப் பார்க்கும் வாய்ப்பு அதனால் கிட்டியது. ஓர் ஆசிரியராக நான் பாடம் படிப்பிப்பதை விடப் பாடம் படித்துக்கொண்டேயிருக்கின்றேன்.

இத்தனைக்கும் எனக்கு அரசியல் எதிரி அல்ஹாஜ் பாக்கிர் மார்க்கார்தான். நேரடி எதிரியல்ல; அவரது சிறுபிள்ளைத்தன ஆதரவாளர்களுக்கூடாகக் கோள் மூட்டியதால் ஏற்பட்ட எதிரி. என்று அவர் எதிரியானரோ, அன்றே அவருக்கென்றே ஓர் ஆவணத்தைத் தொடங்கிவிட்டேன். அவரது Press Officer—பத்திரிகை விஷயம் சேர்ப்பவரைவிட, நான் அவரை நுணுகி ஆராய்ந்து சேகரித்தவை அநேகம்.

எதிரியை ஆராயப்போய், அவரது நன்மை தீமைகளையெல்லாம் எடைபோட எத்தனித்தேன். இக்காலம் தூர்ந்து போயிருந்த ஏ. ஏ. எம். எம். சம்சுதீனின் நட்பு மீண்டும் தொடங்கியது. ஏ. ஏ. எம். எம். சம்சுதீன் பாக்கிர் மாக்காரின் அடிவருடி. அவர் என்ன சொல்கிறாரோ அதன்படி இவர் நடப்பவர். அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் பற்றிய அநேக அகத் தொடர்பான தகவல்களை சம்சுதீனிடமிருந்தே பெற்றுக் கொண்டேன். பெற்ற தகவல்கள் உண்மையானவையா? அதீதமானவையா? என்பதைக்கூடக் கவனமாக ஆய்வு செய்து தேவையற்ற அநேக விஷயங்களைத் தவிர்த்துக்கொண்டேன்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரை அணுகுவதற்கு ஏ. எஸ். எம். ஓமர், அஸாரியா நுபைல், முன்னாள் பொத்துவில் முதல்வர் எம். ஐ. உதுமா லெவ்வை ஆகியோர் காலானார்கள். இந்த உறவுகளால் இன்னுமின்னும் தகவல்கள் சேர்ந்தன.

அரசியல் எதிரியான ஒருவரின் சேவைத் திறனை அல்லது சேவைப்பிறழ்வை நடு நிலை நின்று பார்க்கும் தகுதி எனக்குண்டு. அவ்விதம் பார்த்த பார்வைதான் இந்நூல்.

இத்தகவல்களின் பதிவை அச்சு வாகனம் ஏற்ற வேண்டும் என அவாவுற்றவர்கள்தான் எம். இஸட். எம். நயீம், எம். எஸ். எம். அன்வர், ஏ. ஏ. எம். எம். சம்சுதீன் ஆகியோர். சிங்கள மொழியில் பாக்கிர் மாக்கார் பற்றி வெளியான செய்திகள், துணுக்குகள், குறிப்புகள் யாவற்றையும் தமிழில் எம். இஸட். எம். நயீம் மொழி பெயர்த்துத் தந்தார். அத்தகவல்கள் இந்நூலுக்கு அத்திவாரமாகின.

தங்களைப் பற்றித் தாங்களே சுயமாக எழுதிய ''ஓட்டோபையகிறாபி'' சிலவற்றைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதில், முக்கியமானவை: மகாத்மா காந்தியின் ''சத்திய சோதனை'', வடநாட்டு கே. ஏ. அப்பாஸ் எழுதிய I am not an Island நான் ஒரு தீவல்ல, மு. கருணாநிதி எழுதிய அவர் சுயசரிதை, உ. வே. சாமிநாதையரின் சுயசரிதை என்பனவாகும். இவற்றை வாசிப்பதால், இவர்கள் வாழ்ந்த காலகட்டத்தில் நிகழ்ந்தவைகளைப் பல கோணங்களில் அறிய முடியும். குறிப்பிட்டவர்களின் சரிதையைவிட, அக்கால கட்டத்தின் சரிதை மேலெழும். வரலாற்று ரசனையுள்ளவர்களுக்கு இது நல்ல தீனி. கலை விருப்பிகளும் விட்டுவிடமாட்டார்கள். இந்நூல் முற்றிலும் இச்சுவை பெற்றதல்ல; அவற்றிலும் சுவையானது.

எதிரணியினர் ஒருவரை நடுநிலையில் நின்று பார்த்தேன். உண்மையில் பாக்கிர் மாக்கார் பதிவில் இருக்க வேண்டியவர்களில் ஒருவர்தான். அதனால், வரலாற்றில் இவர் புதையுண்டதையும், வரலாறு இவரில் புதையுண்டதையும் கிண்டி எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சில வேளைகளில் வரலாற்று வழியிலிருந்தும் சறுகிச் செல்வதாக சிலர் நினைக்கலாம். சில வேளைகளில் தனிமனித உபாதைகளும் சிக்கிவிட்டதென அங்கலாய்க்கலாம். வரலாற்றை எல்லையிட்டு சிக்கவைக்க முடியவில்லை. அது, அகன்று இன்னும் இடத்தை விரிவாக்கி நிற்கின்றது. சமூகம் என்பது தனிமனிதக் கூட்டு. தனிமனித உபாதைகள் சமூகத்தைத் தாக்கும். அது வரலாற்றிலும் தாக்கம் ஏற்படுத்தும். எனவே, அவை வரலாற்றில் பதியப்பட வேண்டியது கட்டாயம்.

இந்நூலில் நானும் அதிகம் மிதக்கின்றேன். சமூகத்தில் நானோர் அங்கம்; இதை எழுதும் எழுத்தாளன். அதனால், இழையோடி மின்னுகின்றேன். தங்கம் எப்பொழுதும் இயல்பாக மின்னும். சாதாரணமாக எழுதும் வாழ்க்கைக் குறிப்பல்ல இந்நூல். இதில், இலக்கியம், விமர்சனம், உண்மைக் கதை மூன்றும் நிறைந்துள்ளன. இலக்கியத்தைக் கழித்தால் விமர்சனமும் உண்மைக்கதையும் தேறி நிற்கும். விமர்சனத்தைக் கழித்தால் அடுத்த இரண்டும் தேறும். ஒன்றை அல்லது இரண்டைக் கழித்துவிட எத்தனிக்கலாம். ஆனால், மூன்றையும் கழித்துவிட முடியாது. எப்படி நோக்கினாலும் ஒன்றாவது மிஞ்சும். அந்த வகையில், இந்த நூல் வாழும் தரமுடையது.

''ஒரு நூலின் தரத்தை அதன் அட்டையே பிரதிபலிக்கும்'' என்பது எனது ஆசிரியர் திரு. கே. வேலாயுதம் பிள்ளை பி. எஸ்ஸி, எம். ஏ. அவர்கள் அடிக்கடி கூறும் கூற்று. சில, விஞ்ஞான நூல்களை உதாரணத்திற்குக் காட்டி, அவற்றின் அட்டைப் படங்களை சிலாகிப்பார். நானும் அவர் வழி பின்பற்றுபவன். எனது நூல்களின் அட்டைப்படங்கள் தரம் வாய்ந்தன. எனது யோசனையை ஓவியர் ''ஹூனா''—ஹுசைன் அவர்களிடம் கூறுவேன். அப்படியே ஓவியமாக்கிவிடுவார். இந்நூலின் அட்டை பற்றியும் கூறினேன். என் சிந்தனைக் குட்பட்டதைத் தெளிவாகக் கீறிவிட்டார். அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் மூன்று பருவ நிலைகள்; மூன்று முகங்கள் இச் சிந்தனை அட்டையில் தெறித்து நிற்கின்றன.

''பேசும் பேனாப் பேரணி'' என்பது கலை இலக்கியத்துடன் வேர்வலையில் வாழும் ஓர் இளைஞர் இயக்கம். அமைதியாக நின்று அநேக காரியங்களைச் சாதிக்கின்றனர். இவர்களின் உறவு மிகக் குறுகிய காலத்தில் கிடைத்த ஒன்று. இந்நூலின் பதிப்பை அவர்களே ஏற்றனர். அவர்கள் அச்சிக்குத் தேர்ந்த 'கிறசண்ட் பதிப்பகம்' அவர்களின் தெரிவுதான். கிரஸண்ட் பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட் ஸ்தாபனத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான மௌலவி யூஸுப் நஜ்முத்தீன்-ஸ்தாபனத்தின் மனேஜர் எம். ஜே. எம். சுலைமான்-எஸ். சிவராசா (நல்லசிவன்) ஆகியோரின் ஒத்துழைப்பும், மனம் வைத்துக் காரியமாற்றல் என்பவற்றையும் விவரிக்க முடியாது. இந்நூல் இவ்வளவு அழகிய முறையில் அமைய வழிசெய்த அத்தனைபேருக்கும் நன்றி என்பதைவிட என்னால் என்ன செய்ய முடியும்?

அச்சரக்கன் கண்களை நழுவி எழுத்துப்பிழைகளை ஏற்படுத்தி விடுவான். இந்நூலில் அச்சுப் பிழை அநேகமில்லை. கண்வழி வாசித்துச் சென்றுவிடலாம். ஆனால், எங்களையே ஏமாற்றி சொல்லையே, பெயரையே மாற்றிய இரு பிழைகள் ஏற்பட்டுவிட்டன. நான்காம் பக்கத்தில் முதல் வரிசையில் உள்ள பெயர் ஷெய்கு யூஸுப் என்றிருக்க வேண்டும். 18ம் பக்கம் 11வது வரியில் மாமனிதர் என்ற சொல் எழுத்து மாறியிருக்கின்றது. அவ்விதம் திருத்திவிட வாசகர்களை வேண்டி நிற்கின்றேன்.

இந்நூலுக்குச் சான்று வழங்கிய அல்-ஹாஜ் எம். எம். எம். மஹ்ரூப் அவர்களும் ஒரு வரலாற்றுப் புருஷரே! அவரது வேலைகளுக்கு நடுவே, தகைமைச் சான்றெழுதி வழங்கியமைக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூல்போல் இன்னும் பல நூல்கள் வெளிவரக் காரணஸ்தர்களாகிய கதாநாயகர்கள் எம்மத்தியில் வாழ்கின்றனர். அவர்களது வரலாறுகள் பதிவில் இருக்கவேண்டியவைகள். அவற்றைத் தேடிச் செய்வன செய்தல் அவசியம். இந்நூலைத் தென்னிந்தியா சென்று தெளிவுற அச்சடித்து வரவேண்டும் என முயன்றவர் பலர். அதை நான் விரும்பவில்லை. காரணம்: அங்கே அச்சுப் பெற்றால், இலங்கையின் சுவடிக்கூடத்துள் இந்நூல் பிரவேசிக்காது. அது, எனது நோக்கத்தையே சிதைவுபடுத்திவிடும். இது, இன்றைய வாசகர்களுக்காக எழுதியதல்ல. என்றோ இந்நாட்டில் ஆய்வு செய்ய முயலும் வரலாற்று மாண

வனுக்காக எழுதியதே. அந்நோக்கத்திற்காகவே இதை இங்கே அச்சுவாகனமேற்றினோம். இந்தியாவில் அடிப்பதைவிட, இன்னும் சிறப்பாகவே இந்நூல் அமைந்துள்ளது. ஆனால், செலவு அதிகம். நல்விளைவுகளும் அதிகமே.

இந்நூல் வெளிவரக் காரணமாயிருந்தவர்கள் யாவருக்கும் நன்றி.

ஏ. இக்பால்

''றிபாயா மன்ஸில்''
தர்கா நகர்,
ஸ்ரீலங்கா

# பதிப்பக ஒப்புதல்.

**முதலாவது ஒப்புதல்:**

**சூரியன் எங்கோ**
**சிறைப் பட்டிருக்க**
**விடியல் வேளைக்கு**
**ஒரு**
**வரவேற்புப் பாடல்.**

புகழ் படைத்த தொரு மனிதரைப் புத்தகமாக்கிப் பார்வைக் குப் படைத்திருக்கிறோம்.

பதிப்பகம் தொடங்கி பாக்கிர் பாக்காரைப் பதிப்பித்துக் கொடுத்திருக்கிறோமே தவிர, பிரசுரப் பணியில் அப்படியொன் றும் பழசுபட்டவர்களல்ல நாம்.

இலக்கிய உலகில் நாம் இன்று இளையவர்கள்.

வெளியீட்டுப் பணியிலோ இன்னும் வயசுக்கு வராதவர்கள்.

இத்தனை பாரம் சுமக்க நம்மால் இயலவில்லைதான்.

இருந்தாலும், இதயத்தில் இடுக்கி வைத்திருக்கும் இலக்கிய ஆர் வம் ஒன்றே இத்துறைக்குள் நம்மைப் பிடரி பிடித்து இழுத்து வந்திருக்கிறது.

இளகாத இதய பலத்தை நமக்குள்ளே இறக்கி வைத்திருக்கிறது.

அதனால்தான், கத்தி முனையில் காயம் படாமல் கூத்தாடச் சொல்லும் இந்தச் சிரமக் கலையை ஆதரிப்பதென்று ஆலோ சித்தோம்.

பழுதுபட்டுவிடாத பயிற்சி ஒன்றுதானே நாளை நமக்கு நழுவாத பழக்கமாக கைகொடுக்கப்போகிறது.

அதற்காக, எண்ணிக்கையை மட்டும் ஏற்றிக்கொண்டு விடும் வெறும் புத்தக வியாபாரிகளாக நாம் பரிணமிப்பதில் என்றும் நமக்கு உடன்பாடில்லை.

பேசும் பேனாப் பேரணியை இலக்கியத் தரமொன்றே பேரெழுத் வைக்கும் என்ற பலமான உண்மையைப் புரிந்து வைத்திருக்கி றோம்.

அதைத்தான் இந்த ஆரம்பப் புத்தகம் அப்பட்டமாக அறிவிக் கிறது.

காலவெள்ளம் அடித்துக்கொண்டு போய்விடாத சில நூல்களை யாவது தமிழுக்குத் தரவேண்டும் என்பது நமது நப்பாசை.

நாளும் நம்மைக் குடிக்கின்ற நல்ல தமிழ் தாகம் ஒன்றே, தர மான நூலாக இதைத் தயாரித்துத் தந்திருக்கிறது.

இருந்தாலும், அலங்கரிக்கப்பட்ட இந்த ஆசை கூட இன்னொரு வேளை இயலாமல்போகலாம்.

அதற்கொரு அடிக்காரணம் அடிக்கடி நமக்கு அகப்படுவது உண்டு.

சத்தம் போட்டுப் புத்தகம் போட்ட பெரிய நிறுவனங்கள் கூட, பொருளாதாரப் புயலில் அடிபட்டுப் போனதுண்டு.

இந்த இலட்சணத்தில் இங்கு தனி மனிதர்கள் தலை நிமிந்ததாக இட்டுக்கட்ட முடியுமா?

தற்கொலைக்கு ஒப்பான எந்தச் செயலையும் தடுத்துக் கொள் வதுதான் தார்மீகக் கடமையாகும்.

இப்படியான விளையும் விபத்துக்களை முளையிலேயே கிள்ளிப் போடுவதுதான், இப்போதைய இலட்சியமுமாகும்.

அதுவரைக்கும் அவகாசமில்லாமல் படைப்புகளை அடுத்தடுத்து அச்சேற்றும் அவசரமில்லை.

நம்பிக்கைதான் நமது நாற்றங்கால்.

முன்வைக்கப்பட்ட முதலாவது மூலதனம்.

அதற்காக, அசட்டுத் தைரியத்தைப் போய் ஆதரிக்க முடியுமா?

நாளை —

கட்டாயம் காலத்தின் முகத்தைக் கண்டுகொள்ளக்கூடிய நட்சத் திர நூல்களுக்காக காத்திருந்து கைகொடுப்போம்.

**இரண்டாவது ஒப்புதல்:**

**கண்டு கொண்டாலும்**
**கண்டு கொள்ளா விட்டாலும்**
**நீ**
**காலம் வரைந்த**

கலையாத கையெழுத்து
உன்
பாதங்கள் சேகரித்த
பாதைகள் யாவும்
வருகின்ற தலைமுறைக்கு
வரலாற்றுப் பாடங்கள்.

கட்டிப்போட்டுவிட முடியாத கால வேகத்தின் கைகளால் காயமாகிவிடாத ஒரு வாழ்க்கையை வடிவமைத்துக்கொள்ளும் ஒவ்வொரு மனிதனும் தனித்தனியான வரலாறாகக் கண்டுபிடிக்கப்படுகிறான்.

மனிதன் வாழ்க்கையைப் பதிப்பித்தாலும், வாழ்க்கை மனிதனைப் பதிப்பித்தாலும் அவனால் வாழ்நாளில் முன் வைக்கப்படுகின்ற சாதனைகளே சரித்திரச் சான்றுகளாகச் சாட்சி சொல்ல வருகின்றன.

அப்துல் பாக்கிர் மாக்காரினது வாழ்க்கையை அலசும் போதும், ஆங்காங்கே கிடைக்கின்ற தகவல்கள் யாவும் சரித்திரப் பதிவுகளாக அங்கீகரிக்கக் கூடியவைகள்தான்.

மாபெரிய சாதனைகள் என்று எதையும் தனது மண் மணக்க முடித்துத் தராவிட்டாலும், சேகரிக்கக் கூடிய சேவைத்தடங்கள் சில செய்து முடித்தவர்.

அவைகளை ஆதாரங்களாகக் கொண்டுதான் ஆக்க முயற்சி செய்திருக்கின்றார் நூலாசிரியர் கவிஞர் ஏ. இக்பால் அவர்கள்.

இந்த இலக்கிய ஜாம்பவான் எதிரணியாளர் வரிசையில் எப்போதும் இருப்பவர்.

ஆனாலும், நமது மண்ணின் மைந்தர் ஒருவரது மகத்தான வளர்ச்சியை நடுநிலை நின்று நிறுத்துப்பார்த்திருக்கிறார்.

அரசியல், அயோக்கியத் தனங்களின் அந்தப்புரம் என்பதை அழகாக அறிவோம்.

பாக்கிர் மாக்காரின் அரசியல் அணுகு முறைகளில் ஏன், பாக்கிர் மாக்காரில்கூட, என்றும் நமக்குப் பிடிப்பிருந்ததேயில்லை என்பதைப் பச்சையாகச் சொல்லி விடுவதில் பயம் ஒன்றுமில்லை.

அதற்குக் காரணம் என்ன வென்பதை ஆராய்வதற்கும் இதுவரை அவசியமேற்படவுமில்லை.

அரசியலின் ஆழ அகலங்களுக்கு அப்பால் பாக்கிர் மாக்கார் அலசப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, அவரது பண்புயர் பாதையைத் தவறாது படம் பிடித்துக் கொள்ள முடிகிறது.

சுதந்திரமான கருத்துக்களின் கையைப் பிடித்துக் கொண்டிருக்கும் நூலாசிரியரின் வார்த்தை வடிவங்கள் வாய்மையைச் சுட்டுகிறது.

அதற்குக் கையசைத்து விட்டிருக்கும் பாக்கிர் மாக்காரினது இன்றைய கண்ணியம் அலாதியானது.

பாக்கிர் மாக்காரைப் பலவாறு பேசிப் பேசி அரசியல் ஆதாயம் தேடிவரும் பல பழைய புதிய பல்லவிகளின் முன்பு, அவை மறுக்க முடியாதவாறு முன்வைக்கப்பட்ட மன்றாட்டமல்ல இது.

மரியாதைக்குரிய மறுபரிசீலனை.

இலக்கியம், விமர்சனம், வரலாறு என மாறாத மூன்று சுவைகள் மாறி மாறி இடம் பிடிக்கின்ற முத்தான வரைவு இது.

கதை சொல்ல வந்திருக்கும் கவிஞரினது வித்தியாசமான நோக்கே கதை கேட்டு முடிந்த பின்பும் நம்மோடு நெடு நேரம் கதைக்கிறது.

அவர் உடுத்து விட்டிருக்கிற உத்தி முறைகள் புத்தகத்தைப் புத்திபூர்வமானதாக அர்த்தப்படுத்துகிறது.

இருந்தாலும், இதில் எமக்கு உடன்பாடில்லாத பகுதிகளும் இல்லாமலில்லை.

ஆசிரியரது கருத்துகளுடன் சில இடங்களில் நாம் முரண்படுவதைச் சொல்வதும் அழகே.

இதைப் போலவே, இங்கு சொல்லப்பட்டவைகள், இன்னும் சொல்லப்படாதவைகள் பற்றியெல்லாம் இன்ன பிற கருத்துகள் எழுவதும் இயல்பே.

ஒரு விபத்துப்போல, ஆசிரியரின் ஆதரவாளர்கள் கூட எதிர்ப்பாளர் வரிசைக்கு ஓடிப்போகலாம். எதிர்ப்பாளர்கள் கூட ஆதரவாளர்கள் வரிசைக்கு ஓடி வரலாம்.

ஆனால், எவர் எதைச் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் எழுதப்பட்டவரும், எழுதியவரும், எழுதல் பொருட்களும் அசைக்க முடியாத தடயங்களின் நாளைய அடையாளங்களாகும்.

தவிர்க்க முடியாத தடயங்கள் யாவும் சாகாத சரித்திரங்களாகும்.

சரித்திரமாய்ச் சரிபார்க்கக் கூடிய தடயங்களோடு தலை நிமிர்ந்தவரை அச்சில் செதுக்குவதும் சமுதாய தர்மம் தானே!

அதுதான் இந்த அர்ப்பணிப்பாகும்.

அதை விடுத்து, எந்தப் பிரபல்யத்துக்கும் ஆசைப்பட்டோ, அல்லது அடிமைப்பட்டோ விட்டோ மென்று அர்த்தம் கற்பிப்பது அபத்தமாகும்.

காற்றைப் போலவே நாமும் சுதந்திரமானவர்கள்.

எந்தக் கட்சியின் கட்டுக்குள்ளும் எம்மை நாம் எடுத்துக் கொடுக்காதவர்கள்.

நிஜம்தான், என்றாலும் நிறம் பூசிப்பார்ப்பதில் நம்மவர்கள் நிகரில்லாதவர்களல்லவா?

அதனால்தான், அறிவித்து வைக்கிறோம்;

எந்த விதமான குருட்டுக் கற்பனைகளையும் முட்டி உடைத்து விடும் தீர்ப்புச் சொல்வதில் காலம் என்றும் தனது கடமை தவறாதது.

சமாதானமே மேலான தாகம்.

– பரீத் ஏ. ஜவ்ஸகி
பேசும் பேனா பேரணிக்காக.

## A LIFE OF AL HAJ M. A. BAKEER MARKAR

# A NOTE OF APPRECIATION

Al-Haj M. M. M. MAHROOFF
B. A. (Hons)

Poet A. Iqbal has written a different kind of biography. Biographies in Tamil either follow one of two approaches. Either they are standard works, largely adulatory, where all the activities of the 'life' are laid down in excruciating detail. The result is a heavy book, rather tiresome. Or the work tends to the anecdotal variety the anecdotes being, of course, mostly adoring ones. The 'debumking' biography does not exist in Tamil, nor does the analytical, except marginally.

Iqbal's biography is out of this genres. Even the sub-title which reads in translation, 'the impartial views from the outside' looks and sounds strange. This book is organised in several chapters, each one beginning with a poem encapsulating or commenting on the events described in that chapter. Al-Haj Bakeer Markar is portrayed from different angles-rather impressionistic snap-shots as it were as a member of a traditional medical family, as a student, as lawyer, as member of the local government political group, as member of the central legislature Hon. Mr. Speaker as Governor of S. P.

### Al-Haj Markar as Educationist

In addition, there are interesting side lights on Al-Haj Bakeer Markar's interests in the fields of education, culture, literature, travel and international affairs. The author has tried to trace the subject in some historical detail, though the background is, sometimes, not given the space it merits.

In particular, Al-Haj Bakeer Markar's interest in education especially, Muslim education appears a para-

mount characteristic of his thinking. He believes in spread of education among the Muslims, in the process of creating a literate and numerate professional elite. but without losing Islamic identity or Islamic purpose. In this sense the author underlines Al-Haj Markar's affinity with the thinking of the late Dr T. B. Jayah, the educationist, legislator, thinker. In addressing the Ceylon Muslim Association in 1919, Dr. Jayah said (an extended quotation seems to be necessary to bring out the full flavour of his thinking.)

'but are we, the Ceylonese, are the Muslims actually progressing on right lines, on acceptable lines on lines suited to our specific characters, to our religious tendency? Nobody will deny that we are not. We are indeed doing something but then our system of education is such that we are completely divorced from our storied past, from our national life, from the actualities of our physical and social conditions. Our system of education is indeed faulty. In the first place, the medium of instruction in Ceylon is a foreign language and not the vernacular. Secondly, in an Eastern country like Ceylon, we accord a pre-eminent position to Western classics and not to our own classics - Sanskrit and Arabic. We have had not a process of mental development We have had simply a process of utter cramming and the result is we are barren of great men and leaders. We are barren of nation builders. Then take the case of a Muslim boy. Ask him of the sagacious Ali, he will be surprised to hear that a man of chivalry lived among his co-religionists. Ask him whether he knows of Omar. He will look surprised. But then ask him who Homer was, where Virgil lived, what Cicero did, whom the Greeks conqured, what the Romans achieved, What Socrates preached, what Zeno propounded. What is the result? He displays such a grasp of facts that he has simply amazed both questioners and examiners.

The supreme need of the hour is education, not mere elementary education, not mere half-hearted

education but an education that will turn out heroes and heroin, leaders and reformers, thinkers and philosphers, an education that will make us a progressive enlightened and powerful minority.

Al-Haj Markar's views are in congruence with the thinking of Dr. Jayah. Dr. Jayah did not contribute only to the shaping of his thoughts. Dr. Jayah was also helpful in enabling Al-Haj Markar, to continue his law studies.

**The Millieu**

Iqbal places Al-Haj Barkeer Markar in his geographical and social millieu, but since the biography is a personalized one, it cannot carry a load of historical material in exhaustive detail.

Beruwela, the home of Al-Haj Markar. lies in the Kalutara district and has long been the traditional home of a fair strength of Muslims. The importance of this district in the economic development. particularly canal and inland transportation of Sri Lanka, had been recognised by the Dutch and the British. It was restated by Colebrooke in 1829, when he wrote.

' In the districts of Colombo and Galle the intercourse (trade between India and Ceylon) is much impeded during the South west monsoon the boisterous navigation of Mannar and the dangers of the coast. To obviate this inconvenience, canals have been constructed for connecting the lakes and rivers which are calculated to secure a conveneninet channel at all times for the conveyance of produce. The coast vessels can come over during the South west monsoon to Calpentyn (Kalpitiya) an accessible port in the Gulf of Mannar and their cargoes are conveyed from thence by canals to Colombo. These canals which are yet to be completed, were first projected by the Dutch, who designed to carry them to a port to be formed at Barberyn (Beriwela) between Colombo and Galle and in furtherance of this plan a canal had been opened inte the Caltura River, 25 miles to the south of Colombo.

In the South West maritime complex, Kalutara district plays a very signifidant role. The district is naturally fertile, with paddy and rubber among other crops. The Muslims of the district are an enterprising people. While some of them are land-owners or farmers, others engage themselves in brokering mainly in rubber, transport and other industries. Gemming, dealing contributes a substantial income for several Muslims. Being not far from Colombo, but not too close, the Muslims of Kalutara district have developed, their distinct characteristics. One of those is attachment to Islamic literature in Tamil and Arabic-Tamil (that is Tamil written in the Arabic script.) Another is a partiality to Muslim religious hospitaliiy as examplified in mowlids, rathibs and kandoois. This Islamic flavour is pervasive whether in towns like Beruwela, Kalutara or Dharga Town (Aluthgama) or in more rural areas like Veyangalla, Tunduwa and Mihiripenna.

**The Historical BacKground**

Iqbal gives the background to the Mus'im presence in Sri Lanka. He recounts the accepted tradition of Arabs, disgruntled with the acts of the ruling Caliph of those times, circa 8th century and their opting to seek their fortunes abroad. This traditional belief has been noted by Sir Alexander Johnston, former Chief Justice of Ceylon, as early as 1830, when he wrota.

' (those Arabs) made sattlements on the Concan ( ie. the present day Konkany in north west India), in the southern parts of the peninsula of India, on the island of Ceylon and at Malacca. The division of them which came to Ceylon formed eight considerable settlements along the north-east, north and western coasts of the island viz one at Trincomallee, one at Jaffna, one at Mantotta and Mannar, one at Coodramalle, one at Puttalam, one at Colambo, one at Barberyn (the present day Beruwela) and one at Point-de-Galle.)

Iqbal proceeds to trace the settlement at Beruwela furnishes the names of some of those who landed at Beru-

wela. He renders the following names. (some of them, ancestors of Al-Haj Markar

1. Sultan Jamaludein
2. Sheikh Mahdoom
3. Sheikh Abdur Rahaman
4. Sheikh Abdul Cader
5. Sheikh Zakariyya
6. Sheikh Ahmad
7. Sheikh Ibrahim
8. Sheikh Salih
9. Sheikh Yusuf
10. Sheikh Abdullah
11. Sheikh Ali

Obviously, lack of space prevents Iqbal's going into the subsequent history of these personages. If it had been done, it would have furnished a valuable addition to the early history of Muslims in this country. Iqbal, however, connects it up with the introduction of Unani medicine into Sri Lanka. Iqbal traces the tradition of Unani medicine among the forbears of Al Haj Markar. In one instance, he records that in every generation there has been a praxticing Unani physician, while Bakeer Markar himself seems to have been drawn irresistably to its rival the practice of law.

It is widely believed that Unani medicine of the original kind was introduced by Sultan Jamaldeen, who was reputed to have practised at Beruwela. It would have been interesting to have been supplied with greater detail, The original Unani medicine, among the glories of Islamic civilization, was practised in the Middle East and other lands of Islamic influence. A syrup-based therapy, targetted towards bringing the diseosed body back to health by means of drugs both from the vegetable and animal kingdoms, its efficacy is dependent on the administration of the specific drug. In Sri Lanka, the orthodox Unani medicine seems to have been modified through the adoption of locally grown or processed drugs (unimagined in the Unani pharmacopea) Also, Unani medicine took over some of the practices, but not the theory of Ayurveda and Sidda.

## Al Haj Bakeer Markar: Early Days

Al Haj Bakeer Markar was born on 12th May 1917. His father was Hakim Aliya Marikar Mohamed, while retaining connections with his home town of Beruwela, had already settled down in Colombo. At Hulftsdorp, in Vincent Street, he carried on medical practice and pharmacy. Al Haj Markar's early life was one of cosy family existence, with the inner and outer relations. He was admitted to the primary class of the Beruwela Maradana Muslim Girls School in accordance with the practice of those days. Subsequently his father thought that it would better for his son to be educated at Colombo. One reason was that his son would be under his constant care. Accordingly, Al Haj Markar entered in 1924, St Sebastian College, in Colombo (Hulftsdorp).

It was, at first sight, an exotic environment for member of a family of traditional way of life. Dressed in white shirt and khaki shorts, the school uniform, Bakeer Markar entiered an environment which was English through and through. Yet, he fitted in neatly. There was no identity crises because his Is.amic consciousness was firmly rooted. Bakeer Markar was clever. Learning came to him easily. He took part in extra – curricular activities. He shone as a debator and orator, much to the chagrin of others but delighting the school authorities. At the end of this educational career, the principal of St Sebastian's gave him a certificate which commended him highly.

The end of his scholastic course, brought a crisis. Bakeer Markar was thinking of whether to continue further studies or to pick up a job. By this time, the clouds of the Second World War had already reached Sri Lanka. The fear of an imminent Japanese assult. placed the country on red alert. The Air Raid Precautions Scheme wes institued by the Government. Bakeer Markar joined the ARP as a volunteer. By the end of the War, Bakeer Markar had achieved his ambition of joining the Law College. His entry was fortuitous, for family fortunes, due to reasons beyond their

control, had declined. But Dr. T. B. Jayah whom he approached, assured him of a job at Zahira College, Colombo. Bakeer Markar acted as master in charge of the College Hostel, for some time. In 1949, he finished his law studies and he was enrolled as a proctor.

From his stay on the staff at Zahira College, Bakeer Markar's association with T. B. Jayah commenced. Till the end, Bakeer Markar felt deep respect for Jayah both as a scholar and man. Iqbal cites many anecdotes illustrating the magnanimity of Jayah. He cites for instance the case of the plantain thief. Zahira College had an orchard, where there was a clum of plantain trees bearing delicious fruit. However, no one had a chance ef tasting these because the ripe bunches disappeared mysteriously. So, Jayah set a trap and the thief was caught. He turned out to be a poor worker who was trying to maintain his family through this anti-social activity. Jayah pardoned him, gifted him the plantains and gave him a generous sum of money besides.

**Local Government Legislator**

One of the advantages of a law practice is its independence and lack of routine. Every case is a new experience and between each, there is some spare time. Social and political service helped fill in the hiatus. Al haj Markar entered local government politics as a matter of course. Muslims have taken easily to local government. For instance, at the grass - roots level (Village Committees) in 1901, there were 138 Muslim members of a grand total for all communities of 2406. Not a very significant strength, perhaps yet, the Muslim presence was there. The same situation was repeated in the urban institutions,, As the number of Municipal Councils rose from one in 1871 to twelve in 1981 and Urban Councils from twelve to thirty-nine, Muslim representation made cautious increases. Muslims became members, Deputy Chairmen Deputy Mayors, Mayors. No wonder al haj Markar found himself in the local government fray and was elected in 1949 as the member for Maradana ward in the Beruwela Urban Council.

Local Government politics is an useful course in the art and practice of politics. It teaches patience, tact, an ability to mix with all sorts of people and above all, a serene attitude to possible defeat without becoming soured. For al haj Bakeer Markar, it was a valuable experience.

**Central Legislator**

Local government political endeavours, unless one has a Senecan irony, almost invariably rise to national politics. Iqbal states that al haj Markar was ever oonscious of the role and status of the Muslims from Colombo to Dewi nuwars (Devundra). In course of time, he haq come to the conclusion that, to cater to the interests of the Muslims, a parliamentary seat should be created at Panadura or Beruwela. This view he had stated when he waited on the Talagodapitiya Delimitation Commission in 1959. This viewpoint was to be realized subsequently. After initial reversal, he was elected to the Beruwela seat in 1965. Iqbal records that out of the nine seats in the Kalutara seat, his was the only victory for the UNP.

Iqbal explains al haj Markar's concern for Muslim representation in the Kalutara district. In his evidence before the Delimitation Commission in 1974, he urged the creation of a multi-member consituency for Beruwela. Subsequently, this too came to pass.

Iqbal states in detail the various elections in which Bakeer Markar took part. In 1977, he was returned as member of the multi-member censtuency.

Within the discussion of general framework of the politics of Bakeer Markar, Iqbal does not forget to produce vignettes of other personages. For instance, there is a deeply affectionate profile of Mr. Imtiaz Bakeer Markar al haj Bakeer Markar's son. Various personalities flit through these pages in vivid turns of phrase.

## Commitment to Islam

Commitment to Islam is a fundamental principle of every Muslim; indeed it is the rationale of his existence. Iqbal gives various instances of al haj Markar's deep understanding of Islam. His travel to Muslim countries and above all, the sacred pilgrimage of Haj, had impressed upon him how the Islamic faith in its insistence on the complete obedience and surrender to Allah (which indeed is the meaning of the word 'Islam') and the brotherhood of man, could unite masses of human being, totally disparate and different in every aspect. This is a phenomenon which is re-enacted five times a day in every mosque. Iqbal gives many instances where the natural magnanimity of al haj Bakeer Markar had seen its fruition; the cyclone effects in Eastern Province, the breach of the Kantalai Tank, the death of Indonesian Hajis in a plane mishap are some of the events which Iqbal records in graphic detail.

The Islamic commitment of al haj Markar, it would appear, has three strands; a sense of Islamic identity, tenaciously held, a deep concern for the welfare of the ouslims and a sense of family history.

## Al-haj Markar and Travel Litreture

Iqbal places the travel of Bakeer Markar in its Islamic context. He cites the classification of travel made by the great Islamic thinker, Iman Ghazzali (rahmatullahi alaihi) into the categories of travel for educational purposes, travel undertaken for worship, travel on the path of Allah, travel for the sake of the Hereafter and travel for the purposes of seening new faces and new things.

Al haj Markar's visits to foreign lands have been partly a result of his parliamentary duties. He has trevelled to Lisbon, (the capital of our first colonial paramount Power) in 1978. He has visited Cuba, Bangladesh, Iraq, Phillipines, Indonesia, Egypt. Cultural pur-

poses, as attending international library seminars, have taken him to India. Religious purposes have been the Haj, to Saudi Arabia. Travel has helped al haj Markar to remind himself of the Islamic heritage. It has also helped him to study at first hand the problems of the depeloping world. Travel has enebled him to revive and maintain friendship with his associates, fellow townsmen like, for instance, Mr. A. G. A. Bari, the internationally known engineer, now resident abroad.

Travel has enabled, as I have said, al haj Markar to reinforce his literary aptitudes. Iqbal deуotes a considerable space to descuss the Literary bent of Bakeer Markar's mind. Iqbal ancedopes in this regard gives. He says that al haɹ Markar could be seen in his library, absorbed in a book Unexpectedly, his was not legal time or treatise on some abstruse topic, but a novel of Somerset Maugham. Iqbal records that al haj Markar is something of an expert on Maugham, having worked through his novels, short stories and plays not to speak of his travel literature.

From this it may be gathered, that this biography of Iqbal is highly personalized (some times with shades of Private eye). He brings in a lot of of other personages, both we l-known and others who lead private lives but, in all these cases, Iqbal, shows the exotic the telling detail. And that leads to a fault. Iqbal sees everything in terms of a personalized vision, sometimes giving a different, distorting focus. There are not wanting many pages, in which readers may prefer a different view (not excepting the present writer). Iqbal is a senior figure in theworld of Tamil letters, having written poems, fiction and articles. An earlier biography of his, a life of the nineteenth century Ɥuslim educationist and leader, Mohammed Caasim Siddi Lebbe, won him a Samitya Msndala Award.

# தகைமைச் சான்று.

## A NOTE OF APPRECIATION

**அல்ஹாஜ் எம். எம். எம். மஃரூப் B. A. (Hons)**

**வாழ்க்கை வரலாறுகள் பலவகை**

ஒரு புதினமான (சில வேளைகளில் நூலாசிரியரும் வாசகரும் சண்டை போட்டுக்கொள்ளும்) நூல். வாழ்க்கை வரலாறு நூல்கள் ஏனைய நாடுகளில், மொழிகளில் பல மாதிரிகளாக, பல கோணங்களிலிருந்து எழுதப்படுகின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம்; அவற்றை ரசிப்பதிலும் பல வேறுபாடுகள். நம்மவர் ஒரு ரகம்தானுண்டு. வரலாற்றுப் பிரமுகரை, கதாநாயகராகக் கண்டு, அவருடைய சாதனைகள் மிகவும் விசாலமாகவும் விஸ்தாரமாகவும் விவரித்து, வரலாற்றுப் பகைப்புலனிலிருந்து சுழற்றி, எழுதப்பெறும் நூல். இவற்றால் பிழையொன்றுமில்லை. உத்தியோகபூர்வமான வரலாற்று நூல்கள் (Official Biography) என அழைக்கப்படும் இவ்வகைகளை வாசிக்கும்பொழுது, அலுப்புத் தட்டலாம்; அவ்வளவுதான். இந்நூல்களுக்கு எதிர் மாற்றமாக இருப்பவை ''டி-பங்கிங்'' (De-Bunking) எனக் கூறப்படும் மட்டம் தட்டுவதற்காக எழுதப்படும் வாழ்க்கை வரலாறுகள். வரலாற்று நாயகரை, வில்லனாகக் கணித்து, அவருடைய நிறைகளை மருவி, குறைகளைத் துலாம்பரமாக விவரித்து நூலைச் சுவாரஸ்யமாக முடிக்கின்றன. ஜனரஞ்சகமாக இப்புத்தகங்கள் அமோகமாக விற்பனையாகின்றன. வாசகர்களுக்கும் உதாரபுருஷர் வெறும் மனிதர் தானே என்ற திருப்தி. இத்தகைய நூல்கள் ஏராளம்; ஏராளம். சில மூர்க்கத்தனமாக எழுதப்படுபவை. வேறு சில குறைகளைப் புட்டுப்புட்டு வைக்கின்றன. மற்றும் சில நாசுக்

காக மிருதுவாகக் குறைகளைச் சுட்டிக்காட்டி ரசிகர்களிட மிருந்து ஏளனம், பரிதாபம் கலந்த புன்னகையை வரவழைக் கின்றன.

இந்நூற்றாண்டின் முதற்பகுதியில் இங்கிலாந்தில் லிட்டன் ஸ்ட்ரகி (Lytton Strachy) என்ற வரலாற்று விமர்சகர் இருந் தார். எமினன்ட் விக்டோரியன்ஸ் (Eminent Victorians) பெயர் பெற்ற விக்டோரிய மகாராணி காலத்துப் பிரமுகர்கள் என்ற வாழ்க்கை வரலாற்று நூலினை எழுதி வெளியிட்டார். அது பல பேர்களின் (ஒரு தளபதி, ஒரு மதத் தலைவர், ஒரு கல்வி மான், சுகாதார சேவையில் பணிபுரிந்த பெண்ணொருத்தி ஆகியோரின்) சரிதங்களை உள்ளடக்கிய நூல். வரலாற்றுப் புருடர்களின் வாழ்க்கையைப் பல கோணங்களிலிருந்து ஹாஸ் யச் சுவையுடன், பச்சாத்தாபத்துடன் படம் பிடித்துக் காட்டி, அவர்களுடைய மகத்தான சாதனைகளை, தனிமனித உபாதை கள், வக்கிரங்கள் என்ற பின்னணியில் வைத்துக் காட்டுகின் றார். மகத்தான சாதனைகளின் மனிதாபிமானத்தை, மனு ஷத் தன்மையைக் காண்கின்றோம். உதாரணமாக இங்கிலாந் தின் சென்ற நூற்றாண்டின் கல்வி அபிவிருத்திக்கு, பாடசாலை களின் மேம்பாட்டிற்கு வித்திட்ட டாக்டர் ஆர்னோல்ட் (Cr. Arnold) என்பார் சதா கம்பீரமாகக் காட்சி தருபவர். மதிப்பும், அலங்காரமும் அவருடன் எப்பொழுதும் வருபவை. ஆனால், தமது கால்கள் குட்டையென்ற படியால் தமது பட் டப்படிப்பு உடைகளினால் அவற்றை மறைத்துக்கொண்டார். லிட்டன் ஸ்ட்ரகி எழுதுகின்றார். நாம் புன்னகை செய்கிறோம். ஆனால், ஆர்னால்டின் அருமையான சாதனைகள், அவருடைய மனித வியாகூலங்களின் அடிப்படையில் நமக்கு நிதர்சனமாக உயிரோட்டமாகப் புலப்படுகின்றன. நூலாசிரியரின் திறமையை நாம் புரிந்து கொள்கின்றோம்.

வாழ்க்கை வரலாறு நூல்களில் இன்னொரு வகை, வர லாற்று நாயகரின் பிறப்பு படிப்புகள் சாங்கோபசாங்கமாக வரையறுக்காமல் வாழ்க்கையும், வாழ்வையும் ஒன்றாகத் தரு கின்றன. இதற்கு ஒரு சிறந்த உதாரணம்: டாக்டர் ஸாமு வேல் ஜோன்சனை (Cr. Samuel Johnson)ப் பற்றி ஜேம்ஸ் பொஸ்வல் (James Boswell) என்பவர் எழுதிய நூலாகும். பதினெட்டாம் நூற்றாண்டில், இங்கிலாந்தில் முதலாவது ஆங்கில அகராதியை ஸவிஸ்தாரமாய் எழுதிப் புகழ்பெற்ற எழுத்தாளரான டாக்டர் ஜோன்ஸனின் வாழ்க்கை வரலாறை எழுத பொஸ்வெல் ஆவல் கொண்டார். சட்டத்தரணியான

அவர் தமது தொழிலைத் துறந்து, ஜோன்ஸ்ஸனுடன் நெருங்கிப் பழகினார். வருடக்கணக்கில் ஜோன்ஸ்ஸனின் அன்றாட வாழ்க்கையை அவர்தம் வாழ்க்கைக் கூற்றுகளை நூற்றுக்கணக்கான ''நோட்'' புத்தகங்களில் எழுதிக்கொண்டார். பிறகு, அவற்றை எல்லாம் அலசித் தொகுத்து ''தி லைப் ஒப் ஜோன்ஸன்'' எழுதினார். அது, அருமையாகவும் புதுமையாகவும் அமைந்ததுமட்டுமல்லாமல், பொஸ்வெலுக்கு நித்திய புகழையும் அளித்தது. ஆங்கில மொழியில் தலை சிறந்த வாழ்க்கை வரலாறு என்ற ஏகோபித்த அபிப்பிராயத்தைத் தட்டிக்கொண்டது.

ஜோன்ஸ்ஸனின் வாழ்க்கை வரலாற்றை, பொஸ்வெல் சரமாரியாகத் தராமல், ஜோன்ஸனின் வாக்கு வழியாக, அவர் வாக்கு மூலம் போன்று தருகின்றார். புதுமை என்னவென்றால், ஜோன்ஸனின் குறைபாடுகளை பொஸ்வெல் குறிப்பிட, அதுவும் ஜோன்ஸனின் வாக்கு வழியாகத் தரத் தவறவில்லை. அதே போன்று, ஜோன்ஸனுடன் பேச்சுக்கொடுத்து, ஜோன்ஸனால் பொஸ்வெல் மட்டந்தட்டப்படும் நிகழ்ச்சிகள் ஏராளம், ஏராளம். ஜோன்ஸன் தனிமனிதனாக, இலக்கியவாதியாக, மாமேதையாகக் காட்சி தருகின்றார். அவருடைய குறை நிறைவாயிலாக பொஸ்வெலும் நமக்கு நிதர்சனமாகத் தென்படுகின்றார். அவருடைய குணப்பண்புகள், குறைபாடுகள் எல்லாம் நமக்குப் புலனாகின்றன; பிரத்தியட்சமாக. அதற்காகத்தான் என்னவோ பல ஆங்கில ஆசிரியர்கள் நினைக்கிறார்கள் பொஸ்வெல் ஜோன்ஸனின் வாழ்க்கை வரலாற்றை எழுதாவிட்டால், ஜோன்ஸ்ஸன் மறக்கப்பட்ட எழுத்தாளனாக ஆகிவிடுவார் என்று.

இன்னொரு புதினமான வாழ்க்கை வரலாறு ''தி குவெஸ்ட் போர் கொர்வா'' (The Quest for Corvo) என்பதாகும். சிமன்ஸ் (Symonds) அதை எழுதினார். அந்நூலில் விசித்திரமான எழுத்தாளர் ஒருவரை தமது வரலாற்று நாயகனாக வரித்துக்கொள்கிறார் சிமன்ஸ். அப்பொழுதுதான் விசித்திர ஆசிரியரின் புதிர் கிளம்புகின்றது. அவர் யாரென, எப்படிப்பட்டவரானவர் எனத் தெரிந்துகொள்ள விரும்புகின்றார். வாழ்க்கை வரலாறு, சிமன்ஸ் வரலாற்று ஆசிரியரைத் தேடிச் செல்லும் பாதயாத்திரையாக உள்ளது. பலபேர்களிடமிருந்து தகவல் சேர்த்து தமது வரலாற்றுப் புருஷரை பல கோணங்களிலிருந்து விளங்கிக் கொள்கின்றார். ஒரு துப்பறியும் நாவலின் திகைப்பூட்டும் தகவல்களும், திடீர் திடீரென வரும் திருப்பங்களும் வாசக

ரைத் திக்குமுக்காடச் செய்து, கடைசியில் திருப்தியும் பெற வைக்கின்றார் ஆசிரியர். வாசகருக்கு ஒரு விசேட (விபரீதம் எனச் சொல்லமுடியாத) அனுபவம் கிடைக்கின்றது.

இவ்வாறு, மேற்கத்திய நாடுகளில் வாழ்க்கை வரலாற்று நாவல்கள் பிரசுரமாகின்றன. தமிழில் கூட, ''நான் கண்ட..........................'' என்ற தலைப்பில், துணுக்குகளையும், விசேட சம்பவங்களையும் வாழ்க்கை வரலாறுகளாகத் தரும் சில பல நூல்கள் உள்ளன.

கவிஞர் ஏ. இக்பாலின் நூல், புதிய ரகத்தைச் சேர்ந்தது. வாழ்க்கை வரலாறு என்பது தலை, இடை, கடை என கிரமமாகச் செல்லும் என்ற பழக்கத்தில் வந்த நமக்கு, இக்பாலின் நூல் சற்று தூக்கிவாரிப் போடுவது ஏதோ உண்மைதான். அதன் அமைப்பே மாறு பட்டது. நூல், அத்தியாயம் அத்தியாயமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் ஒரு கவிதை அலங்கார விளக்காகத் தொங்குகின்றது.

இந்நூலின் தொடக்கமே, இது ஓர் அசாதாரண வரலாற்று நூல் எனக்காட்டுகின்றது.

> ''அவர் பெருமை ஏதுமில்லாமல் நானிருந்த இடத்தை அணுகி தாம் பேசிய பேச்சைப்பற்றிக் கேட்டார். எதிரணியினர் ஒருவரை ஏன் அவர் அணுகினார்? தமது தொகுதியில் பெண் எடுத்த ஒருவன் என்பதாலா? அல்லது இலக்கிய உலகில் எனது பெயர் அடிபடுவதினாலா? முஸ்லிம் சகோதரத்துவத்தின் மேன்மையினாலா? என்றெல்லாம் எண்ணியபோதும் ''கற்றாரைக் கற்றாரே காமுறுவர்'' என்ற முடிவுடன் அவர் பேச்சை விமர்சன நோக்குடன் கூறியமை இன்னும் என் மனதில் பசுமையாகப் பதிந்துள்ளமை குறிப்பிடக் கூடியதே!''

கவிஞர் ஏ. இக்பாலின் இந்நூல் அல்ஹாஜ் எம். ஏ. பாக்கிர் மாக்கார் அவர்களைப் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூலாகும். பலவித பதவிகளில் திகழ்ந்த, திகழ்கின்ற (சட்டத்தரணியாக, சமுதாய ஊழியராக, பாராளுமன்ற உறுப்பினராக, உப சபாநாயகராக, சபாநாயகராக, அமைச்சராக, தென்மாகாண ஆளுனராக) பாக்கிர் மாக்கார் அவர்களைப் படம் பிடித்து காட்டுகின்றது.

**வரலாற்றுப் பின்னணி:**

இந்நூல் வரலாற்றுப் பின்னணியோடு அமைக்கப்பட்டுள்ளது. களுத்துறை மாவட்டத்தின் பகைப்புலன் ஊடாகத்தான் நூலாசிரியர் தமது நூலினை அரண் செய்கின்றார். களுத்துறை மாவட்டம், மேற்கு மாகாணத்தில் குறிப்பிடத்தக்க பிராந்தியமாகும். தொன்று தொட்டு அங்கே முஸ்லிம்களின் குடியேற்றங்கள் காணப்படுகின்றன. இலங்கை முஸ்லிம்கள் முதன்முதலாக வருகை தந்த எட்டுத் துறைமுகங்களில் ஒன்று களுத்துறை மாவட்டத்தில் அமைந்திருக்கின்றது. களுத்துறை மாவட்டத்திற்கும் கொழும்பு நகரத்திற்கும் அந்யோன்ய தொடர்பு இருந்திருக்கின்றது என்பது சில வரலாற்றாசிரியர்களின் துணிபு. கொழும்பின் வெளிநாட்டுப் பொருள்கள் அங்கு செல்வதும், அங்குள்ள கிராமத்துச் சாகுபடிகள் கொழும்பிற்குக் கொணரப்படுவதும் தொன்று தொட்டு நடைமுறை வழக்கங்கள். போர்த்துக்கேயர் கொழும்புவாழ் முஸ்லிம்களைக் கொழும்பிலிருந்து கி. பி. 1626 ல் அப்புறப்படுத்தியபோது, பலர் களுத்துறை மாவட்டத்தில் ஒதுங்கி வாழ்ந்தமை, வரலாற்றுச் சம்பவமாகவுள்ளது. அதேபோன்று, களுத்துறை மாவட்ட மக்கள், கொழும்பில் வந்து வியாபாரம் செய்வதும், படிப்பதற்காக படிப்பிப்பதற்காக தங்குவதும் இன்றைய நேற்றைய நிகழ்ச்சிகளல்ல. (இன்னொரு துக்ககரமான தொடர்பு என்னவென்றால், இந்நூற்றாண்டின் முதல் பகுதியில் கொழும்பிலும், களுத்துறை பாவட்டத்திலும் காசநோய், முஸ்லிம்களை குறிப்பாகப் பெண்களை வெகுவாகப் பாதித்தது.

களுத்துறை மாவட்டத்தை, குறிப்பாக வேர்வலையை சுட்டிக்காட்டிவிட்டு (வேர்வலைதான் முஸ்லிம்களின் முதல் குடியேற்றம் என்பதை எல்லோரும் ஆமோதிப்பார்கள் என்பதற்கில்லை.) பாக்கிர் மாக்கார் அவர்களின் வம்சாவழியினரை நூலாசிரியர் நோக்குகின்றார். அவர்களின் மூதாதையருக்கும் மருத்துவத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பினை விஸ்தாரமாக எடுத்துரைக்கும் நூலாசிரியர், ஒரு வாய்ப்பினைத் தவறவிட்டுவிட்டார், என்றுதான் சொல்லவேண்டும்.

இலங்கையில், யூனானி மருத்துவத்தின் பங்களிப்பு மகத்தான, ஆனால், இன்று தகவல்கள் அற்ற சாதனையாக இருக்கின்றது. முஸ்லிம்களின் தலையாய குடிபகுதிகளில் வளர்ந்து செழிப்பாகக் கிளைவிட்டு படர்ந்த யூனானிச் சிகிச்சை, இலங்கை அரசருக்கும் உரிய மருத்துவம் எனக் கருதப்பட்ட

காலத்திற்குப் பின்னர் நலிந்துவிட்டது. இலங்கையில் யூனானி மருத்துவம் எவ்வாறு தளிர்த்தது; அதன் சக்ஷணதசையின் காரணங்கள் யாவை என்பவற்றிற்கான பதில்கள் வேர்வலை யின் வரலாற்றில் புதைந்து கிடக்கின்றன. பாக்கிர் மாக்கார் அவர்களின் மருத்துவ முன்னோர்களைப் பற்றிக் கூறும் நூலா சிரியர், யூனானி மருத்துவத்தின் வேர்வலை வரலாற்றைச் சற்று விபரமாக எழுதியிருந்தால் சிறப்பாக இருக்கும் என்றே கூற வேண்டும். என்றாலும், நூலாசிரியர் பல கவனத்தைச் சுண்டி யிழுக்கும் தகவல்களைத் தருகின்றார். பாக்கிர் மாக்காரின் மூதாதை ஒருவர் தமது மார்க்கப் பாடல்களை ஆனந்த பைரவி போன்ற கர்னாடக இசை ராகங்களில் அமைத்தார் என்பது ஓர் உதாரணமாகும்.

**வரலாற்று மைல்கல்கள்:**

பாக்கிர் மாக்கார் அவர்களின் பரம்பரையைச் சவிஸ்தார மாக விளக்கிய நூலாசிரியர், அவர் இளமைக் காலத்தைப் பற்றி எழுதுகிறார். பிறந்த ஊரிலிருந்து கொழும்புக்கு வருவதும், கொழும்பில் கல்வி பயில்வதும், உள்ளத்தைத் தொடும் வகையில் எழுதப்பட்டிருக்கின்றது. பாக்கிர் மாக்கார் அவர்க ளின் இளமைச் சுட்டித்தனத்தையும், சுறுசுறுப்பினையும், படிப்பிலும் ஏனைய பாடசாலை நிகழ்ச்சிகளிலும் அவர் காட் டிய திறமையும் நிதர்சனமாகக் கூறப்படுகின்றது. பிற்காலத் தில் பிரபல சட்டத்தரணியாக வந்த பாக்கிர் மாக்கார் அவர் கள், தமது சிறு பிராயத்தில் வைத்தியமே, வழக்கறிஞர் தொழிலை விட சிலாக்கியமானது என மேடையில் வாதம் செய்வது இரசமான நிகழ்ச்சியாகும்.

ஏனையோரைப் போன்று, பாக்கிர் மாக்கார் அவர்களின் வாழ்க்கையிலும் மேடு பள்ளங்கள் மாறி மாறி வந்தன. அவ ருடைய கொழும்பு சென் செபஸ்தியன், சென் மத்திவ் கல்லூரி களின் கல்வி வாழ்க்கைக்குப் பிறகு, ஸாஹிறாக் கல்லூரிக்கு மாற்றலானார். இரண்டாம் உலக யுத்தம், அதன் சக விளைவு களான குண்டு வீச்சுப் பயம், பொருட்கள் விலையேற்றம், விநியோகத்தை அரசினர் ஏற்று நடத்தல், கல்விப் பாதிப்பு போன்றவை தொடர்ந்தமை, பாக்கிர் மாக்கார் அவர்களின் வாழ்வின் திருப்பு முனைகளில் ஒன்றாகும். அதே வேளையில், அவரின் குடும்பத்தினரின் பொருளாதார நிலையும் சரிந்தது. தக்க சமயத்தில், அக்காலத்தில் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி யின் அதிபராகவிருந்த ரி. பி. ஜாயா அவர்கள், பாக்கிர் மாக்

கார் அவர்களுக்கு கல்லூரியின் விடுதிப் பொறுப்பை அளித்து சட்டக்கல்லூரியில் பயிலும் வாய்ப்பினைத் தந்தார்.

இலங்கை முஸ்லிம்களின் தற்கால வரலாற்றில், டாக்டர் ரி. பி. ஜாயாவின் பங்களிப்பு முக்கியமானது. பாடசாலை அதிபர், அரசினர் கல்விக் குழு அங்கத்தவர், சட்ட நிருபண சபை உறுப்பினர், அரச கழக அங்கத்தவர், பாராளுமன்ற உறுப்பினர், அமைச்சர், உயர் ஸ்தானிகர் எனப் பல பதவிகள் வகித்த ஜாயா, இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியில் மிக அக்கறை கொண்டவர். கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியை முஸ்லிம்களின் கேந்திர கல்விக்கூடமாக நிறுவியது மட்டுமன்றி. தகுதிவாய்ந்தவர்களுக்கு ஆசிரியர் பதவியளித்து அவர்களது கல்வி அபிவிருத்தியை நிறைவேற்றும் வாய்ப்பினையும் தந்தவர்.

சட்டப் படிப்பை முடித்துக்கொண்டு, பாக்கிர் மாக்கார் அவர்கள், சட்டத் தொழிலில் ஈடுபட்டார். தாம் கல்வியைப் பின்தொடர்வதில் ஏற்பட்ட இடர்பாடுகள் காரணமாகவோ, என்னவோ அவருடைய கருத்து தொடர்ந்து முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியில் இலயித்து நின்றது. களுத்துறை மாவட்டம் இன்றைக்குச் சுமார் முப்பது முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பதாக கல்வியில் பின்தங்கியிருந்தது என்பது பலருடைய அபிப்பிராயமாகும். கொழும்பிற்கு அருகாமையிலிருந்தது, அதன் புத்திஜீவிகளை இழக்கும் சந்தர்ப்பத்தினை அம்மாவட்டத்திற்கு அளித்தது. களுத்துறை மாவட்டம் பொன் (மணி) விளையும் பூமியாக இருந்தபடியால், பலர், றப்பர் போன்ற பொருட்களின் விநியோகத்தில், ஏற்றுமதியில் மும்முரமாக இருந்தனர் போலும். 1948 ஆம் வாக்கில், இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி வெகுவாக முன்னேறியது. கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியை ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் பொறுப்பேற்று, விஞ்ஞானம், கலை, பட்டப்படிப்பிற்கும் முஸ்லிம் சிந்தனைக்கும் பாரிய பங்களிப்பினைத் தந்தார். தர்கா நகரிலும் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. தனது ஒன்றுவிட்ட சகோதரர் எஸ். எல். எம். ஷாபி மரிக்காரின் தலைமைத்துவத்தின்கீழ் தர்கா நகர் ஸாஹிறாக் கல்லூரி, கல்வியிலும், கல்விக்கூட விஸ்தரிப்பிலும் வெகுவாக முன்னேறியது. ஏற்கனவே, தர்கா நகரில் தாபிதமான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கல்வி முகாமைத்துவத்திற்கு ஊன்றுகோலாக அமைந்திருந்தது. பாக்கிர் மாக்காரின் கல்விக் கரிசனை, அவர் ஏனைய பதவிகளை ஏற்ற பொழுதும், குறையவில்லை. தமது தொகுதிக்கு, தமது மாவட்டத்திற்கு, பாடசாலைகளை நிறுவுவதிலும், தக்க ஆசிரியர்களை

தருவிப்பதும், அவர்களுக்கு போதிய வசதிகளைத் தருவதிலும் அவர் முன்னின்றார். அவ்வகைத் தகவல்களை இந்நூலாசிரியர் இரசனையோடு, சில வேளைகளில் ஹாஸ்யப் பரிவோடு இந்நூலில் தருகின்றார். (ஒரு சில இடங்களில், நூலாசிரியரின் அழுத்தமான எழுத்து, அக்ரோசத்தை எட்டுகின்றது என சில வாசகர்கள் கருதலாம்.) பாக்கிர் மாக்கார் அவர்களின் கல்விக் கரிசனை போன்று அவருடைய பிரயாண அனுபவங்கள், அவரைத் தொடர்ந்து, அவர் தமது பயணங்களை, நீண்டதோர் கல்வி அனுபவம் என எடுத்துக்கொண்டார் போலும். பாக்கிர் மாக்கார் அவர்களின் பிரயாணங்களை விஸ்தாரமாக பிரஸ்தாபிக்கும் நூலாசிரியர், அவற்றிலிருந்து அடைந்த படிப்பினைகளையும் சுட்டிக்காட்டுகின்றார்.

**பிரயாண அனுபவங்கள்:**

பிரயாணங்கள் நமது கருத்துக்களின் பகைப்புலன்களை மாற்றியமைத்து, நமது நோக்கக் கண்ணோட்டத்தைத் தெளிவாக்குவதுமன்றி, உஷார் நிலையில் வைக்கின்றன. விளங்காத புதிர்கள் விளங்குகின்றன. உலகத்தில் வாழும் பல இன மக்கள், அவர்கள் எவ்வளவு சுமுகமாக, சௌஜன்னியமாக வாழ்கிறார்கள் என்ற உண்மையை நாம் பிரக்ஞை பூர்வமாக, அனுபவ வாயிலாக ஜீரணித்துக்கொள்ள முடிகின்றது.

உண்மையில் பாக்கிர் மாக்காரின் பிரயாணங்கள் உலகளாவியனதாம். போர்த்துக்கல், இரான், இராக், க்யூபா, கொரியா, ஸார்க் நாடுகள் எனப் பலபல. பல நாடுகளில் பாக்கிர் மாக்கார் அவர்கள் தமது பழைய நண்பர்களை, பழைய மாணவர்களின் பழக்கத்தைப் புதுப்பித்துக் கொண்டமை பற்றித் தகவல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அவற்றில் முன்னைய ஸாஹிறாக் கல்லூரி மாணவரும், இன்று புகழ் மிக்கப் பொறியியலாளருமான ஏ. ஜி. ஏ. பாரி அவர்களைப் பற்றிய தகவல்கள் பிரமிப்பூட்டுவனவாகவும், பெருமிதம் அளிப்பனவாகவுமிருக்கின்றன. (பாக்கிர் மாக்காரின் பிரயாணங்களைப்பற்றி, வரலாற்று ஒப்பியலோடு இன்னும் நீட்டி எழுதியிருக்கலாம் எனத் தோன்றுகின்றது.)

பிரயாணப் பிணைப்புடன், நூலாசிரியர் பாக்கிர் மாக்கார் அவர்களின் இலக்கியப் பிணைப்பினையும் பற்பல இடங்களில் தொட்டுக் காட்டுகிறார். பாக்கிர் மாக்காரின் மூதாதை ஒருவர், கஸிதாக்கள் செய்ததையும், அவை பாட நூலில்

சேர்த்துக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சியை இலங்கைப் பல்கலைக் கழகத்தில் அறபுத்துறைப் பேராசானாக இருந்த கலாநிதி இமாம் கூறிய சம்பவத்தையும் சுவையாகத் தருகின்றார். (இந்திய உபகண்டத்தில், அக்கால யூனானி மருத்துவர்கள் அறபியில், உருதுவில் கவிதைகள் எழுதுவது சம்பிரதாயமாக விருந்தது. ஹைதரபாத் சமஸ்தானத்திலும் யூனானி மருத்து வர்கள் பலர் உர்துக் கவிதைகள் யாப்பதில் வல்லுனர்களாக இருந்திருக்கின்றார்கள்.)

## உள்ளூர் ஆட்சியில் முஸ்லிம்கள்:

பாக்கிர் மாக்கார் அவர்கள் 1950 ம் ஆண்டு தொடக்கம் 1970 ம் ஆண்டுவரை, வேர்வலை நகர சபையின் தலைவராகப் பதவி வகித்தார் எனச் சுட்டிக்காட்டுகிறார் இந்நூலாசிரியர். இஸ்லாமிய மக்களின் தலைவர்களின் பயிற்சிக் களமாகவும், எழுச்சி நிலையமாகவும், பிரித்தானியர் காலந்தொட்டு, இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் செயலாற்றியிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. இக்கருத்து கிராம சபைகள் தொடக்கம் மாநகர சபை வரைப் பொருந்தும் எனலாம். உதாரணமாக 1901 ல் இலங்கையின் மாகாணங்களின் கிராம சபைகளில் முஸ்லிம் உறுப்பினர்களின் தொகை இவ்வாறிருந் தது. மேல்மாகாணம் இருவர்; மத்திய மாகாணம் பதினைந்து பேர்; வட மாகாணம் (மன்னார்) முப்பத்தைந்து பேர்; வட மேற்கு மாகாணம் பத்தொன்பது உறுப்பினர்; தென் மாகா ணம் இருவர்; வடமத்திய மாகாணம், சபிரகமுவ மாகாணம் ஆகியவற்றில் தலா ஏழு பேர்; ஊவா மாகாணத்தில் அறுவர்; மிகக் கூடுதலான உறுப்பினர் தொகை நாற்பத்தைந்து கொண்ட மாகாணம் கிழக்கிலங்கையாகும். உண்மையில் மொத்த (முஸ் லிம், முஸ்லிம் அல்லாதோர் உட்பட) தொகையினர் 2406 பேர் என இருந்தபடியினால், முஸ்லிம் பிரதிநிதித்துவம் காத்திர மாக இல்லை. ஆயினும், அது ஒரு நல்ல தொடக்கமே. பட் டின சபைகள், நகரசபைகள், மாநகர சபைகள் என உள்ளூ ராட்சி மன்றங்கள் கிளைவிட்டு வளர்ந்தபோது, முஸ்லிம் உறுப் பினர் தொகையும் முன்னேறிக்கொண்டே வந்தது. உதாரண மாக 1871 ம் ஆண்டில், ஏழு மாநகர சபைகள் இருக்க, 1981 ம் ஆண்டு அவை பன்னிரண்டாகப் பெருகியிருந்தன. அதேபோன்று, 1871 ல் நகரசபைகள் பன்னிரண்டாகும். 1981 ல் அவற்றின் தொகை முப்பத்தொன்பதெனக் கணிக்கப் பட்டது. கிரமமாக முஸ்லிம்கள் நகரசபை உறுப்பினர்களாக, சிரேஷ்ட உறுப்பினர்களாக, உதவிச் சபைத் தலைவர்களாக,

தலைவர்களாக் வரத்தலைப்பட்டனர். உள்ளூராட்சி மன்றங்களின் தலைமைப் பதவிகள் மத்திய அரசாங்கத்தின் உயர் அரசியல் பதவிகளைத் திறம்பட வகிப்பதில் போதிய பயிற்சி அளிக்கின்றன என்று கூறுவது தவறில்லை. வேருவலை நகர அபிவிருத்திக்கு பாக்கிர் மாக்காரின் பங்களிப்பு விரிவாக இந்நூலில் கூறப்படுகிறது.

## தலைவர்களின் தொடர்பு:-

''பாக்கிர் மாக்காரின் சுய மொழிக்கொள்கையையும், அவற்றுடன் தமது முதலில் ஈடுபாடற்ற கருத்தையும் ''பட்'' டெனத் தொட்டுக்காட்டும் நூலாசிரியர் இவ்வாறு எழுதுகிறார்.

''அவர் ஒரு மிதவாதியாகக் காட்சி தந்தார். முதல் பிரதமர் திரு. டி. எஸ். சேனாநாயக்கா, அடுத்த பிரதமர் அவர்மகன் டட்லி சேனாநயக்கா, அதற்கடுத்த பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலை ஆகியோருடன் கலந்துரையாடும் வாய்ப்பு பாக்கிர் மாக்காருக்கு கிடைத்தது.''

பிறகு கதை தொடர்கிறது. ஆனால், இங்கு அந்தத் தொடர்புகளைஅலசிஆராய்ந்து தேசிய அரசியல் பகைப்புலனின் மத்தியில் வைத்துப் பார்க்கும் வாய்ப்பினை தவறவிட்டார் என்றே சொல்லத் தோன்றுகிறது.

## ரி. பி. ஜாயாவும். பாக்கிர் மாக்காரும்:

இங்கு நூலாசிரியரின் வசனம் அர்த்த புஷ்டியுள்ளது. அவர் இவ்வாறு உற்றுநோக்குகின்றார். பாக்கிர் மாக்கார் தனது அரசியல்தனது அரசியல் அசானாக, மர்ஹூம் ரி.பி. ஜாயாவின் தேசிய ஜனநாயக சிந்தனையை ஏற்றுக்கொண்டார் எனக்குறிப்பிட்டார். ஜாயாவின் தேசிய ஜனநாயகச் சிந்தனை எல்லா இனங்களின் உரிமைகளையும், தேசிய ஒருமைப் பாட்டையும் இணைக்கும் கருத்துக்கோவையாக அமைந்தது. இலங்கை சட்ட நிரூபண சபையில் ஜனவரி 15, 1925ம் ஆண்டில் முஸ்லிம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஜும்ஆ லீவு (வெள்ளிக்கிழமைகளில் அவர்களுக்குரிய மதிய போசன இடைவேளை நீடித்தல்) பிரேரணை விவாதித்தல் இவ்வாறு குறிப்பிட்டார்.

> ''இந்த நாட்டில் அரசாங்கம் ஜும்ஆ 'லீவ்' தருவதில் தயங்கக் கூடாது. ஏனெனில், பிரித்தானிய ஏகாதிபத்திய ஏனைய நாடுகள் முஸ்லிம்களின் நியாயமான இக்

கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்திருக்கின்றன. மலேயா நாட்டில், சென்னை மாவட்டத்தில், வங்காளத்தில் இக்கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.''

1945ம் ஆண்டு இலங்கை சுயாட்சி வெள்ளை அறிக்கை விவாதத்தில் ஜாயா அரசு கழகத்தில் பங்குகொண்டபோது, இலங்கையில் சுதந்திரப் போராட்டத்தில் தமது சமூகத்தின் பங்களிப்பினை அளிப்பதாக உறுதி பூண்டார். சுதந்திரம் பெறுவதில், முஸ்லிம்கள் முன் நிற்பார்கள் எனப் பறைசாற்றினார் 1946ம் ஆண்டில். சுதந்திரத்தின் குறிக்கோளை விவரிக்கும்பொழுது, ஒவ்வொரு முஸ்லிமும் சுதந்திரமாக, சமத்துவமாக சகல உரிமைகளைப் பெற்று வாழ்வதைத்தான் விரும்புவார்கள் என்றார்.

## நாடாளுமன்றமும். ஏனைய அனுபவங்களும்:

அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் நாடாளுமன்றப் பிரவேசத்தின் மூலக்கோட்பாடுகளை, இரத்தினச் சுருக்கமாக நூலாசிரியர் இவ்வாறு தருகிறார்.

> ''கொழும்பிலிருந்து தெவிநுவரை வரை முஸ்லிம்களின் பரம்பலை அவர் எப்போதும் சிந்திப்பார். இப்பரம்பலை அடிப்படையாக வைத்து, முஸ்லிம் அங்கத்துவத்தைப் பாராளுமன்றம் பெறவேண்டும் என்ற கோரிக்கை அவரது அடிமனதில் பற்றியிருந்தது.''

''பின்னர், நூலாசிரியர் பாக்கிர் மாக்காரின் நடாளுமன்ற அங்கத்துவத்தை காரண காரியத் தொடர்பாகவும் வரலாற்று நோக்கில் எடைபோடுகின்றார். அவருடைய சித்தாந்தங்களை தல்கொடபிட்டிய தொகுதி நிர்ணயக் குழுவுக்கு அளித்த வாக்கு மூலத்தில் முன்வைத்தார். நூலாசிரியர் பாக்கிர் மாக்காரின் நாடாளுமன்ற நிகழ்ச்சிகளை கிரமமாக விளக்குகின்றார்.

இலங்கை முஸ்லிம்கள் சிறுபான்மையினர். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் நோக்கும், செயலாற்றும் தன்மை ஆகியவற்றின்மீது அவர்கள் பிரதேசம், அதாவது அங்கத்துவபபடுத்தும் தொகுதி, அதன் சூழல், பொருளாதாரப் பகைப்புலன் வெகுவாகச் செல்வாக்குப் படுத்துவது ஊகிக்கக்கூடியது. எனவேதான், வெவ்வேறு பகுதிகளில் முஸ்லிம் உறுப்பினர்களின் செயலாற்று நோக்குகள் வேறுபடுகின்றன போலும்.

பாக்கிர் மாக்கார் அவர்களின் பாராளுமன்ற வாழ்வு, உறுப்பினர் என்ற நிலையிலிருந்து உப சபாநாயகராக, சபாநாயகராக உயர்வு பெற்றது. மாறுதல் பெற்றது. நாடாளுமன்ற சபாநாயகர் என நாம் கூறும்பொழுது, அதன் ஆங்கில மொழிபெயர்ப்பான 'ஸ்பீக்கர்' Speaker என்ற சொல்லின் வரலாற்று அழுத்தத்தை மறக்கும் வாய்ப்பு நமக்கு வந்து விடுகிறது. பிரித்தானிய வரலாற்றின் நோக்கில் Speaker நாடாளுமன்றத்தின் தகுதி வாய்ந்த அங்கீகாரம் பெற்ற பேச்சாளராகவும், அதன் காவலராகவும், இயங்குகின்றார். பாராளுமன்றத்தின் மகத்துவமே அவர் கையிலுள்ளது எனலாம். அதற்காகத்தான் நாடாளுமன்றக்காப்பாளர் (Serjeant – At– Arms) சபாநாயகர் முன்பாக சுமந்து செல்கின்றார். ஆகையால்தான் சபாநாயகர் என்ற பதவி அரசின் பரந்த நோக்கையும், நடு நிலையையும், பரந்த விட்டுக் கொடுக்கும் சௌஜன்யப் பண்பையும் வளர்க்கின்றது.

பாக்கிர் மாக்கார் அவர்கள், அரசியல்வாதிமட்டுமல்ல, இலக்கிய இரசிகரும்கூட என நூலாசிரியர் விபரமாக விளக்குகின்றார். தமது ஓய்வு காலங்களில் சமர்சட் மாஹ்ம் என்ற ஆங்கிலேய நாவலாசிரியரின் கதைகளை ஆவலோடு வாசிப்பவர் என்ற தகவல் பலருக்குப் புதுமையாக இருக்கலாம். பாக்கிர் மாக்காரின் இலக்கிய வட்டம் மிகப் பரந்தது; பல மொழி இலக்கியங்களையும் இலக்கியக் கருத்துக்களையும் அவர் அலசி எடை போட்டிருக்கிறார் என நூலாசிரியர் நிரூபிக்கிறார். பாக்கிர் மாக்கார் அவர்களின் இலக்கிய இரசனையும், இலக்கிய வாதமும், பரம்பரை பரம்பரையாக இரத்தத்துடன் வந்தவை, என்ற கருத்து பரம்பரை வரலாற்றினால் நிலை நிறுத்தப் பெறுகின்றது. இந்நூலில் ஆங்காங்கே பாக்கிர் மாக்கார் அவர்களின் குடும்பத் தகவல்கள் இடம் பெற்றிருக்கின்றன.

## இஸ்லாமிய வாழ்வும் வாக்கும்:

முஸ்லிம்கள் தமது தனித்துவத்தையும் சமயப்பற்றுதலையும் பேணிக் காப்பவர்கள். முஸ்லிம் தலைவர்கள் அப்பணிகளில் முன்னின்று உழைத்திருக்கிறார்கள். உழைத்து வருகிறார்கள். இஸ்லாமிய வாழ்வும் வாக்கும் இரத்தத்தில் ஊறியவை. அவற்றைக் காப்பதில் முக்கிய பங்கு வகிப்பது, ஷரியத் வழி நிற்கும் இஸ்லாமியக் கல்வியாகும். இஸ்லாமிய நோக்கில் கல்வி கற்பிப்பதாகும். அரசியல் முன்னோடியும், கல்விமானும் அரசியல் வாதியுமான ரி. பி. ஜாயா 1914ம் ஆண்டில் அவர் எழுதிய கட்டுரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

''எமது கல்வி முறைமை பிழையானதாகும். முதன் முதலில் எமது கல்வி ஊடகம் அந்நிய மொழியாக இருக்கிறது; சுயமொழியல்ல. இரண்டாவதாக கிழக்குத்தேய நாடான எமது இலங்கையில் மேல்நாட்டு இலக்கியங்களுக்கு, கலாசாரத்திற்கு அதிக நேரம் தருகிறோம். எமது மொழி இலக்கியங்களை உதாசீனம் செய்கிறோம். எமது படிப்பிப்பு உள்ளத்தைச் செப்பனிடுவது இல்லை. மாறாக மனப்பாடம் செய்வதும், அதை ஒப்புவிப்பதும், வெறும் பாராயணமாக இருக்கிறது.

''ஒரு முஸ்லிம் சிறுவனை எடுத்துக்கொள்ளுங்கள். அறிவுக்கடலான அலி (றழி) அவர்களைப்பற்றிக் கேளுங்கள். சிறுவனுக்கு மகத்துவம் அவ்வளவாகத் தெரியாது. உமர் (றழி) அவர்களைப் பற்றிக் கேளுங்கள். சிறுவன் விடைக்குத் திணறுவான். ஆனால், அதே சிறுவனை (உரோமானிய, கிரேக்க எழுத்தாளர்களான) ஹோமர், விர்சில் பற்றி வினவுங்கள். ஹீஸரோ என்ன செய்தார்? எனக் கேளுங்கள், கிரேக்கர் யாரை முறியடித்தார்கள்? உரோமானியர்களின் சாதனை என்ன? சோக்கிரடீஸ் கருத்துக்கள் யாவை? ஸினோ என்ன கணித வித்தையைச் செய்து காட்டினார்? இவ்வாறு கேளுங்கள்; சிறுவன் அவனைக் கேட்டவரைக் கிறங்கவைக்கும்படி, சரமாரியாகப்பதிலளிப்பான்.

''தற்காலத்தில் நமக்கு உடனடியாகத் தேவைப்படுவது கல்வியாகும். பாலர் கல்வியல்ல; அரைவேக்காட்டுக் கல்வியல்ல. ஆனால், தீரம் மிக்கவர்களை, தலைவர்களை, சீர்திருத்தவாதிகளை, சிந்தனையாளர்களை நமக்குத் தரும் கல்வியாகும். எம்மை முன்னேற்றத்துடிக்கும் துறைபோகக் கற்ற, சக்திவாய்ந்த சமுதாயமாக மாற்றும் கல்வியாகும்.''

இவ்வகைச் சித்தாந்தங்களின் அடிப்படையில்தான், பாக்கிர் மாக்காரின் சிந்தனைகளை நோக்கவேண்டும் என எனக்குப்படுகிறது.

## நூல் அமைப்பும் வடிவமும்:

நூலில் ஆங்காங்கே வரும் சில தகவல்களைப் பற்றிப் பல கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். உதாரணமாக நூலாசிரி

யர் சொல்கிறார் சீனடி சிலம்படி வித்தைகளின் தொடக்க பூமி வேர்வலை என்று. ஆனால், அந்தத் தகுதியைக் கொழும் பிற்குப் பலர் தருவார்கள்.

இந்நூலில் பாக்கிர் மாக்கார் அவர்களைப்பற்றிப் பல தகவல்கள் துலாம்பரமாகக் கூறப்பட்டிருக்கின்றன. அதே போன்று, பல எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மந்திரிமார், பிரமுகர்கள், தொழில் சார்புடையவர்கள் ஆகியோரைப்பற்றியும் பல சம்பவங்களை நம் கண்முன்னே வைக்கின்றார் நூலாசிரியர். சில பல வேளைகளில் தரும் தகவல்கள் தனிமனித அபிலாசைகள் என்ற கண்ணாடி ஊடாக நோக்கப்பட்டிருப்பதால், தகவல்களின் ஆக்ரோசம் நம்மைத் தூக்கி வாரிப்போடுகின்றது என்பது உண்மைதான்.

புதினமான வாழ்க்கை வரலாறு நூல் என்றேன். இக் கட்டுரையின் தொடக்கத்தில். அதில் ஒன்று ஒவ்வோர் அத்தியாயத்தையும் ஒரு கவிதையுடன் தொடங்குவது என்பேன். கவிதைகள் அத்தியாயத்தின் விறுவிறுப்பைக் கூட்டுகின்றன. ஆனால், ஒரு சில வேளைகளில் இடரக் கரடலாக இருக்கின்றன.

இவ்வாறான தனிமனித நோக்குடன் வாழ்க்கை வரலாறு (Personalized Biography) எழுதுவதில் ஒரு வில்லங்கத்தைச் சுட்டிக்காட்டுவது கடமையாகும். நிகழ்ச்சிகளை ஒரு கோணத்தில் பார்ப்பதால், நிகழ்ச்சிகளின் உணர்ச்சிப் பாளங்கள் இறுகி, சம்பவங்களுக்கு, ஒரு தீவிர அழுத்தம் தரப்படுகின்றது. சில்லறை விடயங்கள் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் காணப்படுவது போல பாரமாக இருக்கும். (ஈ ஒன்றினை இலக்கடரனிக் பூதக்கண்ணாடி மூலம் பார்க்கப்படும்பொழுது பயங்கரமாகத் தானே இருக்கின்றது.) இப்பலவீனம் சில இடங்களில் தென் படுகின்றது. இந்நூலின் இன்னொரு புதினம் அதன் தலையங்கங்கள். அவை, அசாதாரணமானவை. விறைப்பும், விறுப்பும் இருப்பதாகப் படுகின்றது.

இதன் ஆசிரியரான கவிஞர் ஏ. இக்பால், பல நூல்களைப் பிரசுரித்திருக்கிறார். அதில் ஒன்று, அறிஞர் சித்தி லெவ்வை அவர்களின் வாழ்க்கைச் சரிதையைக் கூறும் ''மறுமலர்ச்சித் தந்தை''யாகும். மறைந்த கல்விமான் ஒருவரின் ஆய்வு வரலாறு என்பதினால் உராய்ப்பு இல்லாமல் பழங்காலச் சமூகப் படுதாவின் மத்தியில் வைத்து எழுதப்பட்டிருந்தது. கவிஞர் இக்பால் கவிஞர் மட்டுமல்ல இலக்கியவாதியும் கூட. பல இலக்கியப்

பிரச்சினைகளைத் தெரிந்து வைத்துக்கொண்டு, இலங்கை, தமிழ் நாடு ஆகிய வட்டாரங்களின் இலக்கியக்காரர்கள், இலக்கிய சமூகப் பிரச்சினைகளில் பரிச்சியம் கொண்டவர்; கண்டவர். கூடவே, நல்ல புத்தகசாலை ஒன்றினை வீட்டில் வைத்து, அதில் இலயித்திருப்பார். (ரி. எஸ். எலியட், பிரபல ஆங்கில விமர்சகர்; கவிஞர். ஆகவே சிலர் கூறுவதுண்டு, அவர், எழுதும் கவிதைகளில் விமர்சன நோக்கு இருக்கும். அவர், எழுதும் விமர்சனத்தில், கவிதையில் சில வேலைகளில் அத்துமீறிய உணர்ச்சி பாவங்கள் இருக்கும் என்று.) இந்நூலை என்ன செய்தாலும், தூக்க மாத்திரையாகப் பாவிக்க முடியாது.

## உள்ளே உள்ளவை.


| | | |
|---|---|---|
| 1. | வைகறைக் கும்மிருட்டு | 1 |
| 2. | உதய ஒளிக்கீற்று | 7 |
| 3. | மலையடிவார மாணிக்கம் | 15 |
| 4. | பட்டை தீட்டிய பளபளப்பு | 23 |
| 5. | ஊரைச் சுற்றிய ஒளி | 30 |
| 6. | பாலொளிச் சந்திரன் | 35 |
| 7. | ஒளிபரப்பிய பகலவன் | 41 |
| 8. | இரவே யற்ற பகல் | 57 |
| 9. | விரிந்த ஒளியில் நிறைந்த தடங்கள் | 70 |
| 10. | பண்புயர்வுப் பாதை | 78 |
| 11. | பூமியுள் பதிந்த அத்திவாரம் | 88 |
| 12. | வான் விரித்த சிறகுகள் | 100 |
| 13. | பல்கலைப் பரிவு | 109 |
| 14. | மன மாளிகை | 116 |
| 15. | பெயர் வரிசை | 126 |

# வைகறைக் கும்மிருட்டு. 1

வித்து விதைத்துக் கருவுற்ற வேளை
  வியப்புறு லைலத்துல் கத்ர் இரவு
அற்புத நாளில் அமல் பெற்ற செய்தி
  அறிவு நிகர் அன்னை வாய் மொழியாம்
பொற்புயர் நற்குணம் போற்றும் பொது நலம்
  பூத்த பொலிவுடை நன் முகத்தை
வெற்புடன் பர்பரீன் வேண்டு மென்றேயீங்கு
  வெற்றித் தலைவராய் ஈந்ததுவே!

1977 ஆம் ஆண்டு திரு, ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசின் ஆரம்பகாலம். அரசின் நாடாளுமன்றத்தின் உப சபா நாயகராக அல்ஹாஜ் எம். ஏ. பாக்கிர் மாக்கார் பதவியேற்ற காலத்தில் இலங்கைச் சட்டக்கல்லூரி முஸ்லிம் மஜ்லிஸின் ''மீசான்'' சஞ்சிகையின் வெளியீட்டு விழாவின் பிரதம அதிதியாக அவர் கலந்து கொண்டார். அவர் ஒரு சட்ட வல்லமை பெற்ற சட்டத்தரணி என்ற காரணத்தினாலும் அரசியல் அனுபவ முதிர்ச்சி யுள்ளவர் என்ற உண்மையினாலும் முஸ்லிம் தலைமைத்துவத்துக் குரியவர் என்ற உயர் கணிப்பினாலும் அன்றைய உப சபாநாயகரை சபை உன்னிப்பாகக் கூர்ந்து கவனித்தது. அன்றைய அவரின் பேச்சு நீதி மன்றத்தில் நின்று பேசும் தோரணை பெற்றது. மத்திய கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொட்டுக் காட்டப்பட்டன. இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைகள் ஆழமாக அலசப்பட்டன. சட்டக் கல்லூரி மண்டபம் மிக மயான அமைதிக்குள் மலைத்து நின்றது. இத்தனைக்கும் காரணம் அன்றையக் ''கரண்ட் ரொபிக்'' அங்கே ஒலித்து நின்றமைதான்.

உபசபாநாயகரின் பேச்சு முடிந்த பின்தான் மண்டபம் இரைந்தது. கூட்டம் முடிந்ததும், அரசியல் கொள்கை வித்தி

யாசம் எனக்கும் அவருக்கும் இடைவெளி விட்டாலும் அவர்பெருமை யேது மில்லாது நானிருந்த இடத்தை அணுகி தான் பேசிய பேச்சைப் பற்றிக் கேட்டார். எதிரணியினர் ஒருவரை ஏன் அவர் அணுகினார்? தனது தொகுதியில் பெண் எடுத்த ஒருவன் என்பதாலா? அல்லது இலக்கிய உலகில் என் பெயர் அடிபடுவதினாலா? முஸ்லிம் சகோதரத்துவத்தின் மேன்மையினாலா? என்றெல்லாம் எண்ணிய போதும் ''கற்றாரைக் கற்றாரே காமுறுவர்'' என்ற முடிவுடன் அவர் பேச்சை விமர்சன நோக்குடன் கூறியமை இன்றும் என்மனதில் பசுமையாகப் பதிந்துள்ளமை குறிப்பிடக் கூடியதே!

அல்ஹாஜ் எம். ஏ. பாக்கிர் மாக்கார் அவர்களை நான் மிகவும் காரசாரமாக விமர்சிப்பவன். அந்த உந்துதல் அவரையும் என்னையும் அநேக சந்தர்ப்பங்களில் இணைத்துள்ளமையும் பசுமை நிறைந்ததே! அதனால், இலங்கை முஸ்லிம் பெரியார்களில் ஒருவர், முஸ்லிம் குடியிருப்பின் மூத்த தலமான வேர்வலையின் மகன் ஒருவர், கலாநிதி அல்ஹாஜ் டி.பி. ஜாயா போன்ற கல்வி அரசியல் பேரறிஞரின் மாணவர் ஒருவர், ஏன்? அரசியல் தலைமைப் பயிற்சி பெற்ற முதுபெரும் அனுபவசாலி என்ற முறையில் பண்புயர் மனிதராகப் பாக்கிர் மாக்கார் உயர்வு பெறுகிறார். தனிப்பட்ட முறையில் அரசியல் குரோதம், கோள்மூட்டல், அவரை அணுகிய பத்தாம் பசலிகளினால் நான் அவரால் மிகத் தாக்கப்பட்டவன். அது எனது சொந்த விஷயத்துடன் தூங்கிக்கொள்ளட்டும். இருந்தபோதும், விருப்பு வெறுப்பில்லாமல் அவரை நடுநிலைமையில் நின்று நிதானித்து அவரது வாழ்க்கைக் குறிப்பை மக்கள் மத்தியில் முன்வைக்க எனக்குத் தகுதியுண்டெனா நினைக்கின்றேன். இலங்கை முஸ்லிம் சமூகம் இன்றைய நிலையில் ஒன்றித்து நிற்கவேண்டிய ஓர் அவசிய காலகட்டத்தில் இவர் போன்ற கல்வி, அரசியல் இவ்விரு துறைகளோடும் இன்னும் பல வழிகளிலும் அனுபவ முதிர்ச்சி பெற்ற பெரியார்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள் எதிர்கால சந்ததியினருக்கு மிகமிக அவசியம். எழுத்தில் உருப்பெற்று நிலைத்து நிற்பது வரலாற்றுப் பாதுகாப்புக்கு வழி சிறந்தது.

திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், குதிரைமலை, புத்தளம், கொழும்பு, பர்பரீன், காலி ஆகிய எட்டுத்துறை முகப் பட்டினங்களையும் அலசி ஆராய்ந்தால் இலங்கை முஸ்லிம்கள் வரலாற்றுப் புதையல் மேலெழும்.

ஹிஜ்ரி 65 (கி.பி. 685) ஆம் ஆண்டில் இஸ்லாமிய அரசுரிமை பெற்றிருந்த அப்துல் மலிக் இப்னு மர்வான் என்பவரின் கொடுங்கோல் ஆட்சிமுறையைச் சகிக்க முடியாத ஹாஷிம் குலத்தவர்கள் பலர் இந்தியா, இலங்கை, மலாக்கா முதலிய தேசங்களில் சென்று குடியேறினார்கள். அவர்களின் எட்டுப் பிரிவினர் இலங்கையின் எட்டுத் துறைமுகப் பட்டினங்களையும் எட்டிப் பிடித்தனர்.

இவ்வரலாற்றுத் தொன்மைக்கு அணிகலனாக முதன்மை பெறும் துறைமுகப் பட்டினம் ''பர்பரீன்'' என்னும் வேர்வலைப் பட்டினமே!

இன்று வேர்வலை எனக் கூறப்படும் பட்டினம் அறபியில் ''பர்பரீன்'' என்றே போற்றப்படுகிறது. இலங்கை முஸ்லிம்கள் எழுதிய அறபுக்கிரந்தங்களில்கூட, வேர்வலையை ''பர்பலீ'' என்றே எழுதியுள்ளனர். ''பர்பலீ'' என்பது முதலில் ''பர்பர்'' என்றே இருந்திருக்கலாம். ''பர்'' என்னும் அறபுச் சொல் ''நாடு'' என்னும் அர்த்தத்தை உடையது. இலங்கையை நோக்கி வந்த அறபியர் இந்து சமுத்திரத்தில் அலைந்த பின், நிலப்பரப்பு கண்ணில் பட்டதும், ''பர், பர்'' என்றே ஆரவாரம் செய்திருக்கின்றனர். கரைதட்டி யிறங்கியதும் 'பர்பர்' என்றே அழைத்திருக்கின்றனர். அந்தப் ''பர்பர்''தான் பர்பரீன், பர்பரி, பர்பலீ என்றெல்லாம் மனித நாக்கில் பட்டுத் தேய்ந்து ''வேர்வலை'' என்றாகிவிட்டது.

இலங்கையை நோக்கிய ஹாஷிம் குலத்தவர்களில் ஒரு பிரிவினர் வேர்வலையை வந்தடைந்தனர் என அறிந்தோம். அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களின் நாமா வரிசையையும் பார்ப்போம்.

1. சுல்தான் ஜமாலுத்தீனிப்னு அலாவுத்தீனிதின் நூறாமில் உமய்யா,
2. ஷெய்கு மஃதூ மிப்னு கயில் சித்தீகுத் தமாமிம்,
3. ஷெய்கு அப்துர்ரஹ்மான்,
4. ஷெய்கு அப்துல் காதிர்,
5. ஷெய்கு ஸகரிய்யா,
6. ஷெய்கு அஹ்மத்,
7. ஷெய்கு இப்றாஹீம்,
8. ஷெய்கு ஸாலிஹ்,

9. ஷெய்கு சூகுப்,
10. ஷெய்கு அப்துல்லாஹ்,
11. ஷெய்கு அலி.

பர்பரீன் என்ற பெயரும், வேர்லையில்தான் முஸ்லிம்கள் முதன் முதல் குடியேறினர் என்ற சான்றும் நிலைபெற நிறுவுவதற்குப் பல கல்வெட்டுக்கள் ஆதாரமாகின்றன. வேர்வலைக்கு வருகை தந்த அறபிகள் ஆரம்ப காலத்திலேயே ஒரு மஸ்ஜிதைக் கட்டி, அதற்கு மஸ்ஜிதுல் அப்றார் - மஸ்ஜிதுக்களின் தந்தை என்று பெயருமிட்டனர். இம்மஸ்ஜித் வேர்வலை மருதானையிலுள்ள மஸ்ஜிதுல் அப்றார் ஜும்ஆப் பள்ளி என்பது பிரசித்தம். மஸ்ஜிதுல் அப்றார் என்னும் பள்ளியின் வரலாற்றை அலசினால் வேர்வலை முஸ்லிம்களின் வரலாறும் மேலெழும் என்பதை வரலாற்றாசிரியர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

மஸ்ஜிதுல் அப்றார் பற்றிய அலங்காரப் பதங்களைப் பிரசுரமாக பாவலர் அ.லெ.ம. அக்கீம் அலியா மரைக்கார் மேஸ்திரியார் என்பார் ஹிஜ்ரி 1323 றஜபு பிறை 27இல் வெளியிட்டிருக்கின்றார். இவ்வலங்காரப் பதப்பிரசுரம் ஒன்று, ஆனந்த பைரவி இராகம், ஆதி தாளத்திலும், மற்றொன்று சௌராஷ்டிர ராகம், ஆதி தாளத்திலும் பாடப்பட்டுள்ளன. கவிவல்லமையுள்ள அ.லெ.ம. அக்கீம் அலியா மரைக்கார் மேஸ்திரியார் அவர்கள் சாஸ்திரிய சங்கீத ஞானமுள்ளவர் என்பதுடன், மஸ்ஜிதுல் அப்றார் கட்டிட அமைப்பின் நுணுக்கங்களையும், அங்கே அரங்கேறும் ஆத்ம ஞான உயர்வுகளையும் பொருளாக்கிப் பாடியிருக்கின்றார்.

''ஆயிரம் வருடத்துக்கப்பால் அறிவாளர்கள்
ஆய்ந்தோர் வணங்கும் சிறுபள்ளி அதைத்திருத்தித்
தேர்ந்தோர் தெளிந்தோர் முறை சொல்லி உடைத்துண்டாக
உண்மை நபியிரசூல் செம்மை மறை தெளிந்தோர்
உற்றோர் இபுலாவையும் மெட்டாய்த் திருத்தி வைத்தார்
பள்ளி அலங்காரமே பாடும் பரம் பொருள்
சேரும் பாவவினைகள் தீரும் ஜெயப் பேராகும்... பள்ளி...
தெள்ளு மறையோர்க ளெங்கும் கொள்ளும் புகழா ரிலங்கைச்
சீரான வேர்வலையிற் பேரணியாய்த் துலங்கும்... பள்ளி...

இவ்விதம் இசைப்பாடலாகத் திகழும் இப்பாடல்கள் மூலம் மஸ்ஜித் அப்றாரின் பழைமையை உய்த்துணர்கின்றோம். இப்

பழம் பெருமை பெற்ற மஸ்ஜிதுடன் இணைந்து வாழ்ந்த வேர்வலை முஸ்லிம்கள் இஸ்லாமிய உணர்வுடன் வாழும் உயர்ந்த பரம்பரையினராகும். மஹல்லம், ஹக்கீம் குமுஸ்தர், முதலி, கணக்கப்பிள்ளை, மரைக்கார் என்னும் சமுகத்தின் முதன்மை பெற்ற தொழிற் துறைகளாலும், சமூக உயர்வினாலும் பெயர் பெற்ற குடும்பங்கள் வேர்வலையில் வாழ்ந்து வந்தனர்.

ஹக்கீம் என்பது வைத்திய நிபுணர்களைக் குறிக்கும், ஹக்கீம்ஷாக்கள் அரசர்களின் வைத்தியர்களாகிச் சான்று பெற்றவர்களாக அன்று திகழ்ந்தனர். இந்த ஹக்கீம் பரம்பரையில் தான் நமது பண்புயர் மனிதர் பாக்கிர் மாக்கார் அவர்கள் 1917 மே 12ஆந் திகதி பிறந்தார்.

வேர்வலையில் ஹக்கீம் பரம்பரை செல்வாக்கும், செழிப்பும், மக்கள் மத்தியில் மதிப்பும் பெற்ற பரம்பரையாகும். அப்புகழ் பெற்ற குடும்பத்தில் வைத்திய நிபுணத்துவமும் கல்வித் தேர்ச்சியும் பாண்டித்தியமுமுள்ள ஹக்கீம் அலியா மரைக்கார் அவர்களின் புதல்வர் ஹக்கீம் அலியா மரைக்கார் முஹம்மத் அவர்களின் ஏக புதல்வர்தான் நமது அப்துல் பாக்கிர் மாக்கார் அவர்கள். இலங்கையில் வர்த்தகத்தில் பேர்போன மஹல்லம் இஸ்மா லெவ்வை மரைக்காரின் புதல்வி றாஹிலா உம்மாதான் இவரது தாயார்.

தாயின் வழியிலும் தந்தையின் வழியிலும் ''மாக்கார்'' (மரைக்கார்) என்னும் பெயரும் ஒட்டியிருப்பதை நாம் அவதானிக்க வேண்டும்.

''மரக்கல'' என்ற சொல்லின் திரிபுதான் ''மர்க்கர்'' என்று வந்தது என்ற புலப்பாடு மலபார் மக்களிடம் இருந்தது. எனவே, சோனகரை அவர்கள் ''மர்க்கர்'' என அழைத்தனர். தென்னிந்தியாவில் வாணிபத்தில் ஈடுபட்ட அறபு வணிகர்களின் தலைவரை ''மர்கபி'' (MARKABI) என அழைத்தனர்.

தலைமைத்துவம் உடையவர்களின் பெயரின் அடைச்சொல்லாக 16ஆம் நூற்றாண்டிலிருந்து ''மர்க்'' என்ற சொல் சேர்க்கப்பட்டு வந்தது. இதுதான், காலப்போக்கில் மர்க்கர், மரிக்கார், மாக்கார் என மாறி வழங்கலாயிற்று. இதன் வழிஆய்வு செய்யின் பாக்கிர் மாக்காரின் தாய் வழியும் தந்தை வழியும் தலைமைத்துவத்தைப் பேணிய வழிமுறை என்பது நிச்சயமா

கின்றது. அதனால்தான், அரசியல், சமூக மத்தியில் பாக்கிர் மாக்காரும், ''மாக்கார்'' என்ற தலைமைத்துவத்தைப் பெற்று விட்டார் எனலாம்.

அப்துல் பாக்கிர் மாக்காரின் தாயார் றாஹிலா உம்மா வின் தாய் மாமன்மார்களான ஞானக்கவி ஷெய்கு முஸ்தபா ஆலிம், ஷெய்கு இஸ்மாயில் பர்பலீ ஆலிம், ஷெய்கு முஹியத் தீன் லெவ்வை ரிஜிஸ்டார் உயர்ந்த மார்க்க சீலர்கள் மட்டு மல்ல, சிறந்த வர்த்தகப் பரம்பரையினருமாகும்.

அப்துல் பாக்கிர்மாக்காரின் தந்தையார் ஹக்கீம் அலியாமரைக் கார் முஹம்மத் அவர்கள் கொழும்பு வின்சன்ட் வீதியில் மருந்துக் கடையுடன் வைத்திய சாலையையும் வைத்திருந்தார். வேலைப் பொறுப்பு அவருக்கு விடிவைக் கொடுப்பதில்லை. இப்பொறுப்பு அவரைப் பல மாதங்கள் ஊர் செல்லாமல் தாமதப்படுத்தி விடும். எது எப்படி நடந்தாலும், அவர் றமழான் 27இல் கட் டாயம் ஊர் வந்து- விடுவார். மஸ்ஜிதுல் அப்றாரில் றமழான் 27இல் இவரது ஹிஸ்புமுறை. அல்குர்ஆன் பாராயணம் செய் வோருக்கு அன்றிரவு அன்னதானம் வழங்குவது இவர்தான். அப்புனித 27இல் ஒரு றமழான் மாதம் ஹிஸ்பு முறையை இனிமையுடன் நிறைவு செய்ய வேர்வலை வந்தார். அன்றிரவு தனது இல்லக்கிளத்தியுடன் இன்புற்றிணைந்திருக்கின்றார். ஹிஸ்பு முடிந்து மறுநாள் அவர் மீண்டும் வியாபாரத் தலம் சென்றுவிட்டார். ''அன்றைய இணைப்பில் அமலாகிக் கருவுற்ற குழந்தைதான் எனது செல்வம் அப்துல் பாக்கிர் மாக்கார்'' என்ற செய்தியை இன்றும் அவர்களது மூப்புடன் வாழும் தாயார் கூறுகின்றார்கள். இப்பிக்குள் முத்து இனிதே உருப் பெற்றது, அந்த உன்னத உயர்வுடைய ''லைலத்துல் கத்ர்'' இரவுதான் என்மகன் கருப்பெற்றார் என்று மகிழும் தாய், அந்த மகிமையின் விளைவுதான் இஸ்லாமிய ஒழுக்க சீலமுடைப் பற்றுள்ள மகனாக இன்றும் திகழ்கின்றார் என்று அதிசயிக் கின்றார். அதுமட்டுமல்ல, பிறந்த குழந்தை பொக்குள் கொடி யை மாலையாகக் கழுத்தில் அணியப்பெற்றுப் பிறந்த சங்கதி யையும் தாயார் இன்றும் கூறுகின்றார். கழுத்து நிரப்பி வழி யும் மாலைக் குவியல்களை வாழ் நாளிலேயே கண்டார் பாக் கிர். தாயாரோ பிறக்கும்போதே அடையாளமாகக் கண்டார். வித்தின் பின், விளைவுக்குரிய அறிகுறிகளை அன்றே, அக்கா லத்தே நாங்கள் கூறிமகிழ்வோம் என்றும் அத்தாயார் கூறி நின்றார். அந் நல் விளைவுகளை நம்நாடு, நம் சமூகம் அல் ஹாஜ் அப்துல் பாக்கிர் மாக்காரின் சேவை நலன்களில் கண் டுள்ளதல்லவா?

# உதய ஒளிக்கீற்று. 2

பதுறுப் போரில் கைதிக ளானோரில்
  பண்புடைக் கல்வியில் தேர்ந்திருப்போர்
எதிர்ப்புக ளில்லாப் பத்துச் சிறுவர்க்கு
  எழுதும் அறிவினைப் புகட்டிய பின்
எதுவித ஈடுகள் இல்லாமல் விடுதலை
  யாகிடுவர் நபி கூறிவிட்டார்!
இதில் பெரும் தத்துவம் கல்வியி னுட் பொருள்
  இஸ்லாத்தில் முக்கியம் கண்டிடுவீர்!

கலுத்துறைக் கல்வித் திணைக்களம் மாவட்ட மட்டத்தில் பாடசாலைகளில் பரீட்சையை 1981ஆம் ஆண்டு தொடங்கியது. இக்காலத்தில் தமிழ் மொழி மூலம் கல்வி பெறும் பாடசாலைகளின் பரீட்சைகள் பாடசாலை மட்டத்திலேயே நடைபெற்று வந்தன. தமிழ் மொழி மூலம் பரீட்சை நடைபெற வேண்டும் என்ற ஆதங்கம் ஆசிரியர்கள் மாணவர்களிடையே நிலவி வந்தது. இவ்விஷயம் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாட்டிற்கும் வந்துவிட்டது. காரணம் கேட்டபோது, தமிழ் மொழியில் அச்சடிக்கப் பணம் போதாமைதான் என்ற பதில் வந்தது. அப்பொழுது ஆங்கிருந்த வேர்வலை முதல்வர், சபா நாயகர் அல்ஹாஜ் எம். ஏ. பாக்கிர் மாக்கார் அவர்கள் ''தனது செலவிலேயே வினாப்பத்திரங்களை அடித்துத் தருகிறேன்'' என்று வாக்களித்தார். அவ்வருடம் அவரது செலவிலேயே வினாத்தாள்கள் அச்சடித்துப் பரீட்சையும் ஆரம்பம் செய்யப்பட்டது.

இத்தகவல் யாருக்கும் தெரிய வேண்டிய அவசியமில்லை. ஆனால், கல்விக்கரிசனை அந்த மனிதரிடம் குடிகொண்டிருப்பது விளங்குகின்றது. அதுமட்டுமல்ல, எனது சமூகச் சிறார்

களின், எனது தொகுதிச் சிறார்களின், எனது ஊர்ச் சிறார் களின் கல்வி செழிக்க வேண்டும் என்ற மனவெழுச்சி விளங்கு கின்றது. சமமாக மக்களின் சகல தேவைகளும் நிறைவேற்றப் பட வேண்டும். அது, மொழி வாரியாகவோ இனவாரியாகவோ பிரிந்துவிடக் கூடாது என்ற அரசியல் நோக்கும் அவரிடம் குடி கொண்டிருந்தது. இத்தனைக்கும் கல்வி கற்கவென முதல் அடி எடுத்து, முடிவு வரையும் பட்ட கஷ்ட நஷ்டங்களை அவர றிந்தவரே!

வேர்வலை மருதானையில் ''சில்லை'' என்னும் சிற்றாற் றைச் சூழ்ந்த பிரதேசமே பாக்கிர் மாக்காரின் விளையாட்டுத் தலம். அங்கே, தன் ஏக சகோதரி துர்ரதுல் யதீமாவுடன் இணைந்து விளையாடிய பால்ய காலத்தில் பலகை எழுதி அல்குர் ஆன் ஓதலை ஆரம்பம் செய்தார்.

இன்றைய அகில உலக ஷாதுவியாத் தரீக்காவின் ஆத்மீகத் தலைவர் டாக்டர் முஹம்மத் அல்பாஸி அவர்களின் தந்தை யார் செய்யித் முஹம்மத் இபுறாஹீம் அல்பாஸி அல் மக்கீ அவர்கள் இலங்கை வந்த காலமது. அப்பெரியார்தான் பலகை எழுதிப் பாடம் சொல்லிக் கொடுத்தார். அவர் எழுதி ஓதிக் கொடுத்த பாடம் ''இன்னா பதஹ்னா லகபதஹன் முபீன்'' என்பதாகும். ஸூறத்துல் பதஹ் – வெற்றிகள் என்ற அத்தி யாயத்தின் முதல் வசனமது. ''நிச்சயமாக நாம் உமக்கு தெளி வானதொரு வெற்றியைத் தந்தோம்'' (அல்குர் ஆன் 48:1)

அப்பெரியாரின் மடியிலிருந்து மிகவும் மன இசைவுடன் இவ்வசனத்தைக் கணீரென்று மூன்று வயதுப் பாலகன் பாக்கிர் ஓதினார். இளமைப் பதிவு இசைந்ததால் என்னவோ அடிக் கடி இவ்வசனத்தை ஓதி ஆறுதல் பெற்றார். தெளிவான வெற்றி அவருக்குத் திக்கெங்கும் காத்திருப்பது போல் இன் றும் இருக்கிறதல்லவா?

கல்விக்கூடம் செல்லும் வயது வந்ததும் சிறுவர் பாக்கீர் தன் சகோதரியுடன் கைகோத்துக் கதை பல கூறி, வேர்வலை மருதானை முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்திற்கு கல்வி கற்கச் சென்றார்.

முஸ்லிம்களிடையே கல்வி முன்னேற்றம் காணப்படாத அக்காலத்தே மருதானை முஸ்லிம் மகளிர் பாடசாலை எவ் விதம் உதயமானது என்ற கதையும் விரிவுடையதே! ஆண்களே

கல்வியில் கரிசனை காட்டாத அக்காலத்தே பெண்கள் கற்பதை வைதீகப் பேர்வழிகள் விரும்பவேயில்லை. அக்காலத்தே, அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் சிறிய தந்தையார் ஸராயில் மரிக்கார் அவர்களே வேர்வலை மருதானை மகளிர் வித்தியாலயத்தை அமைக்க முன்னின்றவர். எதிர்ப்புக்களிடையே எழுந்த இப்பாடசாலை இலங்கையின் முதல் முஸ்லிம் பெண் பாடசாலை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிற்காலத்தில் இம்மகளிர் பாடசாலையின் வளர்ச்சியில், கல்வியில் அக்கறை கொண்ட அநேகர் முன்னின்றுழைத்தனர். என்றாலும், தைர்யமாகச் செயல்பட்டவர்களில் காலஞ்சென்ற கல்விப் பரிசோதகர் அல்ஹாஜ் ஏ.எல்.எம் பி முஹம்மத், ஓ.எல்.எம்.ஏ. வதூத், எம். இஸட். முஹம்மத் யூஸுப் போன்றவர்கள் முக்கியமானவர்கள். இவர்கள் ஒன்றிணைந்து ''கல்விச் சங்கம்'' ஒன்றை அமைத்துக் கல்விக் கரிசனை காட்டினார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

சிறுவர் அப்துல் பாக்கிர் மாக்கார், மருதானை முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்தில் தனது ஆரம்ப கல்விக்கு அடி எடுத்து வைத்தார். இன்றைய மாளிகாஹேன முஸ்லிம் மஹாவித்தியாலயம் குர்ஆன் ஓதும் மத்றஸாவாகவே இருந்தது. அங்கும் பாக்கிர் மாக்கார் குர் ஆன் ஓதுவதற்காகச் சென்று வந்தார். எனவேதான், இவ்விரு பாடசாலைகளின் பழைய மாணவராகத் திகழ்கிறார். ''தாயோடு அறுசுவை போம், தந்தையோடு கல்வி போம்'' என்ற மரபுப்படி, தாய் தந்தையர் இவ்விரண்டிலும் பாக்கிர் மாக்காருக்கு உறுதுணை செய்தனர். அவர்கள் உயிருடன் இருந்து இந்நற்காரியத்தை அவருக்களித்தனர். கல்விக்குத் தந்தை உறுதுணை. அவர், ஊரிலிருந்து தூரத்தே இருப்பதால் மகனின் கல்வி தடை படலாம். எனவேதான், தொழில் செய்யும் இடத்திலேயே பிள்ளைகளின் கல்வியையும் கற்க வைக்க வேண்டுமென்ற அபிலாசை தந்தையாருக்கும் அவரது சகோதரருக்கும் ஏற்பட்டது. இதனால், அப்துல் பாக்கிர் மாக்காரும், அவரது ஒன்றுவிட்ட சகோதரர் ராஸீக் மாக்காரும் கல்வி வாய்ப்பைப் பெற கொழும்புக்குச் சென்றனர்.

சிறிய தந்தையார் ஹகீம் ஏ.எஸ்.எல். மரைக்கார் உடைய ஆயுள்வேத வைத்தியசாலை கொழும்பு வின்ஸன்ட் (அப்துல் ஹமீத்) வீதியில் அமைந்திருந்தது. கொழும்பு சென்றபொழுது

அப்துல் பாக்கிர் மாக்காருக்கு வயது ஆறு. அவர் ஒழுங்குடன் உயர் கல்வி பெற வேண்டும் என்ற அபிலாசையில் 1924ஆம் ஆண்டு கொழும்பு சென்செபஸ்தியன் கல்லூரியில் சேர்ந்தார். மேரி மெட்டலின் என்னும் கன்னியாஸ்திரியிடம் அப்துல் பாக்கிர் மாக்காரையும் அவரது ஒன்றுவிட்ட சகோதரர் ராஸீக் மாக்காரையும் ஒப்படைத்தனர்.

கறுப்புத் தொப்பி, காக்கிக் கால்சட்டை பாடசாலைச் சீருடை. இது கம்பீரத் தோற்றத்தைக் கொடுத்து நின்றது. பாடசாலைப் பிரவேசம் மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் மொழிப் பிரச்சினை மனச் சங்கடத்தை இவர்களுக்கு ஏற்படுத்தியது. கல்வி மொழி ஆங்கிலம், பேசும் மொழி தமிழ். ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் இடர்பட்டனர். மொழிப்பிரச்சினையால் சிறுவர்கள் அதே வகுப்பில் அடுத்த வருடமும் கற்க நேரிடுகின்றது.

இது பெற்றோருக்குப் பெரும் சங்கடத்தைக் கொடுத்தது. சிறிய தந்தையார் சிறந்த கல்விச் சூழலை ஏற்படுத்த முயன்றார். மெஸன்ஜர் வீதியில் வைத்தியர் ஷாபி ஹஸன் வீட்டிற்குப் பிள்ளைகளை அழைத்துச் சென்றார். அவர்களது வீட்டுச் சூழல் கல்விக்கு வாய்ப்பளிக்கும் இதமான சூழலாக அமைந்து நின்றது. குழந்தைகளுக்கு இச்சூழலைப் பயன்படுத்தும் வித்தை வெளியானது. பாடசாலை முடிந்ததும் மருந்துக் கடையில் மருந்து வகைகளைக் கண்டு நிறுத்து விற்கும் வேலைகளோடு புத்தகம் புரட்டிப் புதுப்பாஷைகளைத் திறம்படவாசிக்க முற்பட்டனர். மறைந்திருந்த திறமைகள் நிறைந்து வெளியே வந்தன. சிறிய தந்தையின் வழி காட்டும் திறமையைப் பின்னே கண்டு வியந்தனர்.

சிங்களம், ஆங்கிலம் அந்நிய மொழிகளாக இருந்த இவர்களுக்கு, இப்போது இணங்கிய மொழிகளாக இணைந்தன. வகுப்பில் ஏனைய மாணவர்களை முந்தி நின்றனர். வகுப்பில் இவர்களது எழுத்துத் திறமைகளை மற்றவர்களுக்கு வாசித்துக் காட்டும் அளவு முன்னேறினர்.

வகுப்பு வாசிகசாலையின் பொறுப்பு அப்துல் பாக்கிர் மாக்காருக்கே கிடைத்தது. பயன்பாடு அதிகரித்து நின்றது.

கல்லூரி இலக்கிய மன்றம், விவாத மேடைகள் அப்துல் பாக்கிர் மாக்காரை அணைத்து நின்றன. ''நியாய துரந்திரரா வைத்தியரா மேலான தொழில் செய்பவர்?'' என்னும் விவா

தம் தொடங்கியது. வைத்திய பரம்பரையின் வழிவந்த பாக்கிர் வைத்தியத் தொழிலே சிறந்ததென வாதிடும் குழுவுக்குத் தலைமை தாங்கினார். குறிப்பெடுத்துக் கொடுத்தார். மேடை ஏறினார். சபைக் கூச்சம் அவரைத் தடுமாறச் செய்தது. இந்த அனுபவத்தை ஒரு சவாலாகக் கொண்டார். மீண்டும் தனது பலவீனத்தை முறியடித்தார். பாடசாலையில் சிறந்த பேச்சாளரானார்.

பகிரங்கக் கூட்டமொன்றில் அல்ஹாஜ் பாக்கிர் மாக்காருடன், பேச்சாளராக வீற்றிருந்த ஜனாப் ஐ.எல்.எம். தமீம் என்பவர், ''காந்தி மகான் தனது முதல் வழக்கில் கோட்டில் பேசமுடியாமல் தடுமாறி, மீண்டும் பணத்தைத் திருப்பிக்கொடுத்ததாக அவரது சுயசரிதையில் வாசித்தேன், இவ்வித அனுபவம் உங்களுக்கு ஏற்பட்டதுண்டா?'' என்று, பாக்கிர் மாக்காரிடம் கேட்டிருக்கிறார். இந்தப் பாடசாலைச் சம்பவத்தையே பாக்கிர் பதிலாகக் கொடுத்த சம்பவத்தை ஜனாப் தமீம் அவர்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கூறுவார்.

சென்செபஸ்தியன், சென்மத்தேயு இரு கல்லூரிகளுக்கு மிடையே விவாதப்போட்டி நடந்தது. செபஸ்தியன் விவாதக் குழுத் தலைவர் வரவில்லை. உடனடி, அப்பொறுப்பை பாடசாலையை விட்டுச் செல்லவிருந்த மாணவர் பாக்கிருக்குக் கொடுத்தனர். விவாதத்தில் பாக்கிர் வெற்றிவாகை சூடினார்.

விவாதத்தின் பொறுப்பாசிரியர் ''ஜேர்மனியைப் பிஸ்மார்க் காப்பாற்றியது போல் எமது மாணவர்களை பாக்கிர் பாது காத்தார்'' எனப் புகழாரம் சூட்டினார்.

மாணவர் தலைவர் பதவி பாக்கிர் மாக்காரை வந்தடைந்தது. கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் பாக்கிர் திறமையாகச் சித்தியடைந்தார், அதிபர் ஏ. இரத்தினசபாபதி சிறந்த மாணவன் என்ற விதந்துரையை எழுத்தில் வடித்துச் சான்றிதழ் வழங்கினார்.

சென்செபஸ்தியன் கல்லூரி பல ஒழுங்கு முறைகளைக் கற்பித்தது. நல்லவை எனத் தெரிந்ததையும் மற்றோர் இணக்கத்தைப் பெற வல்லவைகளையும் பாக்கிர் தனதாக்கிக் கொண்டார். எல்லோருடனும் எல்லா மதத்தினருடனும் எல்லாமொழி பேசுவோருடனும் இணக்க முறையில் நடக்கும் பக்குவத்தை பாக்கிர் பெற்றார்.

செபஸ்தியன் கல்லூரியில் கல்வியை முடித்த பாக்கிர் மாக்கார் தொழில் செய்வோமா? அல்லது உயர் கல்வியைத் தொடர்வோமா? என்னும் சிந்தனையில் ஆழ்ந்தார்.

இக்காலத்தே அவரது சிறிய தந்தையார் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர் டி.பி. ஜாயாவைச் சந்தித்தபோது பாக்கிர் மாக்காருடைய கல்வித் தராதரச் சான்றிதழைக் காட்டினார். கல்விச் சுடர்மணி ஜாயா பாக்கிர் மாக்காரின் திறமையை மதிப்பிட்டார். உயர் கல்வி பெறுவதற்கெனக் கெட்டிக்கார மாணவனுக்குக் கொடுக்கும் புலமைப் பரிசில் வழங்கி ஸாஹிறாவில் பாக்கிர் மாக்காரை டி.பி. ஜாயா சேர்த்துக் கொண்டார்.

இலங்கை முஸ்லிம்களின் கலாசார மத்தியத் தலமாக விளங்கிய ஸாஹிறா அறிஞர் சித்தி லெவ்வை, வாப்பிச்சி மரிக்கார், அறபி பாஷா ஆகியோரின் சிந்தனைக் கலங்கரை விளக்கம். அதில் தெளிவு பெற்றோரே வரலாற்றில் முஸ்லிம் சமுதாயத்தை வழி நடத்தி வந்திருக்கின்றார்கள். அவர்களில் ஒருவர்தான் நமது பண்புயர் மனிதர் பாக்கிர் மாக்கார் என்பதை நாம் மனதில் கொள்ளல் அவசியம். இந்த வரலாற்றுண்மையை மனக்கசப்பால் மறந்துவிட முடியும். ஆனால், மறுத்துவிட முடியாது.

ஸாஹிறா அகில இலங்கை முஸ்லிம்களின் கேந்திரத்தானம். வசதி படைத்தோர், கல்வி வசதியைத் தேடி வந்தோர் யாவரும் இங்கே ஒன்றித்தனர். சர்வ இலங்கையின் முஸ்லிம்கல்விக் குடும்பம் இங்கே சங்கமமானது.

மஜ்லிஸ்-பாராளுமன்றச் சாயலில் ஆறு மாதங்களுக்கொரு முறை இங்கே நடந்தேறியது. ஆண்டுக்கொரு முறை தெரிவாகும் சபாநாயகரின் பதவியை அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் இரு தடவைகள் வகித்து வந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்ல, சிங்கள, தமிழ் இலக்கிய மன்றங்களின் தலைமைப் பதவியும் இவரை விட்டுவிடவில்லை. மிக அதீதமான போட்டிகளின் மத்தியில் தெரிவாகும் பதவிகள் இவை.

ஸாஹிறாவின் உத்தியோகப்பற்றுள்ள வெளியீடான சஞ்சிகை ''கிரஸன்ட்'' ''இளம் பிறை'', கல்வி, அரசியல், இலக்கிய ஆய்வுக்குரிய பொக்கிஷம். இதன், பிரதம ஆசிரியராக இளைஞர் பாக்கிர் பதவி வகித்திருக்கின்றார். பேச்சாற்றலும் எழு

த்து வன்மையும் இணைந்திருந்த இளைஞர் பாக்கிரிடம் பத்திரிகைத் தொழில் ஆற்றலும் வந்து புகுந்து கொண்டது.

பாக்கிர் மாக்கார் கல்லூரியின் வெளிக்கள வேலைகளில் நிலைத்திருந்தபோதும் லண்டன் மெற்றிக்குலேசன் பரீட்சைக்கும் ஆயத்தம் செய்தார். மெற்றிக்குலேசன் பரீட்சையில் விஞ்ஞான பாடமாக தாவரவியலை எடுத்தார். குறுகிய காலத்தில் லத்தீன் மொழியிலும் தேர்ச்சி பெற்றார். தமிழ் மொழியில் தகுதி போதாது என ஆசிரியர் கூறிய போதும் அதையும் விட்டு விடாது முயன்று படித்து முற்றும் தெரிந்தார்.

ஸாஹிறா செயலாற்றலை பாக்கிர் மாக்காருக்கருளியது. கிரஸன்ட் - இளம் பிறை சஞ்சிகை அச்சி வடிவில் அழகாக அமைந்திருந்தது. சஞ்சிகைப் பிரதியுடன் அதிபர் டி.பி. ஜாயாவை அணுகினார். சஞ்சிகையைப் பார்த்துப் பூரித்த ஜாயா அவர்கள் பரீட்சைப் பெறுபேற்றின் வெற்றியைக் கூறி மகிழ்ந்தார்.

ஸாஹிறாவின் கல்வி நல்ல தகைமையைத் தந்து நின்றது. சட்டம் பயில 1939இல் சட்டக் கல்லூரி ஏகினார் பாக்கிர். இக்காலத்தே அவரது பொருளாதார நிலை குலைந்திருந்தது.

தாய் வழியில் மிகச் செல்வச் சிறப்புடையவர் பாக்கிர். ஊவாப்பகுதியில் அல்துமுல்ல நகரில் பெரும் வியாபார ஸ்தாபனத்தை நடத்தியவரே அவரின் தாயாரின் தந்தை. இங்கே இவர்களது வீட்டைச் சிறாப்பர் வீடென்றே கூறுவர். இச்சொல் பணக்காரர் என்பதைக் குறிக்கும் ஒல்லாந்தர் பாஷை. 'பணக்கார வீடு'' என்பது இவர்களது தாய் வழி வீடு. செல்வப் பெயருக்கேற்பவே அவர்களும் வாழ்ந்தனர். இந்தப் பகைப் புலத்தில் வாழ்ந்த பாக்கிர் மாக்காரின் பொருளாதார நிலை சட்டக் கல்லூரியில் சட்டம் பயிலும்போது குலைந்துதானிந்தது.

பொருளாதாரச் சீர்வுக்கும் ஸாஹிறாவே அவருக்குக் கை கொடுத்தது. இரவில் ஸாஹிறாவின் இராப்பாடசாலை - நைட் ஸ்கூலில் கற்பித்தார். மாலை நேரத்தில் மாணவர்களுக்கு டியூஸன் கொடுத்தார்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் கருமேகம் உலகெலாம் பரவிய காலமது. சட்டம் பயிலும் நோக்கம் நிறைவேற முடி

யாத சூழ்நிலை. போர் விமானங்களின் அபாய ஒலி. மக்களின் வாழ்க்கை சகலவிதத்திலும் பாதிப்பு. இந்தச் சூழ்நிலையில் கல்வித் தாகம் கொண்ட பாக்கிர் மாக்கார் சும்மா இருந்துவிடவில்லை.

இளைஞர் பாக்கிர் மாக்கார் விமானப் பாதுகாப்புப் படையின் (ஏ.ஆர்.பி) ஆலோசகராகப் பதவி ஏற்றார். இந்தியாவில் ஹைதராபாத் சென்று விசேட பயிற்சியும் பெற்றார். 1946 இல் போர் மூட்டம் கலைந்தது. அமைதியின் பின், வேர்வலை மருதானைக்கே பாக்கிர் வந்து விட்டார்.

ஸாஹிறாவில் ஆசிரியப் பதவியை ஏற்குமாறு அல்ஹாஜ் டி.பி. ஜாயா வேண்டிய போதும், சட்டக்கல்வியில் இலயித்தே நின்றார் பாக்கிர் மாக்கார் அவர்கள்.

அல்ஹாஜ் டி.பி. ஜாயா அதற்குரிய ஏற்பாட்டைச் செய்து கொடுத்தார். ஸாஹிறாவின் உதவி விடுதி மேற்பார்வையாளர் பதவி அவரது படிப்புக்கு உதவியது. சட்டத்துறைக்கல்வியைக் கற்றுத் தேர்ந்து 1949இல் ஒரு நியாய துரந்திரராக அல்ஹாஜ் எம். ஏ. பாக்கிர் மாக்கார் வெளியேறினார்.

# மலையடிவார மாணிக்கம். 3

அந்தஸ் துயர்த்தி அறிவை இறக்கிடும்
  சந்தர்ப்ப வாழ்க்கை அவசியமா?
நிந்தனை வந்தாலும் நிமிர்ந்து மனிதனை
  நினைத்தே யுயர்த்துதல் நிறைவல்லவா!
சொந்த முயற்சிகள் சுயநலப் போக்குகள்
  சுயத்துட னழிந்திடும் உண்மையிது
பந்தம் மனிதரில் பற்றுடன் வாழுதல்
  பழுது வரா மனம் நிறைவு தரும்.

1946 ஆம் ஆண்டு ஸாஹிறாவில் உதவி விடுதிப் பொறுப்பாசிரியர் பாக்கிர் மாக்கார் தீவிரமாகச் சட்டக் கல்லூரி இறுதிப்பரீட்சைக்காக யாவற்றையும் மீளாய்வு செய்து கற்கின்றார். இப்போழுதெல்லாம் அவர் பின்பற்றும் ஆதர்ச புருஷர் அதிபர் டி. பி. ஜாயா அவர்கள்தான். 1947ஆம் வருடப் பொதுத் தேர்தலில் தொழிலாளர் தலைவரெனப் பிரசித்தி பெற்ற திரு.ஏ.ஈ. குணசிங்கவுடன் டி.பி. ஜாயா அவர்கள் போட்டியிடுகின்றார். இந்தத் தேர்தல் நடவடிக்கைகளை நெறிப்படுத்தி நடத்த நமது இளம் சட்ட வல்லுனர் பாக்கிர் மாக்கார் முன்வருகின்றார். அரசியல் அனுபவமும் அவரது குருவின் துணையுடனே ஆரம்பமாகின்றது.

டி.பி. ஜாயா என்ன சாமான்யமானவரா? ஆனந்தாக் கல்லூரியின் உப அதிபராகக் கடமையாற்றும் காலத்தில்தான் எம். ஈ.பி. கட்சியின் தலைவர் பிலிப் குணவர்த்தனா அங்கே கற்கின்றார். நெறி பிறழ்ந்த மாணவன் எனப் பெயரெடுத்துக் கல்லூரியில் குழப்பம் செய்ததால் பிலிப் குணவர்த்தனாவைக் கல்லூரியிலிருந்து விலக்கி, ஒழுக்கவீன விடுகைப்பத்திரமும் கொடுக்கக் கல்லூரி நிர்வாகம் முன்வந்த காலம், அதை எதிர்த்து

நின்று, பிலிப் குணவர்த்தனாவைத் தனது கட்டுப்பாட்டுக்குள், தனது வீட்டில் வைத்து நெறிப்படுத்தியவர்தான் கல்விமான் டி.பி. ஜாயா அவர்கள். ''ஜாயாவின் நெறி ஆளுகையில் நானில்லாவிட்டால் சமூதாய வாழ்க்கையிலிருந்து ஒதுக்கித் தள்ளப்பட்டிருப்பேன்'' என்று இறுதிவரை நன்றி உணர்வுடன் வாழ்ந்தவர்தான் உயர்திரு பிலிப் குணவர்த்தனா அவர்கள்.

பிரபல்யமான கிறிமினல் - குற்றவியல் சட்டவல்லுனராகத் திகழ்ந்த ஒரு தமிழ் மகன் - அவரை ஸாஹிறாவிலிருந்து வெளியான புத்திஜீவிகள் என்றும் மறந்துவிடமாட்டார்கள். இவர் ஒரு பூரண பொதுவுடமைவாதி, கொம்யூனிஸ்ட். தேர்தல் காலத்தில்கூடப் பகிரங்கமாகக் 'கொம்யூனிஸ்ட்' கட்சிக்கே வேலை செய்வார். கல்விமான் டி.பி. ஜாயா அவர்களின் மகன் இந்தத் தமிழ் மகனின் வகுப்பில் கற்கின்றார். எதற்காகவோ தெரியாது ஜாயாவின் மகனை அவ்வாசிரியர் முழங்காலில் வைத்துத் தண்டனை கொடுத்திருக்கின்றார். தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கும் போதே, அதிபர் ஜாயா அவ்வகுப்பை ஊடறுத்துச் செல்கின்றார். முழங்காலில் நின்று தண்டனை அனுபவிக்கும் மகனையும், வகுப்பாசிரியரையும் மாறி மாறி உற்றுப் பார்த்துக் கொண்டே ஜாயா செல்கின்றார்.

ஏனைய வகுப்பாசிரியர்களும் இதை அவதானிக்கின்றனர். ''இவ்வாசிரியருக்குச் சீட்டுக் கிழியப்போகின்றது. ஸாஹிறாவிலிருந்து நீக்கப்படப் போகின்றார்'' என்று யாவரும் குசுகுசுக்கின்றனர். சொற்ப நேரம் கழிகின்றது. இவ்வாசிரியரை அதிபர் அழைப்பதாகச் செய்தி வருகின்றது. அவ்வாசிரியரோ கொள்கைவாதி, அநீதிக்குத் தலைகுனிபவரல்ல அவர். அன்பும், அறமும் ஒருங்கே இணைந்தவர். பதவி விலகல் கடிதமொன்றையும் எழுதிக்கொண்டே அதிபரிடம் செல்கின்றார் அவ்வாசிரியர்.

அதிபர் ஜாயா அகில இலங்கைக் குழந்தைகளில் கரிசனையுள்ளவர். தனது குழந்தையைத் தனித்துக் கவனிக்க அவருக்கு நேரமேது? அதிபர் அறைக்குள் வந்த ஆசிரியரை நோக்கி, ''இருங்கள்'' என்று ஜாயா கதிரையைக் காட்டினார். ''எனது மகனை எல்லா ஆசிரியர்களும் அதிபர் ஜாயாவின் மகன் என்று நினைத்துச் செல்லம் கொடுக்கின்றார்கள். ஆனால் நீங்கள் மட்டுந்தான் மாணவனாகக் கருதியுள்ளீர்கள். இனிமேல், அவன் உங்கள் பொறுப்புத்தான்'' என புத்திர உயர்ச்சியில் கவனம்

செலுத்தும் சோக நிலையில் அதிபர் ஜாயா கூறி, அவ்வாசிரியரிடம் இரக்கின்றார்.

அவ்வாசிரியர் பூரிப்புடன் கண்ணீர் சொரிந்து ஜாயாவின் மகனின் கல்வியில் கரிசனை காட்டுகின்றார். கல்விமான் ஜாயா அதிபர் பதவியிலிருந்து நீங்கிய பின், இலங்கையின் இராஜரீகத் தூதுவராகப் பாகிஸ்தான் சென்றுவிட்டார். குறிப்பிட்ட அவ்வாசிரியர் ஒரு 'கொம்யூனிஸ்ட்' என்ற காரணத்தால் மருதானைப் பள்ளிப் பரிபாலனக் குழுவினர் அவரை ஆசிரிய பதவியிலிருந்தும் நீக்கிவிட்டார்கள். அவர் மிக வேதனையுற்றவராய் பாகிஸ்தானிலிருக்கும் இலங்கைத் தூதுவர் அல்ஹாஜ் டி. பி. ஜாயா அவர்களுக்கு அறிவித்தார். ஜாயா அளித்த பதில்: ''உடனடியாகப் பள்ளிப் பரிபாலனத்தை வழக்கு வைத்து நீதி தேடுவீராக. அதற்குச் சாட்சி சொல்ல நான் இங்கிருந்து புறப்பட்டு வருவேன்'' என்பதாகும். நீதியிலும் நேர்மையிலும் ஜனநாயக உரிமையைப் பேணுவதிலும் எந்த மனிதனுக்கும் உரிமையுண்டு என்ற கொள்கையுள்ளவர்தான் ஜாயா அவர்கள். அவ்வாசிரியரோ கொழும்பு மருதானை 'டார்ளி' வீதியிலுள்ள தனது வீட்டில் ஜாயாவின் கடிதத்தை பிறேம் போட்டு வைத்துக் கொண்டாரே ஒழியப் பள்ளிப் பரிபாலனத்தை வழக்குத் தொடுக்கவில்லை. அவ்வாசிரியர்தான் பிரபல கிறிமினல் லோயராகத் திகழ்ந்த திரு. எம். எஸ். எம். கனகரத்தினம் அவர்கள்.

கொழும்பு ஸாஹிறாவின் வளவில் ஒரு சிறு வாழைத்தோட்டம். வாழைக்குலை முற்றியதும் திடீரெனக் காணாமல் போய் விடும். தோட்டக்காரன் திகைத்து நிற்பான். இது தொடர்ச்சியாக நடப்பது. ஒரு நாள் ஜாயா கூறிவிட்டார் ''எப்படியாவது திருடனைக் கையும் மெய்யுமாகப் பிடியுங்கள்'' என்று. கட்டுக்காவல் போட்டு, வாழைக் குலையை வெட்டித் தோளில் வைத்து எடுத்துச் செல்லும்போதே பிடித்து விட்டார்கள். ஜாயாவிடம் கள்ளனை ஒப்படைத்தார்கள். ஜாயா விசாரித்தார். அவன் ஒரு கூலியாள்; பிள்ளைகுட்டிக்காரன். அவனால், அவனது பாரிய குடும்பத்தின் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியவில்லை. அதனால், ''இதைச் செய்தேன்'' என ஒத்துக் கொண்டான். வாழைக்குலையையும் அவனுக்களித்து, செலவுக்குக் காசும் கொடுத்தனுப்பினார் ஜாயா.

''நாங்கள் நித்திரை விழித்து இவனைப் பிடித்ததில் என்ன பயன்?'' மற்றவர்கள் முணு முணுத்தனர். ''மனித கஷ்டம்,

மனித நிலைமை உணர்த்த உங்கள் முயற்சி உதவியதல்லவா?'' என்று கூறினார் ஜாயா. ஜாயா பற்றிஎழுத அவர் வாழ்க்கையில் இவ்விதத் துணுக்குகள் அநேகமிருக்கின்றன. அவர் சேவையையும் அவரது ஆற்றலையும், அவரது சமூகப் பங்களிப்பையும் எவராலும் விவரிக்கலாம். அவை, ஆவணங்களுக்குள் அடங்கியிருக்கின்றன. ஆனால், அவருள்ளே அடங்கியிருக்கும் மானிதச் செயற்பாடுகளை இவ்விதம் புகுந்து தேடுவதற்கு அவரது சமகாலத்தவரின் உதவி தேவை. அவர் வாழ்க்கையில் இவ்விதம் அநேக நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன. அவற்றை அவரது வாழ்க்கையுடன் நோக்குதல் பயன் தரும்.

உண்மையில் மானிதம் தார்மீகம் சார்ந்த ஒரு மானிமதரின் சிஷ்யனாகவும், அன்புக்குரியவனாகவும் இருந்தே பாக்கிர் மாக்கார் அரசியல் உலகை எட்டிப்பார்த்தார்.

ஸாஹிறாவில் கற்பித்த இன்னுமொரு மாமனிதர் திரு. டி. ஜே. தம்பு, திரு டி ஜே. தம்புவும் ஒரு கொம்யூனிஸ்ட், கெட்டிக்கார மாணவர்களைத் தட்டிக் கொடுப்பவர். அவரது வழிகாட்டலில் முயன்று நின்று முன்னேறியவர்தான் நமது பண்புயர் மனிதர் பாக்கிர் மாக்கார் அவர்கள். தம்புவின் பொதுவுடமைச் சிந்தனை மனித நேயத்தை இணைக்கும்; அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் இஸ்லாமிய சகோதரத்துவ சிந்தனையும் மனித நேயத்தை இணைக்க வல்லதே! முதலாளித்துவம் சார்ந்த ஓர் அரசியல் கட்சியில் பாக்கிர் இணைந்த போதும், அவர் ஏற்கனவே நடைபழகி வந்த பொதுவுடமைச் சிந்தனையாளர்களின் வழிகாட்டலும், அவர் சார்ந்து வந்த இஸ்லாமிய சிந்தனையும் எல்லா மக்களிடத்தும் அன்பு செலுத்தும் தன்மையை வளர்த்து நின்றதெனலாம்.

வேர்வலை உள்ளூர் அரசியலில் சாமார்த்தியமாக நின்று உயர்வு பெற்றவர்தான் ஜனாப் எம்.எஸ்.எம். அப்துஸ்ஸமத் அவர்கள். வார இறுதியில் ஊர் வரும் பாக்கிர் மாக்காருக்கும் அப்துஸ்ஸமதுக்கும் அந்யோன்யத் தொடர்பதிகம். இது, கொழும்பிலிருந்து தொடங்கியதுதான். அப்துஸ்ஸமத் கொழும்பு மருதானைப் பறணகட மௌலானாவின் பங்குதாரர்களில் ஒருவர். பிரசித்தி பெற்ற வியாபாரி மட்டுமல்ல, பிரபல்யமானவர்களின் அன்புக்கு அடிமைப்பட்டவர்.

இந்த மனிதர் அப்துஸ்ஸமதின் ஏகபுதல்வர்தான் அல்ஹாஜ் ஏ. எஸ். எம். ஓமர். இற்றைக்கு இருபது வருடங்களுக்கு

முன் ஏ. எஸ். எம். ஓமருக்குக் கல்யாண நாள். அன்றிரவு நிந்த வூர்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த ஜனாப் எம். ஐ. அப்துல் மஜீத் திடீரென தர்கா நகரிலிருக்கும் எனது வீட்டிற்கு ஒரு டாக்டருடன் வந்தார். அவருக்குச் சரியான காய்ச்சல், இருமிக்கொண்டே சாய்மணையில் சாய்ந்திருந்தார். ஓமரின் கல்யாணத்திற்கு வந்திருக்கின்றார். ''இவ்வளவு சுக வீனத்துடன் சோற்றுக்காக வரவேண்டுமா?'' என்று நான் ஒரு வினாவைத் தொடுத்தேன். உடனே, என்னை இடை நிறுத்தி ''நான் டாக்டருடன் வந்திருக்கின்றேன்; எனது கல்யாண நாள் உனக்கு நினைவிருக்கின்றதா?'' என்று அப்துல் மஜீத் கேட்டார்.

நான் நான்கு வயதுச் சிறுவன், எனது தந்தையார் புதி தாக எடுத்த''வேன்'' ஒன்றில் அப்துல் மஜீதின் கல்யாணத் தின் போது, அக்கரைப்பற்றிலிருந்து, சம்மாந்துறைக்கு மாப் பிள்ளை செல்லும் ஊர்வலத்துடன் என்னையும் கூட்டிச் சென் றார். அதை நினைவு படுத்திக் கல்யாணச் சந்தடியில் கலந்து கொண்ட மனித கூட்டத்தைப் பற்றிக் கூறினேன்.

''எனது கல்யாணத்திற்கு மாப்பிள்ளை உடையைத் தனது செலவில் தைத்து கொழும்பிலிருந்து எடுத்து வந்து கல்யாணம் முடிந்து சில தினங்கள் நின்று சென்ற எனது அன்புக்குரிய அப் துஸ்ஸமதின் மகனின் கல்யாணம்; உயிர் இருந்தால் இவரது பிள்ளைகளின் கல்யாணத்திற்கும் வருவேன்'' என உணர்ச்சி வசப்பட்டு எனக்குணர்த்தினார் அப்துல் மஜீத்.

அந்த அன்புக்குரிய மனிதர்தான் அப்துஸ்ஸமத். இவர், வேர்வலை நகர சபைத் தலைவராகவும் தெரியப்பட்டவர், இந் நகர சபையின் முதலாவது தலைவரும் இவரே! அப்துஸ்ஸமத் வேர்வலை மாளிகாஹேன பகுதியின் நகர சபை உறுப்பினராக இருக்கும் காலமது. இந்நாட்களில் பார்கிர் மாக்கார் அப்துஸ்ஸ மத் தொடர்பு மிக இறுதி நின்றது. வார இறுதி நாட்களில் ஒரு நாள் மருதானை மரிக்கார் பிளேஸிலுள்ள ''ஸகரிய்யா விலா''வில் அப்துஸ்ஸமத், இளைஞர் பாக்கிர், எஸ். எம். அப்துல்லாஹ், முஹம்மத் இஸ்மாயில், யாவரும் உள்ளூர் அரசியல் பற்றியே கதைத்துக் கொண்டிருந்தனர். அது மட்டுமல்ல, மருதானையில் இளைஞர் பாக்கிர் மாக்கார் போட் டியிட்டு அரசியலைத் தொடர வேண்டும் என்ற அபிப்பிராய மும் அங்கே எழுந்தது.

இந்தக் கதையைக் காது கொடுத்துக் கேட்டிருந்த அப்துஸ் ஸமதின் தந்தையார் ஜனாப் எம்.ஸி.எம். ஸிறாஜுதீன்மரைக் கார் அங்கே வந்து ''அப்துல் பாக்கிர் படிக்கிற புள்ள, குடும் பப் பொறுப்பு அதிகமுள்ள புள்ள, அந்தப்புள்ளய இதிலெல் லாம் இறக்கி வீணாக்காதோங்கோ!'' என்று அரசியலில் இறங்கி னால் ஓட்டாண்டிதான் என்ற நினைப்புடைய அப்பெரியவர் கூறினார்.

கூடியிருந்தவர்கள் கலைந்து சென்ற பின், இச்செய்தி எப் படியோ பாக்கிர் மாக்காருடைய தந்தைக்கு எட்டியது. அவர், அன்றிரவு ஸகரிய்யா விலாவிற்கு வந்து கதவைத் தட்டினார். அப்துஸ்ஸமதின் சகோதரர்கள் அஹ்மத் இஸ்மாயில் குஞ்சிக் காக்கா, முஹம்மத் பாஷா சகிதம் கதவைத் திறந்தனர். ''எனது பிள்ளை உனது மகனோடு கூடிக் கெட்டுப்போனால் பறவாயில்லை, அவர்கள் நினைப்பது போல் நடக்கட்டும்'' என்ற அபிப்பிராயத்தை ஸிறாஜுதீன் மரைக்காரிடம் கூறினார்.

எண்ணங்களும், ஒப்புதல்களும் இணைந்து வந்ததால் அரசி யல் கதவு திறந்து நின்றது. அங்கு அப்துல் பாக்கிர் மாக்கார் நுழைந்து கொள்ளக் காலடி வைத்தார்.

புதிதாக அரசியலில் காலடி எடுத்து நிற்கும் இளைஞர் பாக்கிர் மாக்கார் பொதுசனத் தொடர்பை மிக இணக்கமு டன் நடத்தி நிற்கும் இயல்பு பெற்றவர். சமதர்மக் கொள்கை யைச் சார்ந்தவர். பல்கலைக்கழகப் படிப்பாளிகளும், சட்டக் கல்லூரி இளவட்டங்களும் ஆரம்பத்தில் சோஷலிஸ சமதர்மக் கொள்கையில் ஈர்க்கப்பட்டவர்கள்தான். அக்கொள்கையின் கனதி இளைஞர் பாக்கிர் மாக்கார் மனதிலும் நிறைந்து காணப் பட்டது.

வேர்வலை நகரசபைக்கு மருதானைப்பகுதியின் வேட்பாள ராக பாக்கிர் மாக்கார் தேர்தலில் குதித்தார். இளவல் பாக் கிர் தேர்தலில் குதித்துவிட்டார் என்றதும், அவரை அறிந்தோ ரெல்லாம் தேர்தல் வேலைகளில் இறங்கினர். சிறுவர்கள், பெரி யவர்கள் ஊரைச் சுற்றி பாக்கிரின் உயர் பெருமைகளைப் பேசி நின்றனர்; கீதமிசைத்தனர்.

அவரது தமிழாசான் முது தமிழ்ப்புலவர் நல்லதம்பிப் பாவலர் இயற்றிய பாடலை இளம் சிறார்கள் இசைத்து ஊரெல்லாம் உலவித்திரிந்தனர்.

''கீர்த்தி மலிந்திட்ட வேர்வலை மாநகர்
சீர் மருதானையில் உள்ளவர் பார்-கல்வி
பார்த்து நகர சபைக்கெங்கள் பாக்கீர்
பயனுடையா ரென்றனுப்பிடுவோம்

சிங்களம் ஆங்கிலம் செந்தமிழ் மூன்றையும்
சிங்கமெனச் சபை மீதெழுந்து - பாக்கீர்
தங்கு தடையின்றி வீரம் செறிந்திடச்
சாற்ற வல்லா ரென்றனுப் பிடுவீர்

அகில இலங்கை இஸ்லாமிய மாணவர்
அன்பின் இயக்கத் தலைவர் கண்டீர் – பாக்கீர்
சீர் நாம மோங்கியே சாதி சிறப்புறச்
செய்திடும் உத்தமத் தொண்டர் கண்டீர்
வெள்ளத்திலே அள் ளுப் பட்ட சனங்களை
மீட்டிங்கு காத்து மேல்பார்த்தவர் யார்-பாக்கீர்
உள்ளத்திலே கள்ளம் இல்லாமல் சேவை
உகந்து புரிவோர் தெரிந்திடுவோம்

பாராளுமன்றத்தில் ஏறி இருந்து
பணிக ளாற்றவும் வல்லார் கண்டீர்-பாக்கீர்
தாராள மனத்துடன் சேவைசெய் தென்றுமே
பணிவாக நடந்திடும் பண்பு கண்டீர்.

வண்டிச் சக்கரமாம் அடையாளத்தை
மாறின்றி எங்கள் மனதில் வைத்தே – பாக்கீர்
கொண்டிடும் சக்கரம் பக்கத்தில் புள்ளடி
கூடிச் சென் றெல்லோரும் போட்டிடுவோம்.

முஸ்லிம்கள் மத்தியில் பேசப்படும் சொல்லாட்சியுடன் இயற்றப்பட்ட இப்பாடலை இன்றும் இசைத்துக் காட்டும் அன்றைய வாலிபர்களை வேர்வலையில் காணமுடியும். நம் தேசியத்தின் சுதந்திர கீதத்தைத் தமிழில் வடித்துத் தந்த பாவலர் நல்லதம்பிப் புலவரின் நாவில் ''பாராளுமன்றத்தில் ஏறியிருந்து பணிகளாற்ற வல்லார்'' என்ற தொடர் எழுந்த காலம் நமது பாக்கிர் உள்ளூராட்சித் தேர்தலிலே நிற்கின்றார் என்பதை யாரும் அன்று மறந்துவிடவில்லை. புலவரின் நாவில் எழுந்த சொல்லாண்மை பலிதமாகி விடும் என்பதற்கு பாக்கீர் மாக்காரின் வாழ்க்கையே சாட்சி எனலாம்.

இளவல் பாக்கீர் முதியோர்களுக்குப் புதியவர். பிரபல்யம் வாய்ந்த தரீக்காவின் தலைவர் ஒருவரின் மகன் இங்கே போட்டியிட்டதால், இளவல் பாக்கிர் எழும்ப முடியவில்லை. கடுமையான போட்டி, கருத்துக்கோ கல்விக்கோ அல்ல. சும்மா மனித போட்டிதான். தேர்தல் ஜில்மால்கள் தாராளமாக நடைபெற்றுக் குட்டை குழப்பப் பட்டதால் பாக்கீரின் வெற்றி தாமதமாகியது. இவ்வளவுக்குள் எதிர்ப்பு வேகமாகிய்து. அப்படியிருந்தும், பாக்கிர் முப்பத்தைந்து வாக்குகளால்தான் தோல்வி கண்டார். வெற்றியின் முதற்படி! பாக்கிர் வெருண்டு ஓடிவிடவில்லை. அவரை ஒட்டி நின்றவர்கள் இளவட்டங்கள். எதிர்காலத்தை நிர்ணயிப்பவர்கள்.

1949 ஆம் ஆண்டு மீண்டும் வேர்வலை மாநகர சபைத் தேர்தல் வந்தது. தேர்தல் ஒழுங்குகளை திறம்படச் செய்ய யாவரும் முன்னின்றனர். ஆனால், பாக்கிருடன் போட்டிக்கு எவரும் வரவில்லை. போட்டியின்றி மாநகர சபை மருதானைப் பிரதிநிதியாகப் பாக்கிர் மாக்கார் தெரிவு செய்யப்பட்டார்.

# பட்டை தீட்டிய பளபளப்பு. 4

வானில் ஒட்டிய தாரகை
வண்ண ஒளியே வீசிடா
தேனோ நிலவாய் ஒளிதர
இதயத் துணர்வு துடித்தது
தானே எழுந்த தன் நம்பிக்கை
தந்த வழிதான் அரசியல்
காண மனித னுயர்ச்சியே
காட்டும் வழியாய்க் கொண்டனர்!

அல்ஹாஜ் அப்துல் பாக்கிர் மாக்காரின் வாழ்க்கையை உற்று நோக்கும் போது, ஒரே மட்டத்தில் அவரை எடைபோட்டுக் கணித்துவிடவே முடியாது. அவர், ஒரு முஸ்லிம்; அவர் சிங்கள மக்கள் மத்தியில் வாழும் முஸ்லிம். அத்துடன், அவரது போக்கு உள்ளூராட்சியில் ஒரு விதமாகவும், நாடாளுமன்ற உறுப்பினராகும்போது வேறு விதமாகவும் செல்ல வேண்டிய நிலைமையுண்டு. ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக அவர் இருந்தபோதும், உள்ளூராட்சியில் அவர் கட்சிபேதம் பார்ப்பதில்லை.

உள்ளூராட்சியில் எதிர்த்து நிற்கும் மக்களை அவர் எதிர்த்துவிட முனைந்ததில்லை. உள்ளூர் தனது பிறந்தகம், பிறந்தக மக்கள் அனுசரித்து நிற்பதும் எதிர்த்து நிற்பதும் சகஜம். அதற்காக உள்ளூரை எதிர்த்துவிட முடியுமா? இவ்வித எண்ண முள்ளவராய் பாக்கிர் வாழ்ந்ததினால்தான், மனித தரத்தில் இளமை, நடுத்தரம், முதிர்ச்சி என்ற படித்தரங்களில் தனது வாழ்நாள் முழுதும் மக்களின் அந்யோன்யத்தைப் பெற்றார். அவர் கண் மட்டத்துள் வாழ்ந்த மக்களின் வரலாற்றை பூர்வீகத்துடன் தெரிந்து வைத்திருந்தார். அதனால், அவர்களை

பாக்கிர் மன்னிப்பதும், பாக்கீர் மாக்காரை அவர்கள் மன்னிப்பதும் வேர்வலையில் நிரந்தரமாக இருந்து வரும் மரபேயாகும். வேர்வலை உள்ளூரில் பாக்கிர் மாக்கார் குடும்பப் பிள்ளையாகி நின்றார்.

முஸ்லிம்கள், சிங்களவர்கள் மத்தியில் வாழ்கின்றார்கள், தமிழர்கள் மத்தியிலும் வாழ்கின்றார்கள். இந்த யதார்த்தத்தை அவர் எப்போதும் மறப்பதில்லை. வட கிழக்கு மாகாண முஸ்லிம்களை மிக உற்று நோக்குபவர். தாம் எடுக்கும் எந்த முடிவும் இலங்கையிலுள்ள எப்பகுதி முஸ்லிம்களையும் பாதித்து விடக் கூடாது என்பதில் கண்ணுங் கருத்துமாயுள்ளவர். அதனால்தான், இப்போதும் முஸ்லிம்களுக்கென்று ஒரு கட்சி, அரசியல் ரீதியில் இலங்கைக்குத் தேவையில்லை என்ற கோட்பாட்டை வலியுறுத்துகின்றார்.

வேர்வலைக்கு நகர சபை அந்தஸ்து 1932ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் 1949ஆம் ஆண்டுதான் நகர சபை அங்கத்தவரானார். 32க்கும் 49க்கு மிடையில் வேர்வலை நகர சபையில் சகல அலுவல்களும் மாற்றாந்தாய் மனப்பான்மையில்தான் நடந்து கொண்டிருந்தன.

வேர்வலையின் மேற்குப் பகுதியைவிடக் கிழக்குப் பகுதியே செஞ்செழிப்பாக இருந்தது. காரணம்; நகரசபையின் தலைவர் அப்பகுதி வாழ் மனிதராக இருந்தமையே! மின்விநியோகம், பாதைகளின் சீரமைப்பு, சுகாதாரச் சேவை, சூழல் மாசடையா வண்ணம் கவனித்தல் என்பன மேற்குப்பகுதியை நாடிச்சீராக்கவில்லை. மேற்குவாழ் மக்களின் குறைபாடுகள் அநேகம். நகர சபையின் அங்கத்தவர் இளம் தலைவர் அப்துல் பாக்கிர் மாக்கார் அப்போதுதான் அவற்றை உணர்ந்தார். தனியொரு அங்கத்தவனாக விருந்து இவற்றைச் சாதித்துவிட முடியாது. நகர சபையின் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றவேண்டும். வேர்வலை நகரம் ஒவ்வொரு பகுதியாக விரிந்து தனி அங்கத்தவர்க்குரிய சிறிய சிறிய தொகுதியாகப் பிரிந்து நின்ற போதும், அவை வேர்வலை என்ற ஒருமைப்பாட்டில் அபிவிருத்தியடைய வேண்டும் என்பது இளைஞர் என்ற படித்தரத்தில் நின்ற பாக்கிர் மாக்காரின் குறிக்கோளாகும்.

இந்த உணர்வை இளைஞர் மத்தியில் விதைத்தார். இளம் வழக்கறிஞர் இளம் மனசுகளை வென்றார். 1950ஆம் ஆண்டில்

நகரசபைத் தேர்தல் மிகச் சூடு பிடித்தது. இளசுகள், முற்போக்கு எண்ணங்கொண்டோர் நகரைப்பாகுபாடின்றி முன்னேற்ற உரம் வாய்ந்த இளைஞர் பாக்கிர் ஒருவர்தான் என்ற முடிவுக்கு வந்தனர். என்றாலும், பழைமையில் ஊறிப்போனோரும், வைதீகப் பரம்பரையினரும் எதிர்த்து நின்றனர். பணம் அவர்களின் பக்கம்தான் நின்று புரண்டது. தகுதி, தேவை, உண்மை பாக்கீரைச் சார்ந்தோரிடம் நின்று வென்றது. வேர்வலையின் தேவையும், இளைஞர் பலமும் ஒன்று சேர்ந்ததால் பாக்கிர் வெற்றி வாகை சூடினார். அதை மிக இலேசாக எழுதிவிட்டேன், ஆனால், அந்த வெற்றிக்குப்பட்ட கஷ்டம் அநேகம். அந்தப் பங்கு மருதானை வாழ் மக்களை மட்டுமல்ல, பணம் இப்பகுதியில் புகுந்துவிடக் கூடாது என்று கங்கணம் கட்டிக் காவல் செய்த யாவருக்கும் உரியதே! இதனால்தான், முழு வேர்வலையும் முன்னேறியது. சொந்தம் பந்தங்கள் இங்கே வேலை செய்யவில்லை. மக்களுணர்வும், சேவைக்குரியவர் தெரிவும் ஒன்றுபட்டு நின்றன. அதனால்தான், பாக்கிர் முன்னே நின்றார்.

மருதானையின் நகரசபை அங்கத்தவர் வேர்வலை நகரசபையின் தலைவரானார். இளமை, கல்வி, தேவையை உணரும் சக்தி, எதையும் உய்த்துணரும் வல்லமை நகரசபைத் தலைவர் பாக்கிரிடம் இயற்கையாய்க் குடிகொண்டிருந்தன.

நகரசபைத் தலைவரானதும் பாக்கிர் மாறிவிட்டார். தனி மருதானையை நினைத்து நின்றவர். தனி வேர்வலையை நினைத்து நின்றார். சுகாதாரக் கேடு மருதானையைச் சூழ்ந்திருந்தது. அதை வேரோடு பிடுங்கி எறியும் முயற்சியில் பாக்கிர் ஈடுபட்டார். வீடில்லாதோர் பிரச்சினை அவர் மனதை மிக அலட்டியது. அதற்கென்ன செய்வதெனத் திட்டம் தீட்டினார்.

மக்கள் மனதை வென்றெடுக்கக்கூடிய அருங்குணங்களும் பண்புயர்வும் பாக்கிர் மாக்காரிடம் இயல்பாக இருந்தன. இன்னும் விசேடம் என்னவென்றால், பல்திறப்பட்ட தரீக்காக்களைச் சார்ந்தோர் வாழும் வேர்வலையில் தனி ஒரு குழுவினைச் சார்ந்திராது எல்லோரது நன்மை தீமைகளில் கலந்து கொள்ளும் சிறந்த மனப்பான்மை பாக்கிர் மாக்காரிடம் குடிகொண்டிருந்தது. இஸ்லாமிய நேச உணர்வு அவரிடம் மிக அதிகமாக இருந்தமையே இதற்குக் காரணமாகும். மற்றவர்களிலும் இவ்

விஷயத்தில் பாக்கிர் உயர்ந்தே நின்றார் எனலாம். எனவேதான், வேர்வலை மக்களை ஒருமுகமாக அவருக்கு நேசிக்க முடிந்தது. வேர்வலை ஆன்மீக உணர்வில் உயர்ந்த ஓர் இடந்தான். இஸ்லாமிய இலக்கிய வரலாற்றிலும் வேர்வலைக்கு ஓர் இடமுண்டு. முஸ்லிம் புலவர் வரலாற்றில் பாக்கிர் மாக்காரின் அப்பாவும் முக்கிய இடம் வகிக்கின்றார். அறபிகள் அல்லாதவர்களின் அறபிக் கஸீதா (கவிதை)த் தொகுப்பொன்று 1958, 59களில் அலிகார் பல்கலைக்கழகத்தில் (TEXT BOOK) பாடப்புத்தகமாக இருந்தது. அத்தொகுப்பில் வேர்வலையில் பிறந்தஷெய்கு முஸ்தபா அவர்களின் கஸீதாக்களும் இடம் பெற்றிருந்த சங்கதியை 1960ஆம் ஆண்டு கலாநிதி இமாம் அவர்கள் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நிகழ்ந்த கலை விழா வொன்றில் கூறினார். அங்கிருந்தவர்களில் அநேகர், அறிஞர் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் கூட அதிர்ச்சி அடைந்தனர் எனலாம். இவ்வரலாறு இந்நாட்டு முஸ்லிம்களுக்குப் பரவலாகத் தெரியாது. என்றாலும், தெரிந்த மாதிரி நாங்கள் டாக்டர் இமாம் முன்னிலையில் நடந்து கொண்டோம். இதுபற்றி ஒரு முறை அல்ஹாஜ் பாக்கிர் மாக்காருடன் கதைத்துக்கொண்டிருக்கும்போது, தனது அப்பாவும் ஒரு கவிஞர்தான். அவர்கூட ஷெய்கு முஸ்தபா அவர்களின் கவித்துவ அறிவு வல்லமையையும், இஸ்லாமிய ஞானச் சிந்தனை உயர்வையும் அடிக்கடி புகழ்ந்து கொண்டிருப்பார் என்றார். இதில் தரீக் பற்றிய எவ்வித வேறுபாடும் அவர் காட்டி நிற்கவில்லை. ஷெய்கு முஸ்தபா அவர்களின் வல்லமைகளையும், அறிவுத்திறமையையும் இன்றும் வேர்வலை மக்கள் மதித்துயர்த்துகின்றனர். இலங்கை முஸ்லிம்களும் அவ்விதமே பங்கு கொள்கின்றனர்.

1950ஆம் ஆண்டு தொடக்கம் 1970ஆம் ஆண்டு வரை வேர்வலை நகரசபையில் பல தடவைகள் நகர சபைத் தலைவராக பாக்கிர் மாக்கார் பதவி வகித்தார். இக்கால இடைவழிக்குள் வேர்வலை நகர் கண்ட அபிவிருத்திகள் அநேகம். வேர்வலை நகரம் ஒழுங்கான கடைத்தெருக்களை உள்ளடக்கியிருக்கவில்லை. கடை பஸாரில் முஸ்லிம்களின் கடைகளே இல்லாத நிலை. இதற்கு முஸ்லிம்களிடையே அச்ச மனப்பான்மை இருந்ததே காரணம் எனலாம். இம்மனப்பான்மையைத் துடைத்தெறிந்தவர் பாக்கிர்தான். நகரத்தில் இன்று மிளிரும் முஸ்லிம்களின் கடைகள் ஆரம்பமாவதற்கு நகரத்தலைவர் பாக்கிரின் தைரியந்தான் காரணம் என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

அழகிய நகரை உருவாக்கிய பாக்கிரின் அழகியல் உணர்ச்சிக்கு மாறாக எத்தனையோ அசிங்கங்கள் உருவெடுத்திருப்பதை வேர்வலை நகரில் காணமுடிகின்றது. இன்னும் இவரது நகர சேவையில் குறிப்பிடக்கூடிய அம்சங்கள் அநேகமுண்டு. அவற்றை விவரிக்கும்போது, வேறு விதமாகக் கருத்தெடுத்து உருக்குலைப்போருக்கு அஞ்ச வேண்டியிருப்பதால் அவற்றை விட்டு விடுகின்றேன்.

இவர் நகர சபைக்குள் புகுந்த காலத்தின்பின், நிதி நிலைமை சீராகியதெனலாம். ஒன்றரை இலட்ச வரி அறவீடு, மூன்று இலட்சமாக உயர்ந்தது. 1966இல் ஆறு இலட்சமாக விரிந்து நின்றது. பாதைகளைச் சீராக்கல், புதிய பாதைகளை உண்டாக்கல், மின் விநியோகம், சுகாதார வசதிகளின் அபிவிருத்தி என்பன பரந்து விரிந்து நின்றன.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவர்கள் அரசியலுள் பிரவேசிக்குமுன் வேர்வலையில் ''ஜெமியத்துல் முஸ்லிமீன்'' என்னும், இளைஞர் இயக்கமொன்றை ஏற்படுத்தினார். இவ்வியக்கம் பொதுநலத் தொண்டு செய்வதில் தன்னை இனங்காட்டியது. நகர சபை செய்ய வேண்டிய சேவைகளைத் தூண்டி நின்றது. இக்காலம்தான் பாக்கிர் மாக்கார் அவர்கள் 1950இல் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொண்டார்.

அவரது இயக்கம் 1950ஆம் ஆண்டு இலங்கையின் முதல் பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயகா அவர்களை வேர்வலைக்கு அழைத்து வந்தது. வேர்வலை மொல்லிய மலைச் சந்தியிலிருந்து மர்ஹூம் எஸ்.எம்.எச்.எம். அப்துல்லாஹ் ஜே. பி. அவர்களின் இல்லத்திற்கு திரு. டி. எஸ். சேனநாயகா அவர்களை அழைத்துச் சென்றனர்.

வேர்வலையின் ஊரளாவிய விளையாட்டுத்தான் சீனடி சிலம்படி. இலங்கை முழுதும் சீனடி சிலம்படிக்கு வேர்வலைதான் என்ற கருத்து இன்றும் நின்று நிலவுகின்றது. நான் கல்வி கற்கும் காலத்தில் எங்களூர் அக்கரைப்பற்றில் வேர்வலையைச் சேர்ந்த ஜனாப்களான ஸஹீத், அப்துல் றஷீத், ஸனூன், பாறுக், ஹனிபா இன்னும் சிலர் பொட்டணி வியாபாரம் செய்தனர். ஸஹீத் நானாவும். அப்துல் றஷீத் நானாவும் சீனடி சிலம்படி மாஸ்டராக இருந்து அங்குள்ளோர் பலருக்குக் கற்பித்தனர். வேர்வலையையே அக்காலம் கனவிலும்

கண்டிராத நான் சீனடி சிலம்படியில் வேர்வலைதான் என்ற செய்தி கேட்டு மலைத்து நின்றேன்.

திரு. டி. எஸ். சேனநாயகாவையும் வேர்வலையின் ஊர் மயமான சீனடி சிலம்படி அடித்தும், அறபிய கீதம் இசைத்துமே மக்கள் ஊர்வலமாக அழைத்துச் சென்றிருக்கின்றனர்.

வேர்வலை நகர சபை எல்லைக்குள் மஸலைப் பகுதியில் பதினெட்டு வீடுகளைக் கட்டும் திட்டமொன்றை பாக்கிர் மாக்கார் ஏற்படுத்தி, அதற்கான அத்திவாரக்கல்லை திரு. டி. எஸ். சேனநாயகா அவர்களைக் கொண்டே நாட்டினார். இத்திட்டத்தின்படி வீடுகள் கட்டப்பட்டன. 1951ஆம் ஆண்டு சர் ஜோண் கொத்தலாவலை இவற்றைத் திறந்து வைத்தமை வரலாற்றுச் சிறப்புடையதே!

இன்று நாடு முழுவதும் வீடில்லாப் பிரச்சினையைத் தீர்க்க எடுக்கப்படும் முயற்சியை அன்றுதான் அரசியலில் காலடி எடுத்த இடத்தில் பாக்கிர் மாக்கார் தொடங்கினார். இதே போல்தான், சிங்களம் அரசகரும மொழியாவதற்கு முன்னரே, வேர்வலை நகர சபைக்காரியங்களைச் சிங்களத்தில் ஆற்ற வேண்டித் தீர்மானம் கொண்டு வந்து செயற்படுத்தினார். முழு நாடளாவிய விதத்தில் மிகப் பிற்காலத்தில் தொடங்கி வைத்த இச்சாதனைகளை பாக்கிர் மாக்கார் முன்கூட்டியே தனது நகரத்தில் செயற்படுத்தினார். பாக்கிர் மாக்காரின் சிந்தனையிலுள்ள இத்தூரதிருஷ்டிப் பார்வை வியக்கக்கூடிய ஒன்றே. உண்மையில் மிகப் பிற்பட்ட காலத்தே தேசிய ரீதியில் எழுந்த பிரச்சினைகளை மிக முன்கூட்டியே செய்தவர் பாக்கிர் மாக்கார் என நாம் பெருமைப்படலாம். ஒன்று அவர் தேசிய ரீதியில் இதை எடுத்துச் சென்று அரசியல் இலாபம் பெற எத்தனிக்கவில்லை. உண்மையில் தனது அரசியல் மட்டத்தில் நின்று மக்களுக்குணர்த்தினார்.

முஸ்லிம்களின் மொழி மூலம் சிங்களமாக வேண்டும் என்ற அபிப்பிராய முடையவரிவர். இந்த அபிப்பிராயத்தை மிக மூர்க்கமாக எதிர்த்தவர்களில் நானும் ஒருவன். உண்மையில் இலங்கை முஸ்லிம்கள் தமது மொழி மூலத்தை மிக ஆரம்ப காலத்திலிருந்தே அறபுமொழியாக்கியிருக்க வேண்டும் அல்லது சிங்களமாக்கியிருக்க வேண்டும். இது, இந்நாட்டின் தனிச் சமூகமாக நிலைத்து நிற்க வழி வகுத்திருக்கும். இப்போதெல்லாம் தமிழ் மொழியை மூல மொழியாகக் கொண்டவர்களாகவும், சிங்கள மொழியை மூல மொழியாகக் கொண்டவர்களாகவும் முஸ்லிம்கள் பிளவுபடும் அபாயமேற்பட்டிருக்கின்றதல்லவா?

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்த போதும் தீவிர முதலாளித்துவச் சிந்தனையுடைய வரல்ல. அவர் ஒரு மிதவாதியாகவே காட்சி தந்தார். முதல் பிரதமர் திரு டி எஸ். சேனநாயகா, அடுத்த பிரதமர் அவரது மகன் டட்லி சேனநாயகா, அதற்கடுத்த பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலை ஆகியோருடன் கலந்துறவாடும் வாய்ப்பு பாக்கிர் மாக்காருக் கிருந்தது. அவர்களைப்போல் மக்கள் மனதை வென்றெடுப்பவராகவே பாக்கிர் காணப்பட்டார். மக்கள் துன்பத்தைக் கூடச் சகியாதவராக இருந்தார். இப்பகுதியில் பொருள் தேடிக்குவிக்காத அரசியல்வாதியென இவர் பெயரெடுத்தார். அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் எதிலும் தீவிரவாதியாகச் செயல் படவில்லை. மிதவாதியாகவே நின்று வந்தார். எதிர்க்கருத்துடையோரையும் வென்று தன்பக்க மாக்கலாம் என்ற கருத்துடையவராகவும் இருந்தார். அரசியல், சிற்சில சமயங்களில் பரந்த போக்கையும் குறுக்கிவிடும் அபாயமுடையது. சிற்சில சமயங்களில் இக்குறுகிய எல்லைக்குள் அவரை எடுத்துவரச் சிலர் முயற்சி செய்ததுமுண்டு. அதனால், மேல்மட்டத்திலிருப்போர் சிலர் பாதிப்படைந்திருக்கலாம். இது, அரசியலில் தவிர்க்க முடியாதது.

உள்ளூராட்சியில் அவர், தீவிரக் கட்சிக் கொள்கையில்தொங்கிக் கொண்டிருக்கவில்லை. தனது ஆசான்களான டி. பி. ஜயாவின் தேசிய ஜனநாயக சிந்தனையும் திரு தம்பு அவர்களின் மானித சிந்தனையும் பாக்கிர் மாக்காரைப் பற்றிப்பிடித்தவைகள். அதனால், மக்கள் மத்தியில் நிதானமாகச் செயற்பட்டார்.

வேர்வலை நகரம் களுத்துறைத் தொகுதிக்குள் உட்பட்ட பிரதேசம். அதன் நாடாளுமன்றப் பிரதிநிதியாக மிளிர்ந்தவர் திரு ஷம்ளி குணவர்த்தனா அவர்கள். ஷம்ளி லங்கா சமசமாஜிக் கட்சியைச் சேர்ந்தவர். ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள பாக்கிர் மாக்காரின் மானித சிந்தனை அக்காலம் ஷம்ளி குணவர்த்தனாவை ஆதரித்து நின்றமை குறிப்பிடத்தக்கதே.இதனால், சமசமாஜிக் கட்சியைச் சார்ந்தோர் பாக்கிர் சமசமாஜியில் இருந்தவர் எனக் குறிப்பிடுவதை நமது காதுகள் கேட்கின்றன. உண்மையில், இடது சாரியாக பாக்கிர் இருந்திருந்தால் இன்றையப் புகழிலும் அதிக புகழ் பெற்றிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

இடதுசாரிகள் கொள்கை நோக்கியே ஆதரவு கொடுப்பவர்கள். வலதுசாரிகள் தனது இலாபம் நோக்கியே ஆதரவு கொடுப்பவர்கள் என்பது பாக்கிர் மாக்காருடன் ஒட்டியிருந்து வெட்டுண்டு போனவர்களின் ஈனச் செயல்கள் காட்டுகின்றன.

# ஊரைச் சுற்றிய ஒளி. 5

தன் சூழல் தந்நிலம்
  தனைப் பெற்ற தாயகம்
அந்நிலம் காலூன்றி
  ஏறி யிந் நாட்டினைக்
கண்ணுள்ளே கண்டிடக்
  கட்டி ஓர் மாநிலம்
கண்டு விட்டார் அதைக்
  காத்து வென்று விட்டார் !

வழக்குரைஞர் இளைஞர் பாக்கிர், தான் காலூன்றிநிற்கும் சமூகத்துடன் இணைந்தார். அதன் பயன்பாடு நகர சபை அங்கத்துவத்தை அவருக்களித்தது. அதன்பின், முழு வேர்வலையையும் நோக்கினார், அது அவருக்கு நகரசபைத் தலைமையைக் கொடுத்தது. இப்போது, தனது சமூகம் மேற்குக்கரை முழுதும் பரந்து தெற்கு ஈறாக நிற்கும் நிலத்தை யெல்லாம் நோக்கினார். அச்சிந்தனை அவரது கல்விச் சிந்தனையுடன் கரை புரண்டது; இரண்டறக் கலந்தது.

கொழும்பிலிருந்து தெவிநுவரை வரை முஸ்லிம்களின் பரம்பலைஅவர் எப்போதும் சிந்திப்பவர். இப்பரம்பலை அடிப்படையாக வைத்து, முஸ்லிம் அங்கத்துவத்தைப் பாராளுமன்றம், பெற வேண்டும் என்ற கோரிக்கை அவரது அடிமனத்தில் படிந்திருந்தது.

இச்சிந்தனையின் விளைவாகக் களுத்துறை மாவட்டத்தில் பாணந்துறை அல்லது வேர்வலை ஓர் அங்கத்தவரைப் பெற அருகதையுடையது. இக்கருத்தை பாக்கிர் மாக்கார் எப்போதும் கூறிக்கொண்டிருந்தார்.

தொகுதி நிர்ணயம் செய்வதற்கென அரசு 1959இல் தல் கொடைபிட்டிய ஆணைக்குழுவை நியமித்தது. இவ்வாணைக் குழுவின் முன், அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் சாட்சியம் அளித் தார். இவரது சாட்சியத்தில் தகுந்த ஆதாரங்கள் நிறைந்திருந் தன. இவரும் முஸ்லிம்களின் குடியேற்றப் பரம்பலை ஆதி தொடக்கம் கூறி நின்றார். தேசிய ஒற்றுமையிலும், தேசிய அபி விருத்தியிலும் அவர்கள் ஆற்றிய தொண்டுகளைச் சிலாகித்தார். ஆழமும், நுணுக்கமும், நம்பத் தகுந்தவைகளும் நிறைந்திருந்த தால் இவரது சாட்சியமே முன்னே நின்றது. அதன் பயன்பாடு வேர்வலைத் தொகுதி உதயமானது.

1960 மார்ச் மாதம் பொதுத் தேர்தல் நடந்தது. உள்ளூ ராட்சி அரசியலில் இருந்து ஒரு படி மேலாக நாடாளுமன்ற ஆட்சி அங்கத்தவருக்காகப் போட்டியிட்டார் அல்ஹாஜ் பாக் கிர் மாக்கார் அவர்கள். இவர் சார்ந்த கட்சி ஐக்கியதேசியக் கட்சி. இவரை எதிர்த்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் திரு ஜெயஸிங்க அவர்களும் லங்கா சமசமாஜிக் கட்சி சார்பில் திரு டக்ளஸ் குணவர்த்தனாவும் போட்டியிட்டனர். இறுதியில் அல்ஹாஜ் எம்.ஏ. பாக்கிர் மாக்கார் அவர்கள் நாடாளுமன் றத்தின் வேர்வலைத் தொகுதியின் வரலாற்றுப் பெருமைமிக்க முதல் அங்கத்தவராகத் தெரியப்பட்டார்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவர்கள் நாடாளுமன்றத் தில் முதன் முதல் காலடி எடுத்து வைத்து, வேர்வலைத் தொகுதியின் முதற் குரலை எழுப்பித் தனது தனித்துவத்தை நிலைப்படுத்தினார். பிரதமர் திரு டட்லி சேனநாயகா அவர் கள் தனது அரசாங்கத்துக்குப் பெரும்பான்மை இல்லையென்ற காரணத்தினால் 1960 மேயில் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டார்.

1960ஆம் ஆண்டு ஜூலையில் நடந்த தேர்தலில் பாக்கிர் மாக்கார் அவர்கள் தோல்வியடைந்து விட்டார். இத்தோல்வி யைப் பற்றி அவர் கவலையடையவில்லை. அவர் அளித்த சாட் சியத்தின் பயனாக ''வேர்வலை'' தனித் தொகுதியாகியது. ஆனால், அது ஒரு முஸ்லிம் அங்கத்தவரைத் தெரியக்கூடிய தொகுதியாகிவிட்டது. இதுதான் பாக்கிர் மாக்காரின் அதிக நாள் கனவு. அது, பலித்துவிட்டது. 1960 ஜூலை தேர்தலில் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் தோல்வி கண்டாலும், ஜனாப் ஐ.ஏ. காதர் அவர்கள் வெற்றி பெற்றார். எந்தக் கட்சியில்

வந்த போதும், முஸ்லிம் அங்கத்தவர் வரக்கூடிய ஒரு தொகுதியாக வேர்வலையை மாற்றிய பெருமை பாக்கிர் மாக்காருக்கே உரியது. முஸ்லிம் அங்கத்துவம் வேர்வலையில் நின்று நிலைக்க வேண்டுமென்ற அடிப்படை வென்று நின்றது. இந்த வெற்றிக் களிப்பே பாக்கிர் மாக்காரைப் பரவசப்படுத்தியது. அவரது குறிக்கோளின் வெற்றியில் அவர் நிலைத்து நின்றார்.

1965ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் மீண்டும் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் வெற்றி பெற்றார். களுத்துறை மாவட்டத்தின் ஒன்பது தொகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சியில் வெற்றி பெற்றவர் இவர் ஒருவரே! இதனால், களுத்துறை மாவட்டத்திலுள்ள ஐக்கிய தேசியக்கட்சி அபிமானிகள் இவரையே தேடி வரலாயினர்.

இக்காலத்தே இவருக்கும் எனக்கும் எவ்வித உறவும் இருந்ததில்லை. நான் இடதுசாரி மனப்பான்மை உடையவன். வேர்வலை மாளிகாஹேன முஸ்லிம்வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசானாகக் கடமை செய்கின்றேன். இலக்கியக் கூட்டங்களில் பேசிய அனுபவம் எனக்குண்டு, ஆனால், அரசியல் கூட்டங்களில் இதுகால வரை எந்த இடத்திலும் நான் பேசியது கிடையாது. யாரோ இவரிடம் நான் வேர்வலை மருதானையில் இடதுசாரி அரசியல் கூட்டத்தில் பேசியதாக நம்ப வைத்திருக்கின்றனர். இதன் பயன்பாடு, இவர் நாடாளுமன்றம் சென்றதும் கடுகண்ணாவையை அடுத்த குறுகுத்தலை முஸ்லிம் வித்தியாலயத்திற்கு இவரால் இங்கிருந்தே துரத்தப்பட்டேன் நான். மானித நிலையில் நடுத்தரப் படியில் அவர் நின்றார். அதனால், அரசியல் நிலையில் அவர் செய்த இவ்வேலையை என்னால் குறை கூறவே முடியவில்லை.

மானித நிலையில் நான் இளமைப் படித்தரத்தில் நின்றேன். அதனால், மனமுரண்பட்டு கற்பிப்பதில் களவு செய்து ஐந்து பாடசாலைகளைத் தடைதாண்டித் தர்கா நகர் ஸாஹிறாவை இவர் காவலிலேயே வந்தடைந்தேன். அக்காவலுக்கு எனக்குதவியவர் அல்ஹாஜ் ஏ.எஸ்.எம். ஓமர் அவர்கள். இந்த இடத்தை வந்தடைய அன்றைய உள்நாட்டமைச்சர் திரு. டபிள்யூ. தஹாநாயகா களுத்துறைக் கல்விப்பணிப்பாளர் திரு.பெக் மெண்டிஸ் அவர்களை வேண்டி நின்றார். இவ்வித அணுகலுக்கு எனக்குதவியவர் ஆசிரியர் ஜனாப் எம்.எம். பதுர்தீன் அவர்கள்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் கட்சியை வளர்த்தார். சிங்கள மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்று அவர்களது குறைகளை நிறைவு செய்ய முயன்று நின்றார். தொகுதியில் சிங்கள முஸ்லிம் சமூகங்களிடையே சௌஜன்னியத்தை ஏற்படுத்தினார்.

இக்காலத்தே, அவர் வேர்வலைத் தொகுதியின் விசாலத்தை எண்ணி அத்தொகுதியை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தை எடுத்துரைத்தார்.

1970இல் அவர் மீண்டும் போட்டியிட்டுத் தோல்வியடைந்த போதும் நியாய துரந்தரர் தொழிலிலிருந்து மக்கள் மனதை வென்று நின்றார். அரசியல்வாதிகளில் சொத்துடைமை இல்லாத ஓர் எளிய போக்குடைய அரசியல்வாதி இவர். பழைய கார், வாடகை வீடு இவை இரண்டுமே இவரை இணைத்து நின்றன. இந்தப்போக்கு மக்களைக் கவர்ந்து நின்றது.

1974ஆம் ஆண்டு திரு தித்தவல தேர்தல் தொகுதி நிர்ணயக் குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் முன்னிலையிலும் அல்ஹாஜ் எம். ஏ. பாக்கிர் மாக்கார் சாட்சியம் அளிக்கச் சென்றார்.

வேர்வலைத் தொகுதி எழுபது வீதச் சிங்கள மக்களைக் கொண்டது. எதிர்காலத்தில் தான் நினைத்து நிர்ணயித்த முஸ்லிம் அங்கத்துவம் பறந்து விடுமோ என்ற எண்ணம் பாக்கிர் மாக்காரை வாட்டி நின்றது. அதனால், தித்தவலத் தேர்தல் கொமிஷனின் முன் வேர்வலையை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்க வேண்டும் என வலியுறுத்தினார். எதையும் திட்டமிட்டு நியாய பூர்வமாக வாதிடும் திறமை பாக்கிரிடம் இளமையிலிருந்தே இணைந்திருந்தது. அதன்படி, அவரின் வாதங்களைத் தேர்தல் கொமிஷன் ஏற்று நின்றது. இதன் பயன்பாடு, வேர்வலைத் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியானது.

1977 ஆம் ஆண்டு இரட்டை அங்கத்தவர் தொகுதியின் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவர்கள் அமோக வெற்றிபெற்றார். இருபத்தி யேழாயிரத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வேர்வலையின் முதல்வராக எழுந்து நின்றார் பாக்கிர் மாக்கார் அவர்கள்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவர்கள் யூ.என்.பி. கட்சியிலிருந்து தன்னை வளர்க்காமல் கட்சியை வளர்த்து நின்றவர். இளைஞர்கள் மத்தியில் அக்கட்சி செல்வாக்கிழந்திருந்த காலத்தில் இளைஞர்களை எழுச்சி பெறத் தன் மகனையே அதில் ஈடுபடுத்தினார். இலங்கைச் சர்வகலாசாலைகளின் வரலாற்றில் இடதுசாரி அரசியல் வளர்ச்சியே இளைஞரிடை எழுச்சி பெற்றிருந்தது. இப்போக்கை முறியடித்துக் களனி வித்தியாலங்காரப் பல்கலைக்கழக வளாகத்தில் கற்றுக்கொண்டிருந்த பட்டப்படிப்பு மாணவன் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் இலங்கைப் பல்கலைக்கழகச் சகல வளாகங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் வளர்ச்சியை உறுதிப்படுத்தி நின்றார். இளைஞர்களிடையே இவரது சிங்கள மொழிச் சரளப் பேச்சு இனிமையைக் கொடுத்துக் கவர்ந்து நின்றது. இடதுசாரி மனப்பான்மையைத் திசைதிருப்பித் தன்பக்கம் ஈர்த்தெடுத்த இம்தியாஸ் பாக்கிர் மாக்காருக்கும், அவர் தந்தை பாக்கிர் மாக்காருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அதிகம் கடமைப்பட்டுள்ளது என்பது இமாலய உண்மையே!

''வேர்வலை'' என்னும் தலத்தை ஸ்திதமாக நிலை நிறுத்துவதற்கு எத்தனித்தவர் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவர்கள்தான். அந்த இலட்சியத்தை அவர் அடைந்து நின்றதை இந்நாட்டின் தலைவர்கள் யாவரும் அறிவர். ஒவ்வொரு தலைவரும் ஒவ்வோர் இடத்திலும் சந்தர்ப்பத்திலும் இவ்விஷயத்தைக் கூறாமலில்லை. அப்பேச்சுக்களையெல்லாம் இங்கே தொகுக்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. என்றாலும், அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் செயற்றிட்டங்களில் மிக வெற்றி பெற்ற ஒன்று இது. அந்த இலட்சியத்தை வென்று நின்ற இவரின் சேவைத் திறனும் சிலாகிக்கக் கூடியதே! தொடர்ந்து அவற்றை நாம் தொகுத்துப் பார்ப்போம்.

# பாலொளிச் சந்திரன். 6

மக்கள் இணைந்தனர்
  மன்னரா யாக்கினர்
எப்போதும் அவர் நலன்
  எண்ணத்தி லாழ்த்தினேன்
சற்றுமே ஓய்வில்லை
  சளைத்திடா துழைத்ததால்
எட்டிட முடியாத
  அளவுக் கேறினேன்:

வேர்வலை இரட்டைத் தொகுதியின் முதல்வராக பாக்கிர் தெரியப்பட்டமை நாடளாவிய விதத்தில் பரந்து நின்றது. அவர் பெற்ற மேலதிக வாக்குகள் எங்கும் மிதந்து நின்றன. நாட்டின் நாலா திக்கிருந்தும் மக்களின் கண்கள் அவரில் பதிந்து நின்றன. பாராளுமன்றத்திலும் அவர் அரசியல் அனுப வசாலியாக வீற்றிருந்தார். பாராளுமன்றத்தில் அவரது மதிப் பும் கண்ணியமும் உயர்ந்து நின்றன. அதன் பயன்பாடுதான் பிரதிச் சபாநாயகராகப் பாராளுமன்றம் அவரைத் தெரிவு செய்தது.

பிரதிச் சபாநாயகர் பதவி கட்சிச் சார்பை விலக்கி நின்றது. அதனால், எல்லாக் கட்சியினரும் பாக்கிர் மாக்காரை உரிமை யுடன் அணுகி நின்றனர், அவரும், கட்சி சார்புக்கு மேலே நின் றார். அவரது, ஆரம்ப கால அரசியல் வாழ்க்கையும் அவ்வி தமே அமைந்து நின்றது. அந்த வழித்தன்மையே சபாநாயகரி லும் பிரதிபலித்தது.

1978ஆம் வருடம் செப்டெம்பர் 21ஆந் திகதி வியாழக் கிழமை அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவர்களின் வாழ்க்கை

யில் ஒரு சிறப்பு நாள். இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றி லும் ஒரு பொன்னெழுத்துப் பதிவு நாள். அன்றுதான், பாக்கிர் மாக்கார் சபாநாயகராகத் தெரிவான நாள். பாராளுமன்றம் பி. ப. இரண்டு மணிக்குக் கூடியது. கௌரவ அங்கத்தவர்கள் மன்றத்தில் சமூகமளித்திருக்க படைக்கலச் சேவிதர் (SERGENT-AT-ARMS) திரு றொனி அபேஸிங்க செங்கோலுடன் வந்து அதனைச் சபா பீடத்தின் கீழ் வைத்தார்.

கௌரவ ஆனந்த திஸ்ஸ த அல்விஸ் அவர்கள் சபாநாயகர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தமை சபையில் அறிவிக்கப்பட்டது.

அன்றே சபாநாயகர் தெரிவும் நடைபெற்றது. இராஜாங்க அமைச்சர் கௌரவ ஆனந்த திஸ்ஸ த அல்விஸ் அவர்கள் அல்ஹாஜ் முஹம்மத் அப்துல் பாக்கிர் மாக்கார் அவர்களின் பெயரைப் பிரேரித்தார்.

நல்லூர்த் தொகுதி அங்கத்தவர் கௌரவ எம். சிவசிதம்பரம் அவர்கள் ''கௌரவ அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள பிரேரணையை நான் மிக்க மகிழ்ச்சியுடன் ஆமோதிக்கின்றேன்'' என்றார்.

''வேறெவரினதும் பெயர் பிரேரிக்கப்படாததால் ஜனாப் முஹம்மத் அப்துல் பாக்கிர் மாக்கார் அவர்களை அக்கிராசனத்துக்கழைக்க அவரை அவரது இடத்திலிருந்து திரு ஆனந்த திஸ்ஸ த அல்விஸ் அவர்களும் திரு எம். சிவசிதம்பரம் அவர்களும் அக்கிராசனத்துக்கு அழைத்துச் சென்றனர்.''

சபாநாயகர் அப்துல் பாக்கிர் மாக்காரைச் சபை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றது.

சபாநாயகர் அவர்கள் அக்கிராசனத்தில் அமர்ந்தார்கள். சபாபீடத்தின் கீழிருந்த செங்கோல் சபாபீடத்தின் மேல் வைக்கப்பட்டது.

திரு ஆனந்த திஸ்ஸ த அல்விஸ், திரு எம். சிவசிதம்பரம், திரு. எஸ். டி. பண்டாரநாயகா, திரு பெரில் காரியவசம், திரு டபிள்யூ. கே. எம். லொக்குபண்டார ஆகியோர் சபாநாயகரை வரவேற்றும் பாராட்டியும் பேசினார்கள்.

சபையில் சபாநாயகர் அவர்கள் ''கௌரவ பாராளுமன்ற அங்கத்தவர்களே, என்னை இந்தச் சபையின் புதிய சபாநாய கராகத் தெரிவு செய்ததற்காகச் சபை அங்கத்தவர்களாகிய உங் கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரி வித்துக் கொள்கின்றேன்.

''எனது கடமையைப் பாகுபாடற்ற முறையில் நான் நிறை வேற்றுவேன் என்று உறுதி கூறுகின்றேன். உங்கள் அனைவரின தும் முழு ஆதரவையும் எதிர்பார்க்கிறேன். எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக'' என்று சபை முன் பேசினார் கள். அதன்பின், சபை இடைநிறுத்தப்பட்டு அடுத்த அமர்வுக்கு ஆயத்தமானது.

புதிய அரசியல் சட்டத்தின்படி சபாநாயகரின் பொறுப்பு மிக உந்நதமானது. இந்நாட்டின் புதிய அரசியலமைப்புச் சட் டத்தில் முதலாவது இடம் ஜனாதிபதிக்குண்டு. அடுத்துப் பிர தமருக்குண்டு. அதற்கடுத்துச் சபாநாயகருக்குண்டு. ஜனாதிபதி யின் கருமங்களைப் பிரதமர் மேற்கொள்ள முடியாவிட்டால் சபாநாயகரே மேற்கொள்வார். இந்த, அதியுந்நத பதவியைச் சபாநாயகர் பதவியுடன் முதன்முதல் பெற்றவர் முஹம்மத் அப்துல் பாக்கிர் மாக்கார் அவர்கள்தான். முஸ்லிம்களில் முதன் முதல் சபாநாயகர் பதவியைப் பெற்றவர் ஜனாப் எச். எஸ். இஸ்மாயில் (1956 - 1959) அவர்கள்தான். அவருடன், சபாநா யகர் பதவியும் சபாநாயகரின் கருமங்களுமே ஒட்டி நின்றன. ஆனால், அல்ஹாஜ் பாக்கிர் மாக்காருடன் சபாநாயகர் பதவி யுடன் ஜனாதிபதியின் மூன்றாம் இடமும் ஒட்டி நின்றது.

1981ஆம் ஆண்டு ஜனாதிபதியும் பிரதமரும் இந்நாட்டிலி ருந்து வெளியே சென்ற சந்தர்ப்பத்தில் இந்நாட்டின் ஜனாதி பதியின் பொறுப்பு அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரிடமே இருந் தது. இந்நாட்டில் ஒரு முஸ்லிம் அனுபவித்த உயர் அந்தஸ்து இதுதான் என்பதினால் முஸ்லிம் சமூகமே பெருமைப்பட்டது.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் சம்பிரதாய முறைப்படி பெய ரளவில் சபாநாயகராக சும்மா வீற்றிருக்கவில்லை. தனது பத விக்குரிய கடமைகளை அவ்வப்போது நிறைவேற்றினார். பாரா ளுமன்றச் செலவினங்கள் கணக்காளர் நாயகத்தின் பரிசீலனைக் குட்பட்டு வருவதில்லை, இதனைக்கண்ணுற்ற சபாநாயகர் அல் ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவர்கள் உடனடி கணக்காளர் நாய கத்தின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்தார்.

பாராளுமன்றம் நிதி ஒதுக்கீடு செய்யும் சகல தாபனங்களின் கணக்காய்வுகளும் கணக்காளர் நாயகத்தால் ஆய்வு செய்யும்போது, அவற்றை அங்கீகரிக்கும் பாராளுமன்றத்தின் கணக்கு வழக்குகளும் ஆய்வு செய்யப்பட வேண்டுமென்பதே சபாநாயகரின் வாதமாகும். இதன்படி, பாராளுமன்றத்தின் சகல செலவினங்கள் பற்றிக் கணக்காய்வு செய்யும் பணிப்புரையை சபாநாயகர் வழங்கி ஒழுங்குடன் நடைபெற ஆணையிட்டார். இவ்வாணையின் பின்புதான் வருடந் தோறும் பாராளுமன்றமும் கணக்காளர் நாயகத்தின் கணக்காய்வுக்குட்பட்டது என்பது இங்கே குறித்துக் காட்ட வேண்டிய ஒன்று.

பாராளுமன்றச் சம்பிரதாயப்படி பாராளுமன்றக் கூட்டங்களுக்குச் சபாநாயகர் சமூகமளிக்கும்போது செங்கோலுடன் செல்வது வழக்கம். அதிக சந்தர்ப்பங்களில் இச்சம்பிரதாயம் பேணப்படுவதில்லை. சபாநாயகரின் சீருடை உடுத்துச் செங்கோலுடன் சென்று இச் சம்பிரதாயத்தை ஒழுங்குடன் கடைப்பிடித்தார். ஜனநாயகப் பாராளுமன்ற அமைப்பில் ஒழுங்குடன் கூடி நிற்கும் அத்தனை சம்பிரதாயங்களையும் அனுசரித்தல் அவசியம் என்பது இவரது வாதம். இவை, அனுசரிக்கப்படுவதில்லையானால், புதிதாக ஏதாவதொன்று ஒழுங்குடன் அமைக்கப்பட வேண்டும் என்பது இவர் வாதமாகும்.

''மலைநாட்டுச் சிங்களவர்களும் இலங்கை முஸ்லிம்களும் முன்னேற்றம் குன்றிய சமூகங்கள்'' என்பது திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா அவர்களின் கூற்று. இந்த எண்ணக் கருவில் எழுந்ததுதான் மலைநாட்டுச் சிங்களவர்களை அனுசரித்து ''மலை நாட்டு புனர்வாழ்வுக் கொமிஷன்'' (Kandyan Peseantry Commission) அமைந்தது.

இந்த எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டுதான் திரு. டட்லி சேனநாயகா அவர்களும் முஸ்லிம்களுக்காக ஓர் ஆணைக்குழு அமைக்க வேண்டும் எனக்கருதினார். இதை ஞாபகப்படுத்தி சபாநாயகராயிருந்த அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் இச்சட்டத்தை அமுல் நடத்தக் கோரினார். இதை அரசாங்கம் ஏற்று தெரிவுக்குழுவொன்றை நியமிக்க முஸ்லிம் கலாசார விவகார அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மத் அவர்களைத் தலைவராக்கியது. தெரிவுக் குழுவில் பெயர்களும் குறித்தனர். சபாநாயகர் அல்ஹாஜ் அப்துல் பாக்கிர் மாக்கார் துணிந்து இச்செயலைச் செய்ததால் அவருக்கு இதன் பயன்

பாடு சென்று விடுமோ என்ற பொறாமைப் பொச்சரிப்பாலோ என்னவோ சிலர் ஒத்துழைக்க முன்வரவில்லை. துர்அதிஷ்டம் சிலர் ஒத்துழையாமையால் இது இன்றுவரை நிறைவேறாமல் நிற்கின்றது. முஸ்லிம்களின் முறைப்பாடுகளை இனங்காண இக் கொமிஷன் பயன்பட்டிருக்கும். தூரதிருஷ்டிதான் நம் தலைவர்களுக்குத் தெரியாத தலையெழுத்தாகி விட்டதல்லவா?

பாக்கிர் மாக்கார் சபாநாயகரானதும் கட்சி சார்பிலிருந்து ஒரு படி மேலே உயர்ந்து நின்றார். இதனால், முழுப்பாராளுமன்றத்தின் பாராட்டையும் பெற்று நின்றார். குடியியல் உரிமையிழந்து பாராளுமன்றத்திலிருந்து வெளியேறுவதற்கு முன், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா அவர்கள் சபாநாயகர் பாக்கிர் மாக்காருக்கு நன்றி கூற மறக்கவில்லை.

கலவானைத் தொகுதி சிக்கலின்போது, சபாநாயகர் என்ற முறையில் தனித்துவமாக நின்று பாக்கிர் மாக்கார் அவர்கள் வழங்கிய தீர்ப்பு அவரது சட்ட வல்லமையை எடுத்துக்காட்டி உலக அரசியலிலும் பெருமதிப்பைக் கொடுத்து நின்றது.

இவ்விதம் தனது ஆளுமை, அறிவாற்றல் வல்லமை, அனுபவப் பக்குவம் என்பனவற்றால் தன்னை ஒழுங்குபடுத்திச் செயலாற்றும் துணிவு பாக்கிர் மாக்காருக்கிருந்தது. சபாநாயகரின் உத்தியோக வாசஸ்தலமான மும்தாஜ் மஹாலில் அவர் குடியிருந்த காலம் கட்சி பேதமையற்ற நிலையில் எவரும் அங்கு போகக்கூடியதாகவிருந்தது.

அல்ஹாஜ் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் கல்வியமைச்சராக விருந்தகாலத்தில் கட்சி பேதமற்று அகில இலங்கை முஸ்லிம்களும் அவரை நாடிச் செல்வர். சந்தித்துக் குறைகளைக் கூறுவர். அதே மாதிரிதான் அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரை அகில இலங்கை முஸ்லிம்களும் மும்தாஜ் மஹால் நோக்கிச் சென்று சந்திக்கலாயினர்.

கட்சி பேதமற்ற நிலையில் அகில இலங்கை முஸ்லிம்களைச் சபாநாயகர் என்ற முறையில் மட்டும் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அணுகவில்லை. முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் தலைவர் என்ற முறையிலும் அணுகினார். சபாநாயகர்—சக-முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் தலைவர் இவ்விரண்டு உயர் அம்

சங்களையும் இந்நாட்டு முஸ்லிம்கள் யாவரும் தலையை உயர்த்தி அந்நாந்து பார்த்தனர், இதனால், அகில இலங்கை முஸ்லிம்களையும் கைகோத்து இணைக்கும் பலம் பாக்கிர் மாக்காரிடம் இருந்தது என்பதைத் துணிந்து கூறலாம்.

1978ஆம் ஆண்டின் பின், சபாநாயகர் பதவி அவரை ஒட்டிய பின்னர், அவர் அகில இலங்கை முஸ்லிம்களின் இணைப்பைப் பெற்றார். அதனால், வேர்வலைத் தொகுதி இன்னும் உயர் அரியாசனத்தில் நின்று ஒளி பரப்பியதெனலாம்.

அகில இலங்கை முஸ்லிம்கள் யாவரும் தனித்தனி தமது ஊருக்கு வந்து எங்கள் குறை நிறைகளை அவதானிக்க வேண்டும் என அன்புக் கட்டளையிட்டனர். அதனால், பாக்கிர் மாக்கார் சபாநாயகர் பதவி அதிகாரத்தைப் பிரயோகித்து மக்களை அணுகுவதைத் தவிர்த்து, முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் தலைவர் என்ற உரிமையுடன் முஸ்லிம்களை அணுகி நின்றார். அதனால், சகல முஸ்லிம்களும் கட்சி பேதமற்று முஸ்லிம் லீக் கொடியின் கீழ்த்திரண்டு அவருடன் சகோதரர்களானார்கள். இந்த அனுபவம் மிகச் சுவையும், நலனும் கொடுத்த போதும் பெரும் பொறாமைச் சுழற்சியை ஏற்படுத்தி பாக்கிர் மாக்காரை இன்னலுக்குள்ளாக்கியது. என்றாலும், அல்லாஹ்வின் பால் இறுக்கமுள்ள பற்றுடைய அவரை அல்லாஹ் பாதுகாத்தே வந்தான். இதை நுணுக்கமாக நோக்கி அலசுவதும் சுவராஸ்யம்தான்.

# ஒளி பரப்பிய பகலவன். 7

அழுக்கா றில்லா வாழ்க்கை யுடையோன்
அறிவுடையோன் - அந்த
இழுக்கில் உழன்று இன்னல் கொடுப்போன்
இகழ் வுடையோன் - இங்கே
பழுத்த பக்தி வெளுத்த தோற்றம்
பண்பு தரா - மனம்
செழித்த தன்மை சிறந்த குணமே
சிறந் துயரும்!

அல்லாஹ் ஒருவன், அவன் தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் என்ற செய்தியை உலகிற்குப் பரப்புவதற்கு முன்' தன் குடும்பத்திற்கே அறிவிக்க வேண்டும் என்ற எண்ணம் வந்த போது அதை எவ்விதம் செய்யலாம் என ''மஸூறா, - கலந் துரையாடல் நடந்தது. குடும்பத்தை அழைத்து உணவளித்து இச்செய்தியைக் கூறுவதென முடிவெடுத்தனர்.

ஓர் ஆட்டின் பின்னங்கால் சந்தை அப்படியே சமைத்து உணவளிக்க ஏற்பாடாகிற்று. குடும்பத்தவர்களை அழைத்த னர்; உணவு பரிமாறினார்கள். முடிந்ததும், இந் நற் செய்தியை நபிகள் (ஸல்) அவர்கள் எடுத்துக் கூறினார்கள். வயிற்றில் உணவை ஏற்றியவர்கள் செவியில் எதையும் ஏற்காது ஒவ்வொரு வராய் எழுந்து சென்று விட்டனர்.

சத்தியத்தை எடுத்துரைக்க வந்த சாந்தி நபி (ஸல்) அவர் கள் சளைத்து விடவில்லை. மீண்டும், ஆலோசனை நடத்தி னார்கள். மீண்டும் உணவளிப்பதென்ற முடிவுக்கு வந்தனர்.

குடும்பத்தினர் சமூகமளித்தனர்; ''சுப்றா'' விரித்து உண வளிக்க ஆயத்தம் நடந்தது. சமூகமளித்த கூட்டத்தினரை விளித்து நபிகளார் (ஸல்) அவர்கள், ''அல்லாஹ் ஒருவன், அவன் தூதர் நானே. அல்லாஹ்வை அஞ்சி நானேற்றுள்ள தூதை நிலை நிறுத்த எனக்கு உதவுபவர் யார்?'' என்ற வினாவை எழுப்பினார்கள். கூட்டத்தில் அமைதி, யாவரும் மௌனம் சாதித்தனர். இந்த நேரத்தில் ஓர் இளைஞர் எழுந்து ''நான் உதவுகிறேன்'' என்றனர். அவரை அவரது இடத்தில் இருக்க வைத்து, மீண்டும் நபிகளார் இதே கேள்வியை எழுப்பி னார்கள். அப்போதும், மௌனந்தான்; அந்த இளைஞர் எழுந்து ''நான் உதவுகிறேன்'' என்றனர். மீண்டும், அவரை இருக்கச் செய்து நபிகளார் அதே கேள்வியை எழுப்பினர். மீண்டும் அதே நிகழ்ச்சிதான் நடந்தது. அந்த இளைஞர்தான் அலி இப்னு அபூதாலிப் (றழி) அவர்களாகும்.

குடும்பத்தினர் உணவை உண்பதற்காக மௌனமாகக் கூட்டத்தில் அமர்ந்திருந்தனர். உணவு பரிமாறப்பட்டது. உண்டதும், அமைதியுடன் கலைந்து சென்றுவிட்டனர்.

இளைஞரின் உணர்ச்சி, சேவை மனப்பான்மை, கொள்கை உறுதி என்பன இங்கேதான் இஸ்லாத்தில் அறிமுகமாகின்றது, இந்த நிகழ்வு இஸ்லாமிய சிந்தனையில் மிக உறுதியான நிலைக் களனானது, இளைஞர் இல்லாத எந்தவொரு இயக்கமும் இணக்கம் பெறமாட்டா. இயங்கவும் மாட்டா. நபி (ஸல்) அவர்களை நபியை ஒத்த வயதினரும், இளையோரும் முதியோரும் சூழ்ந்திருந்தனர். இஸ்லாமிய இயக்கம் வேரூன்றி வலுப்பெற்றது. அதற்கு இளைஞர்களின் அனுசரணை மிக மிக உதவி நின்றது. இது அல்லாஹ்த ஆலாவின் ஏற்பாடாகவும் இருக்கலாம்.

இஸ்லாமிய வரலாற்றுச் சிந்தனை பாக்கிர் மாக்காரில் அதிகம் வேரூன்றி நிற்பதை அவரது செயற்பாடும், அவருடன் கதைத்திருக்கும் போது எழும் அறிவியல் நிலைப்பாடும் எடுத்துக்காட்டுவதை மறக்கமுடியாது.

அல்ஹாஜ் டி. பி. ஜாயாவை ஆசிரியராகவும் ஆதர்ச குருவாகவும் ஏற்படுத்திய காலத்திலிருந்தே பாக்கிர் மாக்கார் அகில இலங்கை முஸ்லிம் லீக்குடன் இணைந்து செயலாற்றினார். அரை நூற்றாண்டுக்கு மேலாக இந்நாட்டில் ஸ்திதமான

நிலையிலிருக்கும் முஸ்லிம் லீக்கில் மிக அனுபவம் வாய்ந்த செயற்றிறன் மிக்க இளைஞராகவே பாக்கிர் மாக்கார் இணைந்து நின்றார்.

முஸ்லிம் லீக்கில் இணைந்த காலத்திலிருந்தே இளைஞர் அமைப்பைக் கட்டியெழுப்பி இளைஞர்களுக்குத் தலைமைப் பயிற்சி அளிக்க வேண்டுமென்ற வலுவான கோட்பாட்டை பாக்கிர் வலியுறுத்தி வந்தார். அதன் பிரதிபலனாற்றான் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் உதயமானதெனலாம். இவ்வமைப்பை ஏற்படுத்தக் காத்திரமான சட்டதிட்ட யாப்பினைக் கூட்டுச் சேர்ந்து தயாரித்தார். அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் இலங்கை முழுவதும் பரந்தது. இந்த இயக்கத்தை முன்னின்று அமைத்துச் செயற் பட்டதினால் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் இளைஞர்களின் தலைவரானார். அவர், முஸ்லிம் லீக் வாலிப முன்னணியை அமைக்கக் காரணம் இளைஞர்களின் கூட்டை அவர் நேசித்தமையே. சகல செயற்பாடுகளிலும் இளைஞர்கள் இருக்க வேண்டும் என்பது அவரது குறிக்கோள். ''இளைஞர்களை நெறி பிறழவிடக் கூடாது; அவ்விதம் இளைஞர்கள் நெறி பிறழ்ந்தால் அதற்குக் காரணகர்த்தாக்கள் முதியவர்கள்தான் என்பதை மறந்து விடக் கூடாது'' என பாக்கிர் மாக்கார் இன்றும் கூறுவார்.

பாராளுமன்றத்தின் பிரதிச் சபாநாயகரானதும், இளைஞர்களின் இணைப்பு இவருடன் இன்னும் அதிகரித்தது. இதனால், அகில இலங்கையிலும் முஸ்லிம்களின் குறைநிறைகளை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் கண்ணாடியினால் பார்த்து நின்றார். முழு இலங்கை ரீதியில் முஸ்லிம் உறவு பாக்கிர் மாக்காருடன் மிக நெருக்கமாகியது. பாராளுமன்ற வாழ்க்கையில், ஏன்? அரசியல் வாழ்க்கையில் தனது இறுதிப் பத்தாண்டு காலமும் அவர் முஸ்லிம் இளைஞர்களுடனேயே ஒன்றித்தார் என்பதில் வியப்பேதுமில்லை. இக்காலகட்டத்தில் இந்நாட்டின் அறுநூறு முஸ்லிம் கிராமங்களைத் தரிசித்தார். இக்கிராமங்களிலுள்ள மஸ்ஜிதுகளுக்கெல்லாம் சென்றார். இவ்விதம், நாடளாவிய விதத்தில் எங்கும் சென்று மக்களைத் தரிசித்த ஓர் அரசியல்வாதி அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் ஒருவர்தான் என்பதையும் துணிவுடன் கூறலாம்.

தூய மனத்துடன் அரசியலுக்கப்பால் நின்று அவர் செய்த இத்தூய பணிகள் சில இடங்களில் பேச்சிலும் எழுத்திலுந்தான் இருந்தன. தங்களை மட்டும் காட்டிக் கொள்ளச் சில விலாச மற்றோர் முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத் தின் பெயரை ஒட்டி விலாசம் தேடிக்கொண்டனர். இதற்கு உதாரணத்திற்கு நான் எங்கும் செல்லத் தேவையில்லை. நான் அங்கம் வகிக்கும் தர்கா நகர் நான்காம், ஐந்தாம் வட்டார முஸ்லிம் லீக் வாலிப முன்னணியையே எடுத்துக்கொள்ளலாம். இதை ஒழுங்கு படுத்தியவர்கள் தலைவர், காரியதரிசியாக இருந்து நடத்திய ஒரேயொரு கூட்டத்துடன் தங்களை நிலைப் படுத்திக் கொண்டனர். சிலர், இதில் ஒட்டிக்கொண்டு எதையோ பெற்றுக்கொண்டனர். அதே நேரம், வேறு இயக்கங்களின் பேரில் மீலாத் விழாக் கொண்டாடிக் கொள்கின்றனர்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் நாடளாவிய முறையில் தன்னை நிலைப்படுத்திச் செல்வதை அவருடன் கூடியிருந்து குலா விய சம காலத்தவர்களுக்கே பிடிக்கவில்லை. அதனால், அவரை மட்டந்தட்ட எத்தனித்தோர் பலர். ஒரு சமயம், முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் களுத்துறை மாவட்டச் சம்மேளனத்தில் பிரதான அங்கம் வகித்த ஒருவர்; இப்போது கௌரவ அங்கத் தவராக மாகாண சபையொன்றில் இருக்கின்றார். நானும் களுத்துறை முறை சாராக் கல்வி அதிகாரி ஜனாப் ஏ.ஏ.எம். எம். சம்சுதீனும் கதைத்துக்கொண்டிருக்கும்போது, ''பாக்கிர் மாக்காரிடம் சென்றேன்; அவரிடம் கதைத்துக்கொண்டிருக்கும் ஒருவரை பகல் சாப்பாட்டிற்கழைத்தார்; நானிருப்பது அவர் கண்ணுக்குப்படவில்லை; என்ன மனிதனவர்'' என்றெல்லாம், முன்பு அவர் செய்த சில நன்மைகளையெல்லாம் கூறி எடுத் தெறிந்து பேசினார். ஒரு வேளைச் சாப்பாட்டை வைத்தே மனிதனை எடைபோடும் கூட்டமும் பாக்கிர் மாக்காரை அண்டி நின்ற உண்மைகளும் புலப்படுகின்றன. இத்தனைக்கும் அவர் வீட்டில் மற்றவர்களுக்காகச் சமையல் செய்வது அதிகம்.

''அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் அரசியல் பிரவேசமே பணக்காரர் கூட்டிலிருந்தே ஆரம்பமாகின்றது. அவர் வெற்றி பெறும் மட்டும் பணக்காரரை ஒட்டியிருப்பார்; பின்பு, அவர் களை வெட்டி விடுவார்' என்பது பணக்காரர் மத்தியிலும், அரசியல் எதிரிகளின் வாய்களிலும் அடிபடும் பேச்சு இது.

சில நேரங்களில் இது உண்மையின் பிரதிபிம்பமாகவே தோற்றம் பெறுகின்றது. ஆனால், அதனுள்ளே பொதிந்துள்ள இரகசியங்கள் மிகப்பயங்கரமானவை. அவர், இறுதியாகப் போட்டியிட்டு வெற்றியடைந்த பின், விட்ட அறிக்கைகளும், திட்டங்களும் மிக உந்நிப்பாக நோக்க வேண்டியவைகள். உதாரணத்திற்கு ஒன்று, தேசியப் பத்திரிகைகளில் அடிபட்ட செய்தி ''எனது, தொகுதியில் பணக்காரர் சிலர் உயர்ந்து நிற்கின்றனர். அவர்களின் உதவியை நாடி இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கப் பல திட்டங்கள் அமைத்திருக்கின்றேன்'' என்பது. ஆனால், இவ்விதத்திட்டங்கள் யதார்த்தமாக நிறைவேறவே யில்லை. இவரது திட்டங்களைத் தவிடுபொடியாக்க வேண்டும் என்பது பணக்காரர் திட்டம் என்பதைப் பாக்கிர் அறியார். வேர்வலைச் சுற்றாடல் மாணிக்கக் கல் வியாபாரத்தில் பேர் போன இடம். இந்த வியாபாரம் செய்யும் மக்கள் செல்வத்தில் உயர்ந்து நின்றனர். இவர்களின் உதவியால் வேர்வலைத் தொகுதியைக் கைத்தொழில் மயமான பேட்டையாக்க வேண்டும் என்பது பாக்கிர் மாக்காரின் அபிலாசை. அவர், மிக மனவுறுதியுடன் இது நிறைவேறும் என்று மார்தட்டி நின்றார். இது, நிறைவேறாத ஊமைக் கனவுதான் என்பது எனக்குத் தெரியும். நான் பாக்கிர் மாக்காருடன் தொடர்பில்லை. என்றாலும், அவரது ஆதரவாளர்களுடன் இதைக் கூறி நிற்பதில் சற்று அவசரப்படுவேன்.

பணக்காரர்கள், தொகுதிப் பிரதிநிதியைத் தங்களுக்குப் பிரயோசனப்படுத்தவே முன்னின்றனர் எனும் வஞ்சகத்தை பாக்கிர் அறியக் காலம் கடந்ததெனலாம். தொகுதிப் பிரதிநிதியோ மக்களின் நலனை நோக்கியே தனது சேவையைத் தொடர்ந்தார். இக்காலம், பிரதிநிதியைப் பலப்படுத்தச் செலவு செய்தவர்கள் ''கரக்டர் அஸஸினேசன்'' – CHARACTER ASSINATION - கௌரவப் பங்கம் செய்யத் தொடங்கிவிட்டனர். அரசியலில் இது ஓர் யதார்த்தமே!

பாக்கிர் மாக்காரின் உயர்வையும் அவர்மேல் மக்கள் வைத்துள்ள மதிப்பையும் பார்க்கச் சகியாதோர் அநேகர். இதனால், ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள நம் சமூகத்தவர்களும் முரண்பட்டு நின்றனர் எனலாம். வேர்வலை நகரசபைத் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பாக்கிர் மாக்கார் சுகவீனம் காரணமாக இங்கிலாந்து சென்றுவிட்டார். பிரசாரக்

கூட்டத்திற்கு இரண்டு முஸ்லிம் மந்திரி சபை அங்கத்தவர்கள் வருவதாக எங்கும் அறிவித்தனர். ஏற்கனவே, இவர்கள் வருவதாகவே ஒப்புக்கொண்டும் இருந்தனர். என்ன காரணமோ ஒருவர் கச்சிமலையுடன் நின்றுவிட்டார். இன்னொருவர் வாடி வீட்டுடன் நின்றுவிட்டார். இதில், கட்சி வேலை செய்யவில்லை. தனி மனிதனைத் தள்ளிவிடும் உத்தியே வேலை செய்தது.

''பெரிய மரத்தையும் சின்ன மரத்தையும் வெட்டி வீழ்த்துவோம்'' என்ற கர்ஜனையைக் கோசங்களாக எழுப்பினர். தேர்தல் முடிந்த பின்பு, பொத்துவில் முன்னாள் முதல்வர் ஜனாப் எம். ஐ. உதுமா லெவ்வை என்னைச் சந்தித்தார். ''சின்ன மரத்தைக் கொஞ்சம் உயர்த்த வேண்டும். வளர்ந்து வரும் ஒரு படித்த மகன்; ஏன் அந்த உதவியை உன் எழுத்தால் செய்ய முடியாது?'' என்று என்னை நச்சரித்தார். அதனால், எழுந்த கவிதை ஒன்றைத் ''தினகரன்'' பத்திரிகைக்கு அனுப்பினேன். அக்கவிதை இங்கே ஞாபகத்திற்கு வருகின்றது.

சின்ன மரத்தை சீர் தூக்கி உயர்த்திடுங்கள்
என்னதான் அது பெரிய இடைஞ்சல்கள் செய்தாலும்

உன்னதமாம் உயர்வுக் குயர் பசளையிட்டிடலாம்
அன்னமிட்ட கைதனையே அகற்றிவிட லாகாது
சின்ன மரத்தைச் சீர்தூக்கி உயர்த்திடுங்கள்

குட்டியிலே ஆடு வழுவ மூக்கல் என்பதுதான்
இட்ட வுணவளவு கொழுகொழுத்து மொதமொதமாய்
வட்டி முதலாக வார்த்துவிடும் நாமுணர்ந்து
இட்டமுடன் வளர்த் ததனை ஏற்றிவிட வந்திடுவீர்
சின்ன மரத்தைச் சீர் தூக்கி உயர்த்திடுங்கள்

வெட்டிவிட்டுக் குறைபார்க்க வீணவர்கள் எழுதலுண்மை
நட்டமதனால் நமக்குரித்து உணர்ந்திடுங்கள்
சட்டமெதுவும் சாட்டாது பெருமை வழிக்
கிட்டுச் செலுத்துதலே எம்கடமை முன்வருவீர்
சின்ன மரத்தைச் சீர்தூக்கி உயர்த்திடுங்கள்

சட்டம் படித்துச் சார்ந்து கலைப் பட்டமுடன்
எட்டியுயர்வு பெற்றும் இன்னமது சின்னதுதான்
வெட்டி விழல்கள் வெறும் பேச்சு என்பதில்லை

கட்டிப் பிடித்ததனைக் கனமாக்கி வளர்த்திடுங்கள்
சின்ன மரத்தைச் சீர்தூக்கி உயர்த்திடுங்கள்

கர்வம் தலைக்கனத்தில் கண்பார்வை யற்ற சில
தர்மமற்ற சுற்றத்தார் கண்டுமனம் கொதிக்கும்
பருவத்தின் நல்லுயர்வுப் பயனுடைய சின்ன மரம்
ஒருமை யென நிலைத்துவிட எம்முதவி என்றுமுண்டு
சின்ன மரத்தைச் சீர்தூக்கி உயர்த்திடுங்கள்

— நவம்பர் 29, 1984. ''தினகரன்''

இக்கவிதைக்குக் காரணகர்த்தாவான முன்னாள் பொத்துவில் முதல்வர் எம். ஐ. உதுமா லெவ்வை எனது ஆப்த நண்பர். அவரை நாங்கள் ''குரு'' என்றே கூறிக் கொள்வோம். எஸ். எஸ். ஸி. செலபஸ்ஸில்— பாடவிதானத்தில் ஐம்பத்திரண்டு பாடங்கள் இருந்தன. இதில், கட்டாயம் கணக்கும், மொழியும் சேர்த்து ஆறு பாடங்கள் சித்தியடைந்தால் எஸ். எஸ். ஸி சித்தியடையலாம். நாங்கள் எட்டுப் பாடங்களைப் பரீட்சைக்கு எடுத்தோம். இந்த உதுமா லெவ்வை இருக்கின்றாரே எஸ். எஸ். ஸி சித்தியடைந்த பின், ஐம்பத்திரண்டு பாடங்களில் இரண்டு, மூன்று நான்கென ஒவ்வொரு முறையும் எடுத்துக் கிட்டத்தட்ட நாற்பத்தெட்டுப் பாடங்களை எடுத்துச் சித்தியடைந்த ''குரு''தான் அவர். ''றிஸல்ட்'' வரும் காலம் தபால் கந்தோரில்தான் அதிகமானோர் நிற்பார்கள். இவரோ, ''றிஸல்ட்''டை எடுத்துச் சேட்டுக்குள்ளே வைத்துக்கொண்டு சும்மா போவார். நாங்கள்தான் சந்தேகத்தில் தட்டிப் பறித்தெடுத்துப் பார்ப்போம்.

ஜனாப் எம். ஐ. உதுமாலெவ்வை என்னில் மிக அக்கறையுள்ளவர். எனது சுக துக்கங்களில் கணிசமான பங்கெடுப்பவர். அவர் என்னை இந்த அரசியல் அலை வீசும் காலத்தில் சந்தித்தார். ''நீ பாக்கிர் மாக்காருடன் எதிர்ப்பாம்! அவர்களை எதிர்ப்பதில் இலாபம் இருக்கின்றதா? அப்படியிருந்தால் எதிர்ப்பதில் நான் தலையிடவில்லை. ஆனால், இலாபமில்லாவிட்டால் எதிர்க்காதே'' என்றார்.

''நான் அவர்களுடன் எதிர்ப்பில்லை; உடன்பாடு மில்லை'' என்றேன். அவர், ''இம்தியாஸ் இளைஞர்; படித்தவர்; அவர், அரசியலில் பக்குவப் பட்டுவிடுவார். அந்தச் சின்ன மரத்தை எழுப்பிவிட உதவி செய்யலாமே'' என்று ஒரு வேண்டுகோள் விடுத்தார். அவ்வேண்டுகோளின் பயன்பாடுதான் இக்கவிதை.

சின்னமரம் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கிர் அவர்களை எனக்கறிமுகம் செய்தவர் உதுமா லெவ்வையல்ல. எம்.எம். அப்துல் லத்தீபு என்பவர். சட்டக்கல்லூரியின் ''கென்ரீனில்'' தேனீர் அருந்திக்கொண்டிருக்கும் வேளை, இம்தியாஸ் அங்கு வந்தார். எளிமையும் இனிமையும் நிறைந்த இன்முகத்தை அங்கு கண்டேன். மிகக்குதூகலமாக அவருடன் கதைத்திருந்த நாளது. இவருடன் கதைக்கக் காரணமாயிருந்தவர் அன்பர் அப்துல் லத்தீபுதான். இவர் கல்முனையைச் சேர்ந்தவர்; கலைப்பட்டதாரி, (BA) சட்டப்பட்டதாரி, (LLB) நியாய துரந்தரர். (ATTORNEY)

அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் அவர்களை நான் தேடிச் செல்ல வேண்டிய ஒரு காலகட்டமிருந்தது. அதுவும், எனக்காக அல்ல; அவர் கட்சி சார்ந்த ஒருவரின் வேலை விஷயமாகத்தான். அவர், என்னைச் சந்தித்ததும் சாப்பிடப் பிடித்துக் கொண்டார். நான் எவ்வளவோ மறுத்தும் அவர் விடவில்லை.

''நக்குண்டார் நாவிழந்தார்'' என்பதை இந்தியர்கள், கிழக்கு மாகாணத்தவர்கள் மிக வன்மையாகப் பேணுவார்கள். இந்த ஞாபகத்தில் அஞ்சிக் கொண்டே மறுத்தேன். அவர் விடவில்லை ''வித்தியாசமாக எண்ண வேண்டாம் கொஞ்சமாவது சாப்பிடுங்கள்'' என்று பிடித்துக் கொண்டார். நானும் சாப்பிட்டுவிட்டேன். அந்தச் சொற்ப வேளையில் அவரது மனைவியையும் அளக்கக் கூடியதாகயிருந்தது. உண்மையில் இம்தியாஸுக்கு ஏற்ற மனைவி மட்டுமல்ல, அவர் துணைவியாகவும் இருக்கிறார். அவர்கள், கதைத்துக்கொண்ட குடும்ப விஷயம் எனது காதில் விழுந்தது; இம்தியாஸின் மனைவியின் இரக்க சிந்தை அதில் தெறித்து நின்றது. மலை நாட்டுப் பெண்ணல்லவா குறிஞ்சி நிலக் குணம்தான் கூடல். குடும்பத்தையே கூட்டி நிற்கும் உயர் குணம் அவரில் நிறைந்திருக்கின்றது.

பாக்கிர் மாக்கார்மீது, அதிக அழுக்காறு கொண்டு அவரையே அணுகி நின்ற கூட்டம் எதிர்த்ததற்குக் காரணம்: பாக்கிர் மாக்கார் இளைஞர்களை இணைத்துயர்ந்ததே என்பதிலும் உண்மையுண்டு. எச்சந்தர்ப்பத்திலும் அவர், முஸ்லிம் லீக் இளைஞர் சம்மேளனம் என்றால், அரசியல் கட்சியுடன் இணைத்துப் பார்ப்பதில்லை. அப்படி அவரிருந்திருந்தால், எனக்கெல்லாம் அழைப்பே வந்திருக்காது. பாக்கிர் மாக்கார்

முஸ்லிம் இளைஞர்களை இணைத்தமை ஏனைய அரசியல் தலைமையை அசைத்துவிட்டதெனலாம். அதனால், தங்களைத் தாங்களே முஸ்லிம் தலைவர்கள் எனப் பிரகடனப் படுத்தி முஸ்லிம்களைக் கூறு போடச் சிலர் எழுந்து உயர முடியாமல் விழுந்துள்ளதை நாம் காண்கிறோமல்லவா?

இங்கே, பாக்கிர் மாக்கார் இளைஞர்களை இஸ்லாத்தின் உணர்வுடன் கூட்டுச் சேர்த்தமையையும் அவர் நாடளாவிய விதத்தில் தன்னை இனங்காட்டி நிற்பதையும், அதனால், மனச் சஞ்சலமுற்றோர் அழுக்காறடைந்ததையும் காண்கிறோம். ஆனால், இந்த அழகியதும், ஸ்திரமானதும், செயற்படக் கூடியதுமான திட்டத்தை அமுல் நடத்த அவர் அணைத்திருந்த செயற்குழுவினர் தகுதியுடையவர்களாயிருந்தும், செயற்பட வில்லை என்பதை ஒத்துக்கொண்டேயாக வேண்டும். அவர்க ளில் அதிகமானோர் தங்களைச் சுயமாக நிலைப்படுத்தவே முன்னின்றனர். அவரோடு இணைந்து ஒன்றித்துச் செயற்பட்ட வர்கள் சிலர் இன்று மாறுபட்டு உயர்ந்து நின்று ஏதேதோ மூளைக்கும் வாய்க்கும் தொடர்பில்லாமல் நிற்பதையும் அறி கின்றோம்.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணியைச் செயற்படுத்தியவர் ஜனாப் எம். ஐ. உதுமா லெவ்வை என் னும் இளைஞர். அப்பிராந்தியத்தில் இவ்வியக்கத்தால் நிறை யச் சமூக சேவை செய்திருக்கின்றார். வருடாந்தச் சம்மேள னக் கூட்டங்களில் பல முறை முஸ்லிம் லீக் வாலிப முன்ன ணியை அரசியல் கட்சியாக்கும்படி பிரேரணை கொண்டு வந் தார். ஆனால், அது சட்டதிட்டத்திற்கு எதிரானதாலும், தேசிய ரீதியில் முஸ்லிம்கள் அரசியல் நிலைப்பாடுகொள்ள தேசி யக் கட்சியின் இணைப்புதான் சிறந்தது என்னும் முடிவினா லும் புறக்கணிக்கப்பட்டு விட்டது.

உண்மையில் பாக்கிர் மாக்கார் முஸ்லிம் லீக் வாலிப முன் னணி இயக்கத்தை நாடளாவிய விதத்தில் பரப்பினார். ஆனால், அதன் செயற்பாடு உயர்ந்து நிற்கவில்லை. அது உயர்ந்து நின் றிருந்தால் நிச்சயம் முஸ்லிம் காங்கிரஸ் ஒதுக்கப்பட்டிருக்கும். குறைந்தது களுத்துறை மாவட்டத்திலிருந்தே முஸ்லிம் காங் கிரஸ் பறந்திருக்கும். இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. பாக்கிர் மாக்காரின் திட்டத்தைச் செயற்படுத்தச் சிறந்த ஒழுங்கு படுத்துவோரும் செயற்றிறன் மிக்கோரும் ஒன்று கூடுதல் அவ சியம்.

கிழக்கிலும் வடக்கிலும் நடந்த அரசியல் குழப்பங்களினால் அங்கு வாழ்ந்த முஸ்லிம்கள் அகதிகளானார்கள். வடகிழக்கு முஸ்லிம்கள் அகதிகளானதால் ஏனைய பகுதி முஸ்லிம்கள் மிகவும் துன்பமும் ஆத்திரமும் அடைந்தனர். உடலுறுப்புக்கேற்பட்ட வேதனையை உடல் தாங்காததுபோல் இன்னலுற்றனர். உடுத்திருந்த உடைகளையும் சட்டைப் பையிலிருந்த சில்லறைகளையும் கூட, அவர்களுக்காக அர்ப்பணிக்க முன் வந்தனர். இக்காலம்தான், முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் திறப்பாடு உதயமானது ஒரு தேசியத்திலுள்ள பலவித இனங்களில் ஒன்று, தனது மொழி, தனது இனம் எனும் கோஷத்தை எழுப்பும் போது, அத் தேசியத்தின் ஏனைய இனங்களும் இதே கோஷத்தை எழுப்பும். இது அரசியல் வரலாற்றுண்மை. இலங்கையிலும் இதே நிலைமையை சிங்களவர்கள் ஏற்படுத்திய போது, தமிழர்களும் ஏற்படுத்தினர். முஸ்லிம்களும் அதை முன்வைப்பர் என்பது வரலாற்றுண்மை. இவ்வரலாற்றுக் கணிப்பைச் சில சர்வதேச அரசியல் சக்திகள் பயன்படுத்தின. கூர்ந்து நோக்கும் போது. ஒரு வல்லரசின் – ஆசியாவின் வல்லரசின் ஆளுகையின் கீழ்த்தான் முஸ்லிம் காங்கிரஸ் உதயமாயிருக்க வேண்டும் இவ் வரலாற்றுப் போக்கின் படி மலை நாட்டுத் தமிழர்களும் இதே கோஷத்தை என்றோ எழுப்பத்தான் செய்வார்கள். இது வரலாறு படித்துணர்த்தும் பாடமாகும். ருஷ்யாவின் இரும்பு மனிதர் ஸ்டாளின்கூட, இப்போக்கை விவரித்து எழுதியிருக்கின்றார்.

இந்திய இலங்கை ஒப்பந்தச் செயற்பாட்டில் மாகாண சபை அமைப்பு முக்கிய வலுப்பெற்ற ஒன்று. அதை நடைமுறைப்படுத்த வடகிழக்குத் தவிர்ந்த இடங்களில் மாகாண சபைத் தேர்தல் நடைபெற ஆயத்தமானபோது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிட முன்வரவில்லை. பலமான ஒரு கட்சியின் வீழ்ச்சிக்கு இது ஓர் அத்தாட்சி. இக்கட்சியின் வரவின்மையால் முஸ்லிம் காங்கிரஸின் வெற்றி உண்மையானது. பல கட்சிகளிலும் தொங்கி நின்ற முஸ்லிம்கள் வடகிழக்கு மாகாண முஸ்லிம்கள் அகதிகளானதும், அவர்களுக்களிக்கும் உதவிபோல், தங்களது வாக்குரிமையை முஸ்லிம் காங்கிரஸுக்குத் தாரை வார்த்தனர். இக்காலம், வடகிழக்கில் முஸ்லிம் காங்கிரஸின் நிலைமை ஸ்திதப்பட்டு நிற்கவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிடாததாலும், வடகிழக்கு முஸ்லிம்கள் அகதிகளானதாலும், அரசியல் கட்சியாக அமைப்புப் பெறாத முஸ்லிம் லீக் வாலிப முன்னணி போட்டியிடாததினாலும் முஸ்லிம் காங்கிரஸ் மாகாண சபைகளில் இடம் பெற்று நின்றது.

இவ்வெற்றியை நோக்கிய வடகிழக்கு முஸ்லிம்கள் ஏனைய பகுதி முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாட்டை நோக்கியும், வடகிழக்கில் தமிழ்க்குழு வொன்று பலப்பட்டு வருவதை நோக்கியும் முஸ்லிம் காங்கிரஸ் பற்றிச் சிந்திக்கலாயினர். அதன் பெறுபேற்றால், வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம் காங்கிரஸுக்கு முஸ்லிம் மக்களின் ஆதரவு கிடைத்தது.

உண்மையில், கால, இட, வர்த்தமானங்களின் அசைவே முஸ்லிம் காங்கிரஸை இந்த இடத்திற்குக் கொண்டு வந்ததேயொழிய அதன் கொள்கைகளுக்கோ, எதிர் கால நோக்கிற்கோ மக்கள் ஆதரவு கொடுக்கவில்லை என்பதுண்மை. முஸ்லிம் காங்கிரஸின் வரவின் பயன், பயனற்ற நிலை இப்போதெல்லாம் கணக்கு வழக்கில் எடுபடுகின்றன,

முஸ்லிம் காங்கிரஸ் போன்ற ஓர் அமைப்பு இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தளவில் தேவைதான். அதில், இலங்கையின் பல்திறப்பட்ட தேசியக் கட்சிகளில் அங்கம் வகிப்போரின் கூட்டவசியம். நிச்சயம் அல்ஹாஜ் எம். ஐ. எம். முஹிதீனுடைய அறிவுத் திறமை (ஆதிக்கத் திறமையல்ல) அவசியம். எம். எச். எம். அஷ்ரபுடைய முஸ்லிம் அரசியல் ஞானம் அவசியம். இன்றைய அதன் ஸ்தித நிலை சந்தர்ப்பவசமானது என்பது பற்றியெல்லாம் பாக்கிர் மாக்காருடன் கதைத்திருக்கும் போது, பெறக்கூடியதாகயிருந்தது. அதனால், அவரது அரசியல் முதிர்ச்சியை வியந்தேன்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் எச்சந்தர்ப்பத்திலும் மனித இன்னல்களை அகற்றுவதில் மனவுறுதி கொண்டவர். அவர், சபாநாயகராக விருக்கும்போது ஒரு நாள், ஹஜ் கடமைகளை நிறைவேற்றிவிட்டு தமது தேசம் நோக்கிச் செல்லும் இந்தோனேஷிய ஹாஜிகளை ஏற்றி வந்த விமானமொன்று கட்டுநாயகாவிற் கருகில் விழுந்து சுக்கு நூறாகியது. இச்செய்தி உடனடி வெளியானபோது, அதிகாலையிலேயே படுக்கையிலிருந்து எழுந்த மாதிரியே அவ்விடத்தை நோக்கிச் சென்றார்

பாக்கிர். ஹாஜிகள் மரணமாகி எங்கும் இரத்தக் கறைகளுடன் வீசி எறியப்பட்டிருந்தனர். அங்கு நின்றவர்கள் திகிலுடன் அதிர்ச்சியும் பயமும் கலந்து செய்வதறியாது மரங்களாகினர். பாக்கிர் மாக்கார் வந்தார்; சபாநாயகர் பதவியைப் பயன் படுத்தினார். ஜனாஸாக்களைத் தேடி ஒன்று படுத்தும் கைங்கரியத்தில் ஈடுபட்டார். ஜனாஸாக்களை இந்தோனேஷியாவுக்கு அனுப்பி வைக்கும் வேலைகள் முடியுமட்டும், இரவுப் படுக்கை உடையுடன் காலை உணவே உண்ணாது அந்நாள் முழுநும் இந்நற்காரியத்தைச் செய்து முடித்தே வீடு சென்றார். அத்தனை வேலையையும் அழகுடன் செய்ய அவரது பதவியே மிக உதவியது என்று வியந்து கூறினார்.

இந்தோனேஷிய அரசாங்கம் அவருக்கு அரச அழைப்பு விடுத்தது. அவர், அங்கு சென்றார். செங்கம்பள வரவேற்பு அளித்து அவ்வரசு கௌரவித்தது. பாக்கிர் மாக்கார் இந்தோனேஷிய ஹாஜிகள் விஷயத்தில் காட்டிய அக்கறையை விதந்துரைத்தனர். நன்றி பாராட்டி உச்சி சிலிர்க்க மெச்சினர். பாக்கிர் மாக்காரும் இஸ்லாமிய உணர்வு பெற்றுப் புளகாங்கிதமடைந்தார்.

கிழக்கு மாகாணத்தில் 1978 ஆம் வருடம் நவம்பர் 23 ஆந் திகதி சூறாவளி சுழன்றடித்தது. அதன் சுழற்சி அப்பகுதி மக்களையே கலக்கி விட்டது. அனுபவச் சுழற்சியால் அவர்கள் அல்லலுற்றனர். இயற்கை அழிவால் இயற்கையோடு செயற்கையாகச் சேர்த்துவைத்த செல்வமெல்லாம் சுழன்றழிந்தது. என் மனதையும் அச்சுழற்சி மிகக் கலக்கியது. என் சிந்தனை சூறாவளியுடன் சுழன்றதால் பிறந்த கவிதைதானிது. 1979 ஜனவரி ''பிறை'' இதழில் இது பிரசுரமானது.

**பொல்லாரை யெல்லாம் பொறுக்க முடியாத தற்கோ**
**நல்லாரையும் சேர்த்து நாசம் விளைத்தனையோ?**
**கல்லும் உருகும் கவலை மிகக் கொடிய நிலை**
**எல்லோர்க்கு மாக்கி ஏன் சுழன்று நீ அடித்தாய்?**
**வெல்லும் மனப்போக்கில் விலக்கியவை செய்தவர்கள்**
**அல்லும் பகலும் அறிந்துணர்ந்து திருந்து தற்கா?**
**காற்றே உனக்குச்**
**சீற்ற மெழக் காரண மேன்?**

மதீனாவை நோக்கி மாநபியை அழிப்பதற்குச்
சதிகாரக் கூட்டம் சார்ந்து வரும் வேளையிலே
பொறியியலின் முன்னவராம் புகழ் ஸல்மான் பாரிஸவர்
நெறி சிறந்த சிந்தனையால் நேர் அகழ்தான் தோண்டிவிட்டார்
அநியாயம் செய்யவந்த அறபிக் குறைஷியரை
அழித் தொழித்துத் துரத்திவிட்ட அக்காற்றா நீ கூறு
காற்றே உனக்குச்
சீற்ற மெழக் காரண மேன்?

அறபுக் கடலிருந் தும் அடுத்துச் செங்கடலிருந்தும்
புறப்பட் டெழுந்த சுழற்காற்று அக்காற்று
இறைவனது ஆணையினால் எழுந்த அக்காற்றா நீ
ஏன் கிழக்கிலங்கையினை ஈவிரக்க மற்றழித்தாய்
நிறையிறைவன் கட்டளைக்கு நேர்மாற்றம் செய்தவர்கள்
முறைகேட்டை ஒழிப்பதற்கா மூர்க்கமுடன் நீ எழுந்தாய்
காற்றே உனக்குச்
சீற்ற மெழக் காரணமேன்?

குடல்வாய்ச் சனங்கள் குமுறுகின்ற ஏழ்மையிலே
உடல் சோர்ந்து வாழும் உண்மைநிலை நோக்காமல்
கடல்போல் சேர்த்து வைத்துக் கால்மேல் கால்நீட்டி
உடல் கொழுத்தோர் நிலை அடக்க உடனெழுந்து சுழன்றனையோ
அடம்பிடித்து ஆசைகளை அவிழ்த்துவிட்டு நெறிதவறி
தடம் புரண்ட செய்கை தகாதெனவே சாற்றுதற்கா
காற்றே உனக்குச்
சீற்ற மெழக் காரணமேன்?

நெல்லுக்கும் விளைச்சலுக்கும் நிரைநிரையாய்ப் பணம் கொடுத்து
இல்லாமை போக்கவென எத்தனையோ பொய்கூறி
அல்லாஹ்வின் கூற் றெதிர்த்து அநியாய வட்டிக்காய்
எல்லோரும் பணம் சேர்க்கும் இழிவுதனைப் பொறுக்காமல்
கல்லைப் புரட்டும் கடும்வேகம் கொண்டெழுந்து
எல்லை வகுத்து இரவில் அழித்தாயோ?
காற்றே உனக்குச்
சீற்ற மெழக் காரணமேன்?

எல்லாம் படித்த ஏற்றமிகு ஆலிம்கள்
நல்லாய் நிறைந்த நாடலவா கிழக்கிலங்கை
அல்லாஹ்வைவிட்டு அவன் படைப்பைச் சிரமேற்றி

எல்லோரும் ஏற்று நிற்கும் ஏகத்துவத்தின் பெருமையினை
இல்லாமலாக்கும் இடர்கள் நடக்கையிலே
பொல்லாத கோபம் பொறுக்காமல் எழுந்தனையோ
காற்றே உனக்குச்
சீற்ற மெழுக் காரணமேன்?

ஸக்காத்தின் தத்துவத்தைத் தவறாக உணர்ந்தவர்கள்
ஸக்காத் ஸதக்கா தருமம் அளிக்காதவர்கள்
எக்காலும் இறை ஆணை எடுத்து நடக்காதவர்கள்
பக்கத்தே குவிந்த பணமூட்டை யழிப்பதற்கோ
உக்கிரமாய் நீ உதித்து உருட்டிப் புரட்டி யிங்கே
அக்கிரமம் செய்தவரை அழிக்க எழுந்தாயோ
காற்றே உனக்குச்
சீற்ற மெழுக் காரணமேன்?

சீதனத்தின் கொடுமையினால் சிக்கித் தவித்தவர்கள்
ஆதனந்தான் வேண்டுமென அடம்பிடிக்கும் வாலிபர்கள்
வேதனைக்குள்ளாக்கவே நீ விரட்டி யடித்தாயோ
பேதலித்துப் பிறர்கொடுமைப் பிணிபிடித்தோரையுமா
ஆதரிக்காமல் அவலமென நீ அடித்தாய்
பாதகர்கள் உடன் திருத்த வேண்டுமென வீசினையோ
காற்றே உனக்குச்
சீற்ற மெழுக் காரணமேன்?

மக்களுக்கு வாக்குறுதி அளித்துவிட்டு மாறுசெய்தோர்
மக்களுக்கு மானியங்கள் அளித்து நஷ்டமாவதற்கா
இக்கொடுமை புரிந்தழிக்க எழுந்துலகில் நீ அடித்தாய்
மக்கள் அறியாமையினை மனமுணர்ந்து திருந்துதற்கா
துக்கமுடை இச்செயலைத் துடிதுடிக்க நீ புரிந்தாய்
தக்க செயல் செய்துலகில் தருமமதை நாட்டிடவா
காற்றே உனக்குச்
சீற்ற மெழுக் காரணமேன்?

இக்கவிதை வெளியான பின்பு ஏற்பட்ட ஒரு தாக்கம். *சூறாவளியிலும் சுரண்டுவோரே பொருள் சேர்த்தனர். நெல் களஞ்சியத்திலிருந்து நெல் மூட்டைகளைக் களவாடினர்; கூரை யிலிருந்து சுழன்று சென்ற தகரங்களை ஒன்று திரட்டிச் சொந்தமாக்கினர். பிற ஊர்களிலிருந்து வந்த நன்கொடை களைக்கூடப் பகிர்ந்தளிப்பதாகக் கூறிப் பதுக்கினர். இவற்றை*

யெல்லாம் யதார்த்தமாகப் பார்க்கும்போது, யாருக்கு இச் சோதனைகள்? இன்னும்தான் என் மனம் சுழலுகின்றது. ஆனால், மக்கள் நலனில் எண்ணம் செலுத்துவோர் எச்சந்தர்ப் பத்திலும் மக்களுக்குதவ முன் செல்வர் என்பதற்கு பாக்கிர் மாக்காரின் சூறாவளிப் பிரதேசப் பயணம் எடுத்துக்காட்டி நிற் கின்றது. அக்காலம் துன்புற்ற மக்களின் துயர் தீர்க்க பாக்கிர் மாக்கார் விசேட விமானமூலம் கிழக்குவானை நோக்கிப் பறந்து சென்றார். கிழக்கெல்லாம் சென்று செயலிழந்த மக்களை அர வணைத்துத் தெம்பூட்டினார். இன்றும் அம்மக்கள் அவரது திக்விஜயத்தைச் சிலாகிக்கின்றனர்.

மட்டக்களப்பு வடக்கில் ஏறாவூரை அண்மிய இடத்தில் ஒரு கிராமத்தையே அமைக்க ஈராக் அரசாங்கத்தின் உதவியை நாடிப் பெற்றுக்கொடுத்தார். இன்றும் ''சதாம் ஹுசைன் கிராமம்'' என அது மிளிர்ந்து நிற்கின்றது. அதற்கு ''பாக்கிர் மாக்கார் புரம்'' என்றே வைத்திருக்கலாம். காரணம்: அவ ரில்லையேல் அக்கிராமமில்லையல்லவா?

கந்தளாய்க் குளமுடைந்து முஸ்லிம் கிராமங்கள் அவல நிலையடைந்த சந்தர்ப்பத்திலும் பாக்கிர் மாக்கார் அங்கே சென்று தனது பணியைச் செய்தார் என்பதை மறக்கமுடியாது. எப்பொழுதும் அவர் முஸ்லிம்களையும், அவர்களது இன்னல் களையும், அவற்றைப்போக்க என்ன செய்யலாம் என்பதையும் சிந்திப்பவராகவே இருக்கின்றார். அவர், எவரையும் தனிமனித இம்சை செய்பவரல்ல. தனிமனித விமர்சனம் செய்பவர். அது வும் சொந்த விஷயங்களையல்ல, சமூகப் போக்கிற்கு எதிரான வற்றை மட்டுமே எடுத்து விமர்சனம் செய்வார். தன்னையும் அவர் விமர்சனம் செய்யத் தவறுவதில்லை. இது, முதலாளித் துவப் போக்கிற்கு எதிரானது என நான் வியந்து அவரிடமே கூறியதுண்டு.

அம்பாறை மாவட்டத்தில் பாக்கிர் மாக்கார் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருக்கும்போது, அங்கே மஸ்ஜித் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட காணியைத் தடுத்து வைத்திருக்கும் சங்கதியை அறிந்தார். உடனே, அம்பாரைத் தொகுதி உறுப்பினர் கௌரவ பி. தயாரத்ன அவர்களைச் சந்தித்து விவரம் கேட் டார். அதுமட்டுமல்ல, ''தேர்தல் காலத்தில் நீங்களும், ஜனாதிபதியும், நானும் எல்லோரும் மேடையில் கூறியதென்ன? தேசிய ஒற்றுமைக்கு நாம் செலுத்தும் பங்கென்ன'' என்றெல்

லாம் காரசாரமாகக் கேள்வி கேட்டசைத்தார். அதன் பயன், எதிர்த்து நின்றவர்களே மஸ்ஜித் கட்டும் காணியைக் கொடுக்க நடவடிக்கை எடுத்தனர். இச்சம்பவம் பற்றி அவர் கூறும் போது, ''எதிர்த்து நின்று போராடியும் நமது உரிமைகளைப் பெறமுடியும். அதில், பகையும் பயமும் மற்றவர்களுக்குத் துன்பமும் ஏற்பட வழி வரும். சார்ந்து நின்று போராடும் போது புரிந்துணர்வு ஏற்பட்டு, விட்டுக் கொடுக்கும், தன்மை விரியும். நம் நாட்டைப் பொறுத்தளவில் சார்ந்து செல்லுதலே சிறந்த வழி'' என்கின்றார்.

இச்செய்திகளை அறியும்போது, அரசியல் பரப்பும், சமூக நலன் விரிவும் பாக்கிர் மாக்காரிடம் புதைந்துள்ளன என்பதை நாம் ஆய்ந்துணர முடிகின்றது.

## இரவேயற்ற பகல்! 8

விருத்தாப்பிய முதிர்ச்சி யடைந்தால்
விரைவாய்ப் படித்தவை எல்லாம் மறப்பர்
இருத்தி யின்றும் எடுத்தே யுரைப்பதால்
இன்னும் முதிர்ச்சி முடிவுற வில்லை
கருத்தும் கலையும் கருமம் யாவும்
கட்டுக்கோப்பாய் இட்டுச் செல்லும்
நிறுத்தி யின்னும் ஆய்வு செய்தால்
நேர்மைக் குணமே நின்று நிலைக்கும்!

செக்கோஸெலவாக்கியாவின் ஜனாதிபதியாக விருந்த 'டிஜிலாஸ்' இப்போதும் வீட்டுக் காவலில் தடுத்து வைக்கப் பட்டுள்ள சங்கதி அரசியலறிவுடையோர் யாவரும் அறிந்த சமாச்சாரம். அரசியல் மேலோட்டக் காரருக்கு இவ்விஷயம் பற்றிய அறிவு பூஜ்யம். ''டிஜிலாஸ்'' மார்க்ஸீய சித்தாந்தத் தின் மாமேதை. ஸ்டாளினுக்குக் கூட மார்க்ஸீய சித்தாந்தம் பிழைக்கும்போது, டிஜிலாஸ்ஸைக் கேட்டே அறிவாராம். இந்த மனிதர் டிஜிலாஸ் ''The NEW CLASS'' ''புதிய வர்க்கம்'' என்றொரு நூலெழுதினார். இந்நூல் கூறும் கருத்து ''மார்க் ஸீய தத்துவம் சமதர்மம் நோக்கிப் போனாலும் ஈற்றில் ஒரு வர்க்கத்தை ஏற்படுத்திப் பிளவு படும்'' என்பதாகும். இச் சித்தாந்தப் பிறழ்வு பற்றிய அறிவை ஏற்கனவே எனக்குத் தெரிவித்தவர் ஜனாப் எம். எஸ். எம். இக்பால். இவரிடம் 'டிஜிலாஸி'ன் புத்தகமே யிருந்தது. இப்புத்தகம்தான், டிஜி லாஸை வீட்டுக்காவலில் வைத்திருக்கின்றது. இச்சம்பவத்தைப் பிற்காலத்தில் ஆளுனர் பாக்கிர் மாக்காரும் என்னிடம் கூறி நின்றார். அரசியலிலோ ஆன்மீகத்திலோ வாழ்க்கை முறை யிலோ சித்தாந்தம் பிறழாமல் நிற்கும் உந்நத சக்தி இஸ்லாத்

திற்குத்தான் உண்டு என்பதை பாக்கிர் மாக்கார் வலியுறுத்தினார். ''அல்குர் ஆன்'' சகல விஷயத்திலும் நெகிழா யாப்பு முறையை இறுக்கமாக்கி உடைமை பெறுகின்றது என்ற கருத்தை நண்பர் எம். எஸ். எம். இக்பாலும் வலியுறுத்தி நின்றார். எம். எஸ். எம். இக்பால் நாத்திகராகவிருந்து பூரண இஸ்லாமிய தத்து வார்த்தத்தைப் பின்பற்றியவர். நானோ, ஆத்திகராக விருந்து மார்க்ஸீயத்தை ஆதரித்து நின்றவன். இறுதியில் இஸ்லாமிய சித்தாந்தமே மனித குலத்தை வாழ வைக்கும் என்ற அசையா முடிவுக்கு வரவேண்டிய நிலைப்பாடு ஏற்பட்டுவிட்டது.

''இக்குர்ஆன் உலகத்தார் யாவருக்குமே ஒரு
நல்லுபதேசமே யன்றி வேறில்லை'' *(அல் குர்ஆன் 68:52)*

இந்தக் குர்ஆனின் கருத்தை நிலைப்படுத்தி நிற்பவர் ஆளுனர் பாக்கிர் அவர்கள் என்பதை அவருடன் கதைத்திருக்கும் போது அறிய முடிந்தது. கல்விச் சிந்தனையிலும் அவர் கரை கண்டவர் தான்.

அழுத்கம ஸாஹிறாவுக்குரிய புகழ் யாவும் ஜனாப் எஸ். எல். எம். ஷாபி மரைக்கார் அவர்களுக்கே உரியது. இலங்கையில் இன்று கூட, இந்த அமைப்பில் ஒரு கல்வி நிலையம் இல்லை. இஸ்லாமியக் கட்டிடக் கலை நுணுக்கத்துடன் மிகக் கஷ்டப்பட்டுக் கட்டிய கல்வி நிலையம் இது. இந்நிலையத்தை உருவாக்க பாக்கிர் மாக்கார் அவர்களும் இணைந்து செயற்பட்டமை கல்வி வரலாற்றில் ஓர் எடுகோளே!

ஜனாப் எஸ். எல். எம். ஷாபி மரைக்கார் அரசியல்வாதியை உருவாக்குபவர் (KING MAKER) என்பதை நுணுக்க அறிவுத் திறனுடையோர் ஆய்ந்தறிவர். ஷாபி மரைக்காரின் கல்வி அபிவிருத்திப் பணிக்கு பாக்கிர் மாக்கார் எவ்விதம் உறுதுணையாக விருந்தாரோ அவ்விதம் பாக்கிர் மாக்காரின் அரசியல் எழுச்சிக்கு ஷாபி மரைக்கார் உறுதுணையாக விருந்தார்.

தர்கா நகர் ஸாஹிறாவின் தோற்றம் இரண்டாவது உலக மகா யுத்தத்துடன் தொடர்புடையது. ஸாஹிறாக் கட்டிடம் ஷாபி மரைக்காருடன் தொடர்புடையது. இக்கட்டிடம் தோற்றம் பெற்ற காலத்தில் இச்சூழலில் மாணிக்க வியாபாரப் பரம்பல் ஏற்படவில்லை. சீனன்கோட்டை மிக ஏழ்மையில் ஆழ்ந்த காலம். அக்காலத்தே பல்கலைக்கழக வளாகத் தோற்

றத்துடன் கம்பீரமாக நிற்கும் தர்கா நகர் ஸாஹிறாவை உரு வாக்க ஷாபி மரைக்கார் பட்ட கஷ்டங்களை ஸாஹிறாவின் உப அதிபராகவிருந்த திரு. எஸ். ஜி. ஸமுயேல் என்னிடம் விவரிப்பார். அதைக் கேட்டுக் கொள்கையளவில் ஷாபி மரைக் காரை எதிர்க்கும் என் கண்களே கண்ணீர் துளிர்த்தன.

தர்கா நகர் ஸாஹிறாவின் கல்வி வரலாற்றில் ஷாபி மரைக்காரின் பங்களிப்பை அவரது எந்த எதிராளியும் எதிர்க் கவே மாட்டான் என்பது ஆணித்தரமான உண்மை. இவ் வர லாற்றில் ஒதுக்க முடியாத இளம் விஞ்ஞானப் பட்டதாரியாக இணைந்தவர்தான் திரு. எஸ். ஜி. ஸாமுயேல் அவர்கள். இந் திய சுதந்திரப் போராட்டத்தில் காந்தி, நேருவுடன் சமகாலத் தவராகவிருந்த காமராஜர் அவர்களின் பிறந்தகமான விருது நகர்தான் திரு. எஸ். ஜி. ஸாமுயேல் அவர்களின் பிறந்த ஊராகும். நீண்ட காலம் தர்கா நகர் ஸாஹிறாவின் உப அதிபராகவிருந்து உயர்ந்து போற்றுமளவு கடமை செய்தவர். அவரிடம் கற்ற அத்தனை மாணவர்களும், அவர் கற்பித்த காலத்தே கற்றவர்களும் அவரை மதித்தே நிற்கின்றனர். ஆனால், அவர் பிரிந்து சென்றகாலம் பாடசாலை மட்டத்தி லாவது பிரியாவிடை வைபவம் ஏதும் நடைபெறவில்லை என் பது சகலருக்கும் துக்கமான செய்திதான்.

பிரியாவிடை வைபவ மொன்றுக்கு அவரை அழைக்க அதிக முயற்சி செய்தார்கள். அது, கைகூடவில்லை. ஒரு நாள் ஸாஹிறா ஆசிரிய குழாம் ஆசிரியை ஒருவரின் கல்யாணத்தில் கலந்தது. திரு. எஸ். ஜி. ஸாமுயேலும் சமூகமளித்தார். அன் றைய ஸாஹிறாவின் அதிபர் இதுதான் தருணமென ஸமுயேல் அவர்களைப் பிரியாவிடை அளிக்க ஒரு திகதி கேட்டு நின்றார்.

''நான் சேவை செய்யும் போது இந்தக் கல்வி நிலையத் திலிருந்து பல பொறியியலாளர்கள், வைத்தியர்கள் உருவாக வேண்டுமென நினைத்து உங்கள் உதவியை நாடினேன். இவ் விஷயத்தை ஆதரித்தீர்கள்; ஆனால், உதவி கிடைக்கவில்லை. நான் நினைத்ததும் நடைபெறவில்லை. இதனால், சேவை செய்ததாக நினைக்கவில்லை. இன்னொரு சந்தர்ப்பம் கிடைத் தால் மீண்டும் அங்கு வருவேன்; மீண்டும் உதவுங்கள். இவ்வித ஆக்கம் நடைபெற்ற பின், பிரியாவிடை வைபவ மொன்றை ஏற்படுத்துங்கள்'' என மிக ஆழமாக அறிவாய்ந்து கூறினார். எல்லோரும் அங்கே மௌனமானார்கள். ஆனால், அதிபர்

மீண்டும் அவரை அண்மி ''மிஸ்டர் ஸமுயேல் பிரியாவிடை வைபவத்திற்கு வருவதற்கு ஒத்துக்கொள்ளுங்கள்'' என இரந்து நின்றார்.

ஜனாப் எஸ். எல். எம். ஷாபி மரைக்காரில் கொண்ட அரசியல் குரோதம் ஸாஹிறாவின் கல்வியில் கைவைத்து நின்றது. சாண் ஏறி முழம் சறுக்கி நின்ற காலம் பாக்கிர் மாக்கார் வேர்வலைத் தொகுதியின் பிரதிநிதியாக வந்துவிட்டார். தர்கா நகர் ஸாஹிறா அவருடன் இணைந்த கல்விக்கூடமல்லவா? அதன் மறுமலர்ச்சியில் அதிக அக்கறை காட்டினார்.

வேர்வலைத் தொகுதியிலுள்ள கல்விக்கூடங்களில் பாக்கிர் மாக்காரின் பார்வை ஊடறுத்து நின்றது. 77ஆம் ஆண்டிற்குப் பின் பாக்கிர் மாக்கார் வேர்வலைத் தொகுதியின் கல்வியில் முன்னிலும் அதிக அக்கறை காட்டத் தொடங்கினார்.

சீனன் கோட்டையின் கல்வி வளர்ச்சி அவர் காலத்தில் உந்நதமானது. ''நான் சிங்களவரின் வாக்குகளால் வந்தவன்; அவர்களுக்கே சேவை செய்ய உரியவன்; நீங்கள் எல்லோரும் சேர்ந்து கல்விக் கூட விஷயங்களில் அக்கறை காட்டுங்கள்'' என ஊரவர்களையே கல்விக் கரிசனை காட்டும்படி முன்னிருந்த பிரதிநிதி கேட்டு நின்ற காலம் ஓடியொழிந்தது. அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் சபாநாயகரான காலம் சீனன் கோட்டையின் கல்வி வளர்ச்சி பிரகாசமானது. பெண்கள் வித்தியாலயத்தில் திருமதி. எஸ். ஏ. நுபைல் அவர்களின் பங்களிப்பால் பல்கலைக்கழகம் வரை மாணவிகள் சென்றனர். அல்ஹுமைஸறாவும் உயர்ந்து நின்றது. மக்கொன ஹஸனிய்யா, மாளிகாஹேன முஸ்லிம் மஹா வித்தியாலயம், அல்ஹம்றா கனிஷ்ட வித்தியாலயம், தர்கா நகர் ஸாஹிறா, அழுத்கம் வீதிய பெண்கள் மத்திய கல்லூரி யாவும் கல்வியுடன் கட்டிடங்களும் பெற்றுக் கலகலப்பாகின. இவை போலவே சிங்களக் கல்விக்கூடங்களும் விரிவு பெற்றன.

முஸ்லிம் கல்விக் கூடங்கள் மூன்றினுக்குத் தொலை பேசி வசதி பெற வழி செய்தார் பாக்கிர் மாக்கார். அவர், நகர சபையின் பிதாமகனாக இருக்கும்போது, (65-70) நகரசபைக் குட்பட்ட கல்விக் கூடங்களுக்குப் பாடப் புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள், ஏனைய உபகரணங்கள் என்பன பகிர்ந்தளித்தார்.

வேர்வலைக் கிழக்குப் பகுதியில் அல்ஹுமைஸறா மத்திய கல்லூரியாவதற்கும் பாக்கிர் மாக்காரே காரணமாகும். சீனன் கோட்டையில், அல்ஹுமைஸறா ஆண்கள் கல்லூரி, பெண்களுக்கென பிரத்தியேக வித்தியாலயம், தனித்தனி ஆண்களுக்கும் பெண்களுக்குமென இயங்குவதுபோல் வேர்வலை மேற்குப் பகுதியில் மாளிகாஹேன முஸ்லிம் மஹா வித்தியாலயமும், மருதானை அல் பாஸியத்துல் நஸ்ரியாவும் ஆண்களுக்கும் பெண்களுக்குமென இயங்க வேண்டும் என பாக்கிர் மாக்கார் திட்டமிட்டார். இவ்விரு கல்விக் கூடங்களையும் களுத்துறை மாவட்டத்திலேயே எல்லா வசதிகளுமுடைய கல்விக் கூடங்களாக மிளிரச் செய்ய வேண்டுமென்பது அவர் அவா. அவரது அவாவை நிறைவேற்றவென அவரின் ஆதரவாளரான ஒருவரையே அதிபராக்கினார். அவரது அபிலாசையை ஆரம்பம் செய்ய வேர்வலை மாளிகாஹேன முஸ்லிம் மஹா வித்தியாலயத்திலுள்ள பெண்களை மருதானைக்கு அனுப்பும் நடவடிக்கையில் இறங்கினார். அவர் கொண்டு வந்த அதிபரே அவரது திட்டத்திற்கு எதிராக நின்று விட்டார். வளர்த்த கடாவே வயிற்றில் குத்திய கதைதான். அதிபர், பாக்கிர் மாக்காரின் திட்டத்தைப் பெற்றோருக்கு விளங்கப்படுத்தாமல், அவரது திட்டத்திற்கு எதிரணியை ஏற்படுத்திவிட்டார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம் நடைபெற்றது. தலைமை வகித்த அதிபர் ''பெண்கள் இக்கல்விக் கூடத்தில் கற்க வேண்டும்'' என்ற பிரேரணையைக் கொண்டுவந்தார். ஜனாப் எம். எஸ். எம். அன்வர் அதை ஆமோதித்தார். சபையில் அமைதி நிலவியது. ''இப் பிரேரணைக்கு எதிர்ப்பிருந்தால் அவர்கள் கைகளை உயர்த்திக் காட்ட முடியும்'' என ஜனாப் எம். எஸ். எம். அன்வர் எழுந்து கூறினார். ஆசிரியர்கள் ஜனாப் ஏ. ஏ. எம். மர்ஸூக், ஜனாப் ஏ. டபிள்யூ. எம். அஜ்வத், ஜனாப் ஏ. எம். முஹம்மத் ஆகியோர் அதனை எதிர்ப்பதாகக் கைகளை யுயர்த்தினர். இந்நிகழ்ச்சி சபையைக் கலக்கி நின்றது. பெற்றோரும் மற்றோரும் பிழையான வழியில் செல்லும் திட்டத்திற்குள்ளானார்கள். அதிபரே அதற்குத் தூபம் போட்டு நின்றார்.

பெற்றோரும் மற்றோரும் அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் திட்டத்தை அறியவுமில்லை; அறிய முயலவுமில்லை. தற்காலிகமாகப் பாடசாலை அபிவிருத்தியை மட்டும் நோக்கி நின்றவர்

கள் தூரதிருஷ்டியைக் கவனிக்காது அதிபர் பக்கம் நின்று கோஷமெழுப்பினர். அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் திட்டத்தைப் பரந்துபட்டு உணரமுடியாத அதிபருக்கு அங்கிருக்க முடியவில்லை. அதிபரை அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் மாற்றினார் அல்லது அதிபர் அங்கிருந்து மாற்றம் பெற்றுக் கொண்டார்.

புதிய அதிபராக பட்டதாரி, கல்வி ''டிப்ளோ''மாவில் ''மெரிற்'' எடுத்தவர் ஒருவரை பாக்கிர் மாக்கார் அனுப்பினார். பழைய அதிபரின் கெடுபிடியால் பெற்றோர் மாணவர்கள் குழம்பி நின்றனர். புதிதாக வந்தவருக்கெதிராகக் கோஷம் எழுப்பினர்; கல்லெறிந்தனர். அதிபரைக் கூட்டி வந்த கல்வித் திணைக்கள அதிகாரியும் தாக்கப்பட்டார். இதன் முடிவு, இன்றுவரை அக்கல்விக் கூடம் எழுந்து நிற்க முடியாமல் தவழ்ந்து செல்கின்றது.

பாக்கிர் மாக்கார் அனுப்பிய புதிய அதிபருக்கெதிராகக் கூறப்பட்ட கோஷங்கள், ''அவர் ஒரு நாஸ்திகன்; குடிகாரன்'' என்பவைகளே! 'சிக்ரட்' கூடப் புகைக்காத அவர் குடிகாரனாகச் சிருஷ்டிக்கப்பட்டார். பகுத்தறிவு வாதத்தை இஸ்லாத்துடன் இணைத்துப் பேசியதால் நாஸ்தீகரானார். பின்னொரு காலம் வேர்வலை நகர சபைத் தேர்தல் கூட்டங்களில், மாளிகாஹேனயில் இருந்த அதிபர் சீனன்கோட்டையில் தேர்தல் பிரசாரம் செய்யும்போது, மாளிகாஹேனயில் கல்லெறிபட்ட அதிபரை வானளாவப் புகழ்ந்தார். ''சீனன்கோட்டை அல்ஹாஜ் மைஸறாவுக்கு அதிபராக வரவிருந்த அவரை பாக்கிர் மாக்கார் தடுத்துவிட்டார்'' என்றெல்லாம் பேசினார். இதனால், நஷ்டமடைந்தவர் கல்லெறிபட்ட அந்த அதிபர்தான். அரசியலே செய்யாத அவர் அரசியலில் அகப்பட்டு, அச்சூறாவளிக்குள் சின்னாபின்னமாகினார். இந்த அகநிலை அமுக்கத்தால் பின்பு புற நிலையில் அவர் தாறுமாறாக அவதூறுக்குள் அகப்பட்டார். அரசியல்வாதிகள் அவரில் அக்கறை காட்டாமைக்கு இச்சூழ்ச்சியும் காரணம்தான்.

மாளிகாஹேன முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில், அத்தொகுதியின் பிரதிநிதி, அவர் பிறந்த ஊரின் முன்னேற்றம் நோக்கிக் கரிசனையில்லாமல் இருப்பாரா? என்பதை அவ்வூர் மக்கள் சிந்திக்கக் காலம் பிந்திவிட்டது. குட்டையைக் குழப்பியோர் வெற்றி பெற்றனரேயொழிய பாக்கிர் மாக்காரின் திட்டம்

வெற்றி பெறவில்லை. வெற்றி பெற்றிருந்தால், மாளிகாஹேன, மருதானை கல்விக் கூடங்களின் உயர்ச்சி வானளாவியிருக்கும்.

மாளிகாஹேன முஸ்லிம் மஹா வித்தியாலயத்திற்குப் பல அதிபர்கள் பாலத்தின் கீழ் தண்ணீர் ஓடுவது போல் வந்து சென்றனர். ''பெண்கள் இங்கே கல்வி கற்கக் கூடாது'' என்பதை ஆதரித்துக் கையுயர்த்திய ஜனாப் ஏ.டபிள்யூ.எம். அஜ்வத் அவர்களும் வந்தார். ஆனால், அவர் காலத்திலும் பெண்கள் அங்கே கல்வி கற்றனர். அடிப்படைத் திட்டத்திற்கு ஆதரவற்ற நிலையில் நமக்கேன் வீண்வம்பு என அவர் இருந்திருக்கலாம். பாக்கிர் மாக்கார் உண்மையில் நல்லதோ தீயதோ மாளிகா ஹேன மக்கள் விருப்பத்திற்கு மாறு செய்யவில்லை. ஆனால், மக்கள் இந்த இடத்தில் அவரைப் புரிந்து கொள்ளவில்லை.

திருமதி எஸ். ஏ. நுபைல் அவர்கள், அழுத்கம குரு வித்தியாலயத்தின் அதிபராகச் சீனன்கோட்டை முஸ்லிம் பெண்கள் வித்தியாலயத்தில் இருந்து வந்தார். கல்வி அமைச்சின் காரியதரிசி திரு. ஈ. எல். விஜயமான, அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் ஆகியோரின் நச்சரிப்பினால்தான் அவர் வந்தார். அதுமட்டுமல்ல, பயிற்சி அளிக்க விரிவுரையாளர்கள் இல்லாத காலத்தில் விரிவுரையாளர்களுடனேயே வந்தார். விலாசமற்றோருக்கும் அவர் விலாசம் கொடுத்தார். அவரது பொற்காலத்தில் குரு வித்தியாலயம் ஒரு குட்டிப் பல்கலைக்கழக வளாகம் போல் உயர்ந்து நின்றது. அரைகுறைத் தகைமையாளர்கள், பண்டிதர் எனப் பசப்பியோர்கள் இடரி நின்றனர். மாலைக் கண் குருடர்களுக்கு முழுக் குருடர்கள் அங்கே வழிகாட்டிக் கொண்டிருந்த காலம்தான் பாக்கிர் மாக்காரின் அனுசரணையுடன் திருமதி எஸ். ஏ. நுபைல் வந்தார். அதனால், எத்தனையோ. தில்லுமுல்லுகளைத் தீர்க்க வேண்டிய தலைப்பாரம் அவருக்கேற்பட்டது.

ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் அகம், புறம் என இரண்டுண்டு. இதில், அகத்தைப் புதைத்து வைத்து அதிபரை அவதூறு செய்தனர். ''வஞ்சகி''கள் ஈனச் செயலாளர்களுடன் கொஞ்சிக் குலவினர்.

இங்கே, பணம் புரளக் கூடிய சேவைக்காலப் பயிற்சி ஒன்று நடைபெற்றது. கலாசாலைக்கு அப்பாற்பட்ட நிருவாகத்தில் நடத்தப்பட்ட இச்சேவைக்காலப் பயிற்சியில் முதன்

முதல் வந்த இலாபத்தை முற்றுமுழுதாக அதிபர் பெறவிரும்ப வில்லை. இறுதி வாரம் புர்யாணி, வட்டில் அப்பம் நிறைந்த உயர் உணவளித்துத் திருப்தியானார். இந்த நடவடிக்கையால், பணம் மேல் விழி வைத்த காகக்கூட்டங்கள் அதிபரை அகற்றி விட எத்தனித்தன. அடுத்து வந்த சேவைக்காலப் பயிற்சியில் களுத்துறைக் கல்வித்திணைக்கள இணைப்பதிகாரி அதிபரின் செயல்களில் ஆணி குத்தினார். பச்சையாக அவர் விரும்புவதை எடுத்திருக்கலாம்; அவர் அதிபரின் வேலை நடக்க வேண்டும்; சுளையாக நாம் எல்லாவற்றையும் சுழற்ற வேண்டும் எனும் பிடிவாதத்தில் இருந்திருக்கின்றார். ''கெடட்'' ஒபிஸர்களாக வந்தவர்களுக் கெதிராக ''புகார்'' கிளம்பியது. அமைச்சிலிருந்தே விசாரணை நடைபெற்று ''புகார்'' தெரிவித்தவர்களே மன் னிப்புக் கோரினர். இதனால், இணைப்பதிகாரி, ''கெடட் ஒபிஸர்''களின் பிணக்கில் அதிபர் அக்கறை காட்டவில்லை யென அகரீதியில் அதிபர் பழிவாங்கப்பட்டார். இணைப்பதி காரியோ, ''இவர்களெல்லாம் சென்று விடுவார்கள். நாங்கள் இங்கேயே இருப்போம்'' எனச் சூள் உரைத்தே சென்றாள். அதன் புலப்பாடு புற நிலையில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது.

இக்காலத்தே, அதிபரை இங்கே எடுத்து வந்த, அமைச் சர் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் பாராமுகமாய் இருந்தாரோ, பார்த்தும் பாராம விருந்தாரோ தெரியவில்லை. நிச்சயமாக அவரது பரிகாரம் உரிய நேரத்தில் கிடைத்திருந்தால், அதிகா ரத் துஷ்பிரயோகம் செய்த களுத்துறைக் கல்விப் பணிப்பாள ரின் செயலைத் தடுத்திருக்கலாம். இப்பணிப்பாளரின் காலத் தில் இப்பிராந்தியத்தில் அதிக முஸ்லிம் ஆசிரியர்கள் ஒழுங்கு நடவடிக்கைக்குள் அநீதியாக உட்படுத்தப்பட்டனர்.

அமைச்சரின் பாராமுகத்தால், அவரது ஆதரவாளர்கள் கூட, அவதூறு செய்யும் பணியில் அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள தொலை பேசிகளையும் பாவித்தனர். அரசியலில் இவ் விதத்தன்மை ஏற்படுவது இயல்புதான். ஆனால், காலம் கால மாக தமது ஆற்றலைத் தியாகம் செய்யும் உண்மையான உழைப்பாளிகளை அரசியல்வாதிகள் ஆய்ந்தறிந்து உதவவேண் டும்.

**''நியாயங்கள் தெளிவாக**
**நாளாகுமே!''**

கவியரசு கண்ணதாஸனின் கருத்துமிக்கக் கவி வரிகள் இசைவடிவில் எழும்போது உண்மையில் மனம் மகிழ்கின்றது; நெகிழ்கின்றது.

அதிபர் எஸ். ஏ. நுபைல் எனது மாணவி. எச். எஸ். ஸி. வகுப்பில் 1964 இல் அவருக்குத் தமிழ் கற்பித்தேன். சுய பாஷையில் உயர்தர வகுப்புப் பரீட்சைக்கு ஆயத்தமாகும் ஆரம்ப காலமது. அழுத்கம் வீதிய முஸ்லிம் மகளிர் மத்திய மஹா வித்தியாலயத்தில் அவ்வகுப்புக்குத் தமிழ் கற்பிக்க யாருமில்லை. அன்றைய அதிபர் கல்வித் திணைக்கள அனுமதியுடன் என்னை அழைத்தார். பதினேழு மாணவிகள்; எல்லோரும் எச். எஸ். ஸி. சித்தியடையவில்லை. ஆனால், எல்லோரும் தமிழ் சித்தியடைந்திருந்தனர். ஏழு பேர் தமிழில் திறமைச் சித்தி பெற்றனர். எஸ். ஏ. நுபைல் உட்பட மூன்று பேர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார்கள். இரண்டு வருடப்பாட விதானத்தை ஒரு வருடத்துள் வாரம் மூன்று நாட்களில் மட்டும் திட்டமிட்டுக் கற்பித்தேன். அத்தனை பேரையும் தமிழ் சித்தி பெறும் தகைமைக்குள்ளாக்கினேன். இவ்விதம் எனது ஆசிரிய அனுபவத்தில் எத்தனையோ பேரைச் சித்தியடைய வைத்திருக்கின்றேன். தொட்டுக்காட்டினால், பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களாகவும் அவர்கள் இருக்கின்றார்கள். அந்த விளக்கங்கள் இங்கெதற்கு?

திருமதி எஸ். ஏ. நுபைல் அவதூறுக்குட்பட்ட காலம் சத்தியம் நோக்கி நான் அவருடன் நின்றேன். அதனால், நானும் பாதிக்கப்பட்டேன். அது, கவலை யில்லை. சத்தியம் வென்றது; அதுவே மகிழ்ச்சி தந்தது.

என்னையும் அமைச்சர் பாக்கிர் மாக்காரையும் இணைத்த பாலங்களில் எஸ். ஏ. நுபைலும் ஒருவர். ஒரு நாள் அதிகாலை, அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் படுக்கை அறைக்கே சென்று எஸ். ஏ. நுபைலுக்கு நடந்த அநீதிகளை அப்பட்டமாகக் கூறினேன். அப்போதுதான் அவருக்கு முழு விபரமும் தெரிய வந்தது. உணர்ச்சிவசப்பட்டு கட்டிலிலிருந் தெழுந்து ''இக்பால்! நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?'' எனக் கேட்டார். ''எதுவும் செய்ய வேண்டாம்; விஷயத்தைப் புரிந்து கொண்டால் போதும்'' என்றேன்.

பொத்துவில் முதல்வராகவிருந்த ஜனாப் எம். ஐ. உதுமா லெவ்வை முன்பு அதிபராக விருந்தவர். அதுவும், திறமையான ஓர் அதிபராக இருந்து செயலாற்றியவர். அவருக்குக் கல்வித் திணைக்களத் தில்லுமுல்லுகள் அட்டகாசங்கள் மட்டுமல்ல, அங்குள்ள நல்லவைகளும் தெரிந்த பாடம். எஸ். ஏ. நுபைல் விஷயத்தில் தலையிட்டு நீதியே பெற்றுத் தந்தார். அவரை நாங்கள் எப்போதும் மறப்பதில்லை. யாருமே செல்ல முடியாத மூலஸ்தானங்களுக் கெல்லாம் சென்று அசைத்து நின்றார். எங்களுக்கு நீதி கிடைக்காவிட்டாலும் கூட, நாங்கள் அவரை மறந்துவிடவே முடியாது. என்னையும் அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரையும் இணைத்த பாலங்களில் இவரும் ஒருவர்தான்.

இந்நிகழ்ச்சிகளையெல்லாம் ஏன் இங்கே திணிக்க வேண்டும்? என எண்ணுபவர்களு மிருக்கலாம். உண்மையில் இப் பிராந்தியத்தில் – வியாபார சமுதாயத்தின் மத்தியில் கல்வி வளர்ச்சிக்கு உழைப்போர் எவ்வித இன்னல்களுக்குள்ளாக வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டவே இந்நிகழ்ச்சிகளும் இங்கே வருகின்றன.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரும் கல்வி விஷயத்தில் எவ்வளவு கஷ்டம், எதிர்ப்பு, ஆதரவுக்குள் எல்லாம் அகப்பட்டுத் தத்தளித்திருப்பார் என்பதற்காகவே இவ்வெடுத்துக்காட்டுகள் இடம் பெறுகின்றன.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் எப்பொழுதும் அடிக்கடி தொகுதியிலுள்ள ஆசிரியர்கள், கல்வி அனுகலுடையோர்களுடன் எல்லாம் கலந்துரையாடல் நடத்திக் கொண்டேயிருந்தார். தொடர்பறாமல் எப்பொழுதும் மக்களுடன் இணைந்திருக்க முயன்றார். அதனால்தான், அவர் பெயர் மக்களுடன் ஒட்டி நிற்கின்ற தெனலாம்.

மருதானையில் இப்பொழுது அல்பாஸியத்துல் நஸ்ரியாவுடன் இணைந்த பாடசாலையொன்று அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் பன்முகப்படுத்தப்பட்ட பணத்தினால் எழுந்துள்ளது. இன்னும் அதைத் திறக்கவில்லை. இப்பாடசாலைக் கட்டிடம் மருதானை மகளிர் கல்விக் கூடத்திலிருந்து சற்றுத் தூரத்திலுள்ளது. இதைத் தனித்துவமான வேறு பாடசாலையாக அமைக்க வேண்டும் என்பது அல்ஹாஜ் பாக்கிர் மாக்காருடைய விருப்பம். இப்பாடசாலையில் சிங்களவர்களும் முஸ்

லிம்களும் கற்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வகுப்பு வரைத் தமிழும் சிங்களமும் இருசாராரும் கற்க வேண்டும். ஆங்கிலம், இவர்கள் அதிகம் கற்றுப் புரிந்துணர்வைப் பெருக்கவேண்டும். அவ்விதம் அமைக்கும் திட்டம் அவரிடம் உள்ளது. அவருடைய விருப்பமும் திட்டமும் எதிர்காலத்தில் உயர்ந்து அமைவு பெறும். அதற்குத் தற்காலத்திலுள்ள கல்விக் கரிசனையுள்ளோர் உறு துணை புரியவேண்டும்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் எப்பொழுதும் தனது தொகுதியிலிருந்தே இத்தேசியத்தை நோக்குபவர். இத்தேசியத்துள்ளும் தனது சமூகத்தை நோக்குபவர். அவர், சபாநாயகராயிருக்கும்போதுதான், கிழக்குப் பல்கலைக்கழகம் பற்றிய பேச்சடிபட்டது. வடக்கில் தமிழர்களது ஆளுகையில் பல்கலைக் கழகம் இருப்பது போல், கிழக்கில் முஸ்லிம்களின் ஆளுகையில் பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்ற அவாவுடையவர் பாக்கிர் மாக்கார்.

பாராளுமன்றத்தின் குழு அறையில் கல்வி அமைச்சர் கௌரவ நிஸங்க பராக்கிரம விஜயரத்ன தலைமையில் கல்விக் குழுக்கூட்டம் நடைபெற்றது. சபாநாயகர் பாக்கிர் மாக்கார் சமூகமளித்தார். அட்டாளைச்சேனையில் கலை வளாகமும், சம்மாந்துறையில் விவசாய வளாகமும், மட்டக்களப்பில் விஞ்ஞான வளாகமும் அமைவதற்குரிய திட்டத்தை அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் எடுத்துரைத்தார். கல்வி அமைச்சர் அதை ஏற்று, நடவடிக்கை எடுப்பதற்கு உறுதியளித்தார்.

அடுத்த நாள் பத்திரிகைகள் பறைசாற்றியபடியோ, குழுக் கூட்டத்தில் முடிவெடுத்து வாக்குறுதியளித்த படியோ இவ் விஷயம் நடைமுறைக்கு வரவில்லை.

அக்காலம் கண்டிப் பெரஹர நடைபெற்றுக் கொண்டிருப்பதை ''குயின்ஸ்'' ஹோட்டலில் பார்வையிட்டுக்கொண்டிருந்த அமைச்சர் ஒருவர், பக்கத்திலிருந்த நண்பரிடம் கூறினார்: ''குழுக்கூட்டத்தில் சபாநாயகர் பாக்கிர் மாக்கார் கிழக்குப் பல்கலைக்கழகம் அமையும் முறையை எடுத்துக் கூறிக் கல்வி அமைச்சரையே இணங்க வைத்தாரல்லவா? இதையெல்லாம் பேசுவதற்கு சபாநாயகருக்குத் தேவையில்லை என்று அமைச்சரவைக் கூட்டத்தில் ஒரு முஸ்லிம் அமைச்சரே கேட்டுக் குழப்பி விட்டார்! விஷயம் நடைபெறுமா? என்பது சந்தேகமே!'' என்று

கூறியிருக்கின்றார். இது, நடந்ததோ இல்லையோ, முழு இலங்கை முஸ்லிம்களின் கல்வி நலனில் அல் ஹாஜ் பாக்கிர் மாக்கார் எவ்விதம் பங்கு கொண்டுள்ளார் என்பதற்கு இவ்விதச் சம்பவங்கள் அனேகமிருக்கின்றன.

மன்னாரில் சபாநாயகர் சுற்றுலா வருகின்றார். ஒரு கிராமத்தில் பாடசாலையில்லாக் குறை கூறப்படுகின்றது. உடனே, காசோலைப் புத்தகத்தில் ஒரு கணக்கை எழுதி ''பாடசாலையைக் கட்டி ஆரம்பியுங்கள்'' என்று காசோலையையே கொடுத்துவிடுகின்றார். ''அரசாங்கத்திடம் கூறி ஆவன செய்கின்றேன்'' என்பதற்கே நேரமில்லாமல் இவ்விதம் துணிவதில் அல் ஹாஜ் பாக்கிர் மாக்கார் கெட்டிக்காரர்தான். இவ்வளவுக்கும் அவர் பெரும் பணக்காரருமல்ல, பண வருவாயுள்ளவருமல்ல என்பது வேறு விஷயம்.

''எண்ணத்துக் கேற்பவே கருமம்; ஒவ்வொருவரும் தாம் தாம் எண்ணியதே உண்டு'' என்பது நபி (ஸல்) அவர்களது வாக்கு. புஹாரி, முஸ்லிம் கிரந்தங்கள் எடுத்துரைக்கின்றன. இந்த ஹதீஸை பாக்கிர் மாக்கார் எண்ணுபவர்; அதன்படி நடப்பவர்.

இந்த ஹதீஸை கபூரியா மத்றஸாவின் முன்னாள் அதிபர் பன்மொழி மேதை மௌலவி முஹம்மத் உமர் ஹஸ்றத் அவர்கள் குறள் பாவில் வடித்திருக்கின்றார்:

> ''எண்ணியதற் கேற்பவே கன்மபயன் யாவர்க்கும்
> எண்ணியதே யன்றி யிலது''

இதனை முற்று முழுதாகப் பின்பற்றும் பாக்கிர் மாக்கார் கீழ் வரும் வள்ளுவரின் குறள்களையும் பின்பற்றுபவர்தான். அதற்கு எடுகோள் நபி (ஸல்) அவர்களின் வாக்குத்தான்.

> ''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
> திண்ணிய ராகப் பெறின்''

உண்மையில் பாக்கிர் மாக்கார் ''திண்ணியர்''. எனவே தான், எதனிலும் பின்னிற்கார். பின்நிற்பதானால், அதற்கு வேறு ஏதும் பின்னணி யிருந்திருக்கும்.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

துணிவதில் அவர் கெட்டிக்காரர். அவரது, வெற்றிகளுக்கு இத்துணிவே துணைபுரிந் திருக்கின்றதெனலாம். இவரது துணிவு களைத் துருவி ஆராயும்போது சுவையான செய்திகள் வெளி வரும். அவற்றை அலசுவதும் இன்பம் பயப்பனதான்.

# விரிந்த ஒளியில் நிறைந்த தடங்கள். 9

ஊரினைக் கட்டியாளும் உறுதியாம் மனிதர் சிலர்
நேரிலே மனைவியின் முன் நிமிர்ந்திடார் அடங்கி நிற்பார்
காரியம் சாதிப்பதில் கட்டிய கணவனையே
பாரிய பொருட்டாய்க் கொள்ளார் பிடாரிகள் மத்தியிலும்
சீரிய நெறியுடைய சிறப்புறு மனையாள் கூறும்
கூரிய புத்தியாலே குணமுடைத் துணைவியாகத்
தேறிடும் பண்புயர்ந்தே திளைத்திடும் குடும்ப வாழ்வு
பேறுதான் பெற்றவர்கள் பெருமையாம் வாழ்வு கொண்டார்!

அல்ஹாஜ் பாக்கிர் மாக்காருடன் இணைந்த குடும்ப அங்கத்தவர்கள் தாய், சகோதரி, மனைவி, மக்கள் என விரிகின்றனர். அவரது, கட்டுப்பாட்டுக்குள் இவர்களையே கணக்கெடுக்கலாம். அவரது சகோதரியோ கைம்பெண். சகோதரியையும் மக்களையும் நெறிப்படுத்தும் பொறுப்பும் பாக்கிர் மாக்காரிடமே பொறுத்தது; அதைப் பெரும் பாக்கியமாகவே அவர் கொள்கின்றார். ''றிஸ்க்'' - உணவு அளிப்பவன் அல்லாஹ். அவனது படைப்புகள் யாவற்றையும் பாதுகாத்தல் அவன் பொறுப்பு. மனித வாழ்வு ஒவ்வொருவரிடமும் இணைந்த சங்கிலிக் கோவை. விவசாயி, தொழிலாளி, கல்வியாளன், மூளைசாலி என்று விரியும் மக்கள் தேவைகளைப் பொறுத்தோ எண்ணங்களைப் பொறுத்தோ ஒவ்வொருவரிலும் ஒவ்வொருவரும் தங்கியுள்ளனர். எவர் எவரை விட்டுப் பிரிகின்றாரோ அவரது றிஸ்க் - உணவும் அவருடன் பிரிந்து செல்கின்றது. எனவே, மனிதனோ, உயிரினமோ இணையும்போது, அவரது றிஸ்க் - உணவும் நம்முடன் இணைந்து வரும். இவ்வெண்ணத்தை ஆழமாக எண்ணுபவர் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார். ஆகையினால், சகோதரியையும் அவரது குழந்தைகளையும் தன்னுடனிணைத்ததைப் பெருமையாய்க் கொள்கின்றார்.

வேர்வலை மேற்குப் பகுதியின் அபிவிருத்தியில் அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் அரசியல் தொடங்கினாலும் கிழக்குப் பகுதியான சீனன்கோட்டையின் இணைப்பு அவருக்குக் கொழும்பில் படிக்கும் காலத்திலிருந்தே தொடங்கியதெனலாம். அவர், கொழும்பிலிருந்து லீவு காலம் ஊர் வந்ததும் சீனன் கோட்டையில் படித்துக்கொண்டிருக்கும் வாலிபர்களுடன் பொழுதுபோக்காக இணைந்து கொள்வார். இந்த இணைப்பு நல்லிணக்கமாகவே சென்று விரிந்தது. ஜனாப் ஓ. எல். எம். வதூத் போன்றோரின் சகாக்களுடன் சேர்ந்து "அகில இலங்கை மாணவர் சங்கத்தை (ALL CEYLON MUSLIM STUDENT MOVEMENT) அங்குரார்ப்பணம் செய்தார். அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார், இச்சங்கத்தின் மூலமாகவே சீனன்கோட்டையில் ஒரு சனசமூக நிலையத்தை ஏற்படுத்தி வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கக் கூட்டாக நடவடிக்கை எடுத்தார். அத்துடன், விளையாட்டு உபகரணங்கள் வாங்கி விளையாட்டிலும் கவனம் செலுத்தினார். இச்சங்கத்தின் தாக்கத்தை இன்னும் சீனன் கோட்டையில் பார்க்க முடியும். காலஞ் சென்ற சட்டத்தரணி ஜனாப் ஏ. ஜே. எம். மஸூத் அவர்கள் வீட்டில் மிக உயர்ந்த தத்துவ நூல்களுடன் ஒரு வாசிகசாலையைக் காணலாம். இத்தொடர்ச்சி சீனன்கோட்டை முழுவதும் பரந்து நிற்கின்றன. காலஞ் சென்ற முஹம்மத் ஹனிபா ஆலிம், அல்ஹாஜ் எம். எச். எம். ஹீபத்துல்லாஹ், சட்டத்தரணி ஏ. ஸி. எம். மஸூத், முஸ்லிம் மிஷனரியையே வைத்திருந்த அல்ஹாஜ் அப்துல் வதூத் மாஸ்டர் போன்றோரின் வீட்டு வாசிகசாலைகள் மிகப் பெறுமதிவாய்ந்தவையே. அதுமட்டுமல்ல, இவர்கள், ஆழ்ந்த வாசகர்களும்கூட; அறிவார்ந்தவர்களும்கூடத்தான்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அரசியல் நீரோட்டத்தில் "றயில்வேக் கேற்றுக்கு" வெளியே மேற்கை நோக்கி நகர சபைத்தலைமையைக் கைப்பற்ற வேண்டுமென்று நினைத்தார்; சீனன்கோட்டை அவரைக் கேற்றுக்குள்ளே கிழக்கை நோக்கி இழுத்துவிட வேண்டுமென நினைத்தது.

இக்காலத்தே பாக்கிர் மாக்கார் களுத்துறை மாவட்டத்தில் ஒரு சிறந்த வழக்கறிஞராகத் திகழ்கின்றார். வழக்கறிஞர் தொழில் பணம் சம்பாதிக்க வாய்ப்புடையது. ஆனால், பாக்கிர் மாக்கார் அந்த வாய்ப்பைப் பெற விரும்பவில்லை. மனிதனைச் சம்பாதிக்க விரும்பினார். அநேகமாக இலவசமாக

வழக்குப் பேசுதல் இவருடைய வேலையாகிவிட்டது. வழக்காளி அல்லது எதிராளிக்குப் பேசுவது மட்டுமல்ல, அவனது போக்கு வரத்துக்கும் சிலவேளை பணம் கொடுக்க அவருக்கு நேரிட்டது. மக்கள் மத்தியில் ''பாக்கிர் துரை'' என்ற வாய்ப்பாட்டுக்குள் பாக்கிர் சிக்கிக் கொண்டார். அதனால்தான், மக்கள் சேவைக்கு அவர் முன்னெழ முடிந்தது.

''பாக்கிர் துரை'' என்ற பெயர் களுத்துறை மாவட்டம் எங்கும் அடிபட்டதால் அவ்விளம் சட்டவல்லுனரை மாப்பிள்ளை யாகப் பெற்றுக்கொள்ளப் பணம் படைத்தோர் முன்னின்றனர். மேற்படிப்புக்கு வழி செய்கின்றோம் எனச் சிலர் வந்தனர். ''றப்பரிலே'' ''கிங்'' எனப்பட்டோரும் தேடிவந்தனர். பாக் கிர் மாக்கார் மண விஷயத்தில் உடனடி பதில் கொடுக்க முன் வரவில்லை. அரசியல், ஊர் என்பதில் கவனம் செலுத்தி நின்றார்.

வேர்வலை சீனன்கோட்டையில் பிரபல்யமான இரத்தினக் கல் வியாபாரியும், நிலச்சுவாந்தருமான வைரோசி என மாணிக் கக் கல்லின் பெயரில் ஒளி வீசிய ஜனாப் ஓ. எல். எம். முஹம் மத் றிபாய் அவர்களின் சிரேஷ்ட புதல்வியை அவருக்குக் கல் யாணம் பேசினார்கள். ஊருக்கும் அரசியலுக்கும் இது பொருத்தமாகப் பட்டது.

1952இல் அவரது கல்யாணம் நடந்தேறியது. கல்யாணக் காலம் தேர்தல் சூடு பிடித்த காலம்தான். களுத்துறைத் தொகுதியில் போட்டியிட்ட வழக்கறிஞர் திரு. பி. ஏ. குரே அவர்களையே பாக்கிர் மாக்கார் ஆதரித்து நின்றார். ஆனால், அவரது மாமனாரோ படுவந்துடாவ அவர்களை ஆதரித்து நின்றார். கல்யாண வீட்டை படுவந்துடாவையின் சின்னமான நட்சத்திரத்தால் அலங்கரித்தும் விட்டார்.

உடனே, பாக்கிர் மாக்கார் அந்த இடத்தில் முரண்பட்டு விட்டார். ''நான் கல்யாணம் செய்யவே வருகின்றேனே யொழிய அரசியல் செய்யவல்ல'' என்ற அறைகூவலை விடுத் தார். நட்சத்திரச் சோடனை அகன்றுவிடா விட்டால் மாப் பிள்ளை வரமாட்டார் என்றஞ்சிய மாமனார் உடனடி தேர் தல் சின்னத்தை அகற்றிவிட்டார். இவ்விஷயத்தில் பாக்கிர் மாக்கார் வெற்றியடைந்தாலும், அவரது மாமனார் தோல்வி யடையவில்லை. மணமகளின் அணிகலன்களில் நட்சத்திரத்

தையே பதித்து மணமகன் பார்வைக்கு வைத்துவிட்டார் அந்த மனிதர்.

"மனைவி அமைவ தெல்லாம்
இறைவன் கொடுத்த வரம்"

என்ற பாடல் இசையெழுப்புவதை நாம் கேட்கின்றோம். யதார்த்தமும் அதுதான். பாக்கிர் மாக்காருக்கு மனைவிதான் கிடைத்தாளே யொழியத் துணைவி கிடைக்கவில்லை. அதனால், அவர் அக வாழ்க்கையில் இன்புற்ற போதும், புற வாழ்க்கையில் இடர்கள் ஏற்பட்டன.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் கல்யாணத்தின் பின், அரசியலில் ஏறியும் இறங்கியும்தான் நின்றார். தொடர்ச்சியான ஏற்றம் கிடைக்கவில்லை. இல்லறத் தடைதான் இதற்குக் காரணமாகவும் இருக்கலாம். உண்மையில் வாழ்க்கையின் நிம்மதி இல்லற அமைதியில்தானுண்டு. அவருக்குக் கிடைத்த அமைதி அவரது குழந்தைகள்தான்.

மூத்த மகனோடு; தொடர்ந்து மூன்று பெண் மக்களுக்குத் தந்தையானார். நான்கு குழந்தைகளுக்குப் பின்னும் அவர்களது மணவாழ்க்கை கசப்பையே ஏற்படுத்தி நின்றது. பிள்ளைகளின் அரவணைப்பு அவற்றை மாற்றி நின்றது. என்றாலும், மனைவியின் துணை அவசியமல்லவா? அந்தப் பிணக்கு காரணமாக அவர்களுக்குள் பிரிவினை ஏற்பட்டுவிட்டது.

தனித்து வாழ்க்கை நடத்திய போதும், அரசியல் சமுதாய ரீதியில் உயர்ந்து நிற்கும் அவருக்குப் பணிந்து செல்லும் மனைவி தேவை.

தனது சாச்சாவின் மகள் ஜெஸீலாவை பாக்கிர் மாக்கார் மறுமணம் செய்து கொண்டார். கல்யாணம் என்பது விதிதான். நினைத்தும் இருக்காத பெண் மனைவியாவாள். நாம் நினைத்துமிருக்காதளவு அன்பு செலுத்துவாள். ஜெஸீலா, பாக்கிர் மாக்காருக்கு மனைவி மட்டுமல்ல துணைவியுந்தான்.

மகன், அடுத்துப் பெண்மக்கள் மூன்று பேர். இவர்கள் முதல் மனைவி மூலம் கிடைத்த செல்வங்கள். அடுத்து, ஜெஸீலா பாக்கிர் மாக்காருக்கு முதல் மூன்று பேரும் பெண் மக்கள், கடைசியாக ஒரு மகன் கிடைத்தார். மூத்த மனைவியின் மூத்த

மகன் தொடங்கி இளைய மனைவியின் கடைசி மகனாக இப்போது முடித்திருக்கின்றார். இந்த அழகிய வரிசை சரியானதோ இன்னும் பிள்ளைகள் கிடைக்குமோ அல்லாஹ்தான் அறிந்தவன்.

ஜெஸீலாவைக் கைப்பிடித்த பின், பாக்கிர் மாக்கார் தொடர்ந்து உயர்ந்தே சென்றார். பாராளுமன்றப் பிரதிநிதி, உப சபாநாயகர், சபாநாயகர், அமைச்சர், ஆளுனர் என அவர் பதவிகள் உயர்ந்தன. பண்புள்ள மனைவி அவருக்குப் பக்க பலமானாள். அரசாங்க நடவடிக்கைகளுக்காக வரும் அரச விருந்தினர்களை உபசரித்தல், சாதாரண மக்கள் மட்டத்தில் வருவோரைப் பண்புடன் வரவேற்றல் என்பனவற்றைக் குறிப்பறிந்து செய்யும் குணவதியாக ஜெஸீலா பாக்கிர் மாக்கார் திகழ்கின்றார்.

ஜெஸீலா பாக்கிர் மாக்கார் அழுத்கம் வீதிய முஸ்லிம் மகளிர் மத்திய கல்லூரியில் கற்றவர். அகில இலங்கையிலும் முஸ்லிம்களுக்காகக் கொடுத்த மூன்று மத்திய கல்லூரிகளில் அழுத்கம் வீதிய மகளிர் மத்திய கல்லூரியும் ஒன்று. கல்விக் கரசர் திரு. ஸி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதே இக்கல்லூரி. அகில இலங்கையிலிருந்தும் முஸ்லிம் பெண்கள் இங்கு வந்து கல்வி கற்றனர். இதனால், ஜெஸீலா பாக்கிர் மாக்காரின் சமகாலத்தவர்கள் அகில இலங்கையிலு மிருந்தனர். அவர்களெல்லாம், ஆங்காங்கு ஜெஸீலாவைச் சந்தித்திருக்கின்றார்கள். அவர்களையும் முந்தி ஜெஸீலா அவர்களுடன் கதைத்த சங்கதியை நான் அநேக இடங்களில் கேள்வியுற்று மகிழ்ச்சியடைந்தேன்.

பாக்கிர் மாக்காரும் உலகம் சுற்றிய காலங்களில் சில நாடுகளுக்கு மனைவியையும் அழைத்துச் சென்றிருக்கின்றார். அப்படியானால், அரசியல் அந்தரங்கங்களிலும் அவர் கணவருக்குத் துணைதான் என்பது விளங்குகின்றது.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்காருக்கு பிள்ளைகள் எட்டுப் பேர். மூத்தவர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார். இவர் ஒரு பட்டதாரி, சட்டத்தரணி, படிப்பாளி. அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் ஆளுனரானதும் வேர்வலைத் தொகுதி காலியானது. அத்தொகுதியின் பிரதிநிதியாக இம்தியாஸ் பாக்கிர் மாக்காரையே ஐக்கிய தேசியக் கட்சி தெரிவு செய்தது. அதற்கு முதல்

மாவட்ட சபை அங்கத்தவராக அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்டார். இவர், மக்கள் ஆதரவைப் பெறுவதற்கு அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் மகன் என்ற காரணம் மட்டுமல்ல, மக்கள் மத்தியில் செல்வாக்குள்ளவர் என்ற காரணமும் தான். பேருவலைத் தொகுதியின் அங்கத்தவர் அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் பிரத்தியேகக் காரியதரிசியாக வேலை செய்த அனுபவம் அவருக்குண்டு. ''இளங்கன்று பயமறியாது'' என்ற பழமொழி இவருக்குப் பொருத்தமானதே. தந்தையுடன் பழகிய காரணத்தால் அரசியல் சுளிவு நெளிவுகளைக் காணும் அனுபவம் பெற்றார்.

சென்ற தேர்தலில் களுத்துறை மாவட்டப் பாராளுமன்றப் பிரதிநிதியாக அவரை மக்கள் தேர்ந்தனர். இப்பொழுது வீடமைப்பு இராஜாங்க அமைச்சராகச் செயலாற்றுகின்றார்.

இக்காலத்தில் பாராளுமன்றத்தில் அவர் பேசிய இரு பேச்சுக்கள், அவர் படித்தவர், மிகக் கவனமுள்ளவர் என்பதைக் காட்டி நிற்கின்றன. ''இந்நாட்டில் சேவை செய்த நமது முன்னோர்களின் சேவையைக் குறைத்து மதிப்பிடக்கூடாது; முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்காக உழைப்பதைப் பாராட்டுகின்றேன்; நானும் ஒரு முஸ்லிம் என்பதனால்'' என்ற கருத்துப்பட ஒரு முறை பேசினார். இது இந்நாட்டரசியலில் அமைதிக்கு வித்திடும் உயர் பேச்சென்பதை எவரும் மறுத்து விட மாட்டார்கள். ''தீர்க்காலோசனையுள்ள சிறந்த பேச்சு'' எனப் பலரும் பாராட்டியதை நான் கேட்டிருக்கின்றேன். இந்த விஷயம் பத்திரிகைகளில் செய்தியான போது, அல்ஹாஜ் இம்தியாஸின் மதிப்பு மிகவும் உயர்ந்து நின்றது.

''ஐக்கிய நாட்டுச் சபையின் தீர்மானங்களை இஸ்ரவேல் சட்டை செய்வதில்லை. அதன் போக்கும் செயல்களும் உலக நம்பிக்கைக் குரியதல்ல. எனவே, அந்நாட்டை நாம் அந்நியப் படுத்திவிடவேண்டும்'' என்னும் கருத்துப்பட ஒரு சந்தர்ப்பத்தில் பேசினார். இது, சர்வதேச அரங்கில் எடுபடும் உயர்ந்த அரசியல் பேச்சு. இவ்விரு பேச்சுக்களும் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரின் புருடாத்துவத்தை உயர்த்தி நிற்கின்றன. அவரது அரசியல் ஒழுங்குகள் சில எனக்குப் பிடிப்பதில்லை. ஆனால், அவரது அரசியல் திறமைகள் மிகவும் போற்றக்கூடியனவே! அவரது அரசியல் ஞானம், கல்வியின் ஆழம், இவர் ஒரு படித்தவர்தான் என்று கூறுமளவுக்கே அவரது பாராளுமன்றப் பேச்

சுக்கள் மேலெழுகின்றன. இத்தனைக்கும் இவர் பெற்ற பயிற்சி அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் அரசியல் நுணுக்கங்களையும், அவரது திறமைகளையும் எடுத்துக்காட்டுகின்றன.

இஸ்லாத்தின் தத்துவத்தின் இறுதி நிலை ''உலகம் ஒரு குடும்பம்'' என்பதாகும். சாதாரண குடும்பத்தில் தாய், தந்தை தலைமைத்துவத்தைப் பெறுகின்றனர். பெற்றோருக்குரிய கடமை, பிள்ளைகளுக்குரிய கடமை என்பன பற்றி அலலாஹ் அல்குர்ஆனில் பேசுகின்றான். நபி (ஸல்) அவர்கள் விரித்துரைக்கின்றார்கள். இதன் வழி நடக்கும்போது, உலகக் குடும்பம் இனிதே அமையும் திட்டம் வலுப்பெறும்.

இவ்விலட்சியத்தின் சிறிதோர் அம்சம் திருக்குறளிலும் தெளிவு பெறுகின்றது.

''தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்''

அவையத்தில் முந்தியிருப்பதற்கு மகன் பலமான இலட்சியத்தில் ஆழமான கல்வியைப் பெறவேண்டுமல்லவா? அக்கைங்கரியத்தை பாக்கிர் மாக்கார் மகன் விஷயத்தில் அமுல் செய்திருக்கின்றார். அவையத்தில் முந்தியிருக்கும் போது, அச்செயலால், உலகம் பயன் பெறுகின்றது. உலகத்துக்கு என்னால் பயன் என்ற கர்வம் அம்மகனுக்கு வந்துவிடின், தந்தையாற்றிய நன்றி கெட்டுவிடுகின்றது. அந்நன்றி கொன்றவனாக மகன் இருக்கக்கூடாது. ஆகையினால்தான், வள்ளுவர் தன் வாயால்

''மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்''

''இவன் தந்தை எந்நோற்றான்'' என்று சொல்லுமளவும் உலகத்திற்கு உதவுபவனாக அம்மகன் இருக்க வேண்டும். இவ்வித ஆச்சர்யத்திற்குரிய மகனைத்தான் பாக்கிர் மாக்கார் பெற்றுள்ளார். தனித்துவமும் தன்னாதிக்கமும் செலுத்துமளவுக்கு இளம் வயதிலேயே மகனைப் பயிற்றுவித்த பெருமை பாக்கிர் மாக்காருக்குண்டு.

பிள்ளைகள் விஷயத்தில் அல்ஹாஜ் அப்துல் பாக்கிர் மாக்கார் தனது பொறுப்புக்களைச் செவ்வனே செய்தவர்தான்.

அவர் தனது பெண் மக்களைக்கூட இணக்கமுடைய சிறப்புடை யோர்களுக்கே விவாகம் செய்து கொடுத்திருக்கின்றார். கல்வி கொடுத்திருக்கின்றார். அவர்களும் கல்வியாலும் தந்தையா லும் மிகப் பெருமை பெற்றுள்ளனர். அல்ஹாஜ் பாக்கிர் மாக் கார் அவரது மருமக்கள் பலரினால் பெருமை பெறுகின்றார். அவ்விதம் பணத்திலும், படிப்பிலும், அந்தஸ்திலும், பண்பி லும் அவர்கள் சிறப்புடையவர்களே. அல்ஹாஜ் பாக்கிர் மாக் காரின் பெருமையில் தொங்கி நிற்கும் மருமகனும் இல்லாம லில்லை.

கடைசி மகன் படித்துக்கொண்டிருக்கின்றார். தந்தையின் உணவு, உடை விஷயங்களில் கூடக் கவனம் செலுத்துமளவுக்கு அவரது சின்ன மகன் முன்னிற்கின்றார். அவரது குடும்பம் ஒரு பல்கலைக்கழகமே! பேரப்பிள்ளைகளையும் கண்டு களிப் படையும் பருவத்தில் பாக்கிர் மாக்கார் இன்று நின்றுயர்கின் றார். அது, அவருக்கு மனத்திருப்தியையும் மன நிம்மதியையும் ஏற்படுத்துகின்றது. அவரது அரசியல் முன்னேற்றத்திற்கு அவ ரது குடும்பம் குறுக்கீடு செய்யவில்லை. குடும்பத்தின் குறுக் கீட்டை அவர் சட்டை செய்வதுமில்லை. அப் பண்பினால்தான் இன்று உயர்ந்து நிற்கின்றார் என்பது தெளிவாகின்றதல்லவா?

# பண்புயர்வுப் பாதை. 10

**பாரம்பரியப் பண்புகள் வளரவும்**
**படித்த கல்வி செழித்து விரியவும்**
**நேரம் ஒழுங்கு நிறைந்து நிற்கவும்**
**நேர்மைக் குணங்கள் வளர்ந் துயரவும்**
**தேரும் மனித உணர்வை யறியவும்**
**தெளிந்த இலக்கிய நோக்கை யடையவும்**
**கூறும் உலகியல் நூல்கள் படித்ததும்**
**குறிக்கும் மானிதப் பக்குவ மடையலாம்!**

களுத்துறை நீதிமன்றம் மனிதர்கள் வழிந்து நிறைந்து நிற்கும்போது நிசப்தத்தால் நீடிக்கும். வழக்குகள் ஆரம்ப மானதும் நீதிமன்ற நடவடிக்கைகளால் எழும் சத்தம் மட்டுமே தெளிந்து கேட்கும். நீதிமன்றத்திலுள்ள வட்டமேசையை வளைத்துச் சட்டத்தரணிகள் இருப்பார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு சிந்தனைக்குட்பட்டவர்கள். ஆவணக்கட்டுகள், சட்ட நூல்கள் ஒவ்வொருவரின் முன்னிலையிலும் இருக்கும். சிலர் ஆய்ந்தோய்ந்து மூழ்கிப் படிப்பர். சிலர் வழக்குகளை உன்னிப் பாகக் கவனிப்பர். இன்னும் சிலர், அடுத்த நடவடிக்கைகளுக் கான முயற்சிகளில் ஈடுபடுவர். அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவரது வழக்குகள் வருமட்டும், புத்தகங்களிலேயே மூழ்கியிருப் பார். சட்டத்தைக் கரைத்துக் குடிக்கின்றார் போலிருக்கின் றது என்ற எண்ணம் எல்லோரிடமும் எழும். சந்தர்ப்பம் அப் படித்தானே! நீதிமன்றத்தில் படிக்கும் நூல் சட்ட நூலாகத் தானே இருக்க வேண்டும் எனச் சிந்திக்காமல் நாம் எதைத் தான் சிந்திக்கலாம்.

உண்மையில் பாக்கிர் மாக்கார் அங்கே ஆழ்ந்து படித்த நூல் சட்ட நூலல்ல. உலகப் பிரசித்தி பெற்ற ஆங்கில எழுத்தாளர் சமர்சட் மாம் (SOMERSET MAUGHAM) உடைய நாவல்தான் அவர் படித்துக் கொண்டிருக்கின்றார். சமர்சட் மாமுடைய நூலை மேலோட்டமாகப் படிக்க முடியாதே! அப்படிப் படித்தால், அது ஏறாதே! என நாம் சிந்திக்கின்றோம். ஆனால், நீதிமன்றம் ஒன்று நடக்கின்றதா? என்பதுகூட நினைவில்லாத அளவுக்கு அவர் அந்நூலுள் ஆழ்ந்து இலயித்துவிட்டார்.

''சமர்சட் மாம்'' நாவல் என்றால் என்ன நடந்தாலும் விளங்காது; படிக்கும்போது, அதில் மூழ்கிவிடுவேன்'' என்று பாக்கிர் மாக்காரே கூறினார். இந்த மனிதர் இலக்கியத்தையும் விட்டுவிடவில்லை. அந்த விஷயம் அப்போதுதான் எனக்கு விளங்கியது.

நீர் வீழ்ச்சிக்குப் பக்கத்தில் தவம் செய்யும் யோகியின் நிலைதான் அப்போது எனக்கு ஞாபகம் வந்தது. அமைதி நிலவினால்தான் தவம் செய்ய முடியும் என்ற நிலையிலிருப் போருக்குத் தவமா? அமைதியா? என்ற கேள்விகளும் எழலாமல்லவா?

இளமையிலேயே சிறந்த இலக்கிய நூல்களை இரசித்துப் படிக்கும் பாக்கிர் மாக்கார் சமர்சட் மாமையும், அவரது நூற்களையும் விட்டு வைக்கவில்லை. தொடர்ச்சியாக ''மாமி''ன் நூற்களைக் கற்றது மட்டுமல்ல அவரது வீட்டு வாசிகசாலையில் சேர்த்தும் வைத்திருக்கின்றார்.

சமர்சட் மாமிடந்தான் அதிக மோகம் பாக்கிர் மாக்கார் அவர்களுக்கு. அதற்குக் காரணம் எனக்கு விளங்கிவிட்டது. சமர்சட் மாம் சட்ட நிபுணர்கள் குடும்பத்தில் பிறந்தவர். அவரது பாட்டனார் பிரிட்டனில் பிரபல வர்க்கறிஞர்; அவரது தந்தை சிறந்த சட்ட வல்லுனர். அவருடைய மூத்த சகோதரர் புகழ் பெற்ற வழக்கறிஞர். இந்த வழக்கறிஞர் குடும்ப மோகந்தான் பாக்கிர் மாக்காருக்கும் ஏற்பட்டிருக்க வேண்டுமெனக் காரணம் கற்பித்தேன். உண்மையில் அப்படியில்லை. அவரது இலக்கியத் தரத்தினதும், அவரது இலக்கிய உத்தியினதும் மோகந்தான் என்பதைப் பின்புதான் அறிந்தேன்.

சமர்சட் மாமின் இலக்கிய உயர்வுகளை பாக்கிர் மாக்கார் கூறியதும் எனக்கு இலங்கையின் தமிழிலக்கிய மேதை அ. ந. கந்தசாமியின் நினைவே மேலெழுந்தது. அ. ந. கந்தசாமி ''நான் சமர்சட் மாமுடைய நாவல் போலொன்று தமிழில் எழுதிக்கொண்டிருக்கின்றேன்'' என்று ஒருபோது சொன்னார்.

1966 – 67களில் ''மனக்கண்'' என்றொரு அ. ந. கந்தசாமியின் நாவல் 'தினகரன்' வார இதழில் தொடர்ந்தது. அதைத்தான் அ. ந. கந்தசாமி சொன்னாரோ? என்ற ஐயம் அவரது நாவல் பற்றிய விமர்சனம் ஒன்றெழுதும்போது எனக்குப்பட்டது. உண்மையில் சமர்சட் மாமுடைய நூல் ஒன்றைப் படிப்பதால் உலகப் பேரறிவு பெறக்கூடிய பன்னூல்களிலிருந்தும் காட்டும் கோட்பாடுகளை அறிந்து நாமும் அறிவுடையவராகி விடுவோம். அந்த வரிசையில் தமிழில் ''மனக்கண்'' மூலம் அ. ந. கந்தசாமியின் அறிவுத்திறனில் ஒரு பகுதியையாவது வாசகர்கள் பெற்று விடுகிறார்கள். அவரது, நிறைந்த அறிவாற்றல் அனுபவம் யாவையும் ''மனக்கண்''ணில் கீறிட்டிருப்பதால் அறிவியல் நாவலாகவும் இதைக் கொள்ளலாம். இந்த அடிப்படையில்தான் சமர்சட் மாமுடைய நாவல்களும் மிளிர்கின்றன. அறிவு, உணர்வு இரண்டும் கலந்து நிற்கும் நூல். இதைத்தான், அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரும் எடுத்துச் சொன்னார்.

நானும் அவருடன் அ. ந. கந்தசாமியின் ''மனக்கண்'' பற்றிப் பேசினேன். அது, கூறும் தகவல்களைக் கேட்டார்.

''மனக்கண் நாவலை ஆதியோடு அந்தம் வரை ஆழ்ந்து வாசிக்கும் வாசகனொருவன் பெறும் தகவல்கள் அதிகமானவை. கிரேக்க நாடகாசிரியனான ''செபாக்கிளிஸ்'' எழுதிய ''ஈடிப்பஸ் ரெக்ஸ்'' நாடகத்தை நாம் கதையுடன் ஒன்றித்து இந்நாவலில் அறியலாம். துஷ்யந்தன் சகுந்தலை காதல், துட்ட கைமுனுவின் மகன் சாலிய குமாரனுக்கும் பஞ்ச குலப் பெண் அசோக மாலாவுக்கும் ஏற்பட்ட காதல், அரிச்சந்திர புராணம், காந்தி மகான் வாழ்க்கையை மாற்றிய காரணத்துக்கான நிகழ்வு, இளவரசர் அலிகான் ரீட்டா ஹேவோர்த் அந்யோன்யம், ஷேக்பியரின் ரோமியோ ஜூலியத் நாடகம், அறபு நாட்டுக் கதை லைலா மஜ்னு, பேனாட்ஷாவின் கூற்றுக்கள், புறநானூற்று (ஈ என இரத்தல்......) செய்யுள், இராமாயணக்

கதை, நளன் தமயந்தி தூது, சிலப்பதிகார இந்திரத் திருவிழா, அலெக்ஸாந்தர் கோடியல் சந்திப்பு, சுவாமி விபுலானந்தரது செய்யுள்கள், வள்ளுவரது குறள்கள், பழமொழிகள், வழக்குச் சொற்றொடர்கள், நீட்சேயின் தத்துவ விளக்கம், சத்திய வான் சாவித்திரி கதை, பிரசித்தி பெற்ற குருடர்கள் வரிசை (துரியோதனனுடைய தந்தை திருதராஷ்டிரன், மாளவ தேசத் துச் சத்தியவானின் தந்தை, தேபஸ் மன்னன் ஈடிப்பஸ், யாழ்ப் பாடி, ஆங்கிலப் பெருங் கவிஞன் மில்டன்) இளவரசி மாக்கிரட் காதல் விவகாரம், சிந்தாமணி என்னும் தாசியின் தொடர் பால் தன் கண்களைத் தானே குத்திக்கொண்ட வைஷ்ணவப் பக்தன் பில்வமங்கன் கதை, சிந்தகன் என்னும் மேலைத்தேயச் சிற்பத் தோற்றம், பட்டினத்தார் பாடல் போன்ற பழைய புதிய இலக்கிய அறிவியல் தத்துவ நூல்களிலுள்ள முக்கிய கோட்பாடுகள் அ. ந. கந்தசாமியின் மனக்கண்''ணில் பொதிந் துள்ளன.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரும் மௌனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தவர் ''உண்மையில் அ. ந. கந்தசாமி சமர்சட் மாமைப் பின்பற்றித்தான் இருக்கின்றார்'' என்றார். சமர்சட் மாம் சிறந்த நாடகாசிரியர், நாவலாசிரியர், சிறுகதை மன் னர். ஏன்? உலகப் புகழ் பெற்ற பேனா மன்னர் என்றே சொல்லலாம்.

அ. ந. வும் தமிழில் அத்தனை சிறப்புடையவர்தான். அவரது ''மதமாற்றம்'' என்னும் நாடகம் ஒரு யுகமாற்றச் சிந்தனைச் சிறப்புடையது.

பத்து வயதில் பெற்றோரையே இழந்த மாம், பள்ளிப் படிப்பை இங்கிலாந்திலும் பட்டப்படிப்பைப் பாரிஸிலும் பெற்று விருப்பமின்றியே மருத்துவக் கல்வியைக் கற்றவர். லண்டனில் 1892இல் சென்தோமஸ் வைத்தியசாலையில் வெறுப்புடன் வேலை செய்த போதும் நோயாளிகளின் மத்தியில் தான் பெற்ற அனுபவத்தை வைத்தே ''லிஸா ஒவ் லெம்பத்'' (LIZA OF LAMBATH) என்ற அவரது முதல் நாவலையே எழுதி னார். அது, எடுத்த எடுப்பிலேயே வாசகர்கள் பாராட்டைப் பெற்றது. வைத்தியத் தொழிலைப் புறக்கணித்துவிட்டு எழுத்தாளரானார். வசதிபடைத்த குடும் பத்தில் பிறந்ததால், ஐரோப்பா முழுதும் சுற்றி அதிக அனுப

வம் பெற்றதோடு, அனுபவத்தையே எழுத்தில் வடிக்கத் தொடங்கிவிட்டார். ஐரோப்பிய மொழிகளெல்லாம் இவருக்கு வாலாயம். ''கேட்டே லினா'' (CAT-A-LINA) என்னும் நாவலை ஆங்கிலம் ஸ்பானிஷ் இரு மொழிகளிலும் எழுதிப் புகழ் பெற்றார். எண்பத்தேழாவது வயதில் மறைந்த இம்மாமேதை ''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' என்ற கோட்பாட்டை யுடையவர். இவர், உலக மனிதன் என்றெல்லாம் பாக்கிர் மாக்கார் சமர் சட் மாம் பற்றி விவரிக்கத் தொடங்கிவிட்டார். இலக்கிய ரசனையுள்ள எனக்கு சமர்சட் மாம் பற்றிக் கதைத்தது மிகச் சுவாரஸ்யமாக விருந்தது.

ஆங்கில இலக்கியத்தில் இலயித்திருந்த பாக்கிர் மாக்கா ரைத் தமிழிலக்கியப் பக்கம் திருப்பியவர் புலவர் நல்லதம்பிப் பாவலர்தான். அரசியலில் மிக உயர்ந்த நிலையை எய்திய காலத்தில்தான் மலேசியாவில் 1978 ஆம் ஆண்டு ஆறாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடந்தது. அம் மகா நாட்டில் கலந்துகொள்ள இலங்கை அரசு சார்பில் அப்துல் பாக்கிர் மாக்கார் சென்றார். அவரது இலக்கிய உணர்வுக ளுக்கு அம் மகாநாடு இலக்கியத் தீனி போட்டதெனலாம். அரசியலீடுபாடு வாசிக்கும் பழக்கத்தை இடைமறித்து நின்று விட்டதென பாக்கிர் மாக்கார் அங்கலாய்த்தார்.

இந்த விவகாரத்தை மட்டக்களப்புத் தொகுதி முன்னாள் முதல்வர், இன்று மலேசியாவின் இலங்கைத் தூதுவர் திரு. செ. இராசதுரை அவர்களும் அடிக்கடி இலக்கியக் கூட்டங்களில் கூறி அழுவார். இலங்கையில் சிலப்பதிகாரம் பற்றிய செந்தேன் பேச்சைத் தெளிவுடன் உதிர்ப்பவர்தான் திரு. செ. இராச துரையவர்கள். அரசியலில் அவர் அள்ளுண்டு போனதால் இலக்கியத் தகவல்களை அறியும் ஆழ்ந்த வாசிப்பை விட்டும் அகன்றுவிட்டார். சரளமாய் இலக்கியம் பேசும் அவர், சில வேளைகளில் இலக்கியம் பேசவே முடியாதவராகி நின்றார். அதற்குக் காரணம் அரசியல்தான். இந்த நிலை அல்ஹாஜ் பாக்கிர் மாக்காருக்கும் ஏற்பட்டதில் வியப்பில்லை. அந்த உணர்வு மீண்டும் 1978இன் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் பின், கிளர்ந்தெழுந்ததெனலாம்.

காயல்பட்டணத்தில் நடந்த மூன்றாவது இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மகாநாட்டில் கலந்து கொண்ட அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் இலக்கியம் இஸ்லாம் இரண்டும் ஒன்றாய்க்

கலந்த உவகையிலாழ்ந்து நின்றார். நான்காவது அனைத்துலக இஸ்லாமிய இலக்கிய மகாநாடு இலங்கையில் நடக்க வேண்டு மெனத் தீர்மானித்த போது, அதற்குரிய உதவிகள் அத்தனை யையும் முன்னின்று செய்யப் பக்கபலமாக நின்றார். அரசி யல் அவருக்கு உதவி நின்றது. உலக இலக்கிய வரலாற்றில் நடந்தேறிய ஒவ்வொரு மாற்றமும் அரசியலோடு இணைந்து நிற்பதை நாம் அவதானிக்கலாம். உலகில் நிகழ்ந்த சகல விஷயங்களையும் புரட்சிகளையும் மாற்றங்களையும் ஆய்வு செய்யும்போது, அரசியல் அத்தனையிலும் ஒட்டி நிற்பதை அவதானிக்க முடியும். அனைத்துலக இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி நான்காவது மகாநாடு இலங்கையில் மிக வெற்றி பெறக் காரணம் அப்துல் பாக்கிர் மாக்காரின் அரசியல் அனு சரணைதான் என்பதை மறுத்துவிட முடியாது. அது மட்டு மல்ல, அவர் இலக்கியத்தில் கொண்ட ஈடுபாடுந்தான் என்பதில் ஐயமில்லை.

இந்த உணர்வு நீதி அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் அவர்களிடமும் நிறைந்திருக்கின்றது. அவர், வெளிநாட்டமைச் சராக விருக்கும் போது, கல்வி, இலக்கியம் இரண்டையும் முன் வைத்து உயர்ந்த தகுதியுடன் ஒரு சஞ்சிகை வெளியிடும் ஆசை யுடனிருந்தார். இதுபற்றி, ஆலோசிக்க என்னையும் கலைவாதி கலீலையும் அழைத்தார். பலதடவைகளில் சந்தித்து ஆலோ சித்து அவற்றைத் தரம்பிரித்து அமுலாக்க ஆவன செய்தார். வெளிநாட்டமைச்சின் வேலைப்பழு அக்காலம் அவரில் நிறைந்து நின்றதால் இவ்விலட்சியம் கைகூடவில்லை. என்றாலும், அவ ரது அடிமனத்தில் நிறைந்து நிற்கும் அப்பணியை அவர் நிறை வேற்றுவார் என்பதில் ஒரு நம்பிக்கையுண்டு. இந்நாட்டின் முஸ்லிம் அரசியல் வாதிகளில் முன்னிற்கும் இப்பெருமகனின் வரலாறும் எழுத்தில் பதியப்படுவது மிக அவசியம்.

1979 ஜூன் 29, 30, ஜூலை முதலாந் திகதி வரை பண் டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் நடந்தேறிய அனைத்து லக இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மகாநாடு சிறப்புற நடப் பதற்கு முன்னின்று உழைத்தவர் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவர்கள்தான். இக்காலத்தே, அரசியல் ரீதியில் அவருக்கும் எனக்கும் எவ்வித தொடர்புமில்லை; அது எனது இலக்கியத்தி லும் பாதித்து நின்றது.

நானும் அம்மகாநாட்டுக்கு ஆய்வுக்கட்டுரை ஒன்றனுப்பி வைத்தேன். ''முஸ்லிம்கள் அறபு லிபி அதன் முக்கியத்துவம், எழுத்தணிக் கட்டிடக் கலை'' சம்பந்தமான ஆய்வு அது. அல்ஹாஜ் டாக்டர் எம். எம். உவைஸ் அவர்கள் கூட, அதை அனுசரித்து நின்றார். பின்பு, அதுபற்றி எதுவித தகவலுமில்லை. அதைப்பற்றி நான் கவலைப்படவுமில்லை. அவ்வாய்வின் ஒரு பகுதி இலங்கையின் மிகத் தரம் உயர்ந்த சஞ்சிகை 'இஸ்லாமிய சிந்தனை'' ஜூலை செப்டம்பர் 1985 ம் ஆண்டிதழில் வெளி வந்தது. தென்னிந்திய மக்காக் காபிர்கள் அம்மகாநாட்டில் அதிகம் இருப்பதால், அதில் ஒட்டிக்கொள்ளக்கூட நான் விரும்பவில்லை.

1979 ஜூன் 29 ஆந் திகதி, அந்த மகாநாட்டின் ''டெலிகேற்'' கூட்டத்திற்குச் சென்று கொண்டிருக்கின்றேன். பண்டாரநாயக்கா சர்வதேச மண்டப வாயிலிலுள்ள செங்கம்பளத்தில் மிதித்துச் சென்று கொண்டிருக்கும்போது, மகாநாட்டு நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தவர்களில் ஒருவர் இந்நாட்டில் இரண்டாந்தரக் கல்விப்பணிப்பாளராக எப்படியோ அரசியல் தாளம் போட்டு ஏறியவர் என்னருகே வந்து ''இக்பால் தெரியுமா? இதை ஒழுங்கு செய்யும் அரசியல்வாதிதான் உன்னுடைய ஆய்வுக்கட்டுரையைச் சேர்த்துக்கொள்ள வேண்டாம் எனக் கூறினார்'' என்றதும், எனக்குச் சிரிப்பொரு பக்கம். மிக அந்தரங்கமாகச் செய்த வேலை இது; இதை வெளியே சொல்வதென்றால் இவர்களைப்போல் ஈனப்பிறவிகளை எவ்விதம் இப்படியான இடத்திற்கெடுப்பது? வெட்டவெளிச்சமாய்க் கூறிவிட்டுச் சென்றுவிட்டேன். அங்கே இன்னுமோர் நிலதாரி - கல்விச் சேவையாளர், அவரும் ஏதோ பெரும் இரகசியத்தை வெளியிடுபவர் போல் உளறினார்.

எனது இலக்கிய நடவடிக்கைகளை மிகத் திட்டமிட்டுச் செய்பவன் நான். இந்த நாட்டில் மிக இள (32வது) வயதில் 1972 ஆம் ஆண்டு ''மறுமலர்ச்சித் தந்தை'' என்னும் எனது நூலுக்கு ஸாஹித்திய மண்டலப் பரிசு பெற்றவன் நான். இந்த வயதில் இன்று வரை எவரும் ஸாஹித்திய மண்டலப் பரிசு பெற்றதில்லை; பெறவும் முடியுமா? என்பதுவும் ஒரு சவால்தான். இதைத் திட்டமிட்டே செய்து பரிசு பெற்றேன். அதை இங்கே விரித்தால் சிலர் அவமானப் பட்டுவிடுவார்கள். இலக்கிய உலகில் மிக நேர்மையுடையோர் ஒரு சிலர்தான். அவர்களும்

அவர்களது இலக்கியங்களுந்தான் இன்றும் நின்று நிலைப்பதைக் காண்கின்றோம்.

எனது இலக்கிய முயற்சிகளின் நிலைப்பாடு பற்றிப் பலரிடமும் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவர்கள் கதைத்திருக்கின்றார். அதன்பின், இலக்கிய ஈடுபாடுகள் பற்றி அவரிடமே கதைக்கும் வாய்ப்பு ஏற்பட்டு விட்டது. உண்மையில் மேல் நாட்டு இலக்கிய ஈடுபாடு அதிகமுடையவர் இவர். இவர் ஓர் இலக்கியவாதியல்ல; நல்ல இரசிகன். அல்ஹாஜ் எம். எம். மஹ்ரூப், அ. ந. கந்தசாமி, க. கைலாசபதி, சில்லையூர் செல்வராசன், இளங்கீரன் போன்றவர்களுடன் கதைப்பதற்கும் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவர்களுடன் கதைப்பதற்கும் அனேக வித்தியாசம். முன்னவர்கள் மனித உணர்வைப்பகைப்புலமாக்கியே இலக்கியத்தை மதிப்பிடுவார்கள். அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் தான் படித்த இலக்கியத்தை மனிதர்களுடன் உரைத்துப் பார்க்க முற்படுவார். அவர், தீவிர அரசியல்வாதி என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

அனைத்துலக இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மகாநாடு இலங்கையில் அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் அனுசரணையுடன் நடந்து வெற்றி பெற்றதும் இலக்கிய உலகில் பாக்கிர் மாக்காரும் எடுபட்டுவிட்டார் எனலாம்.

சோவியத் ருஷ்யாவின் கலாசாரச் சுற்றுலாவில் கலந்து கொண்ட பாக்கிர் மாக்காரின் இலக்கியச் சிந்தனைகள் பற்றி எம். எச். எம். ஷம்ஸ் அவர்கள் கதைக்கக் கேட்டிருக்கின்றேன். அச்சுற்றுலாவில் தென்னிலங்கையின் கலாசாரக் கலைகளை சோவியத் வானொலியில் எடுத்துக்கூறி, அதற்கான ஊதியத்தை அடைந்தவர் எம். எச். எம். ஷம்ஸ். அச்சுற்றுலாவில் அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரே தலைமை வகித்துச் சென்றார் என்பதுவும் அவரது இலக்கிய உணர்வுக்குச் சான்றுதான்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் அரசியல் விரிவு முழு இலங்கையிலும் விரிந்து சர்வதேசப் பரப்பிற்கும் எட்டியுள்ளதை அவரது அரசியல் சுற்றுலாவில் அலச முடியும். இவ்விரிவின் தன்மையால் இலங்கை மக்கள் அவரை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினர். அதில், முக்கிய அம்சங்களில் ஒன்று ''ஹாஜி ஓமர் ரஸ்ட்''டின் அழைப்பு எனலாம்.

ஒழுங்குபடுத்திச் செவ்வனே நடைமுறைக்காக்க முடியாத நிலையில் ஹாஜி ஓமர் ரஸ்ட் இருந்தது. அந்த முழுக்கட்டிடத் தின் மூன்றில் இரண்டு பங்குதான் ஹாஜி ஓமர் ரஸ்ட்டாக இயங் கியது. மூன்றில் ஒரு பங்கும் சம்மாங்கோட்டுப் பள்ளிக் குரிமை உடையது. ஹாஜி ஓமர் ரஸ்ட்டின் தலைவராக அல் ஹாஜ் பாக்கிர் மாக்கார் தெரிவானார். கொழும்பு புறக் கோட்டை பிரதான வீதி 213ஆம் இலக்கத்திலுள்ள முஸ்லிம் லீக் வாலிப முன்னணிக் காரியாலயம் இருக்கும் இக் கட்டிடத்தை மூன்று பிரிவுகளாக்கி அழுக்கடைந்திருந்த அக்கட்டிடத்தைச் சுத்தம் செய்தார்கள். ஒரு பகுதியை வாடகைக்குக் கொடுத் தார்கள். அடுத்த பகுதியை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி யின் மேற்பார்வையோடு, காரியாலயத்தையும் அமைத்தார்கள். இன்னொரு பகுதியை ஹஜ்ஜுக்குச் செல்வோர் தங்குமிடமாக்கி னார்கள். இந்த ரஸ்ட் — நம்பிக்கைச் சொத்து வருமான முடையதாகத் திகழ்கின்றது. இங்கே இது பற்றி விவரிப்பதற்கு முக்கிய காரணம் ஒன்றுண்டு. இங்கிருக்கும் கூட்ட மண்டபம் பிரசித்தி பெற்றதற்குக் கார ணஸ்தர் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார்தான். இலக்கியக் கூட் டங்கள் நடத்த நகரில் இடம் எடுப்பதற்கு அதிக செலவாகும். மிக மலிவில் பெறக்கூடிய ஓர் இடம் பிரதான வீதி முஸ்லிம் லீக் வாலிப முன்னணிக் கூட்ட மண்டபந்தான். இலக்கியக் கூட்டங்களுக்கு சாதி, மதம், எதுவும் பாராது மிகக் குறைந்த வாடகை பெறும்படி கட்டளையிட்டவர் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவர்கள்தான். சில சந்தர்ப்பங்களில் பணம் பெறா மலும் கொடுத்துள்ளனர். இச்செய்தியை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் பொதுச் செயலாளர் என். எம். அமீன் அவர்களே தெரிவித்தார்.

இலக்கிய வளர்ச்சியிலும் இலக்கிய ஆர்வத்திலும் அல்ஹாஜ் பாக்கிர் மாக்காருக்கு அதிக அக்கறை இருந்துள்ளமைக்கு மேற் கூறிய சம்பவங்களே எடுத்துக்காட்டாகும். அவரது பாட்ட னார் அலியா மரைக்கார் ஒரு புலவர். அவர் இயற்றிய பாடல் களின் தொகுப்புக்களையும் கையெழுத்துப் பிரதிகளையும் அல் ஹாஜ் கலாநிதி எம். எம். உவைஸ், அல்ஹாஜ் எஸ். எம். கமால் தீன் ஆகியோர் பெற்றுச் சென்றார்கள் என்ற செய்தியையும் அவர் கூறினார். அவர்களது ஆராய்ச்சிகளுக்கு அவை மிகப் பயன்படும் என்பதைத்தவிர என்னால் என்ன கூறமுடியும்? இம்முது பொக்கிஷங்களைச் சேர்த்துப் பாதுகாத்தவர் அல்

ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவர்கள்தான். ''பயன்பட்டால் பறவாயில்லை; அவை தொலைந்துவிட்டால் துன்பமே'' என்று கூறுவதிலிருந்து இலக்கியத்தை நேசிக்கும் இயல்பு வெளிப்படு கின்றதல்லவா?

இலக்கிய ஆக்கத்தைச் சிருஷ்டிக்கும் இயல்பு அல் ஹாஜ் பாக்கிர் மாக்காரிடம் இல்லாவிட்டாலும், இலக்கிய சிருஷ்டி களை ஆழமாக நேசிக்கும் திறனாய்வுப்புலன் அவரிடம் நிறைந்து நிற்கின்றது. இலக்கியம் பற்றிக் கூறும் பற்றிலக்கிய வாதியாக வும் அவர் இருக்கின்றார். அத்துடன், இலக்கிய ஆய்வுகளிலும் தொட்டு நிற்கின்றார். அவர், இவ்வழிகளில் இன்னும் உயர்ந்து நின்றிருக்க வேண்டும். அரசியல் அவரை இவ்வழியிலிருந்தும் திசை திருப்பிவிட்டது. இப்பொழுது அனுபவ முதிர்ச்சியில் மனித உணர்வின் மூன்றாம் படியில் நின்று கொண்டு இலக்கி யத்தை அதிகம் அணைத்து நிற்க முயல்கின்றார். அவரது பண்புயர்வுக்கு இலக்கியந்தான் வழிவகுத்திருப்பதென்பது எனது துணிவு. இலக்கியம், மனிதனை இணைத்து வைக்கும் இணைப் புப் பாலம். மனிதனை உற்றுப் பார்த்து உணரச் செய்யும் பூதக்கண்ணாடி. இந்தப் பாதைதான் என்னையும் அப்துல் பாக்கிர் மாக்காரையும் இணைத்து நின்றதெனலாம். அவரை நான் இலக்கியத்தினூடாகவே உற்றுநோக்கி நிற்கின்றேன்.

# பூமியுள் பதிந்த அத்திவாரம். 11

அத்திவாரம் இருளில்
அதன் மேலுயர்ந்த
அடுக்கு மாளிகை
வெளிச்சப் பூக்கள்
காய்த்துக் கனிந்தன!
மேலுயர்த்திய
அத்திவாரத்தை
மேலிருப்பவர்
காண்ப தெப்படி?
அத்திவாரம் இருளில்......
சுழன்றடிக்கும் காற்றாடி
சுழற்சிப் பிரதி பலிப்பென்ன?
அழற்சி நீக்கும் காற்றோட்டம்
அமைதி கொண்டு வரும் தூக்கம்
காற்றாடியில் தூசுப் படலம்
காற்றோ அதனைத் துடைக்காது!
அத்திவாரம் இருளில்............
விரலுக் கேற்ற வீக்கம்
உரலுக் கேற்ப எதிர்
பார்ப்ப தெப்படி?
அத்திவாரம் இருளில்............

உலக நாகரீகத்தை வரலாறுதான் உணர்த்தி நிற்கின்றது. வரலாற்றை அறியாத கல்வி வளமுடையதல்ல. உலகில் தோன்றிய முதல் மனிதன் தொடக்கம், அவனால் பெருகிய சமுதாயங்களின் வரலாற்றுத் தடங்கள் உலகெலாம் ஒட்டி நிற்கின்றன. இத்தொன்மையை எவரெவர் பதித்து வைத்தாலும், அல்குர்ஆன் மட்டுந்தான் அழகுடன் கூறுகின்றதெனலாம்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் என்னும் தனி மனிதனின் வரலாற்றை நான் சித்திரிக்கவில்லை. ஒரு கால கட்டத்தின் வரலாற்றுள் அவர் சிக்கிக் கொண்டார். இச்சிக்கலின் முடிச்சு களைப் பிரித்துப் பார்க்கும் ஆற்றல் ஒரு பரம்பரை (Generation) க்குத் தெரியாது. எனவேதான், அடுத்தடுத்த பரம் பரை உணர்ந்து கொள்ள இவையெல்லாம் பதிவில் அடங்கி யிருக்க வேண்டும்.

உள்ளூராட்சியில் தனது தனித்துவச் சேவையாற்றலைத் தொடங்கிய அப்துல் பாக்கிர் மாக்கார் அவர்கள் பாராளுமன் றத்துள் நுழைந்துவிட்டார்கள்.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் 1960 ஜூன் வரையும் 1965 ஜூலை தொடக்கம் 1970 மே வரையும் 1977 மே தொடக்கம் 1988 ஒக்டோபர் வரையும் அப்துல் பாக்கிர் மாக் கார் அவர்கள் பாராளுமன்றத்தின் வேர்வலைத் தொகுதிப் பிரதிநிதியாக இருந்து அருந்தொண்டாற்றினார். அவரது தொண்டுகளையும், தொண்டுகளில் விட்ட நண்டுப்பிடிகளையும் தரம் பிரித்தும் தரம் குறைத்தும் தரம் உயர்த்தியும் பார்த்து விட்டோம்.

1977 இல் அவர் பாராளுமன்ற அங்கத்தவராக மட்டுமல்ல, பிரதிச் சபாநாயகராகவும் இருந்து சேவைகள் புரிந்தார். 1978 ஆம் ஆண்டு தொடக்கம் 1983 ஆம் ஆண்டு வரை அவர் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். அவரது சபாநாய கர் சேவை நாடறிந்தது. அப்பதவியை வைத்து அவராற்றிய வைகளை நாம் ஆய்ந்தோய்ந்தோம். அவரது, உந்நதநிலையை யும் மெச்சி நின்றோம். அவர் உயர் மட்டத்தில் நின்றாலும், மற்றவர்களின் பொறாமைப் பொச்சரிப்பில் அவர் சிக்குண்ட கதைகள் மிக மிகப் பெரியன.

ஓர் அறாபியப் பழமொழியை அவர் அடிக்கடி கூறுவார்.

"He knows not and knows not that he knows not
He knows not but he knows that he knows not
He knows but he knows not that he knows
He knows and knows that he knows"

"அவனுக்குத் தெரியாது; அது, அவனுக்குத் தெரியா
தென்பது தெரியாது.

அவனுக்குத் தெரியாது; ஆனால், அவனுக்குத் தெரியா
தென்பது தெரியும்.

அவனுக்குத் தெரியும்; ஆனால், அது அவனுக்குத் தெரியும்
என்பது தெரியாது.

அவனுக்குத் தெரியும்; அது, அவனுக்குத் தெரியும்
என்பது தெரியும்''

''அவனுக்குத் தெரியா தென்பது தெரியாது'' என்ற நிலையிலுள்ள மனிதன் படுமுட்டாள்; ''அவனுக்குத் தெரியா தென்பது தெரியும்'' என்ற நிலையிலுள்ளவன் உண்மையில் சாதாரண ஒரு மனிதன். இவன் கற்றுக் கொள்ள முடிந்தவன். அது மட்டுமல்ல கற்பிக்கக் கூடியவனுந்தான். ''அவனுக்குத் தெரியும் என்பது தெரியாதென்ற நிலையிலுள்ளவன் மனிதர்களில் பதர்தான். எல்லாம் அறிந்தும், படித்துப் புத்தக மூட்டைகளைச் சுமந்தும், பரீட்சைகள் பலவற்றைச் சித்தியடைந்தும் பயனில்லாதவன். இக்கூட்டம் சாதாரண மனிதர்கள் மத்தியில் மட்டுமல்ல, நிர்வாகத் துறைகளில் இருந்து கொண்டும் நாட்டையும், காலத்தையும் வீணாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். ''அவனுக்குத் தெரியும் என்பது தெரிந்தவன்'' மேதை. இவனால்தான், உலகம் உய்கின்றது. இந்நான்கு மனிதர்களின் கூட்டுத்தான் உலகம். இந்நான்கு மனிதர்களின் மத்தியில் தலைவரானவர்தான் அப்துல் பாக்கிர் மாக்கார். இந்நான்கு வகை மனிதர்களின் நன்மை தீமைகளில் அவருக்கு அக்கறை அதிகம். அதனால், மனிதர்களின் இப்பிரிவுகளை நோக்கி வேறுபடுத்தி அவர் நிற்கவில்லை. இந்நால்வகை மனிதர்களோ அவரவர் தன்மைகளையும் குண வேறுபாடுகளையும் காட்டி நின்றனர்.

அவனுக்குத் தெரியா தென்பது தெரியாத மனிதன் அவனது பணத்தை, உடற் பலத்தை வைத்துத் தன்னையே உயர்த்திக் கொள்வான். ஒரு மாமேதை மிகச் சிந்தனையூட்டும் விஷயமொன்றைப் பேசிக் கொண்டிருக்கும்போதே ''எனக்குத் தெரியுமே! இவர் இதைத்தான் பேசுவார்'' என்று மக்குத்தனமாக உளறுவான். இப்படு முட்டாள்களுக்கு இலங்கையின் விகிதாசார அரசியல் யாப்பில் ஒரு நப்பாசை. எப்படியோ, அரசியல் மேதாவிகளைப் பிடித்து, ஒரு பிரதிநிதியைத் தள்ளிவிட்டு எனக்குப் பாராளுமன்றம் போக முடியாதா? என்று கனவு காண்பார்கள். இந்த மூர்க்கத்தனத்தை மூலதனமாக

உரைசி அப்துல் பாக்கிர் மாக்காரைப் பாராளுமன்றத்திலிருந்து அகற்ற முடியாதா? என்று பகற்கனவு கண்ட கூட்டமொன் றும் இக்கால கட்டத்தில் உலவியது.

1983 ஆம் வருடம் ஜூலைக் குழப்பம் இலங்கையை மிக இடரச் செய்தது. இந்நாட்டின் ஒரே இன மக்கள் மொழி, மத வெறி பிடித்தாடினர். இவ்வெறிக்குக் காரணம்: முதலா ளித்துவம்தான். முதலாளித்துவம் என்றால், என்னை ஒரு (Red Light) சிவப்பு வெளிச்சம் போட்டுப் பார்க்க சிலர் எத்த னிப்பார்கள். விஷயம் அப்படியல்ல. முதலாளி, பணக்காரன் என்பதுவும், முதலாளித்துவ சிந்தனை என்பதுவும் வெவ்வேறு வகையானவை.

ஒரு கிறிஸ்தவப்பணக்கார நாட்டின் மயான பூமியை ஆயு தக் காவலுடன் ஒருவன் காவல் காத்து வந்தான். அங்கு, அடக்கம் செய்யும் சவங்கள் பலகோடி ''டொலர்'' பெறுமதி வாய்ந்த ஆடை அணிகலன்களுடன் புதைகுழிக்குள் அடங்கும்.

காவல்காரனை ஒரு கைதேர்ந்த கள்ளன் அணுகினான். இரவோடிரவாக சவங்களை அலங்கரிக்கும் ஆடை அணிகலன் களைக் களவு செய்வோம்; விற்றுப் பெறுவதில் இருவருக்கும் பங்கு எனப் பேரம் பேசி இணங்கச் செய்துவிட்டான். ஒப்பந் தம் மிக ஒற்றுமையுடன் நடந்துவிட்டது.

களவெடுக்கும் பொருட்களை மிகக் குறைந்த விலையில் விற்றனர். வாங்கியவன் நாளுக்கு நாள் பணத்தால் ஏறிக் கோடீஸ்வரனானான்.

களவுப் பொருள்களை வாங்கிக் கனவானான கோடீஸ்வர னின் மனைவி ஒரு நாள் மரித்துவிட்டாள். அவரும், தனது அன்பு மனைவிக்கு ஐந்து இலட்சம் டொலர் பெறுமதி வாய்ந்த ஆடை அணிகலன்களிட்டு அடக்கம் செய்துவிட்டார். மறு நாள் காலை அவர் வாங்கி அணிவித்த பொருட்கள் அவர் கடைக்கே வந்தன.

அவர் முகம் சிவந்தது. கண்கள் தீப்பற்றின. உடலெல் லாம் துடிதுடித்தது. ''ராஸ்கல்! இவனைச் சும்மா விடக் கூடாது. எனது அன்புக்கும் ஆசைக்கும் இச்சைக்கும் இணக்க மான என் அன்பு மனைவி இப்போது அப்பெட்டிக்குள் நிர்வாண மாக வல்லவா இருப்பாள்: இவனைப் பொலிஸில் ஒப்படைத்து

விட வேண்டும். அப்பொழுதுதான் இக் கயவர்களுக்குச் சரியான பாடம் புகட்டலாம். என்றெல்லாம் வயிறெரிய மனம் குமுற எண்ணினார். இவ்வளவு எரிச்சல் பட்டவர் சொற்ப வேளைக்குப்பின் தணிந்துவிட்டார். ''இவனை நாம் போலிஸில் பிடித்துக் கொடுத்துவிடலாம்! பின்பு, நமது வியாபாரம் இன்றுடன் ஒழிந்து விடுமே!'' என்ற எண்ணம் பளிச்சிட்டதும் எல்லாவற்றையும் உடனே மறந்து வந்த பொருள்களை மிக மலிவாக வாங்கிக் கொண்டார்.

முதலாவதாக அப்பொருள்களைக் கண்டதும் அவர் சிந்தித்தாரே! குமுறினாரே அதுதான் மனித குணம்; மனித நீதி. இரண்டாவதாக எல்லாவற்றையும் மறந்தாரே! அதுதான் முதலாளித்துவப் பணக்காரச் சிந்தனை; பண நீதி.

ஸஹாபாக்களில் — நாயகத் தோழர்களில் பலர் பணக்காரர்கள்தான். உத்மான் (றழி), அபூபக்கர் (றழி), அம்ரிப்னு ஆஸ் (றழி) இவ்விதம் எண்ணிக்கொண்டு செல்லலாம். அவர்கள் முதலாளித்துவ வாதிகளல்ல. அவர்களது பணம் மனித சமூகத்திற்குப் பயன்பட்டது.

இங்கே, முதலாளித்துவம் மனித சமூகத்தைத் துவம்சம் செய்ய எத்தனித்தது. இதுதான், 83 ஆம் ஆண்டு ஜுலையில் இலங்கையில் நடந்ததெனலாம். மத, மொழியில் அதிக தொகைப்பட்டோர், மத, மொழியில் தொகை குறைந்தோரை ஆக்கிரமித்து, அவர்களது செல்வங்களைச் சூறையாட எத்தனித்த மயான பூமிக் களவுதான் 83 ஜுலையில் ஆரம்பித்தது. அல்லாஹ் அட்டகாசம் செய்வோரை அனுமதிக்கமாட்டான் என்பதற்கும் அக்கலவரம் ஒரு சாட்சிதான்.

அப்துல் பாக்கிர் மாக்கார் ஒரு முஸ்லிமாக இருப்பதால் இந்நாட்டில் சபாநாயகர் என்னும் முக்கிய பதவி வகிக்கலாமா? என்னும் ஒரு துவேசக் கேள்வி இக்காலந்தான் எழுந்து நின்றது. இப்பின்னணி அவ்விதந்தான் சித்திரிக்கப்பட்டது. இதற்கு முஸ்லிம்கள் சிலரும் தூபமிட்ட சங்கதி பின்னெழுந்தது.

நாட்டின் நிலைமை, பாராளுமன்றப் பிரதிநிதிகள் பலரின் மனப்போக்கு, கற்பனா வாதம், உலகில் கறை படிந்து நிற்கும் நமது அரசியல் எல்லாம் கலங்கி நின்ற காலத்தில்தான் ஜனாதிபதி சபாநாயகரை இராஜினாமாச் செய்யும்படி வேண்டினார்.

''எல்லோரும் நினைத்தார்கள் சபாநாயகர் இராஜினாமாச் செய்யமாட்டார்'' என்று. பாராளுமன்றப் பிரதிநிதிகளிடமெல்லாம் ஜனாதிபதி இராஜினாமாக் கடிதங்கள் வாங்கி வைத்திருந்த காலமது. அக்காலத்தே, சபாநாயகர் இராஜினாமாக் கடிதம் கொடுத்திருக்கவில்லை.

கால தாமதமிருந்தும், ஜனாதிபதி உடனே என்று கூறாமலிருந்தும் எவ்வித தங்குதடையுமின்றி இப்பதவி போகப்போகின்றதே என்ற எக்கவலையுமற்று இராஜினாமாக் கடிதத்தை சில மணித்தியாலங்களுக்குள் எழுதி உடனே சமர்ப்பித்துவிட்டார். சபாநாயகர் பதவியைக் கொடுத்தது 'பாராளுமன்றம்' என்னும் சபைதான். அதை நீக்கும் உரிமையும் சபைக்கே உண்டு. அப்படியிருந்தும், சபாநாயகர் பாக்கிர் மாக்கார் பதவியாசை பிடித்திராமல் உடனே இராஜினாமாச் செய்தது ஓர் அதிர்ச்சியான விஷயம்தான். பாக்கிர் மாக்காரின் சபாநாயகர் பதவி பறந்தது! இவ்விஷயம் வெளிவந்தவுடன் காலக்கெடு கொடுத்தும் காலதாமதமின்றி இராஜினாமாக் கடிதத்தை கொடுத்தமை அரசியல்வாதிகளையும் அதிரச் செய்த செய்திதான். நான்கு வித மனிதர்களும் நான்குவிதமாகச் சிந்தித்தனர். படுமுட்டாள், சாதாரண மனிதன், மனிதப்பதர், மேதை இவர்களது கூக்குரல்கள் வானளாவி வளர்ந்தொலித்தன.

''இந்த மனிதர் பதவி ஆசை பிடித்தவர். சபாநாயகர் பதவியைத் துறக்கும்போது, பாரராளுமன்ற அங்கத்தவர் பதவியைத் தூக்கி எறிந்திருக்கலாம். நாட்டில், சமூகத்தில் எவ்வளவு மதிப்பு ஏறியிருக்கும். கட்சியில் ஒட்டிக்கொண்டிருக்கின்றாரே'' என்றெல்லாம் மனித நாக்கு வளைந்து கதைத்தது. இவ்விதம் எங்கு பார்த்தாலும் கதைதான்.

இவர், பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் துறப்பார்; ''ஸிட்'' எம். பி. யாக நாம் வரலாம் என்று எத்தனை பேர் எண்ணினார்களோ தெரியாது. அந்த நீரோட்டத்திலும் தட்டுத்தடுமாறியவர் பலர். இது, முதலாளித்துவச் சிந்தனைப் போக்கு. பணத்தை வைத்து எதையும் சாதிக்கலாம் என்ற இறுமாப்பு. பணம், அரசியல் செல்வாக்கு யாவும் செல்லாக்காசாகி நின்ற வரலாறுகளை நாம் எளிதில் மறந்துவிடக்கூடாது. இவ்வரலாற்றுச் சம்பவங்கள் நமது நாட்டிலும் நடந்தேறியவைதான்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார், சபாநாயகர் பதவி துறந்த காலம் நானுந்தான் அதிர்ச்சியடைந்தேன். அவரது பக்கம் சார்ந்தவனல்ல நான். ஆனால், அதற்காக மனமகிழ்ச்சி கொள்ளவில்லை. அப்படிக்கொள்வதற்கு மனச்சாட்சி இடம் தரவில்லை. அவரைச் சார்ந்தோர் கதைக்கும் கதைகளைக் கேட்டு வெறுப்படைந்து நின்றேன். ''இவர் பாராளுமன்றப் பதவி துறந்திருக்க வேண்டும்'' என்ற கூக்குரல் வெறுப்புக்குரிய தாகத்தான் எனக்குப்பட்டது.

தற்செயலாக உண்மையில் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் பாராளுமன்றப் பதவியையும் இராஜினாமாச் செய்திருந்தால், இதே கூக்குரல் இடும் கூட்டம் என்ன சொல்லும் தெரியுமா?

மடையன்: விகிதாசாரப் பிரதிநிதித்துவம் சட்டமாகியுள்ள இக்காலத்தில் வீணாக இராஜினாமாச் செய்துவிட்டாரே! முன் பென்றால் பறவாயில்லை; எதிர்க்கட்சியின் பின்னாசனத்திலா வது சென்றிருந்திருக்கலாம். அனுபவமிருந்தும், அறிவைப் பாவிக்க முடியாமல் தத்தளித்து விட்டாரே! இவரும் ஒரு சட்ட வல்லுனர்!'' என்று எள்ளி நகையாடுவர். உலகின் மனித கூட் டம் நான்கு பிரிவல்லவா? மீண்டும் அந்த அறபியப் பழ மொழியே சிந்தனைக்குட்படுகின்றது.

இந்த விஷயங்களை அலசும்போதுதான், அல்ஹாஜ் பாக் கிர் மாக்காரின் அறிவு நுணுக்கம் மட்டுமல்ல, அவரது தனித் துவமும் தெளிவாகின்றது. இதனால்தான், நான் இவரை அணுகி ஆய்வு செய்ய நினைத்தேன்; முயன்றேன்.

திரு எம். டி. எச். ஜெயவர்த்தனா, திரு டட்லி சேனநா யகா, திரு விக்ரமசிங்க (றணிலுடைய தந்தையார்) போன்ற பொறுமைக்குணமுடைய விரிந்த மனமுடைய அரசியல்வாதி களின் போக்குடையவர்தான் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவர்கள். எனவேதான், எதையும் நிதானமாகச் செய்யும் இயல்புத் திறமையை உள்ளடக்கி நின்றார்.

சபாநாயகர் பதவியின் அகத்தோற்றமும் இப்பொழுது எல்லோருக்கும் விளங்கியிருக்கும். சபாநாயகர் பதவியை அவர் விட்டு விலகினாலும் பாராளுமன்றம் அவரை நேசித்தது. அன் றைய ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தன அவர்கள் கூட, அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரை மதித்துத் தானிருந்தார். அதன் பயன்பாடுதான் இலாகா இல்லாத அமைச்சர் பதவியைக்

கொடுக்க வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டதெனலாம். 1983 ஆம் ஆண்டு தொடக்கம் 1988 ஆம் ஆண்டு ஜூன் வரை அல் ஹாஜ் அப்துல் பாக்கிர் மாக்கார் இலாகா இல்லாத அமைச்சர் பதவியில் ஒட்டியிருந்தார்.

ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள் கழுத்தில் தொங்கிய பல மந்திரி மணிகளில் ஒன்றை அப்துல் பாக்கிர் மாக்காருக்கு அணிவித்திருக்கலாம். அப்துல் பாக்கிர் மாக்காரும் அவரை அண்மி நின்று அவற்றிலொன்றை அபகரித்துக் கொள்ள ஆலவட்டம் பிடித்திருக்கலாம். அந்த அரசியல் அழுக்கு அவரில் தோய்ந்திருக்கவில்லை. அதனால், பாராளுமன்ற ஜனநாயக அமைப்பில் கம்பீரமாகத் தோற்றமளித்துக்கொண்டிருந்தார். இன்றும் அக் கம்பீரமே அவரை உயர்த்தி நிற்கின்றது எனவும் துணியலாம். ஜனநாயக உரிமையின்படி, ஜனாதிபதி அளித்த வாக்கொன்று நிறைவேறவில்லை என்ற சங்கதியைக் கூடப் பாராளுமன்றத்தில் கூறி நிற்க அவர் பின்னிற்கவில்லை. அந்தளவு ஜனநாயக நம்பிக்கை அவரில் ஊறி நிற்கின்றதென்பதை யாரும் மறுத்திட மாட்டார்கள்.

அப்துல் பாக்கிர் மாக்கார் தன்னோடு உறவாடும் எல்லோரினதும் குணநலன்களையும் குறுகிய காலத்துள் அளந்தறியும் ஆற்றல் பெற்றவர். எவரெவர் அவரை ஏமாற்ற எத்தனித்தனரோ அவரவர் அவரவர்களையே ஏமாற்றிக் கொண்டனர் என்பதற்கு அளவற்ற ஆதாரங்களும் அழகிய அழுக்கான கதைகளும் நிறைய உள்ளன. இவையெல்லாம்-அரசியலில் நடக்கும் அழுகுத் தாளங்களும், அபிநயங்களும்தான். அவற்றைப் பெரிதுபடுத்த வேண்டிய அவசியமில்லையென்பதை அவரே கூறுகின்றார். அவரிடம் கூடி நிற்கும் சிலர் ஒரே குரலில் நிறையப் பேசுவார்கள். கூடி நிற்போர் பிரிந்தபோது ஒருவரைப் பற்றியொருவர் குறை கூறிக் குழிபறிக்க முற்படுவதுமுண்டு. இவற்றை அதிகமாக அவரைச் சுற்றி நிற்கும் கற்றவர்களிடம் காணமுடிகின்றன என்பதில் துக்கப்படவேண்டிய நிலை ஏற்படுகின்றதல்லவா?

இலாகா இல்லாத அமைச்சுப் பொறுப்பை அப்துல் பாக்கிர் மாக்கார் கைஏற்றதும், அரசாங்க அலுவலகமொன்றை அமைத்துக் காரியமாற்ற முனையவில்லை. தனது, உத்தியோக வாசஸ்தலத்திலேயே காரியாலயத்தை அமைத்துச் சேவை செய்தார். இக்காலம் சுதந்திரமாகத் தனது தொகுதி மக்களையும் இலங்கை

மக்களையும் சந்தித்துப் பேசும் வாய்ப்பும் ஓய்வும் அவருக்கு நிறைய இருந்தன. அவற்றை நன்கு பயன்படுத்திச் செயற்பட்டார். இலாகா இல்லாத மந்திரிப் பதவி பாராளுமன்ற வரலாற்றில் பதியப்பட்டதொன்று. அவ்வரலாற்றுப் பதிவில் அப்துல் பாக்கிர் மாக்காரும் இடம் பெற்றமை சிறப்பானதென்றே கூறலாம்.

இந்நாட்டின் முந்நாள் நிதித் திட்டமிடல் அமைச்சர் திரு றொணி டி மெல் அவர்கள் 1984 மார்ச் 23 ஆந் திகதி பாராளுமன்றத்தில் பேசிய பேச்சைப் பாராளுமன்ற ஹன்ஸார்ட் அறிக்கையே கூறுகின்றது. அதையும், இங்கே பதிவது சிறப்பென எண்ணுகின்றேன்.

''நான் இந்த விவாதத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை. எனினும், அத்தனகல்லை கௌரவ அங்கத்தவர் வெளியிட்ட சில கருத்துக்களைப் பற்றி எனது கருத்துக்களை எடுத்துக்கூறுவது எனது கடமையென எண்ணுகின்றேன். அந்த கௌரவ அங்கத்தவர் இந்த நாட்டில் பல்வேறு அரசாங்கங்களிலும் இலாகாப் பொறுப்பற்ற அமைச்சர்கள் இடம் பெற்றிருந்தமையினை அறிவார். ஜனநாயக அரசியல் யாப்புக்கள் நடைமுறையிலுள்ள உலகின் பல நாடுகளில் இது, சாதாரணமாகப் பின்பற்றும் ஒரு சம்பிரதாயமாகும். இது, புதிய ஒன்றோ, புதுமையான ஒன்றோ அல்ல. சுதந்திரத்தின் பின் ஏ. ஈ. குணசிங்கா அவர்கள் எமது நாட்டில் முதலாவது இலாகாப் பொறுப்பற்ற அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர், எமது நாட்டில் கௌரவமிக்க ஒரு தொழிலாளர் தலைவர். எமது கௌரவ பிரதம மந்திரி (தற்போதைய ஜனாதிபதி) அவர்களின் அரசியல் ஆசானும் ஆவார். அது மாத்திரமல்ல, இலங்கை மக்களுக்கு சர்வசன வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்று முன்னோடியாக உழைத்துப் போராடிய ஒரு தலைவர். அவர், ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் பல ஆண்டுகள் இலாகாப் பொறுப்பற்ற அமைச்சராகப் பணியாற்றியுள்ளார்.

அதன்பின், பண்டாரநாயகா அவர்களின் நெருங்கிய நண்பரான ஜீம் முனசிங்க அவர்களும் இலாகாப் பொறுப்பற்ற அமைச்சராக பண்டாரநாயகா அரசாங்கத்தில் செயற்பட்டார். எனவே, இதை நான் புதிய ஒன்றென நினைக்கவில்லை.

பெரும்பாலும், பரீட்சார்த்தமான ஒன்றாகவும், புதுமையான ஒன்றாகவும் நினைக்க இதில் இடமில்லை.

''மாண்புமிக்க ஜனாதிபதி அவர்கள் இலாகாப் பொறுப் பற்ற அமைச்சொன்றை ஏற்படுத்த முடிவு செய்து அந்த அமைச்சுக்கு இந்தச் சபையிலே உள்ள மிகவுயர்ந்த ஒருவரை அதாவது பாக்கிர் மாக்கார் அவர்களை நியமித்துள்ளார். எமது நாட்டில் பொதுப் பணியிலே மிக உந்நதமான சேவை யாற்றியவர் என்ற வகையில் மிகச் சிறப்பான சாதனைகள் அவரிடம் உண்டு. அவர், தனது தொகுதியில் ஒரு சில பணக் காரர்களின் அதிகாரத்துக்கு எதிராக எழுந்து நின்று செயற் பட்டு வருகின்ற முறையினை நான் தனிப்பட்ட வகையில் மிகவும் தெளிவாக அறிந்து கொண்டுள்ளேன்.

''நான் உறுதியாகக் கூறுவது என்னவென்றால், அவர் தனது தொகுதியில் எந்தச் சக்திகளுக்கும் பெரும் அதிகார வர்க்கத்துக்கும் அடிமைப்படுத்த முடியாத வீர புருஷர். இது, தனிப்பட்ட வகையில் கூறும் எனது கருத்தல்ல. இதுவரை இந்தச் சபையில் சமூகமளித்த உயர் பதவிகளைப் பெற்ற பிரதி நிதிகளில் ஒருவரே அவர். மதவாச்சித் தொகுதியின் கௌரவ அங்கத்தவர் அவர்களைப் போலவே இவரும் இருபது வருடங் கள் இந்தச் சபையில் உறுப்பினராகப் பதவி வகித்துள்ளார். இந்தச் சபையின் சபாநாயகர் என்ற வகையில் அவர் அளப் பரிய சேவையினை ஆற்றியுள்ளார்.''

இந்தப் பேச்சில் பல உண்மைகள் தொனித்து நிற்கின்றன. முக்கியமானதொன்று களுத்துறை மாவட்டத்தில், ஏன் மேல் மாகாணத்தில் அப்துல் பாக்கிர் மாக்கார் தனது பெயரை நிலைநாட்டித்தான் வைத்திருக்கின்றார். அவர், எந்தவொரு பொம்மையைக் காட்டி ''இவரைத் தெரிவு செய்யுங்கள்'' என் றால், மக்கள் அவரது தொனிக்கு மதிப்பளிப்பார்கள். அதற் கோர் உதாரணம்: தற்போது மேல்மாகாண சபையில் அங்கத் துவத்துடன் அமைச்சர் பதவி வகிக்கும் திரு ஏ. எம். யூஸுப், அப்துல் பாக்கிர் மாக்காரின் தெரிவுக்குரியவர். அவரைத் தேர் தலில் போட்டியிட வைத்து, பாக்கிர் மாக்காரின் ஆள் என்ற நிறத்தையும் பூசினார். மக்கள் உடனே பாக்கிர் மாக்காரின் பணிப்புக்குச் செவிசாய்த்தனர். சமூக சம்மத ரீதியில் முஸ்லிம் கள் மத்தியில் இந்த வேட்பாளர் மதிப்புடையவர் என்று சொல்வதற்கில்லை. ஆனால், அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின்

நாவசைவு அவருக்கு வெற்றியைக் கொடுத்தது. இத்தனித்துவத்தை இன்றும் பாக்கிர் மாக்கார் காப்பாற்றி வருகின்றார் எனத் துணியலாம்.

இலாகா இல்லாத மந்திரிப் பதவி சில வேளைகளில் அப்துல் பாக்கிர் மாக்காருக்கு நிறைவைக் கொடுத்ததா? என்பதில் எனக்கும் சந்தேகம்தான். ஜனநாயகத்தின் வலுவான பற்றால் மன நிறைவு செய்து கொண்டார்.

இக்காலத்தேதான், கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் ஆளுனர் பதவியும் அவரைத் தேடிவந்தது. அது ஒரு பெரும் தலையிடி. இதனை அவரே ஒப்புக்கொள்வார்.

மருதானைப் பள்ளிப் பரிபாலன சபை, பழைய மாணவர்கள் சங்கம், நலன் விரும்பிகள் யாவரும் ஒன்றுசேர்ந்து முதன் முதலாக அல்ஹாஜ் அப்துல் பாக்கிர் மாக்கார் அவர்களை ஆளுனர்கள் சபைத் தலைவராக்கினார்கள். நிர்வாகம் சம்பந்தமாக அவருக்குச் சில முரண்பாடுகள் தோன்றின. அதனால், அப்பதவியை விட்டு விலகிக் கொண்டார். ஸாஹிறாவின் உயர்வில் இப்பொழுதும் அதிக அக்கறை கொள்ளும் அவர், அதன் விதிப்பயனை எண்ணி வியந்து நிற்கின்றார். எதிர்காலச் சந்ததியினர், அதன் வரலாற்றுண்மையை அறிந்து வளம்படுத்த வேண்டும் என இக்காலத்தே வேண்டி நிற்கின்றார். எது எப்படி நடந்தாலும், கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியை அரசாங்கத்திடமிருந்து பறித்த கூட்டத்தில் அப்துல் பாக்கிர் மாக்காரும் ஒருவர்தான். என்னைப் பொறுத்தளவில் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத், அறிஞர் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களது மனப்போக்கின்படி அரசாங்க நிர்வாகத்தில் ஸாஹிறா இருந்திருந்தால், ஓர் ஆனந்தா, ஒரு றோயல், ஒரு நாளந்தா போல், உயர்ந்து நின்றுதானிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

காலம் முடிந்துவிடவில்லை. கட்டியெழுப்பி வரலாற்றைப் படைக்க எதிர்காலச் சந்ததியினர் ஒன்று திரளுதல் அவசியம்.

இலாகா இல்லாத மந்திரி அப்துல் பாக்கிர் மாக்கார், கொழும்பு ஸாஹிறாவின் ஆளுனராக அமர்ந்த அனுபவமோ என்னவோ, 1988 ஆம் வருடம் ஜூலை முதலாந் திகதி தென் மாகாண சபையின் ஆளுனராகத் தெரிவானார்.

பாராளுமன்றத்தின் பதவிக்காலம் இத்துடன் முடிவு பெற்று விட்டது. ஆனால், ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுனர் பதவி அவரை அரவணைத்து இன்றும் நிற்கின்றது. ஒரு மாகாணத்தின் செயற்பாடு, பாதுகாப்பு, வேலைகளைத் துரிதப்படுத்தல் என்பன போன்ற பொறுப்புக்களை அடக்கிய பதவி தான் ஆளுனர் பதவி. ஜனாதிபதியின் பிரதிநிதித்துவப் பொறுப்பு இதனுள் அடங்கி நிற்கின்றது.

உண்மையில் மனித உணர்வுகளின் முதிர்வுடைய பருவத்தில் இப்பதவி இவருக்குத் தகுதியுடையதுதான். நாட்டின் நலம், நாட்டின் கௌரவம், நாட்டின் சிந்தனை என்பனவற்றை ஒழுங்கு படுத்தும் உந்நத தகைமைக்குப் பொறுப்பான ஒருவர் தென்மாகாணத்தின் ஆளுனராக அமர்த்தப்பட்டிருக்கின்றார். அவரின் நற்சிந்தனைகள் இப்பகுதியின் அபிவிருத்திக்கு அதிகம் உதவும். அவர் ஆளும் பகுதியும், அவரது ஆளுமைக்குதவும் அங்கத்தவர்களும் தென்மாகாணத்தை நிச்சயம் அபிவிருத்திக் குள்ளாக்குவார்கள் என்பது ஆளுனரின் அஹிம்சைப் போக்கால் அறிந்து கொள்ள முடிகின்றது.

# வான் விரித்த சிறகுகள். 12

வானக் குடையின் காலடியில்
வளமா யுலகம் உறங்கியது
காணும் காட்சிப் பரப்பினுள்ளே
கண்ட இடங்கள் சென்று வந்தேன்!
ஊனும் உயிரும் உருப் பெறவே
உழைத்தே மக்கள் நிதமுயர
நானும் நினைத்தேன் இனிமையினுள்
நாளும் தோய்ந்து நலம் பெறவே!

*''வானங்கள் பூமிகளின் நிர்வாக அமைப்பைக் குறித்து இவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லையா?'' (அல்குர்ஆன் 7:185)*

*''நீங்கள் பூமியில் சுற்றித் திரிந்து (உங்களைப் போல்) பொய்யாக்கிக் கொண்டிருந்தவர்களின் முடிவு என்னவாயிற்று என்று நீங்கள் கவனித்துப் பாருங்கள் என்று கூறும்'' (அல் குர்ஆன் 6:11)*

*உலகச் சுற்றுப் பிரயாணம், அல்லாஹ்வை அறிய ஏதுவாகின்றது. உடனே, அல்லாஹ் அங்கீகரிக்கும் பிரார்த்தனைகளில் பிரயாணம் செய்பவனின் பிரார்த்தனையும் ஒன்று. முஸ்லிம்கள் உலகவலம் வந்ததற்கு இஸ்லாத்தின் பிரயாண அங்கீகாரம் முக்கிய காரணமெனலாம்.*

*1. கல்வி தேடுவதற்குச் செல்லும் பிரயாணம், 2. வணக்கக் கடமைகளை நிறைவேற்றச் செல்லும் பிரயாணம், 3. சன்மார்க்கப் பாதையில் மன ஒருமைப் பாட்டுடன் வணங்கச் செல்லும் பிரயாணம், 4. இம்மையின் தேவைகளை நோக்கிச் செல்லும் பிரயாணம், 5. புதிய காட்சிகளைக் கண்டு வரச் செல்*

லும் பிரயாணம் என இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் பிர யாணத்தை ஐவகைப்படுத்துகிறார்கள். சிலவேளைகளில் ஒரு நோக்கத்திற்காகச் செல்லும் பிரயாணம் மேலே கூறிய ஐவகை நோக்கங்களையும் நிறைவேற்றியும் விடலாம். அது, மனத்தை யும் நடத்தையையும் பொறுத்த விஷயம்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரும் வான்விரித்த சிறகுகளால் வையம் எங்கும் சுற்றித் திரிந்தவர். அரசியல் அனுசரணை அதற்கு உறுதுணை புரிந்ததென்பதில் வியப்பில்லை. அல்லாஹ் வின் அரும் பெரும் படைப்புக்களை அலசி ஆராயும் நோக்குட னும் உலகில் வாழும் மனித குலத்தின் மாறுபட்ட தன்மைக ளைக் கண்டு உணர்ந்து கொள்ளும் முயற்சியுடனும் உலகச் சுற்றுப் பிரயாணம் அவருக்கு மிக உதவி நின்றது.

மனித குலம் பற்றி விவாதித்தபோது இன வேறுபாடுகள் பற்றிக் கதை எழுந்தது. இலங்கையில் ஏற்பட்ட கடந்த காலப் பயங்கரங்கள் இன வேறுபாட்டால் எழுந்தனவா? உண்மையில் இலங்கை, இந்திய மக்கள் யாவரும் ஓரினத்தவர்தான் என்ற முடிவுக்கு வரக்கூடிய சாத்தியம் ஏற்பட்டுவிட்டது.

உண்மையில் இனம் என இங்கே பேசுகிறார்களே, அது, ETHNIQ என்னும் ஆங்கிலச் சொல்லையா? அல்லது வேறு சொற்களைக் கொண்டா? என்ற முடிவுக்கு வரவேண்டும். உலகில் செமித்தியர், காக்கோஷியர், மங்கோலியர், நீக்ரோ என்னும் இனங்கள்தான் காணப்படுகின்றன. இந்த இன வேறு பாடு, உடலமைப்பில், பௌதீக புவியியல் வேறுபாட்டில் தொக்கி நிற்கின்றன. இந்த இன வேறுபாட்டுத் தன்மையை உலகம் சுற்றும்போது காணமுடியும் என பாக்கிர் மாக்கார் கூறினார்.

இலங்கை இந்திய மக்கள் இந்த நான்கு இனங்களின் கலப் பினம் என்றே கூறமுடியும் என்ற முடிவுக்கு வருவதில் பிரச் சினையில்லை. இந்நாட்டில் நிகழ்வது மொழி, மத வேறுபாடு தான். நான்கு வேறுபட்ட இனங்களுமே ஒற்றுமையாக வாழ முடியுமானால், வாழ முயற்சிக்க முடியுமானால் ஏன் ஒரே இன மக்களால் ஒற்றுமையாக வாழ முடியாது? என்ற கேள்வியை யும் பாக்கிர் மாக்கார் எழுப்பினார். இச்சிந்தனைகளுக்கெல் லாம் உலகச் சுற்றுப் பிரயாணம் வழி வகுக்கின்றது.

பாரஸீகத்திலிருந்து வந்த ஸல்மான் பாரிஸ் (றழி), பிராங்கில் இருந்து வந்த சுஜப் (றழி), ஆபிரிக்க அபஸி நீக்ரோவான பிலால் (றழி) ஆகியோர் நபி (ஸல்) அவர்களின் ஆருயிர்த் தோழர்கள்; ஸஹாபாக்கள். இஸ்லாம் இங்கேதான் சர்வ தேசியத்தைத் தழுவி நிற்கின்றது. இந்த உணர்வை உலகச் சுற்றுலாவில் காணமுடியும் என்ற அநுபவக் கூற்றை அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் எடுத்துக் கூறினார்.

அரசியலில் சபாநாயகர் என்ற உயர் பதவி அவருக்கு உலகைக் காட்டியது; இல்லை உலகுக்கு வழி காட்டியது எனத் துணியலாம். பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் உலகச் சாரளத்தைத் திறந்து காட்டியது. அத்திறப்பு உலகக் கதவுகளையெல்லாம் விரித்து நின்றது. 1978 ஆம் ஆண்டில் பாராளுமன்ற மகாநாட்டில் கலந்து கொள்ள போத்துக்கல்லின் லிஸ்பன் நகருக்குச் சென்றார். இலங்கையைக் குடியேற்ற நாடாக வைத்து ஆட்டிப்படைத்த போத்துக்கல்லுக்கு அரச கம்பீரத்துடன் பாக்கிர் மாக்கார் சமூகமளித்தார். வரலாற்றில் முஸ்லிம்களை மூர்க்கத்தனமாக எதிர்த்த போத்துக்கேயர் நாட்டிற்கு நமது பாக்கிர் மாக்கார் சென்று, அவர்களது பாராளுமன்றத்தின் கௌரவ விருந்தினரானார். பெரிய பிரித்தானியாவும் அவரை வரவேற்று நின்றது. இந்த வழியே 1981 ஆம் ஆண்டு கியூபாவின் ஹவானா நகருக்குச் சென்றார். 1983 ஆம் ஆண்டு பங்களாதேசிக்குச் சென்றார். ஈராக்கின் பக்தாத் நகருக்குச் சென்றார். இங்கெல்லாம் சர்வதேச மாநாடுகளுக்கும், நல்லுறவை விருத்தி செய்வதற்குமே பயணங்கள் மேற்கொண்டார். ஆனால். அப்பயணத்துடன் அல்லாஹ்வின் படைப்புக்களின் விநோதங்களைப் பார்த்துப் பரவசமடைந்தார்.

1979 இல் ஈராக் அரசின் அழைப்பின் பேரில் மீண்டும் சென்றார். ஈராக் நட்புறவு இதனால் மிக இறுகி நின்றது. ஈராக் இலங்கை நட்புறவுச் சங்கத்தின் தலைமைப் பதவியையும் அப்துல் பாக்கிர் மாக்கார் அவர்களே வகிக்கின்றார். முஸ்லிம் என்ற சர்வதேச அமைப்பே, இணைப்பே இதற்குக் காரணமெனலாம். இதனால்தான், என்னவோ ஈராக்கும் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவர்களை அவர்களது பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தும்படி வேண்டி நின்றது. இவர், அங்காற்றிய உரை ஈராக் பாராளுமன்ற வரலாற்றில் பொன்னெழுத்துப் பதிவென்றே கூறலாம். ஈராக் அரசு பாக்கிர் மாக்காருடன் மிக இறுகிய நட்

புடையது. இந்நட்பினால், நமது நாட்டிற்கும் மக்களுக்கும் ஈராக்கின் மிகப் பலம்வாய்ந்த உதவிகளைப் பாக்கிர் மாக்கார் பெற்றுக் கொடுத்திருக்கின்றார் என்பதை எவரும் மறுத்திட முடியாது.

நானிங்கே அப்துல் பாக்கிர் மாக்காருக்கும் ஈராக்கிற்கு முள்ள அந்யோன்யத்தை வைத்தே எழுதுகின்றேன். இதனால், ஈராக்கின் அரசியல் கொள்கையுடன் நான் இணைந்தவனல்ல. சர்வதேச ரீதியில் ஆயத்துல்லா கொமய்னியின் தலைமையி லுள்ள ஈரான் நாட்டின் ஈமானின் பலம் ஈராக்கிடம் உண்டா? என்பதில் எனக்குச் சந்தேகம் அதிகம். உலக வரலாற்றில் அல் லாஹ்வின் பலத்த நம்பிக்கையுடன் எக்காரியத்தையும் இவ்விரு பதாம் நூற்றாண்டில் நடத்திய நாடு ஈரான்தான். அல்லாஹ் வின் நம்பிக்கைச் சக்தியை உலகமே உணரும்படி செய்ததும் ஈரான்தான். அவை பற்றியெல்லாம் விவரிக்க இது தகுந்த இடமென நான் நினைக்கவில்லை.

1980 ஆம் ஆண்டு பிலிப்பைன், இந்தோனிஷியா ஆகிய நாடு களுக்குச் சென்றார். அவர், பிலிப்பைன்ஸ் சென்ற காலம் மாக்கோஸின் தலைமையே அங்கு அரசோச்சியது. இந்தோனி ஷிய மக்கள் மத்தியில் அப்துல் பாக்கிர் மாக்காரின் புகழ் குன் றின் மேலிட்ட ஒளி விளக்கே எனலாம். 1981 ஆம் ஆண்டு இந்தியா, பங்களாதேஷ் நாடுகளுக்கும் பயணம் செய்தார். 1981 ஆம் ஆண்டு மாலைதீவுக் குடியரசின் ஐம்பதாவது வரு டாந்த விழாவுக்கு இலங்கை அரசின் பிரதிநிதியாகச் சென்றார். ''சாக்'' அமைப்பு தோன்று முன்பே ''சாக்'' நாடுகளைத் தரி சித்தார். தெற்காசியாவுடன் கிழக்காசியாவும் இணைந்து செயற் படும் திட்டமொன்றிருக்க வேண்டும் என்னும் பிராந்திய ஒற் றுமை பற்றியும் பாக்கிர் மாக்கார் கதைப்பார். இது, அவரது அண்டை நாட்டரசியல் நுணுக்கம் சர்வதேசியத்துடன் எப்படி இணைய வேண்டும் என்பதைக் காட்டுகின்றது.

எகிப்தின் அதிபர் அன்வர் சாதாத்தின் மரணச் சடங்கிலே கலந்து கொள்ளும் வாய்ப்பை இலங்கை அரசு அப்துல் பாக்கிர் மாக்காருக்கே அளித்தது. இத்தெரிவு, நல்ல இராஜரீகச் சிந் தனையுடையதே! இலங்கை ஜனாதிபதியின் செய்தியோடு, ஜனாதிபதியின் பிரதிநிதியாகவே அல்ஹாஜ் அப்துல் பாக்கிர்

மாக்கார் அங்கு சென்றார். அவரது வாழ்க்கையில் நடந்த அரசியல் நிகழ்ச்சிகளில் எகிப்திய விஜயமும் மிக முக்கியமெனக் கூறலாம்.

பபிலோன், எகிப்து, மொஸப்பதேமியா உலக நாகரீகத்தின் உதிப்பிடங்கள். உலக நாகரீக அடையாளங்கள் அதிகமானவை இப்பகுதி மண்ணில் புதையுண்டும், நிமிர்ந்தும் நிற்கின்றன. இந்த இடங்களுக்கெல்லாம் செல்லும் வாய்ப்பை அல்லாஹ் அளித்ததையிட்டு அவர் பெருமைப் படுகின்றார். இப்பிரயாணங்களின் மாண்பினை உணர அல்குர்ஆனே வழி செய்கின்றதென்கின்றார். அல்லாஹ்வின் அதிக நபிமார்களின் காற்பட்ட இடங்களிவை. இம்மண்ணை ஊடறுக்கும்போது, அல்குர்ஆன் கூறும் வரலாறுகள் ஞாபகத்திற்கு வரும் என்றும் அவர் கூறுகின்றார்.

சமாதான கலாசார மகாநாடொன்றில் கலந்துகொள்வதற்காக 1986 ஆம் வருடம் சோவியத் ருஷ்யாவின் ''பாடும்'' நகருக்குச் சென்ற இவர், அந்நாட்டின் சூழ்நிலை பற்றி விதந்துரைத்தார். நெப்போலியனையும், ஹிட்லரையும் தோல்வியடையச் செய்த பூமி அது. அந்த அமைப்பை வெல்ல அந்நாட்டு மக்களுக்கே முடியும். என்றாலும், மத்திய காலத்தில் முஸ்லிம்களும் அங்கே சென்று தமது கலாசாரப் புரட்சியை வென்றனர். அவர்கள் செய்த சமயப் பணிகளின் தடயங்கள் அங்கே ஏராளமுண்டு. எப்படியான நாட்டினுள்ளும் இஸ்லாத்தின் ஊன்றுகோலான அல்குர்ஆனுடன் சென்றுவிட அல்லாஹ்வின் உதவி கிடைக்கும். அங்கு காணும் வெற்றித் தடயங்கள்தான், இமாம் புஹாரி (ரஹ்) பிறந்த புகாரா. ஹஸ்றத் உத்மான் (றழி) அவர்களின் அல்குர்ஆன் பிரதி எனப் பிரமிப்படைவதை பாக்கிர் மாக்காரின் கூற்றிலிருந்து காணமுடிகின்றது. இவ்வித பரந்துபட்ட சிந்தனையை அவரது மூன்றாவது பயணத்தில்தான் காண முடிந்ததோ என்ற சந்தேகம் எனக்கும் எழுந்தது. இல்லை, பிரயாண வாய்ப்பு அதற்கு வழி வகுத்ததென்றும் முடிவு கட்டலாம்.

ஈராக் பாராளுமன்றத்தில் பேசும் வாய்ப்பைப் பெற்ற பாக்கிர் மாக்கார் இந்தியப் பாராளுமன்றத்திலும் பேசியிருக்கின்றார். இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின் சபாநாயகர் மண

டபத்தில் நடைபெற்ற இராப்போசன விருந்தின் பின், ஆங்கிலத்தில் அவராற்றிய சொற்பொழிவு அனைவரினதும் பாராட்டைப் பெற்று நின்றது.

முழுவுலகப் பாராளுமன்ற மாநாடொன்றில் கலந்துகொண்ட பாக்கிர் மாக்கார் தான் தயாரித்துச் சென்ற பேச்சை வாசிக்காது, சந்தர்ப்ப சூழ்நிலை நோக்கிப் பேச்சை நிகழ்த்தினார், அது அவர் தயாரித்து வந்த பேச்சைவிட உயர்ந்தும் விரிந்தும் நின்றது. இவரது பேச்சை அவதானித்துக்கொண்டிருந்த ஐக்கிய அமெரிக்கப் பிரதிநிதி பாராட்டி, வாழ்த்தி கரங்களைப் பற்றிப்பிடித்து அழைத்துச் சென்று ஏனைய பிரதிநிதிகளுக்கும் தனிப்பட்ட முறையில் அறிமுகம் செய்த நிகழ்ச்சியே அப்பேச்சின் பெருமைக்கு அத்தாட்சியாகும். இது, நமது தாயகத்துக்கும், நமது சமூகத்திற்கும் ஏற்படுத்திய புகழென நாமும் வியக்கலாம்.

சொற்ப வேளை அவர் சென்ற பிரயாணங்கள் பற்றிக் கதைக்கும்போது இவ்விடயங்கள் வெளிவந்தன. இன்னும் தன் மனதுள் அவர் எத்தனையோ அம்சங்களை அடக்கியிருக்கலாம். இவருடன் பேசி இவ்வளவு பிரயாண அனுபவங்களைப் பெற முடியுமென்றால், வெளிநாட்டமைச்சராகவிருந்த நமது கௌரவ நீதி அமைச்சர் அல்ஹாஜ் ஏ. ஸி. எஸ். ஹமீத் அவர்களுடன் எவ்வளவோ பெறமுடியும். அவர், சென்று வந்த நாடுகளும், அவர் அங்கங்கு நிகழ்த்திய சொற்பொழிவுகளும், அவர் வெளியிட்டுள்ள வெளிநாட்டுக் கொள்கைகள் பற்றிய வெளியீடுகளும் அவரது திறமைக்குச் சான்றுகளாகும். அவர், இத்தாயகத்தின் பெருமையையும், இத்தாயகத்தின் நிலைமையை எடுத்துச் சென்று நயந்துரைக்கும் பணியையும் செய்தவர். அப்பணி முழுவதையும் பதிவு செய்தால் பெரும் வரலாற்றுப் பொக்கிஷமே அத்தியாயம் அத்தியாயங்களாக விரிந்து செல்லுமல்லவா? பயன்பாடுடைய இவ்விஷயங்கள் பதிவில் அடங்க வேண்டும்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அரசியல் சுற்றுப் பிரயாணங்களுடன் இலக்கியச் சுற்றுப் பிரயாணங்களும் செய்தவர்தான். 1978 இல் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு, தென்னிந்தியாவில் நடந்த முஸ்லிம் தமிழிலக்கிய ஆராய்ச்சி மகாநாடுகள் என்றே விரிக்கலாம். அக்காலங்களில், அந்தந்த நாட்டுச் சபாநாயகர்கள் இவரை வரவேற்றுபசரித்தவைகளும் வரலாற்றுச் சிறப்புடையதே!

இவர் சென்ற பிரயாணங்கள் பண்பாட்டு வளர்ச்சிக்கும் உதவி நிற்கின்றன. அவரது, ஹஜ் யாத்திரையும் அறிவுலக விரிவுடையதெனலாம். அவர், ஹஜ்ஜுக்குச் சென்றபோது, மதினாவில், இலங்கையின் புகழ பெற்ற வேர்வலை நகரீன்ற பொறியியலாளர் அல்ஹாஜ் ஏ. ஜி. ஏ. பாரி அவர்களின் மாளிகையில்தான் தங்கினார். அல்ஹாஜ் ஏ. ஜி. ஏ. பாரி அவர்கள் அவரைப் பேணிச் செய்த உதவிகளை அதிகம் விவரித்தார்.

கொழும்பு ஸாஹிறாவை அரசாங்கம் கையேற்று பின், அரசாங்கத்திடமிருந்து பறித்துவிட வேண்டும் என்ற கர்ஜனையை முன்னை நாள் அற்றோர்னி ஜெனரலாக விருந்த ஜனாப் ஏ. ஸி. எம். அமீர் அவர்களின் தலைமையில் எழுப்பினார்கள்.

ஸாஹிறாவை அரசாங்கமே நடத்த வேண்டும் என்ற கர் ஜனைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்தான் அல்ஹாஜ் ஏ.ஜி.ஏ. பாரி அவர்கள். இந்த வேறுபாட்டால் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கா ருடன் கருத்து வேற்றுமை எழுந்துவிட்டது. இப்பின்னணிதான், பாக்கிர் மாக்கார் பாரி அவர்களின் கல்விக்குத் தடையாக விருந்தார் என்ற எண்ணத்தையும், கற்பனையையும் எழுப்பி நின்றது.

என்ஜினியர் பாரி அவர்களின் தந்தையார் அப்துல் கனி ஆலிம் அவர்கள் அழகிய குரலில் ஹதீஸ் சொல்லும் வல்லமை யுள்ளவர். வேர்வலை புஹாரித் தைக்காவில் ஹதீஸ் சொல்ல அனுமதிக்கப்பட்டவர்களில் அவரும் ஒருவர்.

அல்ஹாஜ் ஏ. ஜி. ஏ. பாரி அவர்களின் மனைவி அல்ஹாஜ் அப்துல் ஹாதி அவர்களுடைய மகள். மாளிகாஹேன முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் நான் ஆசிரியராக இருக்கும்போது என்ஜினியர் பாரியின் மனைவி கற்றுக்கொண்டிருக்கின்றார்.

''அல்ஹாஜ் ஏ. ஜி. ஏ. பாரி அவர்களின் கல்வி சம்பந்த மாகவும் கல்யாணம் சம்பந்தமாகவும் அல்ஹாஜ் அப்துல் ஹாதி அவர்களிடம் நான் கதைத்திருக்கின்றேன்'' என்ற செய்தியை யும் பாக்கிர் மாக்கார் கூறினார்.

''அல்ஹாஜ் ஏ. ஜி. ஏ. பாரி அவர்களின் உயர்வினால் பெருமைப்படுபவர்களில் நானும் ஒருவன்தான்'' என்றும் அல் ஹாஜ் பாக்கிர் மாக்கார் கூறினார்.

அரசியல் குரோதமும் கொழும்பு ஸாஹிறா விவகாரமும் தான் இக்கதைகளுக்குக் காரணம் என்பதை விளங்கிக் கொள்ள லாம்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் இளைஞர்களின் கல்வி முன்னேற்றத்தைத் தடை செய்பவர் என்ற கதையொன்று சில வேளைகளில் அடிபடுவதை நான் அவதானித்திருக்கின்றேன். முக்கியமாக இன்ஜினியர் ஏ. ஜி ஏ. பாரி அவர்களின் கல்விக்கு முட்டுக்கட்டை போட்டார் என்ற தெளிவில்லாத கதைக்கே மேற்கூறிய விடைகள் வந்தன. இக்கதையால், அல்ஹாஜ் பாரி அவர்கள் பற்றிய கல்விச் செய்திகளும் ஞாபகத்திற்கு வருகின் றன. நான், ஊரில் சுயபாஷாப் பாடசாலையில் கல்வி கற்கும் போது, எனது சாச்சியின் மகன் தற்போதையச் சிவில் என்ஜி னியர் ஜனாப் எம். எம். கிபாப்தீன் என்பவர் கொழும்பு ஸாஹிறாவில் கற்றுக்கொண்டிருந்தார். லீவு காலங்களில் அவர் கொழும்பு பற்றிக் கதைக்கும்போது, பாரி அவர்களின் கல்வி வல்லமை பற்றி வானளாவக் கூறிப்புகழ்வார்.

பாரி அவர்கள் எச். எஸ். ஸி. யில் தூய கணிதம் முதலாம் வினாத்தாளுக்கு விடை எழுதியவர், இரண்டாம் வினாத்தாளுக்கு விடை எழுதவில்லை. பரீட்சை முடிந்து திருத்தும் காலம், பாரி அவர்களை பரீட்சைத் திணைக்களம் அழைத்ததாம். ''ஏன் இரண்டாம் வினாத்தாளுக்கு விடை எழுதவில்லை?'' என்ற வினாவை எழுப்பியுள்ளனர். அச்சமயம் ஏற்பட்ட அதீத மான காய்ச்சலைப் பற்றி பாரி கூறியிருக்கின்றார். பாரி அவர் கள் எழுதிய முதலாம் வினாத்தாள் முழுதும் சரியாக இருந்த மையால், காரணத்தை அறிய அழைத்திருக்கின்றனர். முடிவு, அவர் பல்கலைக் கழகத்திற்குப் பொறியியல் மாணவராகச் சேர்க்கப்பட்டார். இவரது கல்வி, இவரது திறமையால் வேர் வலை, இலங்கை, உலகமே பெருமையடையும். அப்பெருமைக் குரிய காரியங்களில்தான் அவர் இப்போது இறங்கி நடமாடு கின்றார்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் பிரயாண அநுபவம் பேச வந்த நான் வேறெங்கேயோ செல்கின்றேனோ? பிரயாணம் மனிதனின் குணநலப்பண்புகளை விரித்து நிற்கின்றது. அனுப வத்திறனை, உலக சமூகத்தை உணரும் நலனை ஏற்படுத்து கின்றது. இஸ்லாத்தின் தத்துவமான உலகம் ஒரு சமூகம்

உணர்வைப் பிரயாணம் ஏற்படுத்துகின்றது. உலகம் சுற்றும் பாக்கியம் எல்லோருக்கும் கிடைக்கும் பாக்கியமல்ல. அதற்குரிய வல்லமையுள்ளோருக்கே அது கிடைக்கும். அந்த வல்லமை அப்துல் பாக்கிர் மாக்காருக்கும் உண்டென்பதை இங்கே அறிந்தோமல்லவா?

# பல்கலைப் பரிவு. 13

அன்பினைத் தோய்த்து அறிவினை வளர்த்த
ஆய்வுகள் முடியவில்லை
பண்புயர் காதல் பவனியில் சென்ற
பயணம் தொடரவில்லை
வெண்புறாத் தூது வீட்டினில் சென்று
விடிவே காணவில்லை
நண்பர்கள் யாவரும் கூடி இணையும்
நாளினும் பிறக்கவில்லை!

ஓர் ஊரில் குறைந்தது ஒரு வைத்தியரை உண்டாக்குவது ''பர்ளுக் கிபாயா''க்களில் ஒன்று. ''பர்ளு கிபாயா''வென்றால், எல்லோரும் கட்டாயம் நிறைவேற்ற வேண்டிய ஒன்று. எல்லோரும் நிறைவேற்றினால் எல்லோருக்கும் நன்மை கிடைக்கும். ஒருவராவது இதை நிறைவேற்றாவிட்டால் எல்லோருக்கும் தீமையே கிடைக்கும். ஒருவராவது நிறைவேற்றினால், எல்லோரும் தீமையிலிருந்தும் காப்பாற்றப்படுவார்கள். இந் நியதி சமூக நீதி நோக்கிய ஒன்று. மனித குலத்தை இஸ்லாம் எவ்விதம் பாதுகாக்கச் சட்டமிட்டிருக்கின்ற தென்பதை இதிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

மார்க்கக் கல்வி கற்கச் செல்லும் ஒருவர் அல்லாஹ்வின் பாதுகாப்புக்குள் அடங்குகின்றார். அதே வேளை பர்ளுக் கிபாயாவை நிறைவேற்றக் கற்கும் எக்கல்விக்கும் அல்லாஹ்வின் பாதுகாப்புக் கிடைத்தே ஆகும். ''பர்ளு கிபாயா'' என்பது சமூக நீதியை ஒட்டிய ஒன்று. ''உலகம் ஒரு சமூகம்'' என்ற ஒருமைப்பாட்டை இஸ்லாம் நிச்சயம் அடைந்தே தீரும் என்பதற்குரிய சான்றுகளில் பர்ளு கிபாயாவும் ஒன்றெனலாம்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் தந்தையார் ஒரு வைத்தியர். வைத்தியத் தொழிலுடன் மருந்துக்கடையும் வைத்திருந்தார். அக்கடையிலிருந்துதான், அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் கல்விக் கூடம் சென்றார். கடையிலிருந்த பழக்கமும், ''குலத் தொழில் கல்லாமல் பாதி'' என்பதுபோல் பரிகாரம் செய்யும் பக்குவமும் பாக்கிர் மாக்காரிடமும் இணைந்தன. மருந்துகளின் மூலிகைகளின் பெயர்ப்பட்டியல், அதனதன் தன்மைகள் யாவற்றையும் இளமையிலேயே பழக்க தோஷத்தால் அறிந்துகொண்டார் பாக்கிர். இந்த இலயிப்பு காரணமாகத்தான் ''நியாய துரந்தரர் தொழிலிலும் வைத்தியத் தொழிலே உயர்ந்தது'' என்ற விவாதத் தலைப்பைப் பொறுக்கி இளமையில் கல்விக் கூடத்தில் விவாதம் செய்யக் குறிப்புக்களை பாக்கிர் மாக்கார் எடுத்தார் எனலாம்.

ஈளை, சளி, சர்மம் சம்பந்தமான நோய்களுக்குரிய விசேட மருத்துவ முறை அல்ஹாஜ் பாக்கிர் மாக்காருக்குக் கைகண்ட வித்தையெனலாம். இந்நோய்களுக்கு இப்பொழுதும் அவர் சிகிச்சை செய்வார். விசேட தைலவகைகளைக் காய்ச்சித் தனது உறவினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வார். இம்மருத்துவ முறை ஆயுர்வேத வைத்திய முறையைச் சார்ந்ததென அவர் கூறுகிறார். யூனானி முறையையும் ஆயுர்வேத முறையையும் இரண்டறக் கலக்கச் செய்துள்ளனர் என்பதுதான் உண்மையெனப்படுகின்றது.

கி. பி. 810 இல் அறாபியாவிலிருந்து வந்த வைத்தியர் சுல்தான் ஷேக் ஜமாலுத்தீன் மஃதூமி சிங்கள அரச குடும்பத்தவர்களுக்கு அரச வைத்தியராகச் சேவை செய்தவர். இவர், கையாண்ட முறை யூனானி முறையே! இவ்வழி வந்தோர் காலமாறுதலால் யூனானியுடன் ஆயுர்வேத வைத்திய முறையையும் கலப்புச் செய்துவிட்டனர். இதுபற்றி ஆய்வு செய்ய வேண்டியது அவசியமே!

அரசியல் தேவைகளுக்கு பாக்கிர் மாக்காரை அண்மிய பலர் வைத்தியத் தேவைகளையும் பூர்த்தி செய்த கதைகளைக் கூறின் அவை நீண்டு விடும். அவரைச் சந்திக்க வந்த இளைஞர் ஒருவர் தனது தாய்க்கேற்பட்டுள்ள உடல் முழுதும் பரவியிருக்கும் தீராத புண்பற்றிக் கூறினார். ஒரு வெற்றுத் தாள் துண்டில் மருந்து வகைகளை எழுதிச் சிகிச்சை செய்யும் முறைமையையும் கூறினார் பாக்கிர் மாக்கார்.

ஒருமாத இடைவெளிக்குள் நோய் தீர்ந்ததென இளைஞர் கூறிய கதைகள் போல் ஏராளம் இருக்கின்றன. இது அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் மருத்துவத் திறமையை எடுத்துக்காட்டுகின்றது.

பாக்கிர் மாக்கார் ஹஜ்ஜுக்குச் சென்ற சமயம் மதீனாவில் ஏ. ஜி. ஏ. பாரி அவர்களின் மாளிகையில் தங்கினார். சுகக் குறைவாகவிருந்த பாக்கிர் மாக்காரை அனுசரித்து ஆதரவளித்ததால் அவர் உடல் சுகம் பெற்றுத் தேறியது. ஒருநாள், பாக்கிர் மாக்காருடன் வெளியே செல்ல பாரி அவர்கள் காரை எடுக்கும்போது, அப்படியே குனிந்து சுருண்டுவிட்டார். வயிற்றில் ஏற்பட்ட கோளாறொன்றினால்தான் அவருக்கு அப்படி நேர்ந்தது. உடனே, அல்ஹாஜ் பாக்கிர் அவரது வைத்திய நுணுக்கத்துடன் அணுகி மருந்து செய்தார். உடனே பாரி குணம் பெற்றார். இவ்விதம் தொடர்ந்து இவரையும் இவரது வைத்திய முறைபற்றியும் கூற முடியும். வைத்தியமும் ஒரு கலைதான் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர் பாக்கிர். ''இது, கலையா? விஞ்ஞானமா?'' என நான் விசாரித்தேன். ''விஞ்ஞானமே கலைதானே! அது, அநேக இடங்களில் சிலாகிப்பதில்லை என்பதினால் விஞ்ஞானமாகிற்று'' என்றார்.

இது. சுவாரஸ்யமான பதில்தான். அதைக் கொஞ்சம் விளக்கத்தான் வேண்டும். பொறியியலும் விஞ்ஞானந்தான். விஞ்ஞானம் இருப்பதையே அப்படியே கூறி நிற்கும். அந்த மாளிகையைப் பார்த்த விஞ்ஞானி ''இத்தனை மீற்றர் உயரமுடையது'' என்று அறுதியிட்டு அளந்து கூறுவான். கலைஞனோ வானளாவிய மாளிகை என வியந்து கூறுவான். வியந்து கூறுதல் விஞ்ஞானத்திலும் வரும். வியப்பே! விஞ்ஞானந்தான். அப்படியானால், விஞ்ஞானம் கலைதானே எனச் சிக்கவைத்தார் பாக்கிர் மாக்கார்.

கைரேகைகளைப் பார்த்துக் கணித்தலும், பிறந்த நேரத்தை வைத்து உத்தேசக் கணக்குப் பார்ப்பதும் அல்ஹாஜ் பாக்கிர் மாக்காருக்கு முடியும். இக்கலையைச் சட்டக் கல்லூரியில் கற்கும் காலத்தே அவர் கற்றுக்கொண்டார்.

சாஸ்திரம்—கைரேகை பார்ப்பதை இஸ்லாம் வெறுக்கின்றது. இக்கருத்தை மிக வன்மையாக ஆதரிப்பவர் பாக்கிர்

மாக்கார். அல்லாஹ்வின் மீதுள்ள நம்பிக்கையையும், ''கழா கதிர்'' என்பவற்றையும் அசைக்கின்ற விஷயமிது. ஆனால், தன்னம்பிக்கை உடையோரே இக்கலை பற்றி ஆராயலாம். இக்கருத்தையே அவர் கூறி நின்றார்.

''காலத்தின்மீது சத்தியமாக மனிதன்
நஷ்டத்திலிருக்கின்றான்.''
—அல்குர்ஆன் 103:1,2.

என்று அல்லாஹ்வே கூறுகின்றானல்லவா? காலத்தின் அருமை அதில் தொனிக்கின்றது. காலம் மனிதனுடன் தொடர்புடையது. காலத்தை வைத்து மனிதனைக் கணிக்கலாம். அந்தக் காலத்தை மனிதன் வீணாக்கக் கூடாது என்னும் படிப்பினை இதனுள் அடங்கும். இக்காலத்தை மனிதன் உலக இயக்கத்தை வைத்துக் கணிக்க முயல்கின்றான். அவன் பிறப்பு வளர்ப்பு யாவும், அவன் பிறந்த காலத்தை வைத்தும் கணிக்கின்றனர். இதைத்தான் பிறந்த நாள் ஜாதகம் எனவும் கணிக்கின்றனர். இது உலக இயக்கக் கோளங்களின் அசைவை நோக்கிக் கணிக்கப்படுகின்றது. காலத்தைக் கணிப்பதற்கு ஆழமான அறிவாற்றல் வேண்டும். மனிதன் கணிப்பது சரியாகிவிடுமென்றதல்ல. ஆனால் அதிகளவு விகிதம் சரியாகலாம். அதைத்தான், கணிப்பென்கின்றோமே! சாஸ்திரம், ஜாதகம் எல்லாம் கணிப்புகள் தான். அல்லாஹ்வை மறந்து அதனுள் யாரும் பிரவேசிக்கவே கூடாது. சில சமயங்களில் அது ''குப்ரை''யும் விளைவித்து விடும். இக்கருத்தையெல்லாம் கூறியவர் பாக்கிர் மாக்கார் தான். ''கணிதக் கலையென நினைத்தே இதைப் படித்தேன்'' என்றாரவர்.

சங்கீதத்தை இரசிப்பது, இயற்கைக் காட்சிகளை உன்னிப்பாகப் பார்த்து, ரசிப்பது போன்ற கலையியல் சார்ந்த பழக்கங்கள் அவரிடம் நிறைய இருக்கின்றன. இதனால்தான், அவர் இளகிய மனதுடையோராய்க் காணப்படுகின்றார்.

அவரது இளகிய மனத்தைத் தன்வயப்படுத்துவது கஷ்டமானதல்ல. இளகிய மனத்துள் இரக்கத்தை எழுப்பிக் காரியம் சாதித்துவிடலாம்.

இப்பொழுது முஸ்லிம் சமய கலாசார இராசாங்க அமைச்சராகவிருக்கும் அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர் அவர்கள் பாக்கிர் மாக்காரின் - சபாநாயகரின் காரியதரிசியாக இருந்தவர்.

இவர், முன்பு தொழிலமைச்சராக இருந்த அல்ஹாஜ் எம். எச். முஹம்மத் அவர்களின் காரியதரிசியாகவும் இருந்தார். 1977, தேர்தலின் பின், அமைச்சர் எம். எச். முஹம்மத் அவர்களின் காரியதரிசியாக இருக்கும் வாய்ப்பு அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வருக்குக் கிடைக்கவில்லை. அதனால், அவர் நொந்து போய் இருந்திருக்கலாம்.

ஜனாப் எஸ். எல். எம். ஷாபி மரிக்கார், மசூர் மௌலானா ஆகியோர் அல்ஹாஜ் அஸ்வர் அவர்களை பாக்கிர் மாக்காருக்கு அறிமுகம் செய்தனர். அதுமட்டுமல்ல, அவரை ஏற்று காரிய தரிசிப் பதவி கொடுக்க வேண்டி நின்றனர். இளகிய மனம், இரக்க சிந்தை இரண்டும் சேர்ந்தே காரியதரிசியாக அஸ்வரை ஏற்கச் செய்தது என்பதை உணரலாம்.

அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர் சிறந்த பத்திரிகைத் தொழில் (Journalism) தெரிந்தவர். ''அவர் காரியதரிசியாக இருந்த காலமெல்லாம் பத்திரிகைத் தொழில் நுணுக்கத்தால் என்னை எப்பொழுதும் பொது மக்கள் மத்தியில் காட்டி நின்றார்'' எனப் பாக்கிர் மாக்கார் கூறினார். அவரைத் தேர்ந்த தால், சில வேளைகளில் எனது தொகுதி மக்கள் தூரவும் நின்றனர் என்றும் சாடை காட்டினார். ஜனாதிபதி உயர்திரு ஆர். பிரேமதாஸ அவர்களுக்கு அஸ்வர் ஹாஜியாரை அறி முகம் செய்தும் வைத்தேன் எனப் பெருமிதமும் அடைந்து கொண்டார். சிலவேளைகளில் பாக்கிர் மாக்காருடைய அரசி யல் சாணக்கியங்களையும் அமைச்சர் அஸ்வர் அவர்கள் பெற்று மிருக்கலாம். ஏனெனில், அவருடன் கூட இருந்தவரல்லவா? இதற்கிடையில் அஸ்வர் ஹாஜியாருடைய பூர்வீகத்தையும் பாக்கிர் மாக்கார் தெரிந்தும் வைத்திருக்கிறார்.

அரசியலும், அறிவியலும், கலையியலும் ஒன்றித்து நிற்கும் கலாசாலைதான் பாக்கிர் மாக்கார். இதில் கற்றுத் தேர்ந் தோர் அதிகம். சிலவேளைகளில் இக்கலாசாலையின் தராதரப் பத்திரத்தை மறைத்து நிற்போரும் இல்லாமலில்லை. மனச் சாட்சி மறுத்துவிடாதுதானே!

பழைமையும் புதுமையும் சந்திக்கும் ஓர் யுகத்தின் நடுக் கல்லாக பாக்கிர் மாக்கார் திகழ்கின்றார். பழைமை சார் வோர் அவரை மறந்துவிட மாட்டார்கள். புதுமை வழிதேடு வோரும் அவரை ஒதுக்கிவிடமாட்டார்கள்.

வேர்வலையில் வாடகை வீட்டில் வசதியற்று நின்ற அவர், குழந்தைச் செல்வம் பெருகியதும் வீடொன்றைச் சொந்தமாக்கும் நிர்ப்பந்தத்திற்குள்ளானார். அவர் வாடகை இருந்த வீட்டையே நியாயப்படி பேசி விலை கொடுத்து வாங்கினார்.

அது, ஒரு வசந்தமாளிகையானாலும், அவரது பெரிய குடும்பம் மூச்சுவிட்டிருக்க இடவசதியுள்ளது.

'பாக்கிர் மாக்கார் அரசியலும் கையும் என விடாப்பிடியாய் நிற்கிறார். அவர் குமர் காரன்; அவரது ஆயுசுக்குள் குமர்களை நிறைவேற்றி விடுவாரா?' என ஏளனமாகக் குறைபட்டவர்கள் இன்றுமிருக்கின்றனர். அவர்களெல்லாம் வியக்கும்படி தனது மூன்றாம்படி முதிர்ச்சிக்குள்ளே தமது குமர்ப் பிள்ளைகளை நிறைவேற்றிக் குதூகலமாக வாழ்கிறார், அவரது, பிள்ளைகள் எப்பொழுதும் தந்தையின் சுகத்தைப் பேணுபவர்களாகவே வாழ்கிறார்கள்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அரசியலில் – தேர்தலில் வெற்றி பெற அவர் கட்சியைச் சார்ந்த பலர் சில தேவைகளுக்காகப் பணச் செலவு செய்திருக்கின்றனர். எச்சமயத்திலும் அவருடைய நன்மைக்காகக் கூட, அவர் மற்றவரிடம் பணம் பெற்றுச் செலவு செய்யவில்லை. அப்பொறுப்பைச் செலவு செய்பவர்களிடமே விட்டுவிடுவார்.

அவர் நகரசபைத் தலைவராக இருக்கும் காலம், வீட்டுத் திட்டத்தை நிறைவேற்ற ஒப்பந்த மனுக்கோரினார். கொழும்பிலிருந்து வந்த பிரபல்யமான ஒப்பந்தக்காரர் ஒருவர் நியாயமான ஒப்பந்த விலை வைத்ததாலும், பிரபல்யம் பெற்றிருந்ததாலும் அவருக்கே வீடு கட்டும் ஒப்பந்தம் கொடுக்கப்பட்டது. மறுநாள் அவர் நகரசபைத் தலைவர் வீட்டுக்கே வந்துவிட்டார். ''உங்கள் கொமிஷன் எவ்வளவு?'' எனப் பேரம்பேசத் தொடங்கி விட்டார். பாக்கிர் மாக்கார் அவரை இடை நிறுத்தி ''இப்படி வருவீர்கள் எனத் தெரிந்திருந்தால் உங்களிடம் ஒப்பந்தமே செய்திருக்கமாட்டேன்'' எனக் கூறிவிட்டார்.

ஒப்பந்தக்காரர் அதிர்ந்துவிட்டார். ''எனது ஒப்பந்த அனுபவம் மிக நீண்ட காலத்தை உடையது. இதுகாலவரை ஒப்பந்தம் செய்தவுடன், அதே நாள் என்னை நாடிக் கொமிஷன் பற்றிப் பேச வந்துவிடுவார்கள். நான் உங்களை நாடியும்

இவ்விதம் செய்கிறீர்கள்; இதுதான் இன்றைய வழக்கு'' என்றும் சொன்னார். இன்றைய வழக்கத்திற்கு மாறாக ஓரிருவர் இருக்கும்போது, அவர்களையும் சமூகம் அதே பார்வையில் பார்க்க முனைவதில் குற்றமில்லை என்பது விளங்குகின்றதல்லவா?

ஒப்பந்தக்காரர் அதிகப் பிடிவாதம் செய்ததினால், ''திறமையாக ஒப்பந்தப்படி உங்கள் வேலை முடிந்தபின், அதில் உங்களுக்கு இலாபமிருந்தால், ஏதாவது நாங்கள் சொல்லும் பொதுக் காரியங்களுக்கு உதவிசெய்யுங்கள்'' என்று கூறி பாக்கிர் மாக்கார் ஆளை அனுப்பிவிட்டார். இவ்விதம் அநேக சந்தர்ப்பங்களில், சந்தோஷங்களும், இலஞ்சமும் அவரை வந்து எட்டிப் பார்த்துத் திரும்பிச் சென்றதுண்டு.

மற்றவருக்குச் செலவு செய்வதிலும் பாக்கிர் மாக்கார் மன்னர்தான். தான் மனம் வைத்த சின்ன மனிதருக்கும் மனம் கோணாது உதவுவார். உதவி என்னும்போது, அவரது அதிகாரத்தைப் பகைப்புலனாகக் கொண்ட உதவி மட்டுமல்ல, சுயமாகச் செய்யும் பண உதவியுந்தான்.

மனிதனின் குண நடத்தை எதையும் எடைபோடாமல் கடன் கொடுப்பார். அவர் மனம் வைத்தால் அது மாளிகைதான். சுயமாகவே இயங்கி நஷ்டமடைவார். இந்த இயல் குணத்தைப் பயன்படுத்தி அவரை வேறு வழிக்குத் திருப்பவும் மனிதர்கள் முனைவார்கள்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் குண இயல்புகள் பற்றி அநேக இடங்களில் எடைபோட்டுவிட்டோம். இக்குண இயல்புகளைக் கொண்டு அவர் பண்புயர் மனிதர் என்றே கொள்ளலாம். அவரது குற்றம், குணம் இரண்டையும் எடைபோடலாம். கதிப்பதைக் கொண்டு முடிவறியலாம். மனிதன் நபியைப் போன்று பூரண மனிதனாக முடியாது. என்றாலும், மனிதன் மனிதனாக நிமிர்ந்து நிற்கலாம். அந்த மனிதத்தன்மை பாக்கிர் மாக்காரை விட்டு நீங்கிவிடவில்லை.

## மனமாளிகை. 14

சிட்டுக் குருவியின் கூடும்
அதற்கொரு மாளிகை
சின்ன எறும்பின் புற்றும்
அதற் கொரு மாளிகை
ஏழைகள் வாழும் குடிசை
அவர்க் கது மாளிகை
ஒவ்வோ ருயிரும் உறங்கும்
உறைவிடம் மாளிகை!

மனதுள் ளிருக்கும் மனிதன்
அவனோ சிறந்தவன்
மனதைக் கவர்ந்த செயல்கள்
அவையோ சிறந்தவை
அவனும் அவன் செயல்யாவும்
மிகைப்படாக் கூறினேன்
இவனை மதிப்பதோ விடுவதோ
அவர் மனமாளிகை!

அல்குர்ஆனின் பண்ணிரண்டாம் அத்தியாயத்தின் பதினெட்டாவது வசனத்தின் இறுதிப் பகுதி பெரும் படிப்பினைக் குரியது.

''................எவனை அல்லாஹ் இழிவு படுத்துகிறானோ அவனை ஒருவராலும் சண்ணியப்படுத்த முடியாது. நிச்சயமாக அல்லாஹ் தான் நாடியதையே செய்கிறான்.''

அல்லாஹ் இழிவுபடுத்தும் மனிதன் ஒருபோதும் கண்ணியம் பெறவே முடியாது. கண்ணியம் பெறும் மனிதன் எங்கும் கண்ணிய முடையவனே! கொள்கை வேறுபாடுடைய ஒரு மனி

தன் கண்ணியப் பரிவர்த்தனைக்குள் ஒன்றுபடுகின்றான். கொள்கை என்பது விமர்சனத்திற்குரியது. இங்கே, மனிதன் கண்ணியம் — கௌரவம், கொள்கை வேறுபாட்டைத் தகர்த்து நிற்கின்றது. இந்த வழிதான் அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரை யும் என்னையும் இந்நூல் ஒன்றிணைக்கின்றது. அல்லது பிரிக் கின்றது. இதில், எது நடந்தாலும் ஒரு கண்ணியமிக்க மனி தரை இக் காலக்கண்ணாடி தெளிவாக்கி நிற்கின்றது.

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பலரை எடைபோடும் போது, அவர்களது செயற்பாடுகளை எடுத்துக் குறிப்பெழுத லாம். இங்கே, உடற்கூறும், உடை நடை பாவனைகளும் நோக்க முடிந்தவை. அறிஞர் சித்தி லெவ்வை, அல்ஹாஜ் டி. பி. ஜாயா, நீதி அரசர் அக்பர், அல்ஹாஜ் சேர் றாஸீக் பரீத், அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அஸீஸ், அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத், அல்ஹாஜ் ஏ. ஸி. எஸ். ஹமீத் போன்றவர்களின் உடை நடை பாவனைகள் யாவும் அழகு படைத்தவை. இவர் களது அழகியற் திறமையை ஒரு பாரிய விஷயமாக எடுத்து விரித்துப் பார்க்கலாம். இதே வழியில் உடை, நடை, பாவ னைகள் அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரிடம் இருக்கின்றன.

நிறத்திற்கேற்ப உடையணிந்து, அதே நிறத்தில் ''மெச்'' செய்யக்கூடியதாக காலணியையும் மாட்டிக் கொள்வதில் இவர் கெட்டிக்காரர். தலைமயிர் ஒருபோதும் குலைந்தேயிருக்காது. தலை சீவி முகம் பளபளக்க உடையணிந்து மணம் பூசியே வெளியே வருவார். அவரது மெய்க்காப்பாளர் ஜனாப் T. M. A. ஹமீத் அவர்கள் ''கெதியில் உடையணிவது முடியாது; அதற்குத் தான் பாக்கிர் மாக்கார் அதிக நேரம் எடுப்பார்'' என்று கூறுவார்.

''முடியிருக்கும் ஒருவர் நிச்சயமாக அதை அழகுற ஆக்கிக் கொள்ள வேண்டும்'' (அபூதாவூத்) என நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

ஒரு முறை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு மனிதர் கலைந்த கேசத்தோடு வருவதைக் கண்டார்கள். அந்த மனிதரை நிறுத்தி ''உங்களுடைய முடியை முறைப்படுத்திக் கொள்ள உங்களுக்கு எந்தப்பொருளுமே கிடைக்கவில்லையா?'' என்று கேட்டதாக ஜாபிர் பின் அப்துல்லாஹ் (றழி) கூறுகின் றார்கள். (அபூதாவூத்).

நபி வழி முறைப்படி தன்னை அழகுடன் வைத்திருப்பதில் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவர்கள் முனைந்திருப்பதை இன்றும் இந்த வயதில் காணலாம்.

அல்லாஹ் அழகானவன்; அவனது படைப்புக்களும் அழகுடையன. முஸ்லிம்களைப் பொறுத்தளவில் அவர்களுக்கென்று ஓர் உடை (Uniform) இல்லை, கால, இட, வர்த்தமானங்களுக்கேற்ப அவர்கள் உடையணியலாம் இஸ்லாம் சர்வதேச மதம். எனவே, உடையை அது தேர்ந்தெடுக்கவில்லை. மறைவிடங்களைப் பற்றித்தான் அது வலியுறுத்துகின்றது. ஆண்களுக்கு ''அவ்ரத்'' இன்னது; பெண்களுக்கு ''அவ்ரத்'' இன்னது எனச் சட்டமிடுகின்றது. அழகு, அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் விரும்பிய ஒன்று அதைப் பேணுவதில் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் சளைத்துவிடமாட்டார். ''The best dress man in Parliament'' என ஒரு முறை மகாவலி அமைச்சர் காமினி திஸ்ஸநாயகா பாராளுமன்றத்திலேயே பாக்கிர் மாக்காரைப் பார்த்துக் கூறினார்.

அவரது முதலாவது இரண்டாவது படியில் அவரைச் சந்திக்க வருவோரை மிக உன்னிப் பார்ப்பார். மூக்குக் கண்ணாடியை மூக்கு வழியே கீழேவிட்டு கண்களை மேலே உயர்த்திப் பார்ப்பார். அவ்விதம் பார்த்தால், அவரது கொள்கைக் கெதிரான ஒருவரை அவர் பார்க்கிறார் என்று அர்த்தம் தொனிக்கும். இல்லாவிட்டால், ''ஆ! வா் நீலம்! அல்லது ''ஆ! வா் சிவப்பு!'' என்று நிறம் கூறி அழைப்பார். இன்றிருக்கும் மூன்றாம் படியில் இச்செயல் அவரிடம் இல்லை என்றே கூறலாம்.

அவர் சார்ந்த கட்சி முதல் என்றும், சமூகம் அடுத்ததென்றும் சில வேளைகளில் கருதுவார். இப்போக்கு மிகச் சிறந்த தென்றே கொள்ளலாம்.

அவருடன் கூட இருந்தவர்கள் சிலர், அவரது உறுப்பினர் வலுவை எங்களுக்கும் அளிக்க வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாக இருந்தனர். அந்தத்தனித்துவத்தை பாக்கிர் மாக்கார் எந்த இடத்திலும் விட்டுக் கொடுக்கவில்லை. இதனால், சிரேஷ்ட ஆதரவாளர்கள் சிலர் அவரை விட்டுப் பிரிந்தும் அவர் பயப்படவில்லை. இளைஞர்களை அவர் நம்பினார். அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமாகச் சிலரும், அவரது நம்பிக்கையைத் தவிடு பொடியாக்குபவர்கள் சிலரும் இன்றும் வாழ்கின்றனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் உப தலைவராக இருந்தவரும் அக்கட்சியை நிலைப்படுத்த பண்டாரநாயகாவுடன் சேர்ந்து உழைத்தவருமான அல் ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் கூடக் கட்சிக் கொள்கைப் பிடிப்புடையவரல்ல. அவர் காலத்தில் கட்சி சாரர்தோருக்கே அதிக உதவிகளும் சலுகைகளும் செய் திருக்கின்றார். அதுமட்டுமல்ல, 1977 இல் நடந்த தேர்தலில் பொத்துவிலில் முஸ்தபாவும், வேர்வலையில் பாக்கிர் மாக்கா ரும், ஹரிஸ்பத்துவையில் ஏ. ஸி. எஸ். ஹமீதும் வெற்றி பெற வேண்டும் என்று கங்கணம் கட்டி நின்றார். அதன் பயன்பாடு அவரும் தோல்வியைக் கவ்வ நேர்ந்தது. அந்த வகையில், அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் இல்லை. அவர், கட்சிக் கொள் கைப்பிடிப்பால் அவரது கட்சி சார்ந்தோரையே முதலில் கவ னித்தார். அதனால்தான், நின்று நிலைக்கின்றார் எனலாம்.

இந்த நாட்டின் தலை சிறந்த அரசியல்வாதியான திரு என். எம். பெரேரா அவர்கள்கூட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்னும் மாளிகைக்கு முட்டுக் கொடுக்கப் போய், மாளிகை விழும்போது முட்டுக்களையும் மண்கவ்வும் நிலைக்காக்கினார். உண்மைச் சமத்துவ அரசியல் கட்சி சாரர்தோரையும் சமத்துவமாகப் பார்க்கும் அவரது அரசியலும் இந்நாட்டில் அஸ்தமித்துவிட் டது. அதனால், கொள்கைவாதியான எட்மன் சமரக்கொடி போன்றோர் பாதிக்கப்பட்டுவிட்டனர். என். எம். பெரேரா ஓர் அரசியல் பேரரசானே! இந்நாட்டின் கல்விமான்கள் தொழி லாளர்கள் அவரிடமிருந்து அரசியல் படித்தவர்களே!

இந்நாட்டின் அரசியல் பெருமகனார் திரு. என். எம். 1979 ஒகஸ்ட் 14ஆந் திகதி இறந்த செய்தி கேட்டதும் அதிர்ந்து நின்றேன். பழைய நினைவுகள் மேலெழுந்தன. உடனே, ''இத்தேசியத்தின் தலைவர் என். எம்.'' என்றொரு கவிதையே பிறந்துவிட்டது. அதை அப்படியே ''தினகரன்'' பத்திரிகைக்கு அனுப்பினேன். முழுமையாக அது பிரசுரிக்கப்படவில்லை. முதல் இரண்டு விருத்தப் பத்தியை மட்டும்தான் பிரசுரம் செய் தனர். முழுமையாக இப்பொழுது ஞாபகம் வருகின்றது.

''ஆதாயம் எதையும் அரசியலில் நோக்காது
பாதாளம் சென்ற பண்புடைய மாபெரியோய்
ஊதாரித்தனம் போக்கி இலங்கையினை உருவாக்க
வாதாடிச் செய்தவினை வரிப்பளுவைக் கூட்டியதால்

ஏதாலும் செய்ய வொண்ணா எடுத்துன்னை ஒதுக்கிவிட்டார்
காதாலும் கேட்க முடியாத கடும் வேதனைக்குள்
நோதாங்க யியலாது நொந்தே துடிக்கின்ற
தோதான நாளாக்கித் துயில் கொண்டு விட்டாயோ!

உன்னரணுள் நின்று உணர்ந்த அரசியலை
உன்னிடமே உரைத்துவிட்ட உயர்ந்த யிந்நாளினிலே
உன்பெருமை உன்தவறு உன்னை வைத்துப் படிப்பதற்கும்
இன்னும் இந்நாட்டில் இளைய பரம்பரைகள்
துன்னி யுயர்வதற்கும் தூய துணை உன்வாழ்க்கை!
எண்ணிப் படித்து எவர் சொந்த வாழ்க்கையையும்
கண்ணிய மில்லாக் கறைபடிய வைக்காது
உன்னிய உன் கொள்கை உரைத்து நின்ற மேதையே நீ!

போல்ஷோவிக் வாதம் போற்றாது மொன்ஷோவிக்
மேலென்று நினைத்து மேற்றட்டர சியலில்
காலூன்றி வைத்துக் கஷ்ட மெல்லாம் பட்டழிந்தாய்!
நூல் நோக்கே யில்லாத ஸ்ரீ மாவின் அரசுக்குத்
தோள் கொடுத்து நின்றும் தூசாகப் பறந்து விட்டாய்!
மேலான உந்தன் மிகைப்பட்ட மூளையினால்
காலாதி காலம் பட்ட கடன் அடைத்ததினால்
மேலாக இன்றிலங்கை கடன் பெறவே வழி செய்தாய்!

எத்தனையோ சந்தர்ப்பம் இவ்விலங்கை ஆட்சி முறை
சொத்தெதுவு மில்லாத தொழிலாளர் கையினுக்கு
நத்திவரும் போதும் நழுவ விட்டு நீ விழித்தாய்!
புத்தி யதிகம் பொன்மூளை நிறைந்ததனால்
எத்தியுன் பெருமை யிறக்கிவிட்ட முதலாளிப்
பத்தியிலே நின்ற படுமோச விதிவசத்தால்
நித்திரையா யானாய் நிழலானாய் எதுவானாலும்
இத்தேசியத்தின் தலைவன் எனும் பெருமை யுனக் குண்டு''

இதுதான் முழுமையான அக்கவிதை. அரசியலில் மேதை என்றாலும், மனித நாடியைச் சரியாகப் பிடித்துப் பார்க்காததினால், அரசியலில் எழும்ப முடியாமல் போய்விட்டார். அவர் செய்த அரசியல் முறையைக் கண்டித்த போதும், அந்த அறிஞனைக் கண்டிக்க மனம் வரவில்லை. அதனால்தான், இறந்த சங்கதி கேட்டும் மனம் தாழவில்லை.

1977 இல் நடந்த தேர்தலில் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அபார மேலதிக வாக்குகள் பெற்று வெற்றியடைந்தார். எதிரணியினரான எனக்கு நிச்சயம் இடமாற்றம் வரும் என்பதில் சந்தேகமில்லை. அவர் விட்டாலும், அவரைச் சார்ந்தோர் விடவே மாட்டார்கள். அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் இங்கிலாந்து சென்றதால், மாற்றத்துக்கு இட்ட கட்டளை உடன் நடைபெறவில்லை. 1978 இல் அவரை மற்றவர்கள் விடவில்லை. சேற்றில் நாட்டிய எங்கள் அதிபர்கூட, எனக்கு மாற்றம் வருவதில் சந்தோஷப்பட்டார். ஏனென்றால், நான்தான் விமர்சகனாச்சே! அவர் செய்யும் முட்டாள் தனங்களை இனம் காட்டுவேனே! எனக்கு றக்குவானை சென் ஜோன்ஸுக்கு மாற்றம் கிடைத்தது. மாற்றம் வந்ததில் கவலையில்லை. நான் அரசியலில் ஈடுபடவில்லை. அதனால், என் மனம் பற்றிப் பதறியது. உடனே, 1978 ஜூன் 19 ஆந் திகதி ஒரு தபால் அட்டையில்,

"அன்றறுக்கும் அரச நீதி
வென்று விட்டது — மாற்றம்
வந்துவிட்டது
நின்றறுக்கும் தெய்வ நீதி
நோக்கு கின்றது — எதிர்
நோக்கு கின்றது!"

என எழுதி அல்ஹாஜ் பாக்கிர் மாக்காருக்கு அனுப்பிவிட்டேன். இன்றுவரை அவர், இதுபற்றி என்னிடம் கதைக்கவேயில்லை. "அநீதி இழைக்கப்பட்டவனது பிரார்த்தனைக்கு இறைவனிடத்தில் திரை யில்லை" என நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். எனது கவித்துவச் சூடும் அவரைக் கஷ்டத்திலாழ்த்தி சபாநாயகர் பதவியிலிருந்து கீழிறக்கியதோ என நான் எண்ணியதுண்டு.

"வில்லம்பு சொல்லம்பு
மேதினியில் இரண்டுண்டு
வில்லம்பில் சொல்லம்பு
மேன்மையடா.."

சொல்லம்பு சுட்டழுத்தும் என்பது உண்மைதான். இவற்றையெல்லாம் தாங்கி மேலெழுந்து பாக்கிர் மாக்கார் நிற்பதற்கு அவரது நற்காரியங்களே காரணமாகின்றன.

''மஸ்ஜிதுல் அப்றார்'' வேர்வலை மருதானைப் பள்ளி வாசல் பழம் பெருமை மிக்கது. அதன் தோற்றம் அப்படியே இருக்க, அதன் விசாலத்தைப் பெருக்கிப் பிரமாண்டமான நிலையில் எழுப்ப வேண்டும் என்ற ஆசையை அப்பகுதி மக்களிடம் கூறினார். மக்கள் ஒத்துழைத்தனர்; அவரும் நிறைந்த முயற்சி செய்தார். இன்று பிரமாண்டமாக ''மஸ்ஜிதுல் அப்றார்'' நிமிர்ந்து நிற்கின்றது. இந்நற்செயல் அவரைச் சூழ்ந்து நிற்கின்றது. இவ்விதம் இறைபணி மனைகள், இறை நற்காரியங்கள் ஏராளம் செய்கின்றார்; செய்திருக்கின்றார். இப்பொழுதும், அப்பள்ளிவாசலுக்கருகாமையில் இருக்கும் ஸாவியாவை புதிய முறையில் உருவாக்கும் பணியில் இறங்கியிருக்கின்றார்.

சிலவேளைகளில், மனித நலனுக்காக எடுத்த முயற்சிகள் தரீக்காக் குழப்பங்களை ஏற்படுத்தி அவரது மனதைப் பாதித்ததுண்மை. அக்காலங்களில் வேறுபட்டு நிற்கும் சகோதரத்துவமுடைய மக்களை கூட்டி ஒன்றாக்கச் சட்ட நடவடிக்கை எடுத்ததினால் இன்னும் அவர், பாதிப்படைய நேர்ந்தது. என்றாலும், அவரது தைர்யமும், புருடாத்துவ மட்டமும் மக்களை ஒன்றாக்குவதில் வெற்றி கண்டதெனத் துணியலாம். தேர்தல் காலங்களில் யார் யார் முன்பெல்லாம் எதிர்த்தனரோ, அவர்கள் ஒன்றிணைந்து அவரது மகனையே தேர்ந்தனர்.

சென்ற மாகாணசபைத் தேர்தலில், அவரது கட்சி சார்ந்தோர் தர்கா நகரில் ஒடுங்கியும் நின்றனர். பெரிய பள்ளியில் ஒரு ஜனாஸா அடக்கத்தில் கலந்துகொள்ள வந்த பாக்கிர் மாக்காருக்கு சிறுவன் ஒருவன் எவ்வித மரியாதையுமற்று எதிர்க் கட்சி நோட்டீசைக் கொடுத்தான். அப்போது, அவர் எடுத்த நடவடிக்கையால், ஒடுங்கி ஒதுங்கி நின்ற அவரது கட்சியினர் துணிந்து கட்சிக்கு வேலை செய்யத் தொடங்கினர். இது, அவரது தேர்தல் தந்திரங்களில் ஒன்று. இப்படி எதிர்க்கட்சியிலுள்ள சிலரை அவர் தன் பக்கம் எடுத்துக்கொள்ள விரும்புவதில்லை. காரணம்: அவர்களது குத்தல், குடையல் வார்த்தைகளால் அவரது கட்சியிலுள்ளோர் இவரை வெறுத்தாலும் மாற மாட்டார்கள். தேர்தல் நடத்துவதிலும், அதன் நுணுக்கங்களிலும் நல்ல அனுபவம் இவருக்குண்டு.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் அரசியல் பேச்சுக்கள் மிகவும் ஆழமானவை. அவரது ஆங்கிலப் பேச்சு படித்தவர்களை மயக்கிவிடும். அப்பேச்சை மற்றவர்கள் அடிக்கடி கூறியும் நிற்

பார். அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரிலுள்ள மிகத் திறமை, சிங்கள மக்களை அவரது ஆதரவாளர்களை தன்னிடமிருந்து கலைந்து விடாமல் காத்து வந்ததெனலாம். எப்பொழுதும் அவரை ஏற்றிப் போற்றி வாழ்த்தும் சிங்கள மக்கள் அநேகமுள்ளனர். ''அவருக்குச் சிங்கள மக்களின் வாக்குகள் கிடைக்காது'' என்று எல்லாத் தேர்தல்களிலும் அவரது அரசியல் எதிரிகள் கூறுவதில் சளைப்பதில்லை. ஆனால், அவ்வாக்குகளை அவரும் இழந்ததில்லை. அதனால்தான், அவர் சார்ந்த கட்சி அவரை இன்றும் விரும்பி நிற்கின்றதெனலாம்.

''இப்பொழுது நான் கட்சி சார்ந்தவனல்ல. நான் ஒரு மாகாண சபையின் ஆளுனர்; எல்லோருக்கும் உரித்துடையவன்'' என்றே கூறிக்கொள்கின்றார். அதே மாதிரி நடந்தும் கொள்கின்றார். இது, அவரது மூன்றாவது படிநிலைதான். ஆனால், அவரிடம் கற்றுக் கொள்ள ஆசைப்படுவோர், அவரது வாழ்க்கையை நுணுகி ஆய்தல் சிறப்புடையதே!

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் ஸ்ரீ லங்கா சட்டத்தரணிகள் சங்கத்தின் களுத்துறைக் கிளையின் தலைவராக இருந்தபோதும், தொழிற்றுறை நோக்கியே சேவை செய்தார். அரசியல் சார்ந்ததல்ல. இது, அவருடைய பண்புகளில் ஒன்று. தனிப்பட்ட முறையில் பிரத்தியேகமாக நிற்கும் ஒன்றில் காலூன்றும்போது, அதன் சட்டதிட்டங்களுள் அமைந்து நிற்க வேண்டுமென்பதை அவர் பேணுபவர். எனவே, ஆளுனரானதும் அதைப் பேணி நடக்கின்றார்.

1978.10.05 ஆந் திகதி முதல் 1985.06.10 ஆந் திகதிவரைப் பாராளுமன்ற ''பெட்டிஷன் கொமிட்டி''யின் தலைவராக இருந்தபொழுதும் நாட்டு மக்களை முன்னோக்கி நின்றாரே ஒழிய கட்சி சார்பு பார்க்கவில்லை. அவர், எங்கே கட்சியைப் பேண வேண்டுமோ, காக்க வேண்டுமோ, அங்கே பேணிக் காத்து நின்றார். எங்கே கட்சியை அகற்ற வேண்டுமோ அங்கே அதை அகற்றி நின்றார்.

அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அல்ஹாஜ் டி. பி. ஜாயாவை ஆதர்சமாகக் கொண்டவர். அதேபோல், பாக்கிர் மாக்காரையும் ஆதர்சமாகக் கொள்பவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் வாய் திறக்காத இக்காலகட்டத்தில் என் பேனாவும் பெயரெழுதாது என்பதைத்தவிர என்ன சொல்ல முடியும்?

இம்மனிதனின் பண்பினை அவரது இலக்கிய ஆற்றலில் கண்டேன். இப்பதிவை நான் ஏன் செய்ய வேண்டும்! இந்நுணுக்கங்களை நான் களுத்துறை முறைசாராக் கல்வி அதிகாரி ஏ. ஏ. எம். எம். சும்சுதீன், தர்கா நகர் ஸாஹிறாவின் ஆசிரியர் எம். இஸட். எம். நயீம், களுத்துறை மாவட்டத்தில் முஸ்லிம்களில் விளையாட்டுத் துறையில் சிரேஷ்ட நிலையில் நிற்கும் எம். எஸ். எம். அன்வர் ஆகியோரிடம் கதைப்பேன். இவர்களது ஏகோபித்த வேண்டுதல், இம்மனிதர் அரசியலில் எதிரணியினராயினும் சமூகத்தில் பதிவு செய்யப்பட வேண்டியவர். இப்பதிவுக்கு ஊக்கமளித்தோர் இம்மூவருமே!

வேர்வலை நகரின் வரலாறும் பல பின்னல்களுக்குட்பட்டு நிற்கின்றது. முஸ்லிம் சர்வதேச சஞ்சாரி இப்னு பதூதா வேர்வலைபற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. காலி, கொழும்பு சென்றவர் வேர்வலைக்குச் செல்லவில்லை. ''வஸ்த் ஹிமி'' அரசனின் இராஜஸ்தானம் இங்கேதான் இருந்தது. இவ்வரசு இங்கேயே கோலோச்சியது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் சீன தேசம் வேர்வலைப் பிரதேசத்தை ஆட்சி செய்ததாக ஒரு வரலாற்றுக் குறிப்புண்டு. அதனால்தான், ''சீனன்கோட்டை'' என்ற பெயர் வந்தது என்ற அபிப்பிராய முடையோரும் இருக்கின்றனர். ''தீனகொட''தான் சீனன் கோட்டையானது என்று கூறுவோருமுளர்.

மிஸிறின் காஹிறாவின் தாக்கம் தென்னிந்தியாவிலுள்ள காயல் பட்டினத்தில் காணுவதாகவும், அக்காயல்பட்டின வாடை வேர்வலையில் வீசுவதாகவும் கூற முயல்வோருமுளர். இவ்வித சிக்கல்களுக்கெல்லாம் விடை தேடித்திரியும்போது, அரச வைத்தியர்களாக நின்ற முஸ்லிம்கள் இங்கே யூனானி வைத்தியமா? ஆயுர்வேத வைத்தியமா செய்தனர்? என்ற கேள்விகளும் எழுகின்றன. யூனானி வைத்தியத்தின் தோற்றமும், இன்றைய வீழ்ச்சிக்கான காரணமும் வேர்வலையுடன் தொடர்புடையதுதான். இவ்வரலாற்றுப் பின்னணிகளை அல்ஹாஜ் பாக்கிர் மாக்காருடன் சேர்த்துப் பெறும் ஆழ்ந்த அறிவு என்னிடம் குறைவு. வரலாற்றில் அக்கறை கொண்ட ஆசிரியர்கள் இதில் கைவைக்க வேண்டும்.

எது எப்படிப் போனாலும், வேர்வலை என்னும் நகரத்தைச் சீர்செய்து சிறப்புடைய செல்வமாக்கிய அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் பங்களிப்பையும் பயன்பாட்டையும் நாம் மறந்தோ மறுத்தோவிடக்கூடாது.

முஸ்லிம்கள் துரோகிகளல்ல. அவர்கள் தேச நலன் நோக்குபவர்கள்; சமூக நலன் பேணுபவர்கள். அந்நோக்கில் பண்புயர் மனிதர் பாக்கிர் மாக்காரையும் பயனுடன் நோக்குவோமாக.

# பெயர் வரிசை

**(அல்ஹாஜ் அப்துல் பாக்கிர் மாக்கார், வேர்வலை ஆகிய பெயர்கள் இவ்வரிசையில் சேர்க்கப்படவில்லை)**


அக்கீம் அலியா மரைக்கார் மேஸ்திரியார்- 4, 6, 86.
அக்கரைப்பற்று- 19, 27.
அக்கிராசனம்- 36.
அக்பர் நீதியரசர்- 119.
அகில இலங்கை- 21, 39, 40.
அகில இலங்கை கல்வி மகாநாடு- 7.
அகில இலங்கை மாணவர் சங்கம்- 71.
அகில இலங்கை முஸ்லிம் லீக்- 42, 43.
அசோகமாலா- 80.
அட்டாளைச் சேனை- 26, 66.
அத்தனகல்ல- 96.
அப்துல்லாஹ் எஸ். எம்.- 19.
அப்துல்லாஹ் எஸ். எச்.எம்.- 27.
அப்துல் கனி ஆலிம்- 106.
அப்துல் மலிக் இப்னு மர்வான்- 3.
அப்துல் மஜீத். எம். ஐ.- 19.
அப்துல் லத்தீப். எம். எம். எம்.- 48.
அப்துல் றஷீத்- 27.
அப்துல் ஸமத். எம். எஸ். எம்- 18, 19, 20.
அப்துல் வதூத் மாஸ்டர்- 71.
அப்துல் ஹமீத்- 9.
அப்துல் ஹாதி- 106.
அபூபக்கர் (றழி)- 92.
அம்ரிப்னு ஆஸ் (றழி)- 92.
அமீர். ஏ. ஸி எம்.- 106.
அம்பாறை மாவட்டம்- 49,55.
அபூதாவூத்- 117.
அமீன்- 86.
அல்துமுல்ல- 3.
அல்லாஹ்- 37,40,41,42,53, 70,74,76,92,100,101,102, 103, 104,109,112,116,118.
அல்குர்ஆன்- 58,68,76,88, 100,104,112,116.
அல்லாஹ்வின் தூதர்- 117.
அல்பாஸியத்துல் நஸ்ரிய்யா- 61,66.
அல்ஹம்றா- 60.
அல்ஹுமைஸறா- 60,61,62.
அலிகான்- 80.
அலிகார் பல்கலைக்கழகம்-26.
அரிச்சந்திர புராணம்- 80.
அலெக்சாந்தர்- 81.
அழுத்கம- 63.
அழுத்கம் வீதிய- 60.
அழுத்கம ஸாஹிறா- 58.
அழுத்கம் வீதிய முஸ்லிம் மகளிர்மத்திய கல்லூரி- 65,74
அறபியர்- 3, 4, 26, 110.
அறபு லிபி- 84.
அறபியப் பழமொழி- 89, 94.
அறபுக் கடல்- 53.
அறபி பாஷா- 12.
அறபிக் கஸீதா- 26.
அறபிய கீதம்- 28.
அறபு மொழி- 28.
அறபு வணிகர்- 5.
அறிவியல் நாவல்- 80.
அறிஞர் அஸீஸ்- 26, 98, 17.

அறிஞர் சித்திலெவ்வை- 12, 117.
அன்வர் எம். எஸ். எம்.- 61, 124.
அன்வர் சாதாத்- 103.
அஜ்வத் ஏ. டபிள்யூ. எம்.- 61, 63.
அஸ்வர் ஏ. எச். எம்.- 112, 113.
அஷ்ரப் எம். எச். எம்.- 51.
அஹ்மத் இஸ்மாயில்- 20.
அனைத்துலக இஸ்லாமிய இலக்கியமகாநாடு- 83, 85, 105.
ஆசிரிய பயிற்சிக் கலாசாலை- 26.
ஆசியாவின் வல்லரசு- 50.
ஆத்திகர்- 58.
ஆதர்ஷ புருஷர்- 15.
ஆதர்ஷ குரு- 42.
ஆதனம்- 54.
ஆங்கில இலக்கியம்- 82.
ஆபிரிக்க அபஸி- 102.
ஆய்வுக் கட்டுரை- 57, 39, 110, 84, 87
ஆயத்துல்லா கொமய்னி- 103.
ஆயுர்வேத வைத்தியசாலை- 9, 110, 124.
ஆனைக்குழு- 31, 38.
ஆலவட்டம்- 95.
ஆலிம்கள்- 53.
ஆளுனர்- 57, 58, 74, 98, 99, 123.
ஆவணக்கட்டுகள்- 78.
ஆன்மீசம்- 26, 57.
ஆனந்த பைரவி- 4.
ஆனந்தாக் கல்லூரி,- 15, 98.
ஆனந்த திஸ்ஸ அல்விஸ்- 36.
இக்பால் எம்.எஸ்.எம்.-57, 58.
இக்பால்- 65, 84.
இடதுசாரி- 29, 32, 34.
இப்னு பதூதா- 124.
இங்கிலாந்து- 121.
இந்தியர்கள்- 48.
இந்தியா- 3, 14, 50, 101, 103, 104.
இந்திரத்திரு விழா- 81.
இந்திய சுதந்திரப் போராட்டம்- 59.
இந்தோனிஷியா- 51, 52, 103
இமாம் கஸ்ஸாலி (றஹ்)- 101
இமாம் புஹாரி (றஹ்)- 104
இரத்தினசபாபதி- 11
இராசதுரை செ.- 82
இராமாயணக்கதை- 80
இராப்பாடசாலை- 13
இராஜரீகத் தூதுவர்- 17.
இராஜஸ்தானம்- 124.
இராஜாங்க அமைச்சர்- 36, 112.
இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்- 34, 47, 48, 74, 75.
இரும்பு மனிதர்- 50
இல்லறம்- 73
இலக்கியக் கூட்டம்- 32
இலஞ்சம்- 115
இலங்கைப்பல்கலைக்கழகம்-34
இலாகா இல்லாத அமைச்சர்- 94, 95, 96, 97, 98.
இலக்கியம்- 12, 26, 78, 79, 80, 82, 83, 84, 85, 86, 87, 105, 124
இலக்கிய மன்றம்- 10, 12
இலங்கை- 1, 2, 3, 8, 16, 17, 24, 26, 27, 28, 34, 38, 43, 50, 51, 58, 68, 80, 82, 83, 84, 85, 90, 92, 95, 96, 101, 103, 106, 107, 119, 120
இலங்கைத் தூதுவர்- 17
இளம்பிறை- 12, 13
இளங்கீரன்- 85

இளைய மனைவி- 74
இளைஞர் சம்மேளனம்- 48
இறுதிப்பரீட்சை- 15
இறைவன்- 53, 73
இறைபணி மனைகள்- 122
இஸ்லாப் – 18, 25, 26, 42, 49, 57, 58, 76, 84, 109, 100, 111
இஸ்மாயில் எச் எஸ்- 37
இஸ்லாமிய உணர்வு- 52
இஸ்ரவேல்- 75
இஸ்லாமிய தமிழிலக்கிய ஆராய்ச்சி மகாநாடு- 82
ஈடிப்பஸ்- 80, 81
ஈமான்- 103
ஈராக்- 55, 102, 103, 104
ஈரான்- 103
ஈளை- 110
உத்தி- 46, 79
உத்தியோக வாசஸ்தலம்- 95
உத்மான் (றழி)- 92, 104
உதுமாலெவ்வை எம் ஐ- 46, 47, 48, 66
உதுமாலெவ்வை எம் ஐ- 49
உபசபாநாயகர்- 74
உலகம்- 18, 21, 74, 76, 79, 90, 96, 100, 107, 108, 109, 112
உலக நாகரீகம்- 88
உலகக் கதவுகள்- 102
உலகம் ஒரு சமூகம்- 107
உலக வரலாறு- 103
உலக அரசியல்- 39
உலகமகா யுத்தம்- 13, 58
உள்ளூர்- 18, 19, 21, 23, 24
உள்நாட்டமைச்சர்- 32
உள்ளூராட்சி- 23, 31, 89
உவைஸ் எம். எம். - 84, 86
ஊதாரி- 119
ஊர்வலம்- 28
ஊவா- 13
ஊமைக்கனவு- 45
ஊன்றுகோல்- 104
எகிப்து- 103, 104
எட்மன் சமரக்கொடி- 119
எழுத்து- 10
ஏகத்துவம்- 54
ஏறாவூர்- 55
ஐக்கிய தேசியக் கட்சி- 23, 27, 29, 31, 32, 33, 34, 45, 74, 96
ஐக்கிய நாட்டுச் சபை- 75
ஐரோப்பா- 81
ஐரோப்பிய மொழி- 82
ஓமர் ஏ எஸ் எம்- 18, 19, 32
ஒல்லாந்தர்- 13
ஓட்டாண்டி- 20
கச்சிமலை- 45
கந்தளாய்க் குளம்- 55
கந்தசாமி- அ ந- 80, 81, 85
கட்டிடக்கலை- 58, 84
கட்டுநாயக்கா- 51
கண்டிப்பெரஹரா- 67
கண்ணதாசன்- 165
கணக்காளர் நாயகம்- 37, 38
கணிதக்கலை- 111
கடுகண்ணாவை- 32
கமால்தீன் எஸ் எம்- 86
கபூரியா மத்றஸா- 68
கர்ஜனை- 46, 106
கரக்டர் அஸேஸிமேனசன்- 45
கல்விக் கூடங்கள்- 63
கல்விச் சிந்தனை- 58
கல்முனை- 48
கல்வி நிலையம்- 58
கல்வி வரலாறு- 58, 59
கல்வி வளர்ச்சி- 60, 66, 75
கல்விச் சுடர்மணி- 12
கல்வித் திணைக்களம்- 7, 62, 64, 65, 66
கல்வி மகாநாடு- 7

கல்வெட்டுக்கள்- 4
கல்விச் சங்கம்- 9
கல்விக் கூடம்- 8, 60, 61, 110
கல்வித் தராதரச் சான்றிதழ்- 12
கல்விமான்- 16, 17
கல்வி வளர்ச்சி- 60, 66, 75
கல்வி அமைச்சு- 63
கல்விப்பணிப்பாளர்- 64, 84
கல்வி அமைச்சர்- 67
கல்விக்குழு- 67
கல்விக்கரசர்- 74
கலங்கரை விளக்கம்- 12
கலாநிதி- 59
கலை விழா- 26
கலை- 46, 48, 111, 112
கலைவளாகம்- 67
கலைவாதி கலீல்- 83
கவிஞர்- 26, 81
கவிதை- 46, 47, 52, 54, 120
கவித்துவம்- 26, 121
களனி- 34
களுத்துறை- 7, 30, 32, 49, 61, 64' 71, 77, 97, 123, 124
கழாக்கதிர்- 111
கன்னங்கரா- 74
கனகரெத்தினம் எம் எஸ் எம்- 17
காகக் கூட்டங்கள்- 64
காக்கோஷியர்- 101
காசோலை- 68
காதர் ஐ ஏ- 31
காந்திமகான்- 11, 59, 80
காமராசர்- 59
காமினி திஸ்ஸநாயகா- 118
காயல்பட்டினம்- 83, 124
காரியாலயம்- 95
காலக்கண்ணாடி- 117
காலி- 2, 124
காஹிறா- 124
கிப்லா- 4
கிரஸன்ட்- 12, 13
கியாப்தீன் எம் எம்- 107
கியூபா- 102
கிரேக்க நாடகாசிரியர்- 80
கிழக்கு மாகாணத்தவர்கள்- 48, 52
கிழக்கு- 49, 61, 71
கிழக்கிலங்கை- 53
கிழக்குவான்- 55
கிழக்குப் பல்கலைக்கழகம்- 67
கிறிமினல்- 16, 17
கீர்த்தி- 21
குஞ்சிக்காக்கா- 20
குட்டிப்பல்கலைக்கழகம்- 63
குட்டை- 22
குடல்வாய்ச்சனம்- 53
குதிரைமலை- 2
குணசிங்க ஏ. ஈ- 15, 96
குணவதி- 74
குர்ஆன்- 58
குருவித்தியாலயம்- 63
குரு- 15
குரே பி ஏ- 72
குழந்தைகள்- 16
குழு அறை 67
குயின்ஸ் ஹோட்டல்- 67
குறள்- 68, 81
குறிஞ்சிக் குணம்- 48
குறுகுத்தலை- 32
கேட்டேலினா- 82
கைலாசபதி க. 85
கைம்பெண்- 70
கொள்கைவாதி- 16
கொம்யூனிஸ்ட்- 16, 17, 18
கொழும்பு- 2, 17. 18
கொழும்பு ஸாஹிறா- 12
கோடியல்- 81

சகுந்தலை- 80
சத்தியவான் சவித்திரி- 81
சதாம் ஹுசைன் கிராமம்- 55
சட்டக்கல்வி- 14
சட்டவல்லுனர்- 72, 79, 94
சஞ்சிகை- 13
சட்டம்- 13
சட்டத்தரணி- 1, 71
சட்டவல்லுனர்- 15, 16
சச்சுதீன் ஏ ஏ எம் எம்- 44, 124
சம்மாந்துறை- 19, 67
சமர்சட் மாம்- 79, 80, 81
சம்மாங்கோட்டுப் பள்ளி- 86
சபாநாயகர்- 12, 35, 36, 37, 38, 39, 40, 51, 52, 60, 67, 68, 89, 92, 93, 94, 97, 102, 104, 112, 121
சபாபீடம்- 31
சர்வதேச அரசியல் சக்திகள்- 50
சர்வதேச அரங்கு- 75
சர்வகலாசாலை- 34
சனசமூக நிலையம்- 71, 74
சாந்தி நபி (ஸல்)- 41
சாலிய குமாரன்- 30
சான்றிதழ்- 11
சாஸ்திரிய கீதம்- 4
சிங்களம்- 10, 12, 28, 34, 60, 68
சிங்கள மக்கள்- 23, 24, 33, 50, 60, 66, 123
சித்தாந்தம்- 57
சிந்தகன்- 81
சிந்தாமணி- 81
சில்லை- 8
சில்லையூர் செல்வராசன்- 85
சிலப்பதிகாரம் எம்- 36
சின்னமரம்- 46, 47, 48
சிறாப்பர்- 13
சீனன்கோட்டை- 58, 60, 61, 62, 63, 21, 72
சீனடிசிலம்படி- 27, 28
சீனதேசம்- 124
சுதந்திரம்- 21
சுஜப் (றழி)- 102
சுப்றா- 42
சுல்தான் ஷேக் ஜமாலுத்தீன் மக்தூமி 110
சுல்தான் ஜமாலுத்தீன் அலாவுதீனின் நூறாமில் உமய்யா- 3
சுயசரிதை- 11
சூறாவளி- 52, 54, 55, 62
செக்கோசெலவாக்கியா- 57
செங்கோல்- 36, 38
செங்கம்பளம்- 52, 84
செங்கடல்- 53
செபாக்கிளிஸ்- 80
செமித்தியர்- 101
செய்யத் முஹம்மத் இப்றாஹீம் அப்பாஸி- 8
செல்வம்- 16
சென்செபஸ்தியன் கல்லூரி- 10, 11, 12
சென்மத்தேயு- 11
சேனநாயகா டட்லி- 29 31 38 94
சேனநாயகா டி எஸ் 27 28 29
சோவியத் ருஷ்யா 85
சோவியத் வானொலி 85
சோஷலிஸம் 20
சௌராஷ்டிர ராகம் 4
சௌஜன்யம் 33
டக்ளஸ் குணவர்த்தனா 31
டிஜிலாஸ் 54
தத்துவ நூல்கள் 71

தர்கா நபர் 19 32 44 58 59 60 61 122 124
தரீக்கா 22 25 122
தம்பு டி ஜெ 18 29 65 67
தமிழ் 7 10 12 13 28
தமிழர்கள் 24 50 67
தமிழாசான் 20
தமிழ்ப்புலவர் 20
தமிழ்க்குழு 57
தமீம் ஐ எல் எம் 11
தமிழிலக்கியம் 80 82
தயாரத்தின பி 55
தல்கொடபிட்டிய 31
தஹாநாயகா டபிள்யூ 32
தாரகை 23
தாவரவியல் 13
தித்தவல தேர்தல் தொகுதி
நிர்ணயக் கொமிஷன் 33
திருக்குறள் 76
தினகரன் 46 119 80
திருதராஷ்டிரன் 81
திருகோணமலை 2
தீனகொட 124
துர்ரதுல் யதீமா 8
துட்டகைமுனு 80
துரியோதனன் 81
துஷ்யந்தன் 80
தூதர் 41 42
தெற்கு 30
தெவிநுவர 30
தென்னிலங்கை 85
தேர்தல் 15 16 20 21 22 25 31 32 33 45 46 55 62 72 75 97 121 122
தேசியம் 28 50
தேசியப்பத்திரிகைகள் 45
தேசிய ஒற்றுமை 55
தேர்தல் சின்னம் 72
தேபஸ்மன்னன் 81
தொண்டர் 21
நகர் 25 26 27
நகரசபை 19 20 25 26 27 28 30 45 61 71 114
நபிமுஹம்மத் (ஸல்) 41
நபி (ஸல்) 76 102 121
நபிமார்கள் 104
நயீம் எம் இஸட் எம் 124
நல்ல தம்பிப் புலவர் 21 82
நல்ல தம்பிப் பாவலர் 20
நளன் தமயந்தி 81
நல்லூர்த்தொகுதி 36
நாத்திகர் 58 62
நாடாளுமன்றம் 19 23 31 32
நாளந்தா 98
நிதித் திட்டமிடல் அமைச்சர் 96
நியாய துரந்தரர் 10 14 33 48 110
நிந்தவூர் 19
நிஸங்க பராக்கிரம
விஜயரத்தின 67
நீதியமைச்சர் 83
நீட்சே 81
நீக்ரோ 101 102
நுபைல் எஸ் ஏ 60 63 65 66
நெகிழாயாப்பு 58
நெப்போலியன் 104
நேரு 59
பெக்மெண்டிஸ் 32
பெண்கள் மத்திய கல்லூரி 60
பெரிய மரம் 32
பெரேரா என் எம் 119
பேனாட்ஷா 80
பொன்முளை 120
பொறியியல் 53 59
பொத்துவில் 46 47 66 119
பொதுத்தேர்தல் 15
பொதுவுடமை 16 18

பொருளாதாரம் 13
போல்ஷோவிக் 120
போத்துக்கல் 102
போர்முட்டம் 14
போர்விமானம் 14
மக்காக்காபிர்கள் 84
மக்கொன- 60
மகாவலி அமைச்சர் 118
மங்கோரியா 101
மத்திய கல்லூரி 61 74
மத்றஸா 9
மசூர் மௌலானா 113
மதவாச்சி 106 111
மந்திரி மணிகள் 95
மந்திரி சபை 46
மட்டக்களப்பு 55 67 82
மர்ஸூக் ஏ ஏ எம் 61
மர்க் 5
மர்க்கபி 5
மரக்கல 5
மரைக்கார் 5
மரிக்கார் பிளேஸ் 19
மலேஷியா 81
மலைநாடு 48
மலைநாட்டு சிங்களவர் 38
மலைநாட்டுத் தமிழர்கள் 50
மருதானை முஸ்லிம் மகளிர் வித்தியாலயம் 8
மலைநாட்டுப் புனர்வாழ்வுக் கொமிஷன் 38
மலபார் 5
மனக்கண் 80
மனிதகுலம் 58 101 109
மனமாளிகை 116
மறுமலர்ச்சித் தந்தை 84
மறுமலர்ச்சி 60
மன்னார் 2 8
மஸ்ஜித் 4 43 55 56
மஸூலை 28
மஸூத் ஏ ஸி எம் 71
மஸூறா 41
மஸூத் ஏ ஜே எம் 71
மஸ்ஜிதுல் அப்றார் 4 6 122
மஹ்ரூப் எம் எம் எம் 85
மஹல்லலம் இஸ்மாலெவ்வை மரிக்கார் 5
மஹல்லம் 5
மாக்கிரட் 81
மாக்கோனி 103
மாக்கார் 3 6
மாகாணம் 24
மாகாணசபை 44 50 51 122 123
மாநபி (ஸல்) 53
மார்க்ஸீயம் 57 58
மாமேதை 57 90
மாவட்டசபை 75
மாலைக்கண் குருடர்கள் 63
மாலைதீவு 103
மாளவதேசம் 81
மாளிகாஹேன முஸ்லிம் மஹா வித்தியாலயம் 9 19 32 60 61 62 63 106
மாமனிதர் 18
மாணிக்கம் 15 45 58
மானிதம் 18
மிதவாதி 29
மில்டன் 81
மிளிர் 124
மீலாத் விழா 44
மீசான் 1
முத்து 6
முதல்வர் 33 35 82
முதிர்ச்சி 57
முதியோர் 22 42 43
முதலாளி 91 120
முதல் மனிதர் 88

முதலாளித்துவம் 18 29 55
91 92 93
முத்து 6
முட்டுக்கார் 119
முட்டாள் 121
மும்தாஜ்மஹால் 39
முன்னோர்கள் 75
முஸ்லிம் மிஷனரி 71
முறைசாராக் கல்வி அதிகாரி
44 104
முஸ்லிம் மஜ்லிஸ் 1
முஸ்லிம்கள் 21 23 26 28 30
31 36 36 37 38 39 40 43
46 47 49 50 51 55 68 75
83 84 92 97 100 104 117
118 124 125
முஸ்லிம் லீக் வாலிப முன்னணி
39 40 43 44 49 51 86
முஸ்லிம் கிராமங்கள் 43
முஸ்லிம் காங்கிரஸ் 49 51
85 50
முஹம்மத் அப்பாஸி 8
முஹம்மத் யூஸுப் எம் எஸ் 9
முஹம்மத் இஸ்மாயில் 19
முஹம்மத் பாஷா 20
முஹம்மத் ஏ எம் 61
முஹம்மத் உமர் ஹஸ்றத் 68
முஹம்மத் ஹனிபா ஆலிம் 71
முஹம்மத் எம் எச் 113 38
முஹிதீன் எம் ஐ எம் 51
மெரில் காரியவசம் 36
மேல்மாகாணம் 97
மேற்குக்கரை 30
மொல்லியமலை 27
மொன்சோவிக் 120
மொஸப்பதேமியா 104
மூத்த மனைவி 73
மூலிகை 110
மூளை 120 70
மூர்க்கம் 28
மூலஸ்தானங்கள் 66
மெற்றிக்குலேசன் 13
மேரி மெட்டலின் 10
யதார்த்தம் 24 55 73
யாழ்ப்பாணம் 2
யாழ்ப்பாடி 81
யூஸுப் ஏ எம் 97
யூனானி வைத்தியம் 124
யூ என் பி 34
ராஸீக் மரைக்கார் 9
ருஷ்யா 50
ரோமியோ ஜூலியத் 80
லத்தீன் மொழி 13
லங்கா சமசமாஜக் கட்சி 29 31
லண்டன் 13 81
லியா ஒப் லெப்பத் 81
லிஸ்பன் 102
லைலத்துல் கத்ர் 6
லைலா மஜ்னு 86
லொக்கு பண்டார கே எம் 36
வஞ்சகி 63
வதூத் ஓ எல் எம் 9 71
வடக்கு 50 66 67
வடகிழக்கு முஸ்லிம்கள் 50 51
வலதுசாரி 29
வள்ளுவர் 68 76 81
வழக்கறிஞர் 71 72 79
வழக்குரைஞர் 30
வஸ்த்ஹிமி 124
வாக்குரிமை 50
வாசிகசாலை 10
வாப்பச்சி மரைக்கார் 12
வாழைத்தோட்டம் 17
விக்ரமசிங்க 94
விஞ்ஞானப் பட்டதாரி 59
விஞ்ஞான வளாகம் 67
விவசாய வளாகம் 67
விருதுநகர் 59

விழுத்தாப்பியம் 57
வித்தியாலங்காரப் பல்கலைக் கழகம் 34
விஜயமான ஈ எல் 63
விவாதமேடை 10
வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் 75
வெளிவிவகார அமைச்சர் 83
வெற்றிவாகை 25
வைத்தியர் 59
வைஷ்னவ பக்தன் 81
வைத்தியப் பரம்பரை 11
றமளான் 6
றணில் 94
றக்குவானை 121
றாஸீக் 117
றாஹிலா உம்மா 5 6
றாஸீக் மரைக்கார் 10
றிஸ்க் 70
றொணி டி மெல் 96
றொணி அபேசிங்க 36
றோயல் 98
ஸ்பானிஷ் 82
ஸ்டாளின் 50 57
ஸல்மான் பாரிஸ் (றழி) 53 102
ஸக்காத் 54
ஸதக்கா 54
ஸஹாபாக்கள் 92
ஸனூன் 27
ஸமுயேல் எஸ் ஜி 59 60
ஸராயில் மரிக்கார் 9
ஸிரிய்யா விஸா 19 20
ஸாஹிறா 13 14 16 17 18 32 60 61
ஸாஹித்திய மண்டலப் பரிசு 84
ஸிறாஜுதீன் மரைக்கார் எம் ஸி எம் 20
ஸூறத்துல் பதஹ் 8
ஷம்ஸ் எம் எச் எம் 85
ஷம்ஸி குணவர்த்தன 29
ஷாபி மரைக்கார் 58 59 60 113
ஷாபி ஹஸன் 10
ஷெய்கு அப்துர் ரஹ்மான் 3
ஷெய்கு அப்துல் காதிர் 3
ஷெய்கு ஸகரிய்யா 3
ஷெய்கு அஹ்மத் 3
ஷெய்கு ஸாலிஹ் 3
ஷெய்கு யூஸுப் 4
ஷெய்கு அப்துல்லாஹ் 4
ஷெய்கு அலி 4
ஷெய்கு முஸ்தபா ஆலிம் 6 26
ஷெய்கு இஸ்மாயில் பர்பலீ ஆலிம் 6
ஷெய்கு முஹிய்யத்தீன் 6
ஷேக்பியர் 80
ஜனநாயகம் 38 95 96 98
ஜனாதிபதி 37 55 57 92 93 95 96 97 99 103 113 123
ஜாயா டி பி 29 42 117
ஜாபிர் பின் அப்துல்லாஹ் (றழி) 117
ஜில்மால் 22
ஜீம்முனசிங்க 96
ஜெமியத்துல் முஸ்லிமீன் 27
ஜெயவர்தனா ஜே ஆர் 1 94 96
ஜெயவர்த்தனா எம் டி எச் 94
ஜெயஸிங்க 31
ஜெஸீலா 73 74
ஜோன் கொத்தலாவல 28 29
ஹக்கீம் 5
ஹக்கீம் அரியா மரைக்கார் ஓம்மத் 5

ஹமீத் ஏ ஸீ எஸ் 83 105
117 119
ஹமீத் டி எம் ஏ 117
ஹரிஸ் பத்துவ 119
ஹன்ஸார்ட் 96
ஹனிபா 27
ஹஜ்கடமைகள் 51
ஹஸினிய்யா 60
ஹதீஸ் 68 106
ஹவாய் 102
ஹாஜிகள் 52
ஹிறாஹீம் குலத்தவர் 3
ஹாஜி ஓமர்ரஸ்ட் 85 86
ஹிஸ்பு 6
ஹிட்டல் 104
ஹீபத்துல்லாஹ் எம் எச் எம்
71
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 31
39 50 51 119
ஸ்ரீமாவோ பண்டாரநாயகா
39 120





# மூன்று படித்தரங்கள்

புருடத்துவ நிலை நோக்கி மனிதனை மூன்று படித்தரங்களில் பார்க்க முடியும். அந்த மனிதன் ஆளுமையின் உயர்வில் ஏறி நிற்பவனாக இருந்தால் வாலிபம், நடுத்தரம், வயோதிபம் என்னும் படிகளேறித் தாண்டி முதிர்ச்சி பெறுவான்.

அல்-ஹாஜ் அப்துல் பாக்கிர் மாக்காரும் இரண்டு படித்தரங்களைக் கடந்து மூன்றாம் படியில் நிற்கின்றார். முதற்படியில் கண்ட நன்மை தீமைகள், இரண்டாம் படியில் மாற்றம் பெற்றுத் தீமைகள் அகன்ற நன்மைகளுடன் கூடிநிற்கும். இரண்டாம் படியில் நன்மைகள் பெருகித் தீமைகள் குறையும். மூன்றாம் படியில் தீமைக்குரிய காரணம் கண்டு பூரண நன்மை விளைவுகளை நாடும்.

இறுதிப் படியின் நிறைவிறுதிக் கட்டம் விருத்தாப்பிய முதிர்ச்சியின் பாதையில் கொண்டு செல்லும். அப்போது, "விருத்தாப்பிய முதிர்ச்சியுறுங்கால் மனிதன் படித்தவற்றையெல்லாம் மறந்து ஒன்றுமே தெரியாதவன் போலாகி விடுகிறான்" என்னும் அருள் மறைக் கூற்றுக்கு அவனையாக்கி விடும்.

விருத்தாப்பிய முதிர்ச்சிக்கு முன், மூன்று படிகளில் ஒரு மனிதனை நான் காண்கிறேன். அதுதான் இந்நூல் வடிவம்.

— ஏ. இக்பால்